கீர்த்தனைக்கோத்து : மலர்-2.

# திருநாளைப்போவார்

என்னும்

# நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.

[சுத்தப் பதிப்பு.]

PUBLISHED BY
LONGMANS, GREEN & Co.,
167, MOUNT ROAD, MADRAS,
BOMBAY AND CALCUTTA.

சென்னை :
1915

[ரிஜிஸ்தர் செய்தது.] [Copyright registered.

Printed by Thompson & Co., at the "Minerva" Press,
33, Popham's Broadway, Madras

# திருநாளைப்போவார்

என்னும்

# நந்தனார் சரித்திரம்.

* "பகர்ந்துலகு சீர்போற்றும் பழைய[illegible] பதியாகுந்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தான்
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட் டாதனூர்."

என்று சேக்கிழார் சுவாமிகளால் சிறப்பித்துக் கூறப்பட்டவாறு கொள்ளிட நதிக்கருகே ஆதனூர் என்றோர் ஊர் உளது. அவ்வூர்ப் புலைச்சேரியில், அனேக வருஷங்களுக்கு முன்னே, கள்ளிவயிற்றில் அகில் பிறப்பதுபோலவும், சிப்பியினிடத்து முத்துப் பிறப்பது போலவும், மதுரைவீரன், நொண்டி, சாமுண்டி முதலிய சிறு தெய்வங்களையன்றி முழுமுதற் பெருங்கடவுள் ஒருவர் உண்டு, அவர் ஒருவரே அறிவுடைய ஆன்மாக்களால் வணங்கி வழிபடற்பாலார் என்னும் அறிவு சிறிதும் இல்லாத புலையர்கள் குலத்தில், சிவனையே சிந்தித்துச் சிந்தை நைந்துருகி அவனடிக் காட்பட்டு அந்தணர்க்கும் அறிவரிய அப் பெருமான்பதம் அடையும் அருந்தவமுடையராய நந்தனார் என்பார் ஒருவர் திருவவதாரஞ் செய்தனர்.

அவர் தமக்கு உணர்வு வந்தநாள் தொடங்கி உமையொருபாகராய சிவபிரானிடத்து மிகுந்த பக்தியுடையராயிருந்தனர். தமது குலத்துக்கேற்ற தொழிலையே செய்து

* பெரியபுராணம்.

வந்தனராயினும் அத்தொழிலையும் சிவ தொழிலாகவே செய்தார். எங்ஙனமெனில், சிவாலயங்களுக்குவேண்டிய பேரிகை, மத்தளம் முதலியவைகளுக்குத் தோலும் வாரும் கொடுப்பார்; வீணைக்கும் யாழுக்கும் நரம்புகள் தருவார்; சிவபெருமான் அர்ச்சனைக்குக் கோரோசனை அளிப்பார்.

இவ்வாறு சிவ பக்தியிற் சிறந்து விளங்கிய நந்தனார்க்கு ஒரு நாள், திருப்புன்கூர் என்னும் திவ்விய ஸ்தலத்தில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள சிவபெருமானைத் தரிசிக்க வேண்டுமென்னும் விருப்பம் எழுந்தது. உடனே அவர் ஆதனூரினின்றும் புறப்பட்டுச்சென்று திருப்புன் கூரை அடைந்தார். புலையர்கள் கோயிலுட்செல்ல அருக ரல்லராதலால் நந்தனார், சிவாலயத்துட்சென்று சுவாமி யைத் தரிசிக்க ஏலாதவராய்க் கோபுர வாயிலருகே நின்ற வண்ணம் ஈச்வரனைத் தரிசிக்க முயன்றனர். அதற்கும் இடங்கொடாது, சந்நிதிக்கெதிரே, நந்தி விக்கிரகம் சுவா மியை மறைத்துக் கொண்டிருந்தது. 'ஆலயத்துக்கு வெளியே நின்றுகூட எம்பெருமானைத் தரிசிக்க ஏலாதிருக்கின்றதே' என்று நந்தனார் மிகவும் மனம் வருந்தினர். பக்தர் துயரந் தீர்க்கும் பரமன், நந்தனாரது பக்தியையும் மனவருத்தத்தை யும் உணர்ந்து நந்தி தேவரை விலகி நிற்கப் பணித்தார். உடனே நந்தி அப்புறம் விலகி நின்றது. நந்தனார், இவ் வற்புதச் செயலால் உளமகிழ்ந்து, சிவபெருமானைக் கண் களிக்கத் தரிசித்துப்பிறகு தமதூர்க்குச் சென்றார்.

அப்பால், நந்தனார் உள்ளத்தில் சிவ தலங்களுட் சிற ந்த சிதம்பர க்ஷேத்திரத்தில் எழுந்தருளியுள்ள சிவபெரு மானைத் தரிசிக்கவேண்டுமென்ற அவா எழுந்தது. ஆத

வின் சிதம்பரம் செல்ல விரும்பினர். ஆனல் தாம் புலைய ரானபடியால் அப்புண்ணியத் தலத்திற்குச் செல்லல் தமக் குத் தகாதே என்று அவர் மிகவும் மனம் நொந்து இர வெல்லாம் உறக்கமின்றி, 'இருக்கட்டும், நாளைச் செல்வோம்' என்றிருப்பார். மறுநாளும் தம் குலத்தாழ்வை நினைத்து மனம் வருந்தி 'நல்லது, நாளைப் போவோம்' என்றிருப்பார். இங்ஙனம் பலநாட்கள் செல்ல ஒவ்வொருநாளும் நந்தனர் 'நாளைப் போவோம்', 'நாளைப் போவோம்' என்று சொல் லிக்கொண்டிருந்தனர். இதனுல் அவர்க்கு 'நாளைப்போவார்' என்றொரு நாமம் உண்டாயிற்று. இவ்வாறு நந்தனர் சில நாளிருந்து பிறகு ஒருநாள் மனத்துணிவோடு தில்லை சென் றனர். அப்புண்ணியத்தலத்தை அடைந்த பிறகும் அவர் தம் பிறப்பை நினைந்து துன்புற்றனர். 'தில்லையை அடை ந்து விட்டோம். இனி நாம் சுவாமியைத் தரிசிப்பது எவ் வாறு' என்று மனம் புழுங்கினர். அப்பொழுது சிவபெரு மான் கோவில் தீட்சதர்கள் கனவில் தோன்றி, 'பறையர் குலத்துதித்த நமது பக்தன் நந்தன் என்பான் ஒருவன் தன் பிறப்பை நினைந்து வருந்திக் கோபுர வாயிலருகே நிற்கின் ருன். அவனை நீங்கள் தீயில் முழுகச் செய்து பிறப்பின் மாசைப் போக்கி, புனித பிராமணனுக எற்றுக்கொள்ளுங் கள்' என்று கட்டளையிட்டருளினர். தீட்சதர்கள் அங் ஙனமே, கோபுரவாயிலண்டை நின்ற நந்தனரை அடை ந்து தீக்குழியில் முழுகியெழுந்தால் அவரை அந்தணராக ஏற்றுக்கொண்டு கோயிலுனுட் செல்லச்செய்வதாகக் கூறி னர். நந்தனர் அதற்கு மிகவும் மனமகிழ்ச்சியோடு ஒப்பித் தீக்குழிவெட்டி அதிற்குளித்தார். மீட்டும் அவர் அதினின் றும் எழுந்தபோது முப்புரிநூல் முதலிய பிராமணச் சின்

னங்களோடு கூடிய வேதியவடிவாயிருந்தனர். அதைக் கண்டாரனைவரும் அதிசயித்து நிற்க, நந்தனார் நடராஜர் திருநடனச் சபையை நாடிச் சென்றார். மற்றோரும் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். ஆனால் சிறிது தூரம் சென்றதும் நந்தனார் அவர்கள் கண்ணுக்கு மறைந்துவிட்டனர்.

குறிப்பு:—இதுவே பெரியபுராணத்துள்ள நந்தனார் சரித்திரவரலாறு. இதனைப் பாரதியார் தமது நுட்பமதியால் ஏற்றவிடங்களில் சில கூட்டி, விரித்துக் கூறியுள்ளனர். உதாரணமாக, நந்தனார் தில்லை செல்லத் தம்மை அடிமைகொண்ட அந்தணரிடம் விடை கேட்பதும், அவர் பறையர்க்குப் பக்தி யென்ன சித்தியென்ன வென்று ஏளனஞ்செய்வதும், நந்தனார் அதனால் மனந்தளராது அந்தணரை மிகவும் மன்றாடி வேண்டலும், அப்போது அந்தணர் 'நாற்று நடவுகளை நட்டுவிட்டுத் தில்லைக்குப்போ' எனலும், அதற்கிசைந்து, சென்ற நந்தனார் கனவில் சிவபெருமான் தோன்றி 'நந்தா வருந்தாதே. உனக்காக யாம் நடவு நட்டு விடுகிறோம். அந்தணரிடம் நடவு நட்டாயிற் றென்று கூறித் தில்லை செல்' என்பதும், நந்தனார் மறுநாட்காலை அந்தணரிடம் சென்று 'நடவு நட்டாயிற்று' என்று கூற அந்தணர் நந்தனார் கூறியது மெய்யாயிருக்கக் கூடுமோ என்றையுற்றுத் தமது கழனிகளைச் சென்று பார்க்கக் கழனிகளிலெல்லாம், பயிர் விளைந்து முற்றியிருப்பதைக் கண்டு பேராச்சரியம் கொண்டு நந்தனார் சிறந்த சிவபக்தராதல்வேண்டுமென்று சிந்தையிற் கருதி இனி இவர்க்கு நாம் விடைகொடாதிருத்தல் நன்றன்றென்று நந்தனாரை நோக்கி 'நந்தா, நீ உன் மனம் போல் தில்லைமன்று சென்று மன்றாடியைத்தரிசித்து வா' என்று கூறியனுப்புவதும், அவ்வுத்தரவு பெற்று நந்த

னார் தில்லை செல்வதுமாகிய இவை போல்வனவெல்லாம், பாரதியார் தமது நுண்ணுணர்வினால் கதைக் கலங்காரமாகக் கற்பித்துக் கூட்டிக் கூறியனவாம்.

பெரியபுராண வரலாற்றிற்கு மூலமாயுள்ள 'நம்பியாண்டார் நம்பி திருவந்தாதி'யில் சுருக்கமாகக் கூறப்பெற்றுள்ள திருநாளைப்போவார் சரிதச் செய்யுளும், திருத்தொண்டர் புராணசாரத்திலுள்ள திருநாளைப்போவார் சரிதச்செய்யுளும் வருமாறு:—

நாவார் புகழ்த்தில்லை யம்பலத் தானருள் பெற்றுநாளைப்
போவா னவனும் புறத்திருத் தொண்டன்றன் புன்புலைபோய்
மூவா யிரவர்கை கூப்ப முனியா யவன்பதிதான்
மாவார் பொழிறிகழ் ஆதனூ ரென்பரிம் மண்டலத்தே.

நன்மைதிகழ் மேற்கானாட் டாதனூர்வாழ்
நந்தனார் புறத்தொண்டர் நாளைப் போகப்
பொன்மலிதென் புலியூர்க்கென் றுரைப்பார் புன்கூர்ப்
பொய்கையமைத் தடலேறு பிரிய நோக்கி
வன்மதில்சூழ் தில்லையிறை யருளால் வாய்ந்த
வண்டழலி னிடைமூழ்கி மறையோர் போற்ற
மின்மலிசெஞ் சடைமுனியா யெழுந்து நாதன்
விளங்குநடந் தொழமன்றுண் மேவினாரே.



## நந்தனார் சரித்திரக் கீர்த்தனை

இயற்றிய

# கோபால கிருஷ்ண பாரதியார்

## சரித்திரம்.

* "அருவாகியுருவாகி யனைத்துமாய் நின்றபிரான்
மருவாருங் குழலுமையாண் மணவாளன் மகிழ்ந்தருளும்"

திருவாரூர் என்னும் திவ்விய ஸ்தலத்துக்கு அருகேயுள்ள நரிமணம் என்னும் கிராமத்தில் சுமார் நூற்றைம்பது வருஷங்களுக்குமுன்னே நாற்குலத்திலும் மேற்குலமான பிராமணகுலத்திலே, கோதண்டராமய்யர் குமாரர் ராமசாமி பாரதியார் என்பவருக்கு, அருந்தவச்செல்வப் புதல்வராய்ப் பிறந்தவராவர், நந்தனார்சரித்திரக் கீர்த்தனை இயற்றிய கோபாலகிருஷ்ணபாரதியார் என்னும் பெருந்தகையார்.

இவரது தந்தையாரும் பாட்டனாரும் வீணைவாசிப்பதில் மிகவும் தேர்ச்சி பெற்றவராயிருந்தார்கள். கோபாலகிருஷ்ண பாரதியார் அவர்களிடமிருந்தே சங்கீத சாஸ்திரப் பயிற்சி பெற்றனர். மிக்க இளம் பிராயத்திலேயே இவர் சங்கீதத்தில் தம் முன்னோர் அடைந்திருந்த ஞானத்தினும் மிக்க ஞானமுடையவராயினர். தமது பதினாறுவது வயதுவரையில் நரிமணத்திலேயே தங்கிச் சங்கீதகலை பயின்று வந்தனர். பிறகு ஆனைதாண்டாபுரத்திலும், பின்னர் முடிகோண்

* பெரியபுராணம்.

டானிலும் சிலகாலம் தங்கியிருந்தார். அப்பால் தமது முப்பதாவது வயதில் இவர் மாயவரம் சென்று, அங்கிருந்த கோவிந்தய்யர் சுவாமி என்னும் பெரியார் ஒருவரிடத்து வடமொழியும், வேதாந்தசிந்தாந்த சாஸ்திரங்களும் கற்றுவந்தார்.

* "கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக."

என்ற பொய்யாமொழியைக் கோபாலகிருஷ்ண பாரதியார் மெய்யுறப் பின்பற்றினர். தமது ஞானாசாரியராகிய கோவிந்தய்யர் சுவாமி தமக்குப் போதித்த வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களால் குடும்ப வாழ்க்கையின் இடும்பைகளைப் பாரதியார் தெளிவாய் அறிந்தார். பிறகு குடும்பவலையிற் சிக்குண்டு அல்லற்பட அவர் இசைந்திலர். 'சம்சாரம் சாகரம்' என்பதை நன்குணர்ந்துப், அதில் விழுவது, விளக்கைக் கையிலேந்திக் கொண்டு குழியில் விழுவதை யொக்குமன்றோ? பாரதியார் தமது மனவுறுதியால் சம்சாரபந்தத்திற் கட்டுப்படாது தமது ஆயுள்காலம் முற்றும் பிரமசாரியாகவே இருந்தனர்.

இவர் தாம் கற்கவேண்டிய நூல்களைக் கற்றபிறகு,

† "எய்தற் கரிய யாக்கைதனக் கெய்திற் றென்று லதுகொண்டு
செய்தற் கரிய வறங்கள்பல செய்து துயர்கூர் பிறவியினின்
றுய்தற் குரிமை பெறவெண்ணு துழல்வோ னுடம்பு பொற்கலத்திற்
பெய்தற் குரிய பால்கமரிற் பெய்த தொக்கு மென்பரால்."

என்றபடி, மானிட யாக்கையாற் பெறும் பயன் பிறர்க்கு உதவிசெய்தலே என்னும் உண்மையைக் கடைப் பிடித்து

* திருக்குறள். † பிரபுலிங்கலீலை.

தமது வாழ்நாளைப் பிறர்க்குப் பயன்படுத்திக் கழித்தல்வேண்டும் என்ற உறுதிகொண்டார். இவ்வுறுதியோடு துறவியாய் வெளிப்பட்டு, பொன்மாலை பூமாலை முதலிய பன்மாலையினும் பக்தர் பாமாலைக்கே பக்ஷமுடையவரான பரமனைப் பக்திச் சுவைநிரம்பிய கீர்த்தனைகளாற் பாடிக்கொண்டு வீதிகளிற் செல்வதும், பசித்தால் பிச்சையேற்று உண்பதும், அயர்வுற்றால் புறந்திண்ணையொன்றிற் படுத்து உறங்குவதுமாக விருந்தார். அவரது கீர்த்தனைகளைக் கேட்ட ஜனங்கள் அவரது இசைப் புலமையை வியந்து அவரைச் சூழ்ந்து தொடர்வார்கள். அவர் அகத்து மறைந்து கிடந்த புலமையின் அருமையும் உள்ளப் பெருமையும் சின்னாளில் வெளிப்பட்டு நாடெங்கும் பிரபலமாயின. பலர் அவரைப் பய பக்தியுடன் அணுகி அவருக்குப் பணிவிடை செய்வதும், தம் இல்லத்துக் கெழுந்தருளவேண்டும் என்று பிரார்த்திப்பதுமாயினார்கள். பலர் அவர்க்குச் சிஷ்யர்களானார்கள். இங்ஙனம் கூடிய சிஷ்யர்களில் ஒருவாராவர், மாயூரம் முனிசீப்பாயிருந்தவரும், பிரதாபமுதலியார்சரித்திரம் முதலிய கதைகளின் ஆசிரியரும், சர்வசமயசமரசக்கீர்த்தனை இயற்றியவருமான வேதநாயகம் பிள்ளை என்பவர். இது நிற்க.

அக்காலத்தில் நாகபட்டினத்தில், கந்தப்பசெட்டியார், செல்லப்பச்சந்திரசெட்டியார் என்றிருவர் சகோதரர் பிரபல தனவந்தர்களாயும், சிவபக்தியிற் சிறந்தவர்களாயுமிருந்தார்கள். அவர்கள் கோபாலகிருஷ்ணபாரதியாரின் பெருமையைக் கேள்வியுற்றபோது, அவரைத் தம் அகத்துக்கு அழைத்துவந்து ஒரு சிவகதையைப் பாடச் சொல்லிக் கேட்கவேண்டுமென்று விரும்பினார்கள். அப்பொழுது பாரதியார் சிதம்பரத்தில் இருந்தனர். கந்தப்பசெட்டியார்

சிதம்பரம் சென்று பாரதியாரைக் கண்டு தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். பாரதியார் சமரசக்கொள்கையுடையவராதலால் செட்டியாருக்கு மதத்துவேஷம் உண்டோவென்றறிய வேண்டி 'நான் விஷ்ணுகதைகள் மட்டுமே கூறவல்லேன்' என்றனர். "எக்கதையாயினுமென் ? தங்கள் திருவாயினின்று வருமேல் அது நற்கதையே யாகும். ஆதலால் தாங்கள் திருவுளங்கொண்டு, எனது விருப்பத்தை நிறைவேற்றவேண்டும்" என்று செட்டியார் மீட்டும் வேண்டினர். அதன்மேல் பாரதியார் அவர் வேண்டுகோளுக்கு இணங்கி அவருடன் திருநாகை சென்றார். கதா காலட்சேபத்துக்கென்று செட்டியார் தமது வீட்டில் யாவும் சித்தஞ்செய்து தமது நண்பர்களுக்கெல்லாம் செய்தியனுப்பி வரவழைத்துச் சபை கூட்டினார். பாரதியார் கதாப் பிரசங்கஞ்செய்யச் சபாநாயகராக அமர்ந்தார். ஆயினும் அதுவரையில், அவர் எச் சரித்திரத்தைப் பிரசிங்கிப்பது என்றுகூட நிச்சயித்தாரில்லை. நாழிகைகள் பல கழிந்தன. சபையோர் சபாநாயகர் வாக்கிலிருந்து வரும் கதை யாதோவென்று ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். பாரதியார் மௌனமாய் வீற்று சிந்தித்துக்கொண்டிருந்தார். உணவு கொள்ளும் காலம் கிட்டிவிட்டது. சபையோர் பாரதியாரை உணவு கொள்ளும்படி வேண்டினர். அதற்கவர் "எந்த பக்தர் சரித்திரத்தைக் கூறலாமென்று சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். என் உள்ளத்தே அந்தரியாமியாயுள்ள ஈசன் என் சிந்தையில் ஒரு பக்தரைத் தெரிந்தெடுத்துக் குறிப்பிக்கும் வரையில் யான் உணவு கொள்ளேன்,' என்றனர். "ஆனால் சிறிது சிற்றுணவேனும் ஏற்றருளுங்கள்" என்று செட்டியார், ஒரு தட்டில் சில கனிவர்க்கங்களும், பாத்திரத்

தில் பாலும் கொண்டுவந்து அவர் எதிரே வைத்தனர். அதே சமயத்தில் பாரதியார் மனத்தில் நந்தனார் சரித்திரத்தைப் பிரசங்கிக்கலாம் என்ற ஓர் உணர்வு தோன்றியது. அவ்வுணர்வைப் பின்பற்றிப் பிரசங்கிக்கத் தொடங்குகையில் தம் எதிரே வைக்கப்பெற்ற பழங்களைக் காணவும், தொனியொற்றுமைபற்றிப் பழனம் என்றசொல் அவர் ஞாபகத்தில் வந்தது. உடனே அச்சொல்லையே முதலாகக்கொண்டு 'பழன மருங்கணையும்' என்ற ஒரு சிந்தினால் நந்தனார் சரித்திரத்தை முற்றும் பாடி அதைத் தாமே ஏட்டில் எழுதிக்கொண்டனர். பிறகு அச்சிந்தைப் பீடிகையாக வைத்துக்கொண்டு எடுத்துக்கொண்ட சரித்திரத்தை அழகுற விரித்து விளக்கிமூன்று நாட்கள் தொடர்ந்து பிரசிங்கித்து முடித்தார்.

பக்தியிற் சிறந்த நந்தனார் சரித்திரம் இயற்கையாகவே பாலினும் இனியது. பாரதியார் திருவாக்கினின்றும் வெளிவந்தபோது அது பாலோடு சர்க்கரையும் கலந்தாற்போல் மிகவும் இனிமையாயிருந்தது. இச்சரிதத்தைக் கேட்கவென்று, நாகையைச் சுற்றியுள்ள ஊர்களிலிருந்தும் பலர் வந்து கூடினர். அப்படி வந்து கூடியவர்களிற் சிலர், காரைக்கால் என்னும் நகரில் சீசய்யா என்னும் ஒரு பிரான்சு துரையின் ஆபீஸில் உள்ள இந்திய உத்தியோகஸ்தர்களாவார்கள். இவர்கள் மூன்றுநாள் தொடர்ந்தாற்போல் நாகைக்கு வந்து இரவெல்லாம் கண்விழித்துப் பொழுது விடிந்ததும் காரைக்காலுக்குச் சென்று தமது உத்தியோகத்தைச் செய்யும்படி நேர்ந்ததால், தமது வேலையைச் செவ்வனே செய்ய இயலாமல் உறக்கமுற்றிருந்தார்கள். தம்மிடத்து உத்தியோகம் செய்யும் இந்துக்கள் அனைவரும்

ஒருங்கே அயர்வுற்றிருப்பது கண்ட சீசய்யா துரை, ஆச்சரிய முற்றவராய் அவ்வுத்தியோகஸ்தர்களின் அயர்வுக்குக் காரணம்யாதென்று விசாரித்தனர். அப்பொழுது, நந்தனார் என்னும் ஓர் இந்திய பக்தர் சரித்திரத்தை நாகபட்டினத்தில் ஒரு சிறந்த வித்வான் அழகாய் எடுத்துப் பிரசங்கித்ததாகவும், அதனை இரவெல்லாம் கண்விழித்துக் கேட்டதால் உறக்கமின்றித் தமது உத்தியோகஸ்தர்கள் அயர்வுற்றிருக்கின்றனர் என்றும் அறியலானார். காததூரத்திலுள்ள நாகை சென்று கண்விழித்துக் கேட்கும்படியான அவ்வடியார் சரிதம் எவ்வளவு அற்புதமானதோ, அதைப் பிரசங்கிக்கும் கல்விமானது சொல்வன்மை எத்தகைத்தோ அதனை அறியவேண்டுமென்றவிருப்பினராய்ச் சீசய்யாதுரை, காரைக்காலுக்கு அந்தப் பிரசங்கியாரை வரவழைத்து அப் பக்தர் சரிதத்தைப் பிரசங்கிக்கச் செய்து கேட்கவேண்டுமென்று விரும்பி, அதற்கான முயற்சிகளைச் செய்தார்.

பாரதியார் காரைக்காலுக்குச் சென்று நந்தனார் சரித்திரத்தைப் பிரசங்கிக்க உடன்பட்டார். ஓர் இந்திய கனவான் வீட்டில் நந்தனார் சரித்திரம், மூன்று நாள் பிரசங்கிக்கப் பட்டது. சீசய்யாதுரை அதை முற்றுங்கேட்டு மெச்சியதன்றி, பாரதியாரை அணுகி, "இச்சரித்திரம் மிகவும் அற்புதமாயுள்ளது. இதனைத்தங்கள் வாக்கினின்றும் வந்தவண்ணமே அச்சிற் பதித்துப் புத்தக ரூபமாய் வெளியிட்டால் உலகத்தாருக்கு மிகவும் உபகாரமாகும். அதற்குத் தாங்கள் உத்தரவளித்தால் நான் செய்கிறேன்" என்றனர். உலக நன்மையிலேயே மிகவும் கருத்துள்ள நந்தனார் உவப்புடன் அதற்கு ஒப்பியதோடு தம் கையால் எழுதிய அச்சரித்திரக் கீர்த்தனையை அவரிடம் கொடுத்துவிட்

டார். பின்னர் சீசய்யாதுரை தாம் கூறியவாறே நந்தனர் சரித்திரக் கீர்த்தனையை அச்சிட்டுப் புத்தக உருவாய் வெளிப்படுத்தினர். அதுவே முதன்முதல் வெளிவந்த அச்சுப்பிரதி. அப்பிரதி இப்பொழுது காண்பதரிதாயுள்ளது. இது நிற்க.

நந்தனர் சரித்திரத்தைக் கீர்த்தனையாகச் செய்து பிரசங்கித்தபிறகு, பாரதியார் புகழ் எங்கும் பரவுவதாயிற்று. பலர் அவரைத் தமது இல்லங்களுக்கு அழைப்பித்துக் கதாப்பிரசங்கம் செய்யும்படி வேண்டினர். பாரதியார் அவர்கள் விருப்பத்தைத் தம்மால் கூடியவரையில் நிறைவேற்றி வந்தார். இப்பிரசங்கங்களால் பாரதியார் யாதொரு பிரதிப் பிரயோஜனத்தையும் எதிர்பார்த்திலர். ஆயினும் பலர் தாமே வலிய அவர்க்குப் பொருள் கொடுத்து அதை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். பாரதியார், பொருளாற் செய்யத்தக்க பல நற்காரியங்கள் உளவென்னும் உண்மையை உணர்ந்து, தமதன்பர்கள் அளிக்கும் பொருளைப் பெற்றுவந்தார். இங்ஙனம் இவர் பெற்றுவந்த பொருள் சில காலத்தில் மிகவும் அதிகமாய்விட்டது. உடனே அப்பொருளை அறவழியிற் பயன்படுத்தும் நோக்கமுடையவராய், மாயவரத்தில் தேசாந்திரிகள் பதின்மருக்கு ஒவ்வொருநாளும் அன்னமளிக்கும்படி ஒருகட்டளை ஏற்படுத்தி அதற்கு ஐயாயிரரூபா மூலதனமாகவைத்தார். இஃதன்றியும், சிதம்பரத்தில் அர்த்தசாம பூசையானபிறகு, கோயிற் பூசைக்காரர் ஒருவர்க்கு அன்னமளிக்கும்படி ஒரு கட்டளை ஏற்படுத்தி

இதற்கு ஆயிரரூபா மூலதனமாக வைத்தார். இக்கட்டளைகள் இன்றும் நடந்து வருகின்றன.

பாரதியார் செய்து வந்த தர்ம கைங்கர்யங்கள் இன்னும் பல. கலியாணம் முதலிய சடங்குகளுக்குப் பொருளுதவி செய்வார்; உடையில்லாதவர்களுக்கு உடைகொடுப்பார்; ஊண் இல்லாதவர்களுக்கு ஊண் அளிப்பார். சங்கீதவித்வான்கள் தம்மை ஆதரிப்பாரின்றி மனம் வருந்திய காலத்து, அவர்களுக்குத் தாம் பொருள் கொடுத்துக் காலட்சேபம் செய்யச் சொல்லிப் பல கனவான்களை வரவழைத்து சபை கூட்டி அவ்வித்துவான்களைப் பிரபலப்படுத்துவார்.

இவர் நந்தனர் சரித்திரத்தைக் கீர்த்தனையாகப் பாடிய பிறகு வேறு சில அடியார் சரித்திரங்களையும் கீர்த்தனையாக இயற்றிப் பிரசங்கித்து வந்தார். அச்சரிதங்களாவன, திருநீலகண்ட நாயனர் சரிதம், இயற்பகைநாயனர் சரிதம், காரைக்காலம்மையார் சரிதம் என்பனவாம். இம்மூன்றனுள் கடையிற் கூறப் பெற்ற காரைக்காலம்மையார் சரிதம் பாரதியார் காலத்திற்குப்பின் எவ்வாருகவோ மறைந்து விட்டது. முன்னைய இரண்டும் இன்னும் அச்சு வாகனமேறி வெளிவரவில்லை. பாரதியார் கற்கண்டும் கனிரசமும்போல் இனிக்கப்பாடிய தனிக்கீர்த்தனைகளும் இன்னும் வெளிவந்தில.

பாரதியார் நூல்கள் இயற்றியது தமது தாய்மொழி ஒன்றிலேயே யாயினும், சமஸ்கிருதம், கன்னடம், மகா

ராஷ்ட்ரம், தெலுங்கு, இந்துஸ்தானி என்னும் இவ்வைந்து அன்னியபாஷைகளினும் வல்லவராயிருந்தார்.

இங்ஙனம், பலபாஷாவிற்பன்னராயும், சங்கீதஞானம் மிக்குடையவராயும், பிரசங்க வன்மையிற் சிறந்தவராயும், பரோபகார சிந்தையராயும் குடும்பவலையிற் சிக்காத திடசித்தராயும் விளங்கிய கோபாலகிருஷ்ணபாரதியார், தமது தொண்ணூறாவது வயதில், பஞ்சபூத சேர்க்கையாலாகியதும், நீர்மேற்குமிழிபோல் நிலையற்றதுமான தமது தூல சரீரத்தை ஒழித்து, நிலையான பேரின்ப வாழ்வெய்தினர்.

உ

திருநாளைப்போவார்

என்னும்

# நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.

## கற்பக விநாயகர் வணக்கம்.

காப்பு-வெண்பா.

கந்தன்தன் தந்தை கழல்வணங்கிப் பேறுபெற்ற
நந்தன் சரித்திரத்தை நானியம்பச்—சுந்தரஞ்சேர்
தில்லைமணிக் கோபுரம்வாழ் கற்பகத்தின் பொற்பதங்கள்
அல்லும் பகலுந் துணை.

## முக்குறுணி விநாயகர் வணக்கம்.

விருத்தம்.

நந்தணி கரத்தான் றில்லை நாயக னருளால் வந்த
நந்தன்முக் குறுணி பேர்வி நாயகன் றாள்வ ணங்கி
நந்தன்தன் சரித மென்னும் நற்புகழ்ச் சொலிப்பின் பேரா
நந்தமுற் றுலகி னூளும் நலமுடன் வாழ்வேன் நானே.

## சபாபதி வணக்கம்.

கலி விருத்தம்.

தக்க சீர்த்தி நந்தன் சரிதமாம்
இக்க தையை யெடுத்தே யியம்பிட
செக்கர் மேனியன் தில்லைச் சபைதனிற்
றக்கத் தோமெனுந் தாள்கள் சிரங்கொள்வாம்.

## சிவகாமிவல்லி வணக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

பாம்பினைத் தந்தையாகப் படைத்துப்பின் பெவருங் காணப்
பாம்பினைப் பணியாக் கொண்ட பரையருட் பாத மேத்திப்
பாம்பினிற் புலியும் பாம்பும் பார்த்திட நந்த னூர்க்கன்
பாம்படி முத்தி தந்த பழங்கதை பகருவேனே.

---

## சுப்பிரமணியர் - தெய்வானை - சரஸ்வதி.
## லக்ஷ்மி - விஷ்ணு - இவர்கள் வணக்கம்.

எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சச்சிதா னந்த சதாசிவ னருளைச் சார்ந்தனித் யானந்த நந்தன்
உச்சிதக் கதையைக் கீர்த்தனை யாக வுலகெலாந் துதித்திடச் சொல்ல
அச்சிலை வேற்கை யறுமுகன் தெய்வ யானைசெங் கலைமகள் மாலை
பச்சைமான் மற்றும் பரவிய தேவர் பாதபங் கயம்பணி குவனே.

---

## திருத்தொண்டர் முதலிய தில்லை மூவாயிரவர் வணக்கம்.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

வாதவூ ரடியா ரோடு மற்றறு பத்து மூவர்
பாதமே வணங்கித் தில்லைப் பதிதனி னுளு மேவும்

போதமூ வாயி ரத்தோர் பொன்னடிக் கமல முன்னி
ஓது நந்தனார் சரிதை யுரைத்திடத் துணிந்தே னானே.

---

## அவையடக்கம்.

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சிற்பிகள் காண்போர் சிந்தையு முவக்கச் செப்புநல் லின்புறத் தீட்டும்
விற்பனங் கண்ட வறிவிலா னெழுதும் விதமென முத்தமி ழென்னுஞ்
சொற்புகழ் கல்வித் துறையெலாந் தெரிந்ததூயநற் புலவர்முன் கருதிப்
பொற்புற விசைக்குங் கீர்த்தன மிதனைப் புவிமிசை மதிப்பர்க ளம்மா.

## விநாயகர் வணக்கம்.

ராகம்-மோஹனம்; தாளம்-ஆதி.

பல்லவி.

கணநாதாசரணம் காத்தருள்
கணநாதாசரணம்.

அநுபல்லவி.

பணமார்சேஷன்றாங்கிய பார்மீதினிலே நேருங்
குணமார்நந்தன்சரித்திரங் கூறக்கிருபைக்கண் பாரும் (கண)

சரணங்கள்.

சொல்லும்ப்ரணவமூலா தூயவேதாந்த நாதா
துலங்குமுனிவர்மனத் துகளறுத்தருள் போதா
நல்லமோதகமுதல் நாடிநுகர்வி னோதா
நாயேன்சொலுந்தமிழை நாடிரக்ஷிக்குந் தாதா (கண)

அம்பரமானமன்றுளாடும்பர னளிக்க
அரைநொடியினில்வல மாகிமனங் களிக்க

உம்பர்பிரானுகந்து நறுமாங்கனி யளிக்க
உளந்தளராமலுண்ட முதல்வாதூய் ரொளிக்க (கண)

தேஜோங்குநவரத்நச் சிகரமேலக்கோ புரத்
தேவிற்றிருக்குமெங்கள் தேவாகுண்ட லாதர
பூஜித்தவர்க்குவரம் புரிந்தருளு மாதர
பூமிசைநாடகஞ்செய் புனிதவோம் ஹரஹர (கண)

---

## புராணிகர் கூற்று.

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

வளம்பெருந் தரும மோங்கிய ஆத
னூரினில் வாழ்ந்திடும் புலையர்
உளமகிழ்ந் தெங்கள் குடிப்பெயர் விளங்க
வுதித்தநற் றீபமே மணியே
களங்கிலாக் கதிரே யெனப்புகழ்ந் தோதக்
கதித்தசீர் நந்தனர் சரிதம்
விளம்பிட முதலிற் றேடயம் படித்து
மேன்மையு மிகப்படைத் தனனே.

### தோடயம்.

ராகம்-நாட்ட்; தாளம்-ஆதி.

திருவளர்தருமாத னூரர் செறிபுலைக்குடிலவதாரர்
தருமநெறிநந்தனர்ப் பேரர் சரித்திர மதனைச் சொலவே-ஆ-ஆ
அருள்வளர்கஜமுக ஸ்வாமி அம்பிகைதந்தருளும் ஸ்வாமி
சங்குசக்கரதல ஸ்வாமி அம்புயத்தாணிதந் துணையே-ஜய-ஜய
வண்டணிமாமலர்த் தாரன் மண்டலம்வாழ்த்தியதீரன்
மண்டுமெளியர்க்கு தாரன் மன்னுங்கதைசொலவே-ஆ-ஆ

புண்டரீகபுரத் தீசன் புராரியுளமகிழ் நேசன்
தண்டலர்மாமண வாசன் தாமரைத்தாள் கடுணையே-ஜய-ஜய

## மங்களம்.

### எழுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்.

சங்கரன் றனக்கும் சண்முகன் றனக்கும் சதுர்முகப் பிரமனார் தமக்கும்
பங்கய மாற்கு மவர்மனை யாட்கும் பார்மகட் பாவலர் தமக்கும்
தங்கிய வட்ட வசுக்களா னவர்க்கும் சதுர்மறை யோதுமந் தணர்க்கும்
பொங்கிய மூவா யிரநந்த னார்க்கும் பொதுப்பட மங்களம் புகல்வாம்.

ராகம்-அஸாவேரி; தாளம்-சாபு.

பல்லவி.

ஆதிமத்தியாந்தனுக்கு மங்களம் எங்கள்
ஆனந்தநந்தனார்க்கு மங்களம். (ஆதி)

அனுபல்லவி.

பாதிமதிநதியும் பாம்பும்புலி யுரியும்
சோதிக்குழையணியுந் துலங்கவருள் புரியும் (ஆதி)

சரணங்கள்.

சிலையைவடிவழகிற் சிறந்தவொருபெண் ணாக்கி
சிலைவளைத்தபரசுராமன்கர்வத்தைப் போக்கி
மலையைச்சுமந்துபெரு மடுவிலொருகாற் றாக்கி
மாநடனங்கள்செய்த மாயமானினையெய்த (ஆதி)

குருபரநாதருக்குங் குறமகட்பாக ருக்கும்
அருணகிரிநாதனுக் கருள்செய்விசாக ருக்கும்
ஒருமுருகாவென வுளங்களித்தவ ருக்கும்
உம்பர்கோனுக்குகந்த வுயரரசினைத்தந்த (ஆதி)

சக்கரைமுக்கனியவல் தமைநுகர்நாத ருக்கும்
சகலதேவர் தமக்குஞ் சகலவசுக்க ளுக்கும்
பக்குவமாகவிதைப் பாடும்சங்கீத ருக்கும்
பார்மகட்கும்பங்கயப் பாவையர்க்கும்விஜய (ஆதி)

## பெரியபுராணச் செய்யுள்.

### எண்சீர்க் கழிநெடிலடி விருத்தம்.

* திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவவே
தியரரனை வழிபட்ட புராணமோ ரிரண்டு
குருகழன்மா மாத்திரரோன் றறுவர்முடி மன்னர்
குறுநிலமன் னவரைவர் வணிகர்குலத் தைவ
ரிருமைநெறி வேளாளர் பதின்மூவ ரிடைய
ரிருவர்சா லியர்குயவர் தயிலவினை யாளர்
பரதவர்சான் றூர்வண்ணார் சிலைமறவர் நீசர்
பாணரிவ ரோரொருவ ராம்பகருங் காலே.

### புராணிகர் சொல் வசனம்.

பெரிய புராணமென்று சொல்லப்பட்ட நூல் சேக்கிழார் சுவாமிகளாலே செய்யப்பட்டது. ஸ்காந்த புராணத்திலும், இன்னு மனேக புராணங்களிலுஞ் சொல்லப்பட்ட பக்திமார்க்கங்களாகிய கடலிலே நீரைக் கையாலள்ளிக் குடித்ததுபோலச் சில கீர்த்தனங்களினாலும், விருத்தங்களினாலும், சிவபக்தர்கள் சரித்திரங்களைக் கொண்டாடுவது போல உளறினேனென்று ஆனைதாண்டாபுரம்-கோபாலகிருஷ்

* இது பெரிய புராணத்தில் சேக்கிழார் சரித்திரத்தில் 36-ஆவது விருத்தம்.

னையன் பெரியோர் அடிவணங்கி ஆனந்தம் பெருகிச் சொல்லிய திருநாளைப் போவார் சரித்திரத்தை யாவரும் விரும்பிக் கேட்கும்படி சிரம் வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

உபமன்ய பகவான் ரிஷிகளுக்குச் சொல்லிய வரலாறு.

இவ்வுலகில் பெரிதாகிய வேதசாஸ்திரங்களுக்குள்ளே மிகவும் சாரமாகிய பரசிவ பக்தியை உண்டுபண்ணுகின்ற பக்தவிலாஸத்தை அநேக ரிஷிகள் பிரார்த்தித்துக் கேட்க, உபமன்யபகவானனவர் சொல்லிவரும்போது, பாரதம், பாகவதம், பகவத்கீதை, சிவரகசியம், ஸ்காந்தம் முதலாகிய பக்தி ஞானவைராக்கிய சாஸ்திரங்களிலே மிகவும் சாரமாகிய பரமசிவ பக்திபண்ணாத சதுர்வேத பாரங்கதனு யிருக்கின்ற பிர்ாமணனைப்பார்க்கிலும், பரமசிவ பாதாரவிந்த பக்தி பண்ணுகிறவன் பறையனுயிருந்தாலும், பதினன்கு லோகத்தையும் பரிசுத்தம் பண்ணுவானென்று உபமன்யபகவான் சொல்ல, அதற்கு ரிஷிகள் "பக்தி ஞானவைராக்கியங்களைத் தெரியப்படுத்தாநின்ற வேதபுராணங்களைப் பார்க்க அறியாத அவிவேகிகளாயிருக்கிற சண்டாளர்களுக்கு பக்தி எப்படி வரும்?" என்று கேட்க, உபமன்யபகவான் சொல்லுகின்றார்:

உபமன்யபகவான் ரிஷிகளுக்குச் சொல்லுகிற
நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னுகவராளி; தாளம்-மிச்ர ஏகம்.

பழனமருங்கணையும்-புலைப்-பாடியதுகூறை வீடுதனில்
சுரையோபடர்ந்திருக்கும்-அதைச்-சுற்றிலும்நாய்கள் குலைத்திருக்கும்
பருந்தோடிவட்டமிடும்-இளம்-பச்சைப்பிசிதமே விச்சைகொண்டு
கோழிகூவுங்குரலும்-பாழுங்-கொல்லையருகினில் வெள்ளெலும்பும்
நரம்புக்குவிந்திருக்கும்-பல-நெட்டிமிதந்திடுங் குட்டைகளில்

கண்டோகுடியிருக்கும-சிறு-நத்தைகமடம் வலுத்திருக்கும்
தோலூறுங்கேணிகளில்-வெகு-தொல்லைப்படும்வாடை சொல்லறியாப்
பரம்போஅடித்திருக்கும்-வயற்-பக்கங்களில் மெத்த சொக்கெலும்பும்
இழித்தோல்நரம்புகளும்-அவர்க்-கினமில்லைசிறு மீனுலரும்
தெருவில்விளையாடிக்கொண்டு-அவர்-தெந்தினம்பாடுவர் சுந்தரமாய்
இலுப்பைமணியரையில்-கட்டி-இண்டந்தலைகளில் பூண்டிருக்கும்
சங்குதோடுகாதணியும்-அருந்-தாவடமேயவர் தூவிடமாம்
மணியோதரித்திருப்பார்-தெரு-வாசற்புறத்தினி லேசிக்கொண்டு
கொண்டாட்டமாயிருப்பார்-கையைக்-கொட்டிக்கொண்டு தமக்கிஷ்டமுடன்
மதுவுண்டுகெக்கலிப்பார்-பறை-வாத்தியமும்வெகுநேர்த்தியுடன்
இருக்கும்புலைப்பாடி-அதில்-ஈசன்திருவடிநேசமுடன்
ஊரும்ஒருபுலையர்-அவர்-ஜாதிமுறை தவறுதவராம்
நந்தனுரவர்பெயராம்-வெகு-நல்லவராமிந்தத் தொல்லுலகில்
அவரேசிவனடியார்-அவர்க்-காருமெதிரில்லைத் தாரணியில்
கோடிகோடிஜன்மங்களோ-முன்னங்-குற்றமறச்செய்த நற்றவமே
அவதாரமானதுவோ-ஈசன்-அன்புபுரியும்பே ரின்பசுகம்
கொள்ளைகொள்ளவோபிறந்தார்-திருக்-கோவில்வலம்வந்தா ரவலுடன்
செய்யும்பணிவிடைகள்-ஈசன்-சிந்தைமகிழ்ந்து குளிர்ந்திடவே
மத்தளம்பேரிகைக்கும்-இசை-வார்கொடுத்தப்புறந் தோல்கொடுத்து
மறவாமலே தினமும்-நல்ல-வாசம்பெருகுங்கோ ரோசனையும்
தேவாலயங்கள்தோறும்-தந்து-சித்தமுருகிய பக்திவெள்ளம்
புரண்டோடிக்கங்குகரை-என்று-பேதமறியவொண் ணாதுகண்டீர்
ஜாதியில்நீசரவர்-பேணிச்-சாருமுறமுறை யாருடனே
திருப்புன்கூர்ச்சென்றரனைக்-கண்டு-சேவித்திசைபாடி பாவித்தபின்
தில்லைச்சிதம்பரத்தைக்-கண்டு-சேவிக்கவேண்டுமென் றுவலுடன்
நாளைப்போவேனென்றாராம்-தன்னை-நாடும்பறையர்க ளோடிவந்து
அண்ணே நீ போகாதே-நமக்-காண்டைபொல்லாதவன் வேண்டிக்கெ; [illegible]
பார்ப்பாரசாதியுண்டே-என்ன-பாடுபடுமுழுக் காடுமங்கே
நமக்குந்திருநாளோ-அந்த-ஞாயமுண்டோ யென்னமாயமிது
வென்றேதடைசெய்தார்-சிவன்-வேடிக்கைதானென் றுநாடிக்கொண்டே
அறியாதுபோலிருந்த-செம்பொன்-னம்பலத்தாடியைக் கும்பிடவே

ஆதனூர் தனிலிருந்து-விடும்-அம்புபோலப்பறந் தையமின்றித்
தில்லையருகில்வந்தார்-மனந்-தேறிக்கொண்டார்குறையாறிக்கொண்டார்
கண்டாமணியோசை-காதில்-கேட்குதென்றாரதைப் பார்க்கவென்றே
கொண்டாட்டமாய்வந்தார்-கையைக்-குவித்துக்கொண்டேதனக்கம்பிட்டதோ
வென்றேமனமகிழ்ந்தார்-தெரு-வீதியிலேவந்து காதலுடன்
கண்டார்களையாறி-இரு-கண்களிலானந்தம் பொங்கிடவே
நின்றார்மதிற்புறத்தே-வெகு-நேர்த்தியென்றாரிதைப் பார்த்ததில்லை
பணிந்தார்பரவசமாய்-நல்ல-பாக்யசாலிக ளாகுமென்றார்
இதுதானோ தில்லைப்பதி-என்று-எக்கலித்தாராடிக் கெக்கலித்தார்
ஐயாவுன்சந்நிதியே-நான்-ஆசைகொண்டுவந்தே னேசமுடன்
தெருவின்பொடித்தூளை-அள்ளித்-தேகமுழுதிலுந் தாகமுடன்
தரித்தார்திருநீறாய்-நாலு-சாஸ்த்ரவேதங்கள் பார்த்துணரும்
பெரியோரிருக்குமிடம்-இந்தப்-பேயனிருப்பது ஞாயமல்ல
நானோபறைச்சாதி-தில்லை-நாதன்தரிசன மாதரவாய்ப்
பண்ணுப்படுபாவி-இந்தப்-பாரிலிருப்பது சீரலவே
என்றேகுளத்தோரம்-புக்கு-ஏங்கிநின்றார் துயர் நீங்கிநின்றார்
ஓயாப்பெருங்கவலை-கொண்டு-உள்ளங்குழைந்திட வெள்ளமெனக்
கண்ணீர்கரைபுரள-இரு-கைதொழுதாரவர் மெய்தொழுதார்
கீழேபுரண்டழுதார்-ஒன்றுங்-கேள்விமுறையில்லை யோநாதா
வென்றேதலைகுனிந்தார்-என்தன்-வேதனையைக்கண்டு ஆதரிக்கும்
தெய்வங்கிடையாதோ-பாவி-சித்தந்தெளியவி ரக்திதந்து
வாவென்றழைப்பாரோ-விண்ணில்-வானவர்கள் போற்றுமூனமிலா
கனகசபைநடனம்-கண்ணிற்-காட்டக்களித்திட நாயடியேன்
வருந்தித்துதியேனோ-என்தன்-வாணாளொழிவது வீணலவே
அப்[illegible]யதென்னவென்று-சொல்லி-அந்நகர்வீதியைச் சுற்றிவந்தார்
இரவும்பகலோயா-ரதை-ஈசன்கண்டு விசுவாசமுடன்
பாலகிருஷ்ணன்பணியும்-திருப்-பாதமுள்ள தில்லைநாயகனே
கனவினிலுருவாகி-வந்து-காட்சிகொடுத்துக் கடாக்ஷித்தபின்
எரியினிடைமூழ்கி-வெகு-இன்பம்பெருகிய அன்பர்துதி
வேதமுனிவடிவாய்த்-தில்லை-வேதியர்கண்டிரு கைதொழுதார்
அங்கம்புளகிதமாய்ச்-செம்பொன்-னம்பலத்தாடிய சம்பிரமத்தைக்
கண்டா ரறிந்தில ரால்.

ராகம்-எதுகுலகாம்போதி; தாளம்-ஜம்பை.

பல்லவி.

நீசனாய்ப் பிறந்தாலும் போதும்-ஐயா
நீசனாய்ப் பிறந்தாலும் போதும் (நீச)

அநுபல்லவி.

ஆசையுடனம்பலவனடியி லிருந்தேத்தும் (நீச)

சரணங்கள்.

கோதிலாத்தவங்கள்புரிந்தாலும் தங்கள்
குலவண்மைதவறாதநெறியிலிருந் தாலும்
வேதமுடியாவுமுணர்ந் தாலும்-மாயை
விலகாதுஒருநாளுந் தொலையாதுதுன்பம் (நீச)

களவுகொலைசெய்துவந் தாலும்-பழி
காரருடன்எந்நேரங்கூடியிருந் தாலும்
வளமறவேவாழ்வுகெட் டாலும்-நல்ல
மனிதனவனிடமாகமறலியணு காது (நீச)

வத்தகருமங்கள்செய் தாலும்-எங்கும்
கிடையாதகொடையாளியெனவிருந் தாலும்
கோத்திரக்கீர்த்திமிகுந் தாலும்-எங்கள்
கோபாலகிருஷ்ணன்தொழும் பாதம்நினைந்தேத்தும் (நீச)

வசனம்.

இப்படியே பக்திசெய்தால் போதும், மற்ற ஜாதி வருணாசிரமங்களினாலே ஒன்றும் பிரயோஜனமில்லையென்று கூறி உபமன்யர் ஓர் இதிகாசத்தைச் சொல்லுகின்றார்: "பூர்வத்திலே, தில்லை வெட்டியானென்றும், பெற்றான் சாம்ப

னென்றும், ஆதனூர் நந்தன் சாம்பனென்கிற திருநாளைப் போவானென்றும் பெயர்பெற்ற இம்மூன்று பேர்களுந் திருச்சிற்றம்பலத்தை யடைந்தார்கள். இம்மூன்றுபேர்களில், நந்தன் சாம்பனென்பவர் மாத்திரம் தில்லை மூவாயிரம் பேர்களும் பார்க்க சபாப்பிரவேசமானு" ரென்று சொல்ல, ரிஷிகளெல்லோரும் ஆனந்தமடைந்து உபமன்யு மஹரிஷியை பிரதக்ஷணஞ்செய்து பாடி வணங்கி அஞ்சலிசெய்து "ஓ சுவாமி! எல்லோரும் பார்த்திருக்கையில் முக்தியடைந்த திருநாளைப்போவாரென்று பெயர்படைத்துப் பேறுபெற்ற சிவபக்தருடைய சரித்திரத்தைச் சொல்லுங்க" ளென்று பிரார்த்தித்துக் கேட்கும்போது, உபமன்ய மஹரிஷியானவர் மிகவும் சந்தோஷமடைந்து "ஈசுவரனுடைய குணங்களை வருணிப்பதைப்பார்க்கிலும், ஈசுவர பக்தர்களுடைய குணங்களைச் சொல்லுகிறது மெத்தவும் புருஷார்த்த" மென்று சொல்லத்தொடங்கினர்: "சிதம்பரத்திற்கு நாளைப்போவே னென்று சிலநாள் நந்தன் சொல்லிவந்தபடியால், நந்தனுக்கு நாளைப்போவாரென்று நாமதேயமுண்டாயிற்று. ஆகிலும், ஈசுவரனுடைய குணங்களைச் சொன்னாலுஞ் சொல்லலாம், பக்தர்களுடைய குணங்களைச்சொல்ல யாவர்க்குந் தெரியாது; தெரிந்தமட்டுஞ் சொல்லுவோ" மென்று மயிர் சிலிர்த்து ஆனந்தக்கண்ணீர் வடித்து மனங்களித்துப் பரமசிவனை நினைத்து வாயால் துதித்து ஆத்மா ஆத்மிகளாயிருக்கின்ற தாபத்ரயங்களினலே துன்பப்பட்டிருக்கின்ற ஜந்துக்களுக்கு அமிர்தவருஷம் வருஷித்தல்போல நந்தனருடைய புண்ய கதாமிர்தத்தை வருஷிக்கத் தொடங்கினர்:

---

ராகம்-சங்கராபரணம் ; தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தன் சரித்ரமானந்தம்-ஆனாலுமத்தி
யந்தம் பக்திரச கந்தஞ்-சொல்லச்சொல்ல (நந்தன்)

அனுபல்லவி.

நந்தன் சரித்திரம்வெகு அந்தம்-சிவனாருக்குச்
சொந்தம் தொலையும் பவபந்தம்-கேட்டபேர்க்கு (நந்தன்)

சரணங்கள்.

ஏது யிவனைப்போலே சாது-பூமியிலிருக்
காது அரிது இரு காது-படைத்தபேர்க்கு (நந்தன்)
வாடி மனதிளகிப் பாடி-ஹரஹராவென்
றாடி கனகசபை நாடிச்-சேருவேனென்ற (நந்தன்)
அண்டர் கொண்டாடுஞ் சோழ-மண்டலந்தன்னைச்சூழ்ந்து
கொண்ட மேற்காநாட்டில் விண்ட-ஆதனூரில்வாழ் (நந்தன்)

ராகம்-கமாசு; தாளம்-ஆதி.

பல்லவி.

திருநாளைப்போவான்-சரித்திரம்
தேனிலும்பாலினு மினியதுகண்டீர் (திருநா)

அனுபல்லவி.

சித்தமுருகிய சிவயோகிகளுக்
கர்த்தமிதுவென்றே யனுதினம்பணிந்திடும் (திருநா)

சரணங்கள்.

மேதினிபுகழுமாதனூர்விளங்கும்-மாதவம்புரிந்தே சாதனைபெருகிய
பேதமிலாதவன்-வேதப்பொருளைவிரைந்
தோதும்கருணைகுரு-நாதனைப்பணிந்திடும் (திருநா)

மனதினில்குற்றம்இல்லாதவனிந்தை-வஞ்சனைமாயையில்லாதவன்
கனவிலும்நினைவிலும்-சிவபதங்குருபதம்
கருத்துறைகளித்திடப்-பெருத்திடவரசனும் (திருநா)

சாதிமுறைமைதவறுதவன்பவ-சாகரத்திடைமுழுகாதவன்
பூதமயாதிக-ளாகியவுலகம்
பொய்யிதுமெய்யிது-வல்லவென்றறிந்திடும் (திருநா)

---

## பெரியபுராணச் செய்யுள்.

### விருத்தம்.

பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகுந்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தான்
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட் டாதனூர்.

### வசனம்.

கொள்ளிடத்துக்குச் சமீபமாகிய உலகமெல்லாம் புகழும்படி கீர்த்திபெற்றிருக்கின்ற அமராபதி, அளகாபுரி பட்டணத்தைத் தோற்கச்செய்யும் மாடமாளிகை கூடகோபுரத்தோடும் அணிமாவாதி சித்திகள் நிறைந்து திரண்ட செல்வத்தோடும் வேதவேதாந்த தத்வஞானமறிந்து சாக்ஷாத்காரம்பெற்ற வேதியரோடு மற்ற மூன்று வர்ணாசிரமங்களாலே சூழப்பட்டு பூலோகத் திலகமென்று சொல்லப்பட்ட ஆதனூரென்னும் கிராமத்துக்கு வெளியில் நன்செய் நிலங்களாலே சூழப்பட்டிருக்கின்ற கடைஜாதியர் குடியிருக்குஞ் சேரியைக் கொண்டாடிச். சொல்லுவார். ஏனென்றால், ஸ்காந்த புராணத்தில் அஞ்சுபோக காண்டத்திலே சிவபக்

தன் குடியிருக்குஞ் சேரியைக் கைலாசமென்று வர்ணித்துச் சொன்னபடியால், உபமன்யபகவான் மிகவுங் கொண்டாடிச் சொல்லுகின்றார்.

## நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னாகவராளி ; தாளம்-மிச்ர ஏகம்.

* பழனமருங்கணையும்-புலைப்-பாடியதுகூரை வீடுதனில்
கூரையோபடர்ந்திருக்கும்-அதைச்-சுற்றிலும்நாய்கள் குலைத்திருக்கும்
பருந்தோடிவட்டமிடும்-இளம்-பச்சைப்பிசிதமே விச்சைகொண்டு
கோழிகூவுங்கூக்குரலும்-பாழுங்-கொல்லையருகினில் வெள்ளெலும்பும்
கரம்புங்குவிந்திருக்கும்-பல-நெட்டிமிதந்திடும் குட்டைகளில்
கண்டோகுடியிருக்கும்-சிறு-நத்தைகமடம் வலுத்திருக்கும்
தோலூறுங்கேணிகளில்-வெகு-தொல்லைப்படும்வாடை சொல்லறியாப்
பரம்போஅடித்திருக்கும்-வயற்-பக்கங்களில்மெத்த நொக்கெலும்பும்
கிழித்தோல்நரம்புகளும்-அவர்க்-கீனமில்லை சிறுமீனுலரும்
தெருவில்விளையாடிக்கொண்டு-அவர்-தெந்தினம்பாடுவர் சுந்தரமாய்
இலுப்பைமணியரையில்-கட்டி-இண்டந்தலைகளில் பூண்டிருக்கும்
சங்குதோடுகாதணியும்-அருந்-தாவடமேயவர் தூவிடமாம்
மணியோதரித்திருப்பார்-தெரு-வாசற்புறந்தனி லேசிக்கொண்டு
கொண்டாட்டமாயிருப்பார்-கையைக்-கொட்டிக்கொண்டுதனக் கிஷ்
[டமுடன்
மதுவுண்டுகெக்கலிப்பார்-பற-வாத்தியமும்வெகு நேர்த்தியுடன்
இருக்கும்புலைப்பாடி-அதில்-ஈசன்திருவடி நேசமுடன்
தரிக்கும்ஒருபுலையர்-அவர்-ஜாதிமுறை தவறாதவராம
நந்தனா ரவர்பெயராம்.

## வசனம்.

இவ்விதமாய்க் கடையரிருப்பின் வரப்பினில் வாழ்வார் இப்பரிவுடன் சிவன்கழற்கேவிளைத்த வுணர்வோடு மந்தரா

---

* இந்நொண்டிச் சிந்து முழுவதும் 7-ஆம் பக்கத்தில் பதிக்கப் பட்டிருக்கிறது, அதுவே பகுதி பகுதியாகப் பின்னர் கூறப்படுகிறது.

பத்தில் நூற்புலமையாண்ட தொழிலனு யத்திலொப்பிய நந்தனரென் றொருவருண்டாயிருக்கும் புலைப்பாடியில் பரமசிவன் பாதாரவிந்தத்தில் மிகுந்த அந்தரங்கம் பொருந்தினவராகிய நந்தனர் மிகுந்த பக்திபுரிந்திருந்தார். 'வீச்சுடன் சேற்றில் விழுந்தாலும் பிள்ளைப்பூச்சி மேலொட்டாது.' அத்தன்மைபோல், எத்தனை காரியமிருக்கினும் முக்தியளிக்கும் கர்த்தனுகிய அத்தனை தனது சுத்தமாகிய சித்தத்தில் நித்தமும் வைத்து உத்தமபக்தி பெற்றிருந்தார், மற்றது மறந்தார், உற்றது முணர்ந்தார். இப்படியெல்லாமிருந்தும், நல்லகுண மில்லாமற்போனல் உலகம் பொல்லாங்கு சொல்லுமல்லவா? இவர்,

நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னுகவராளி ; தாளம்-மிச்ர ஏகம்.

வெகு-நல்லவராமிந்தத் தொல்லுலகில்
அவரே சிவனடியார்

வசனம்.

என்று ஆச்சரியங்கொண்டு சொன்னபடியினுலே, இவரைப்போல பக்திமார்க்கத்தில் மிகுந்தவராயிருந்தவர் யாரிருக்கிறுர் யாரிருப்பார் என்று இணைசொல்லப்போகா தணைகடந்த பரமசிவ பக்திமானென்று சொல்லப்படும். ஆகையால்,

நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னுகவராளி ; தாளம்-மிச்ர ஏகம்.

அவர்க்-காருமெதிரில்லைத் தாரணியில்
கோடிகோடி ஜன்மங்களோ

முன்னங்-குற்றமறச்செய்த நற்றவமே
அவதாரமானதுவோ
ஈசன்-அன்புபுரியும்பேரின்பசுகம்
கொள்ளைகொள்ளவோபிறந்தார்
திருக்-கோவில்வலம்வந்தாராவலுடன்
செய்யும் பணிவிடைகள்.

## பெரியபுராணச் செய்யுள்.

### விருத்தங்கள்.

ஊரில்விடும் பறைத்துடவை யுணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினாற்
கூரிலைய முக்குடுமிப் படையண்ணல் கோயிறொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும்

போர்வைத்தோல் விசிவாரென் றினையனவும் புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கு நிலைவகையாற்
சேர்வுற்ற தந்திரியுந் தேவர்பிரா னர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனமுமிவை யளித்துள்ளார்.

### வசனம்.

இந்தப்பிரகாரம் நந்தனார் சிவஸ்தலங்கள்தோறும் போய் சுவாமியைத் தோத்திரஞ்செய்கிறதெப்படியென்றால்,

### கண்ணிகள்.

ராகம்-காம்போதி ; தாளம்-ஆதி.

செந்தாமரைமலர் சூழோடைமேடை
செறிந்தமாதர்க ளாட்டம்-சிறந்தவேளூர்
எந்தைபிரானபி-டேகமோரோசனை
ஈந்தொழிந்தார் மனவாட்டம்

சிவசரவணனே ஞானசம்பந்தரெனத்
 திருவவதாரமாக வந்தசீர்காழி
புவனரட்சகன்றிரு நாயகியையேத்தி
 பூரித்தார்வெகு வாக
ஒருபொற்புரமதி லோங்கியமாயூரத்
 துவந்தவிஸ்வநா தரை-மிகத்தொழுது
ஒருமுகக்கருவிக்குந் தோல்நரம்பிவைதந்தா
 ருலகிற்புகழவுந்தன் பெயரை
உமையொருபாகத்தி லுயர்ந்தபரன்றரு
 மொருபசுவுங்கன் றுக-மாயவேடன்
சமைந்துபின்மனுநீதிச் சோழன்றனக்குக்காட்சித்
 தந்தவாரூர்ச்சென்றாரன் பாக

---

## வசனம்.

பின்னும் நந்தனார் தாம் செய்யுந் தருமமேதென்றால், இவர் புலையரானபடியால் சிவஸ்தலங்களுக்குப் போய் வீதியைச் சுற்றி சந்நிதியில் வந்து தடி விழுந்ததுபோல் உடல் பணியப் பணிந்து புழுதியில் புரண்டு மயிர் சிலிர்ப்பக் கண்ணீருதிர்ப்ப வாய்குழறி உரைதடுமாறி ஒருதர மழுது பலதரந் தொழுது எக்கலித்து கெக்கலித்து ஒருதரஞ் சிரித்து ஒருதரம் வெறுத்து ஜகமறந்து அகமிழந்து அனல்கண்ட மெழுகதுபோ லுள்ளமுருகி ஆனந்தவெள்ளம் பெருகி கள்ளங் கருகிச் சிவனே சிவனேயென்று வாய்வலிக்கப்பேசி கைவலிக்கக் கொட்டி கால்வலிக்கக் கூத்தாடி நிற்பவ ரொருமுகூர்த்தஞ் சித்திரத்திலெழுதும் பதுமைபோல் கண்ணிமையாமல் வாயசையாமல் கையசையாமல் காலெழாமல் ஓசை தெரியாமல் அலையடித்தோய்ந்த கடல்போல நிறைந்து தன்னைமறந்

திருப்பார். தன் நினைவுவந்து பரவசந்தெளிந்து ஈசனைப் பணிந்துகொண்டு வந்த பணிவிடை செலுத்தக் கோவிலார் கேட்கக் கும்பிடுபோட்டுச் சொல்லுவார்.

---

கண்ணிகள்.

ராகம்-ஆனந்தபைரவி ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

வாரிருக்குதுதோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரே-மத்தளங்கள்
பேரிகைக்கும்வீணைக்கும்நல்ல விறுக்கிக்கட்டும்விசை (வாரிருக்)

பேரிருக்குதுபோதுஞ்சிவன் பெருமையைக்கொண்டாடி-தினமும்
சீருறைகின்றதில்லைப்பதியில் சேருதற்குபாயந்தேட (வாரிருக்)

சிறியவனுன்சாதியொன்று மறியாதவனேனையா-சிவ
பெருமானுக்கடியேன்செய்யும் பணிவிடையிது (வாரிருக்)

நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னுகவராளி; தாளம்-மிச்ர ஏகம்.

செய்யும்பணிவிடைகள்-ஈசன்-சிந்தைமகிழ்ந்துகுளிர்ந்திடவேமத்தளம்
பேரிகைக்கும்-இசை-வார்கொடுத்தப்புறந்தோல்கொடுத்துமறவாமலே
தினமும்-நல்ல-வாசம் பெருகுங் கோரோசனையும்
தேவாலயங்கள் தோறும்-தந்து-சித்தமுருகிய பக்திவெள்ளம்
புரண்டோடிக் கங்குகரை-என்று-பேதமறிய வொண்ணுது கண்டீர்
ஜாதியில் நீசரவர்.

வசனம்.

இப்படி பக்திசெய்யாநின்ற நந்தனுருடைய வரலாறேதென்றால்,

துக்கடா.

ராகம்-நவரோஜ் ; தாளம்-ஆதி.

ஆதனூரிலொரு வேதியர்க்குள்ளே அடிமைக்காரப் பறையன்
சூதுவாதுமொன்றுந் தெரியாதவன்பரி சுத்தமான பத்தன்
கோதிலாததங்கள் ஜாதியர்க்குச்சிவ குணங்களை மிகச்சொல்லி
காதலோடுதிருப் புன்கூரீசனைக் கண்டுவருவோ மென்றார்.

வசனம்.

நந்தனார் சிவதரிசனஞ் செய்யவேண்டியதற்காக தங்கள் ஜாதியாரைக் கூப்பிடுகின்றார்.

ராகம்-ஜஞ்ஜூடி ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

* சிவலோக நாதனைக்கண்டு சேவித்திடுவோம் வாரீர்

அனுபல்லவி.

பவபயங்களைப் போக்கி அவர்
பரம பதத்தைக் கொடுப்பா ரந்த (சிவ)

சரணங்கள்.

அற்பசுகத்தை விளைந்தோம் அரன்திருவடி மறந்தோம்
கற்பிதமான ப்ரபஞ்சமிதை கானல்ஜலம்போலே யெண்ணி (சிவ)

ஆசைக்கடலில் விழுந்தோமதால் அறிவுக்கறிவை யிழந்தோம்
பாசமகலும் வழிபடாமல் பரிதபிக்கும் பாவியானோம் (சிவ)

மானிடஜன்மங் கொடுத்தார் தன்னை வருந்தக்கரங்க ளளித்தார்
தேனும்பாலும் போலேசென்று தேரடியில் நின்றுகொண்டு. (சிவ)

---

* இந்தக் கீர்த்தனையை நவீனர்கள் "மாயாமாளவ கௌள" ராகத்திலும் பாடுகிறார்கள்.

## பெரியபுராணச் செய்யுள்.

### விருத்தம்.

திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகண் மிகநினைந்து
விருப்பினொடுந் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினு லொருப்பட்டங் காதனூர் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினுல் வந்தவ்வூர் மருங்கணைந்தார்.

### வசனம்.

இப்படி அன்பின்மிகுதியால் சிவலோகநாதனை சேவிப்போமென்று நெடுநாளாய்ச்சொல்லி நிச்சயஞ்செய்த நந்தனுருக்கும் பறையர்களுக்கு முண்டான வாக்குவாதம்.

அவர்கள்-தவஞ்செய்யுஞ் சடங்கிதுவல்லவோ
பறையர்கள் செய்தால் பாவமே யென்ருர்.

நந்தன்-தேருந்திருநாளு மிருக்குது போவோம்
வாரும் வாருமென்று வருந்தியுமழைத்தார்.

அவர்கள்-பொறும்பொறுமிது புண்ணியமல்ல
ஏரிக்குப் போவோமென் றிவரையு மழைத்தார்.
சேரியை நீங்கிச் சில பேர் வந்தார்
பதினொருபேர்கள் பண்புடன்வந்தார்.

நந்தன்-மாரிபோல்ஞான மார்க்கம்பொழிந்து
தவமுனிபோலே தானங்கேநின்ருர்.

அவர்கள்-சிவலோகநாதனைச் சேவிப்போமென்ருர்.

நந்தன்-வெறுங்கையோடே போகலாகாதென்று
வாருடன் தோலும் வரிசையாய்க் கொண்டார்.

அவர்கள்-சேரியிலுள்ள சீரிதுவென்றார்.

நந்தன்-வந்தபுலையருக்குப் பக்திபெருகவே
நெற்றியில்திரு நீறையுமிட்டார்.

அவர்கள்-சத்தியந்தானென்று மெத்தவுங் கும்பிட்டு
பிரியமுடனவர் பின்னையும் சென்றார்.

ராகம்-வராளி; தாளம்-சாபு.

இவர்—சிங்காரமான பள்ளு பாடினார்
அவர்—அங்கங்குளிர்ந்து கொண் டாடினார்
இவர்—கோரோசனைப் பையை யெடுத்தார்
அவர்—தாராளமாய் வாரிக் கொடுத்தார்
இவர்—சிவமந் திரஞ்சொல்லிச் சேவித்தார்
அவர்—தவமிஃதே யென்றுச் சரித்தார்
இவர்—ஆசைப் பெருங்கடல் தாண்டினார்
அவர்—ஓசைப் படாமலே வேண்டினார்
இவர்—அளவில்லா தானந்த மடைந்தார்
அவர்—அளவில்லாக் காக்ஷி பெற்றிருந்தார்
இவர்—திருப்புன்கூ ரீசனைப் பாடினார்
அவர்—விருப்பமோ டிவரைக்கொண் டாடினார்.

வசனம்.

இப்படி எல்லோரும் கூடிச் சிவனை அடிக்கடி வணங்கி ஹரஹரா வென்றுரைத்திடும் சப்தம் பரமனேயறிவார். இப்படி நந்தனூர் பதினொருபேர் பறைபரோடு திருப்புன்கூர் வந்து சேர்ந்தார்.

சவாமி.

ராகம்-கேதாரம் ; தாளம்-மிச்ர ஏகம்.

தலம் வந்து வீதி வலம் வந்து கண்கள்
ஜலம் வந்து சோரும் பலன் வந்து எங்கள்
குலஞ் சுத்தமாச்சு மலம் வெந்து போச்சு
நலங் கண்டோமென்று நிலங்கொண்டு நின்றார்.

வசனம்.

அந்தத் தலத்திலே நந்தி மிகவும் பெரிதானபடியினலே சிவலிங்கதரிசனஞ் செய்வதற்கு நந்தி மறைத்திருப்பதால், நந்தனர் துயரமடைந்து சொல்லுகின்றார்.

கண்ணிகள்.

ராகம் - சங்கராபரணம் ; தாளம்-ஏகம்.

ஹரஹராத்ரிபுராந்தக ஜீவாதாரவெங்கள்
அம்பிகையொரு பாகா எங்கும்
நிரந்தரமாயெள்ளு ளெண்ணெய்போலவிருந்து
நினைப்பவர்க்கருள் போகா
வெள்விடைமேல்வரும் விமலநமசிவாய
விளங்கும்வேத முடிவே நால்வர்க்குத்
தெள்ளுறச்சிவஞான போதமளிக்கவந்த
சிறந்தமெய்த்தவ வடிவே
மானுமழுவுந்தமருக வாகுவலயமும்
மருவுஞ்சூல பாணி எளி
யேனுங்காணத்தரி சனைதரவுமை யுட
னெழுந்தருள்விரிங்கு தோணி
மன்னும்சந்நிதிமுனம் மருவுமிடப தேவர்
மறைந்திருக்கநினைக் காணேனே முன்னம்

என்னவினைசெய்தேனே கண்பெற்ற பாவந்தானே
இதயத்தில்மகிழ்ச்சி பூணேனே.

சவாயி.

ராகம் - கேதாரம் ; தாளம்-மிச்ர ஏகம்.

சிவலோகநாதன் திருச்சந்நிதானம்
மலையாகியநந்தி மறைத்திடுதிங்கே
பலகாலஞ்செய்த பாழ்வினைகுவிந்து
மலையாகிஇப்படி மறைத்ததோவென்றார்.

வசனம்.

என்று சொல்லிய நந்தனர் பின்னுஞ் சொல்லுகின்றார்.

ராகம் - தேசிகதோடி ; தாளம்-ஆதி.

பல்லவி.

* வழிமறைத்திருக்குதே மலைபோலே
ஒரு மாடுபடுத்திருக்குதே. (வழி)

அனுபல்லவி.

பாவிப்பறையனிந்த வூரில்வந்து மிவன்
பாவந்தீரேனே உன்தன்
பாதத்தில் சேரேனே ஏறேனே
சிவலோகநாதா மாடு (வழி)

---

*இந்தக் கீர்த்தனையை நவீனர்கள் "மாயாமாளவ கௌள" ராகத்திலும் பாடுகிறார்கள்.

சரணம்.

தேரடியில்நின்று தரிசித்தாலும்போதும்
கோவில்வர மாட்டேனே ஐயே
ஓரடிவிலகினல்போது மிங்கேநின்று
உற்றுப்பார்க்கச்சற்றே விலகாதோ மாடு (வழி)

வசனம்.

இப்படி நந்தனர் தரிசனங்காண ஓயாமல் மனம் வருந்தும்போது சுவாமி நந்தனர்மீதிரங்கி நந்தியை விலகச் சொன்னர்.

ராகம் - ஹம்ஸத்வனி ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

* சற்றே விலகியிரும் பிள்ளாய் சந்நிதான மறைக்குதாம் நீ (சற்)

அனுபல்லவி.

நற்றவம்புரியு நம்மிட திரு நாளைப்போவார் வந்திருக்கிறர் (சற்)

சரணங்கள்.

சாதிமுறைமை பேசுறன் தன்னையிகழ்ந்து மேசுறன்
கோதிலாக்குணமுடையோன் கோபங்கொண்டால்தாளமாட்டாய் (ச)
வேதகுலத்தைப்போற்றுறன் விரும்பிவிரும்பி யேற்றுறன்
பூதலத்தி லிவனைப்போலே புண்யபுருஷ ஞெருவனில்லை (ச)
பத்தியில்கரை கண்டவன் பார்த்துப்பார்த்து உண்டவன்
சித்தங்குறையில் நமதுசெல்வம் முற்றுங்குறையுந் தயவுசெய்து (ச)

* இந்தக் கீர்த்தனையை நவீனர்கள் "பூரிகல்யாணி" ராகத்திலும் பாடுகிறர்கள்.

துக்கடா.

ராகம் - ஜஞ்ஜூடி ; தாளம்-ரூபகம்.

ஒருநாளும்வாராத பக்தன் திருநாளைப்போவாரெனும் சித்தன்
உலகெங்கும் ப்ரஸித்தம்கண்டுஒதுங்காமலிருந்தது உன்பேரில்குற்றம்

பெரியபுராணச் செய்யுள்.

விருத்தம்.

சீரேறு மிசைபாடித் திருத்தொண்டர் திருவாயி
னேரேகும்பிடவேண்டு மெனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறு மெயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கவருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்.

வசனம்.

இப்படி சுவாமி சொல்ல நந்தி விலகி நின்றார்.

துக்கடா.

ராகம்-நவரோஜ் ; தாளம்-ஏகம்.

நந்தி தூர விலகிநின்றார் தன்சாமி மனதைக் கண்டார்
இவன் நல்ல பக்தனென்றார் அடங்காத வெட்கங் கொண்டார்.

ராகம்-ஸாவேரி; தாளம்-ரூபகம்.

பல்லவி.

மற்றதெல்லாம் பொறுப்பேன்
முத்திநாலும் கொடுப்பேன் (மற்ற)

சரணங்கள்.

பக்தனுக்குக் குற்றஞ்செய்தால்
அதைப் பொறுக்கமாட்டேன் (மற்ற)

திடுக்கென்றவரை துடிக்கப்பேசி
அடிக்கப் பொறுக்கமாட்டேன் (மற்ற)

பசிக்குதென்று வருகையிலொருவன்
புசிக்கப் பொறுக்கமாட்டேன் (மற்ற)

வசனம்.

இப்படி சுவாமி சொல்லும்போது நந்தி மனதுகலங்கி தூர விலகி நின்றார்.

நந்தன் சிந்தைகுளிர்ந்து அளவில்லாத ஆனந்தமடைந்து குதித்தார், கெக்கலித்தார், கொண்டானடித்தார், துதித்தார், திருவடியுள்ளே பதித்தார், எங்கும் சிவமாகப் பாவித்தார்.

கட்கா.

ராகம்-நாதநாமக்கிரியை; தாளம்-ஏகம்.

குதித்தார் எக்கலித்தார் உள்ளங்களித்தார்
பள்ளுபடித்தார் கண்ணீர்வடித்தார் பற்களைக்கடித்தார்
ஒருதரந் துடித்தார் இருதரம் நடித்தார்
இப்படி தரிசனஞ்செய்தார் நந்தனர் தரிசனஞ்செய்தாரே.

துக்கடா. தாளம்-ஆதி.

சட்டமாக சந்நி தானங்கண்டுநடை தட்டினர் கைகொட்டினர்
அஷ்டமூர்த்தியெ வருக்குமென்றுகூத் தாடினர் பண்பாடினர்
கஷ்டமானசம் சாரசாகரந் தாண்டினர் மெய்வேண்டினர்
இஷ்டதெய்வ சிவலோகநாதனை எண்ணினருள்ளநண்ணினர்
மட்டிலாதசந் தோஷங்கொண்டுதான் பட்டபாடுகளைப் பேசினர்
ஜன்மங் கெட்டதென்று தனனை பேசினர்
இஷ்டமானதன் ஜனங்களோடவர்-கட்டிமுத்தமிட் டுலாவினர்
சிங்கக் குட்டிபோலவே யவர்தாவினர்

ராகம்-கல்யாணி ; தாளம்-அட.

பல்லவி.

தரிசனஞ்செய்தாரே-நந்தனார்-தரிசனஞ்செய்தாரே

அநுபல்லவி.

தரிசனஞ்செய்தார் தேன்மழைசொரிந்து
வரிசையுடன் அவர் வாழி வாழியென்று (தரிசனஞ்)

சரணங்கள்.

குதித்துக் குதித்துக் கையைக் கும்பிடு போட்டுத்
துதித்துத் துதித்துத் தன் துன்பங்கள் தீர (தரிசனஞ்)

போற்றி போற்றி யென்று பொன்னடி வணங்கிப்
பார்த்துப் பார்த்துப் பரமானந்தங் கொண்டு (தரிசனஞ்)

அச்சமறந்தவ ரறிவி லுணர்ந் தவர்
இச்சையிழந்தவ ரேகாக்ர சித்தராய் (தரிசனஞ்)

ராகம்-ஈசமனோஹரி ; தாளம்-ஆதி.

பல்லவி.

சம்போ கங்காதரா சந்த்ரசேகரா ஹர

அநுபல்லவி.

அம்பலவாணரே ஆதிரை நாளரே
அடைக்கலமென்று நம்பி வந்தேன்
ஆதரிப்பதுன் பாரம் சொன்னேன் (சம்போ)

சரணங்கள்.

தாயுந் தந்தையும் நீ உன்னைத்தவிர வேறே யொருவரு மில்லை
மாயன் கோபால கிருஷ்ணன் பணியும்
மலரடி பணிந்தேன் பிறவியைத் தீரும் (சம்போ)

வசனம்.

தரிசனம் பண்ணியபின்பு கொண்டுவந்த பணிவிடை செலுத்தி அவ்வீதியில் மட்டையூறுங் குட்டையை குளமாய் வெட்டவேணுமென்று விசாரமுற்றார். சுவாமி இதைய றிந்து நாளைப்போவாராலே குளம்வெட்ட தாளப்போகா தென்று தன் பிள்ளையை ஆளாகப் போகச்சொன்னார்.

இருச்சொல்லலங்காரம்.

மாளாப் பிறவிபோக்கும் பிள்ளையார் வந்தார்.

நாளைப்போவார்—நீ-யாரப்பா வென்றார்
பிள்ளையார்—நான்உன்-னுளப்பா வந்தே னென்றார்
நாளைப்போவார்—குட்டையைக் குளமாய் வெட்டுவே னென்றார்
பிள்ளையார்—வெட்டினால் மிகு புண்ய மென்றார்
நாளைப்போவார்—அதெம்மட்டு மெட்டு மென்றார்
பிள்ளையார்—குளம்வெட்டும் வெட்டு மென்றார்
நாளைப்போவார்—அற்பமாய் பதக்கு நெல்லைக் கொடுத்தார்
பிள்ளையார்—அப்பனேயிது போதும் போதுமென் றுரைத்தார்
நாளைப்போவார்—களித்து நிர்விகற்பமா யிருந்தார்
பிள்ளையார்—குளத்தை வெட்டுதற் கிசைந்தார்

ராகம்-மோகனம் ; தாளம்-ஆதி.

பல்லவி.

தடாகமொன் றுண்டாக்கினார்-கணநாயகர்
தடாகமொன் றுண்டாக்கினார்

அனுபல்லவி.

சடாமகுடதரன்-சாம்பவி யுடன்வர
சகலமுனிவர்மனத்-தாமரை யுமலர

கடாட்சமாகக்குகன் கணபதி யுடன்மன்ன
காதலாலெவருந்துன்ன போதயனுசிதமென்ன (தடாக)

சரணங்கள்.

கந்தமுலாவிய தாமரைப்பூத்துக் கதிக்க-மிகுத்திடுஞ்சோ
கண்டை வரா லுளுவைக் கணமங்கு குதிக்க
சுந்தர மிகுந்த பறவைகள் முழுதிலுஞ் சூழ
சோமசூரியர்கள் சுகமுடன் வந்து தாழ
விந்தையுடனேபல வேள்வி யந்தணர்செய்ய
விளங்குஞ் சங்கினமுய்ய களங்கமில்லாமற்றுய்ய (தடாக)

ஓதிடுவானதியானது தான்மிக நாண-ஆம்பல்மலர்ந்து
ஓதிமமுங்கு ருகின்குலமும் எதிர் காண
சோதிமருவுந்தேவ-தாருநிழலுங் கொடுக்க
சுரபிக்கடம்பைமானும் சூழ்ந்து அங்கே அடுக்க
மாதர்மலர்க்குழலார்-மகிழ்ந்து அங்கேநீ ராட
வல்வினைகளும்விட்டோட-வல்லவர்களுங்கொண்டாட (தடாக)

வாசனைதங்கியமல்லிகை முல்லையின் சாலே-சந்தனச்சாலே
வாழைபலாக்கமுகுங்கனமாமலர்ச் சோலே
ஆசையாகமயி-லழகுறவே நடிக்க
அருமறைப்பூசுரர்க-ளனுதினமும் படிக்க
தேசுலாவுந்திவ்யத்-தீர்த்தமாகுமென்றெந்த
திசைதேவர்களுமுந்த இசைநந்தனர் தம்சொந்தத் (தடாக)

நாளைப்போவார்நிஷ்டைகலைந்துபார்த்தார்
குளம்வெட்டியிருக்கவுளமகிழ்ந்தார்
பிள்ளையாரிருக்கக்கண்களிற்காணர்

வ ச ன ம்.

இதெல்லாம் சிவன்செயலென்று சந்தோஷங்கொண்டு முன்போலவே கோவிலை வலம்வந்து தன்னுடன்வந்த பதினொரு பேர்களுடன் ஆதனூர் வந்து சேர்ந்தார்.

பெரியபுராணச் செய்யுள்.

வி ரு த் த ம்.

இத்தன்மை யீசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்திருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடுந் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெருங் காதலுணர் வொழியாது வந்துதிப்ப.

நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னுகவராளி ; தாளம்-மிச்ர ஏகம்.

பேணிச்-சாருந்தொழின்முறை யாரும்புகல்
திருப்புன்கூர்ச் சென்றரனைக்-கண்டு-சேவித்திசைபாடி-பாவித்தபின்
தில்லைச்சிதம்பரத்தைக்-கண்டு-சேவிக்கவேண்டுமென் றுவலுடன்
நாளைப்போவே னென்றுராம்.

வ ச ன ம்.

நந்தனார் திருப்புன்கூர் சிவலோகநாதனைத் தரிசனஞ்செய்து ஆதனூர் வந்தநாள்முதல் ஊனுறக்கமுதலானதும் விட்டார் ; தில்லையம்பலம் திருச்சிற்றம்பலமென்று சொல்லத் தலைப்பட்டார்; சேரியிலுள்ள பெரியோர்களைக் கூப்பிட்டார்; வணங்கிக் கும்பிட்டுச் சொல்லுவார்:—

ராகம்-பியாக் ; தாளம்-ஆதி.

ப ல் ல வி.

சிதம்பரம் போவேநான்-நாளைச் சிதம்பரம் போவேநான்

அநுபல்லவி.

சிதம்பரம் போவேன் தேறித்தெளிவேன்
பார்புகழ் தில்லைப் பதங்களைப் பாடிச் (சிதம்பரம்)

சரணங்கள்.

ஒருதரஞ் சொன்னா லுலகங்க ளுய்யும்
இருவினைப் பயன் இல்லை எந்நாளும் (சிதம்பரம்)

பாதி ராத்திரியில் பன்மறை யோதி
வேதியர் போற்றி விளங்கிய தில்லைச் (சிதம்பரம்)

திறமொன் றறியாத் தீங்குகள் செய்யும்
பறையனுப் பிறந்த பாவங்கள் தொலையச்(சிதம்பரம்)

வசனம்.

நாளைப்போவார் தமக்கு தரிசனங்கிடைக்க வேண்டியதற்காகக் கற்பகப்பிள்ளையாரை வேண்டுதல்.

விருத்தம்.

காலனுடல் பூமிபடச் சாய்த்திடுவான் செங்கமலக் காலைத் தூக்கி
கோலமுட னடனமிடுந் தனிமன்றுள் நாயகனே குற்றந் தீரப்
பாவிக்கும் படியெனக்குன் னருள்புரிவா யென்றுநற் பழங்கள் வைத்து
மேலைக்கோ புரவாயிற் கற்பகத்தைச் சிந்தையுள்ளே வேண்டு வாரே.

வசனம்.

நந்தனார் சேரியிலுள்ள புலையர்களை அழைத்துக்கொண்டு சிதம்பரம்போய்த் தரிசனம் பண்ணவேண்டுமென்று ஆசையுற்று பக்தி மார்க்கங்களைச் சொல்லுகின்றார்.

ராகம்-மாஞ்சை ; தாளம்-ரூபகம்.

* நாளைப் போகாம லிருப் பேனோ - இந்த
நாற்ற நரம்புமின்னஞ் சுமப் பேனோ - நான்
நாளைப் போகாம லிருப் பேனோ - இந்த
நாறுமுடலைக் கண்டு களிப் பேனோ - நான்
நாளைப் போகாம லிருப் பேனோ - இந்த
நாளை வீணாகக் கழிப் பேனோ - நான்
நாளைப் போகாம லிருப் பேனோ - இந்த
நமனார்க்கஞ்சி யோடி யொளிப் பேனோ - நான்
நாளைப் போகாம லிருப் பேனோ - சிவ
ஞானத்தைப் பாராம லிருப் பேனோ - நான்
நாளைப் போகாம லிருப் பேனோ - இந்த
நாட்டிலிகழும் ஜன்மம் படைப் பேனோ - நான்
நாளைப் போகாம லிருப் பேனோ - தில்லை
நாதனைக் காணாமல் புசிப் பேனோ - நான் (நா)

## ஆநந்தக்களிப்பு.

ராகம்-ஸௌராஷ்ட்ரம் ; தாளம்-மிச்ர ஏகம்.

பல்லவி.

காணாமலிருக்கலாகாது பாழுங்
கட்டைக்கடைத்தேற-வேண்டியிருந்தால் (காணா)

சரணங்கள்.

முக்தியளித்திடும் பாதம் தில்லை
மூவாயிரம்பேர்கள் பூசிக்கும் பாதம்

* இந்தக் கீர்த்தனையை நவீனர்கள் "பியாக்" ராகத்திலும் பாடுகிறார்கள்.

சக்திக்கிணையான பாதம் - வேத
சாஸ்த்ரங்கள் நாலுந் தேடிய பாதம் (காண)

காலனைச்சீறிய பாதம் - சன
காதிகளுக்குள்ளே செலுத்திய பாதம்
மாலயன்தேடிய பாதம் - எங்கள்
மாணிக்கவாசகர் பீடிகை பாதம் (காண)

ஆசையைப்போக்கிய பாதம் - பர
மானந்தவெள்ளத்தி லாடிய பாதம்
வாசம்பொருந்திய பாதம் - தில்லை
மாகாளிதாழவே தூக்கிய பாதம் (காண)

பாலகிருஷ்ணன்தொழும் பாதம் - காட்டில்
பாம்புபுலிக்குக்கூத் தாடிய பாதம்
கோலச்சிலம்பணி பாதம் - தில்லைக்
கோவிந்தராயர் தரிசிக்கும் பாதம் (காண)

வசனம்.

நந்தனார் சிவனைக் காணாமல் காலம் வீணாகப் போக்க லாகாதென்று தம் இனத்தாரைக் கூப்பிடுகின்றார்.

துக்கடா.

ராகம்-பியாகு; தாளம்-ரூபகம்.

பல்லவி.

* எல்லோரும் வாருங்கள்
சுகமிருக்குது பாருங்கள் நீங்கள் (எல்லோரும்)

---

* இந்தக் கீர்த்தனையை நவீனர்கள் “கேதார” ராகம் “ஆதி” தாளத்திலும் பாடுகிறார்கள்.

சரணம்.

நல்லோர்பணிந்திடுந் தில்லையம்பல
நாதன்பாதம் பணிந்துகொள்வோம். (எல்லோரும்)

கண்ணிகள்.

ராகம்-ஸௌராஷ்ட்ரம்; தாளம்-மிச்ர ஏகம்.

பல்லவி.

வாருங்கள் பரமானந்த மிருக்குது பாருங்கள்.

சரணங்கள்.

சடமெடுத்தபின் னேதுமே கண்டிலீர்
விடமெடுத்துண்ட மேனியன் தேர்வர
வடம்பிடித்திட வாருங்கள் தில்லையில்
இடம்பிடித்துநா மெல்லோரும் வாழலாம் (வாருங்கள்)

சொல்லடா தில்லைச் சிற்றம் பலமென்று
மெல்லடாவாயைச் சந்நிதி நேரவே
நில்லடாயிந்த மாயப் பிறவியைக்
கொல்லடாசிவ லோகங் குடிபுக (வாருங்கள்)
சள்ளடா நம தில்லற வாழ்க்கையைத்
தள்ளடாநந்தன் சொல்லுறுதி யென்று
கொள்ளடா தில்லை யம்பலத்தாண்டவன்
பள்ளடாவென்று பாடிக் கூத்தாடியே. (வாருங்கள்)

வசனம்.

இப்படி வாருங்களென்று அழைக்கப் புலையர் வாராம லிருக்க நந்தனார் நல்ல வார்த்தையைச் சொல்லிப் பறையரை சிவநாமத்தைச் சொல்லச்சொன்னார்.

## இருசொல்லலங்கார வாக்குவாதம்.

நந்தனர் - தில்லையம்பலமென்று சொல்லச்சொன்னர்
புலையர் - கள்ளப்பேச்சென்று மெள்ளச்சொன்னர்
நந்தனர் - சங்கராவென்று சொல்லச்சொன்னர்
புலையர் - இங்கேவாவென்று நிற்கச்சொன்னர்
நந்தனர் - சற்றேயாகிலும்சிவனை த்யானம்பண்ணென்றார்
புலையர் - கத்தையோடுபாலை பானம்பண்ணென்றார்
நந்தனர் - திருச்சிற்றம்பலமென்று ஜபிக்கச்சொன்னர்
புலையர் - வெறுச்சகம்பளமென்று உறக்கச்சொன்னர்
நந்தனர் - சேரியில் நல்லகாரியமீதென்றார்
புலையர் - ஏரியில் நல்லமாரியீதென்றார்
நந்தனர் - விட்டநாள்நினையாம லெட்டுநாள்மறவாமல்
நிஷ்டை பண்ணுதசென்மம் நஷ்ட மென்றார்
புலையர் - விட்டவிரை முளையாமல் நட்டபயிர் பலியாமல்
கெட்டுதாலை கிராமம் நஷ்ட மென்றார்
நந்தனர் - உங்கள் புலைத்தன்மை போகுமென்றார்
புலையர் - எங்களைக் கெடுத்தாயே பாவியென்றார்
நந்தனர் - தேவாதிதேவனை தரிசிப்பீரென்றார்
புலையர் - பாவாடைராயனைப் பாவிப்பாயென்றார்
நந்தனர் - அனைத்தாளுமீசனுக் கன்புசெய்யென்றார்
புலையர் - இனத்தாரைநொந்தவர்க் கின்பமேதென்றார்
நந்தனர் - தினமும்சிவனைப்போற்றிக் களிப்போமென்றார்
புலையர் - பதரைத்தூற்றிநெல்லை யளப்போமென்றார்
நந்தனர் - பெண்ணாசைபொன்னாசை விடுதலேநன்றாம்
புலையர் - என்னாளுமுன்னாலே கெடுதலையுண்டாம்
நந்தனர் - அப்பனேடு இஷ்டமுட னானிருப்பேனென்றார்
புலையர் - கப்பலோட்டியகடன் கொட்டைநூற்றால்தீராதென்றார்

நந்தனார் - பூசத்திருநாளில் போய்வருவோமென்றார்
புலையர் - பேசத்தெரியாது பேயாநீபோவென்றார்
நந்தனார் - அழுதழுமுறையிட்டாலம்பலத்தேகேட்குமென்றார்
புலையர் - உழுதுபயிரிட்டா லுள்ளபடிவிளையுமென்றார்
நந்தனார் - சித்தமெல்லாமம்பலத்தே சென்றுதேடுதென்றார்
புலையர் - பக்தியெல்லாம்வேறுபட்டுபறந்துபோச்சுதென்றார்
நந்தனார் - குற்றாலத்தீசனைக் கூறுவீரென்றார்
புலையர் - கைத்தாளம்போட்டுக் கதறுவீரென்றார்
நந்தனார் - தாண்டவராயனே தகுந்தெய்வமென்றார்
புலையர் - தூண்டிவீரப்பனே தொழுந்தெய்வமென்றார்
நந்தனார் - இஷ்டப்படிநடக்கு மீசனைத் துதியென்றார்
புலையர் - கஷ்டப்படமாட்டோம் கசக்காதேபோவென்றார்
நந்தனார் - கொண்டாடிதெய்வத்தைக் கொள்ளுவீரென்றார்
புலையர் - பெண்டாட்டித்தெய்வமே பெருந்தெய்வமென்றார்
நந்தனார் - நலத்தைக்கொடுக்கவந்த நற்குருவென்றார்
புலையர் - குலத்தைக்கெடுக்கவந்த கோடாலிக்காம்பென்றார்
நந்தனார் - பலவழக்கம்நானறிவேன் பறையரேயென்றார்
புலையர் - குலவழக்கமறியாத குருடாபோவென்றார்
நந்தனார் - நாக்கறுப்பேன்சிவனை நவிலுவீரென்றார்
புலையர் - மூக்கறுப்பான்கதையை மொழிந்தீரேயென்றார்.

---

### வசனம்.

நந்தனார் பெரியோருடை அனுஷ்டானத்தைப் புலையர்களுக்குச் சொல்லுகிறார் :

## இருசொல்லலங்காரம்.

### கண்ணிகள்.

ராகம்-பூரிகல்யாணி ; தாளம்-ஏகம்.

நந்தனர் - சிவனேதெய்வம் சிதம்பரமேகைலாசம்
தவமேபெருமை தான்சம்ப்ரதாயம்

புலையர் - சேரியேசொர்க்கம் ஏரியேகைலாசம்
மாரியேதெய்வம் மதசம்ப்ரதாயம்

நந்தனர் - படிப்பதுஞானம் பார்ப்பதுமூலம்
குடிப்பதுமதிப்பால் குலசம்ப்ரதாயம்

புலையர் - பிடிப்பதுநண்டு புசிப்பதுஇறைச்சி
குடிப்பதுகள்ளு குலசம்ப்ரதாயம்

நந்தனர் - பாழைக்கடப்பார் பரவெளிதாண்டி
கோழையறுப்பார் குலசம்ப்ரதாயம்

புலையர் - ஆழத்தில்குளிப்போம் அருங்கோடைவந்தால்
கூழைக்குடிப்போம் குலசம்ப்ரதாயம்

நந்தனர் - ஆசையைப்போக்கி ஐம்புலனைச்சுட்டு
மாசற்றவாழ்வு மதசம்ப்ரதாயம்

புலையர் - பூசைகள்புரிவோம் பொன்னேருழுவோம்
கூசாமல்வாழ்வோம் குலசம்ப்ரதாயம்

நந்தனர் - மையத்திலாடி மனக்கயிறுபூட்டி
வையத்திலிருப்பார் மதசம்ப்ரதாயம்

புலையர் - கையிலேகலயம் காலிலேசேறு
பையிலேபாக்கு பறைசம்ப்ரதாயம்.

வசனம்.

சிவபக்தி பண்ணினால் அணிமாவாதிசித்திகள் அடையலாமென்று நந்தனார் சொல்லுகின்றார்:

ராகம்-நீலாம்புரி ; தாளம்-ஜம்பை.

பல்லவி.

வாருங்கள் வாருங்கள் சொன்னேன்-நீங்கள்
வாயாடா தோடி வருவீரென் முன்னே

சரணம்.

நந்தனார் - அஷ்டமா சித்திகளைப் பெறலாந்-தில்லையில்
ஆனந்தத் தாண்டவன் கோவிலைக் கண்டு
இஷ்டமுடன் வீதி வலம்வந்து ஈசன்
இணையடி தொழுதார்க் கினிப்பிறப்பில்லை. (வாருங்கள்)

புலையர் - கருமணி பிச்சோலை போதும்-உன்தன்
கள்ளவேஷ மெங்களுக்குக் கிடையாது
பருகுவது கூழ்க்கஞ்சி போதும்-வாய்
பதறி வார்த்தைகள்பேசிப் பசப்பாதே போடா.

வசனம்.

நந்தனாரைப் பாத்துப் பறையர், "நீ சொன்படி கேட்பதில்லை; எங்கள் உண்மையறியாமல் நீ மயங்காதே" யென்று சொல்லுகிறார்கள் :

ஏசல்.

புலையர் - பார்ப்பார தெய்வமது பலிக்காது பறையரைக்
காப்பாற்ற மாட்டாது கைவிடு மென்றார்

நந்தனார் - பார்ப்பார் பறையனென்று பாராது பரிதிபோல்
காப்பாற்று மல்லவோ கண்ணுதலே யென்றார்

புலையர் - அடுக்காத வார்த்தையை அல்லும்பக லோதியே
பிடிக்கிறாய் பிடிவாதம் பேசாதே யென்றார்

நந்தனார் - கடுக்காயைத் தின்பாரோ கன்ன லதுபோலே
கொடுக்காத தானாலும் கொள்ளுவீ ரென்றார்

புலையர் - பித்தனென்று சொல்லுவார் பேருலகி லெல்லோருஞ்
சத்யமி தல்லவோ தள்ளுவீ ரென்றார்

நந்தனார் - பித்தனா யிருந்தாலும் பிறவியறுத் தனைவர்க்கும்
முத்தி கொடுக்குநல்ல மூர்த்தியவ ரென்றார்

புலையர் - இத்தனைநாளு மிங்கே இல்லாத வார்த்தையை
கற்றுவந்து மென்ன கார்யமோ வென்றார்

நந்தனார் - இத்தனை நாட்சென்று ஈசனடித் தாமரை
பக்தி செய்யவரும் பாக்கியமீ தென்றார்.

## அகவல்.

பாக்கிய மீதென்று பரமசிவ பக்தி
மார்க்கங்க ளெல்லாம் வரிசையாய்த் திரட்டி
எடுத்துரை செய்வார் ஈனமாஞ் சாதி
பிடித்தறி யாமல் பேசுவா ரன்றே.

## விருத்தம்.

புலையர் - வக்கணைக் காரா நந்தா வாய்படப் பேசவேண்டாம்
சர்க்கரைபோலே பேசி சாதித்துக் கண்ட தென்ன

நந்தனார் - பக்குவ காலம் வந்தால் பரமனார் திருநாமந் தான்
சர்க்கரை போலே தோன்றும் சாதிப்பார் முக்தி தானே.

வ சன ம்.

புலையர்களனேகரானபடியால் பலவிதமாகச் சொல்லுகிறார்கள்.

ஏ ச ல்.

ராகம்-புன்னாகவராளி ; தாளம்-ரூபகம்.

புலையர் - ஆண்டிப்பரதேசி யரகரவென்றவர்
வேண்டுந்தெய்வமது விளங்காது என்றார்

நந்தனார் - மூன்றுலகுக்கிறை முன்னின்று கைகூப்பி
ஆண்டவனேயென்று அர்ச்சிக்கு மென்றார்

வேறொரு புலையர் } நாத்தைப்பிடுங்கியே நடவுநட்டாலிந்த
சோற்றுக்கவலைவிடும் சுகமிது வென்றார்

நந்தனார் - கூற்றுவனார்வந்து கூப்பிடும்வேளையில்
மாத்திரைப்பொழுதில்லை மன்னாயி ரென்றார்

வேறொரு புலையர் } மாமனார்மக்களும் வாழ்கின்றவிடத்திலே
யானாலுமெப்போது மழுமூஞ்சி யென்றார்

நந்தனார் - தேனுகவேமெத்தத் தித்திக்கும்சிவஸ்துதி
யானாலுமுங்களுக் கழுகையோ வென்றார்

வேறொரு புலையர் } மூக்குநுனியைப்பார்த்து முணுமுணுத்தென்னேரம்
காக்கைபோலசும்மா கதறுகிறீ ரென்றார்

நந்தனார் - வாக்கிலேசிவநாமம் வாராதபாவிகள்
நாக்கிலேவூசியை நாட்டுவே னென்றார்

வேறொரு புலையர் } மடவாயின்பறவைபோல் பதியாமலிருக்கிறீர்
துடைகாலிநீயென்று சொல்லுவே னென்றார்

நந்தனார் - விடையேறுமீசனை வெட்டவெளியிலுன்னி
அடையாளங்காணாத ஆடுக ளென்றார்

வேறொரு புலையர் } மறையோதத்தெரியாத மடையராய்ப் பூமியில்
குறையாதபுலைத்தன்மை கொண்டோமே யென்றார்

நந்தனார் - பறையனாய்ப்பிறந்தாலும் பரகதிதேடலாம்
உறுதிமாத்திரம்வேண்டும் உமக்குண்டோ வென்றார்

வேறொரு புலையர் - தலைசுற்றியாடுது தங்கச்சிகொழுந்தியார்
அலகையனானென் றறிகிலே னென்றார்

நந்தனார் - நலம்புரியத்தில்லை நாதாவென்றுத்திருநீறு
திலகம்போலேயிட்டு தெண்டனிடு மென்றார்

வேறொரு புலையர் - உலகத்திலொவ்வாத வுருவேத்திச்சேரியைக்
கலகமிட்டீர்பலன் கண்டீரோ வென்றார்

நந்தனார் - பலகாலுஞ்சொன்னாலும் பலியாதுபாழ்வினை
விலகாமலிருக்குது வேடிக்கை யென்றார்

வேறொரு புலையர் - திருப்புன்கூரீசனைச் சேவிக்கலாமென்று
விருப்புடனழைத்தது விந்தைதா னென்றார்

நந்தனார் - கரும்புதின்னக்கூலி கையில்கொடுப்பதுண்டோ
இரும்புமனதுக்காரர்க் கில்லையே யென்றார்

வேறொரு புலையர் - புத்தியில்லாதவன் புலம்புறான்சிவனென்று
கத்தினாலுமென்ன காரியமோ வென்றார்

நந்தனார் - சித்தமுமொருதரம் நினைவுடனேசிவன்
சத்தமிருந்தாலென் றுந் தாழ்வில்லை யென்றார்

வேறொரு புலையர் - சேரியிலிருந்தாலும் செல்வங்குறைந்திடும்
ஊரைவிட்டாகிலும் ஒதுங்குவீ ரென்றார்

நந்தனார் - வாருங்களெல்லோரும் மன்னனைப்போலவே
சேருவோம்தில்லைச் சிதம்பர மென்றார்

வேறொரு புலையர் - பாலாறுபெருகவே பண்ணையைப்பயிரிட்டு
ஆளாமலேவீணுக் கலைகிறீ ரென்றார்

நந்தனார் - பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைநான்கண்டு
நாலாம்பதவியை நாடுவே னென்றார்

வசனம்.

அவர்களில் ஒரு புலையர், "எப்போதுஞ் சிவனைக் கொண்டாடினால் நம்முடைய தொழிலுக்குக் கெடுதலுண்டு; பண்ணை விளையா" தென்று சொல்ல, நந்தனார் அதற்குச் சொல்லுகின்றார்:

தண்டகம்.

ராகம்-பூர்வகல்யாணி; தாளம்-ஏகம்.

அரகராவென்றொரு குழிகட்டால் அதுகலமே விளையும்
பாவம் - தங்காமற் றொலையும்
சிவசிவாவென்று ஒருதரஞ்சொன்னால் ஜன்மசபலமாச்சு
புண்ணியகருமமதுவே யாச்சு
தில்லையம்பலத் தெரிசனங்கண்டால் தேவரும்வருந்தாரோ
அந்த - மூவரும்பொருந் தாரோ
அடிமைக்காரத்தொழில் செய்வது துன்பமானாலுமேச்சே
ஜன்மம்-போனாலும் போச்சே.

வசனம்.

நந்தனார் புலையர்களைப் பார்த்து, அனேகவிதமாய்ச் சொல்லி நாளைப்போவேனென்று சொல்லுகின்றார்:

நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னாகவராளி; தாளம்-மிச்ர ஏகம்.

நாளைப்போவேனென்றாராம்-அங்கே-நாடும்பறையர்களோடிவந்து, அண்ணே நீ போகாதே-நமக் காண்டை பொல்லாதவன் வேண்டிக்கொள்ளான், பார்ப்பாரச் சாதியுண்டே.

வச னம்.

இப்படிச் சொல்லிய புலையரைப் பார்த்து நந்தனூர் சொல்லுகின்றூர்:

ராகம்-ஜெஞ்ஜூடி ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆண்டைக்கடிமைக்கார னல்லவே-யான்
ஆண்டைக்கடிமைக்கார னல்லவே.

அநுபல்லவி.

மூன்றுலோகமும் படைத்தளித்திடும்
ஆண்டவர் கொத் தடிமைக்காரன் (ஆண்டை)

சரணங்கள்.

ஆசைக்கயிற்றினி லாடிவரும்பசு
பாசமறுத்தவர்க் கடிமைக்காரன் (ஆண்டை)
தில்லைவெளிகலந் தெல்லைகண்டேறி
தேறித்தெளிபவர்க் கடிமைக்காரன் (ஆண்டை)
சீதப்பிறையணிந் தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க் கடிமைக்காரன் (ஆண்டை)

வசனம்.

திருநாளைப்போவார் தன்னை யடிமையாகக்கொண்ட வேதியர் சொற் கேளாதவரல்லர். அப்படியிருந்தும், பக்தி பண்ணவேண்டுமென்று பக்தி நெறியைச் சொல்லிக்காட்டினூர்.

விருத்தம்.

தவம்பெறு முனிவர் மெச்சுஞ் சரித்திரங் கொண்ட நந்தன்
பவமயக் கறுக்க வேண்டிப் பகர்ந்திடுஞ் சிவவாக்கியத்தை

அவகுணங் கொண்டபேய ரறிந்திடப் போமோ வெல்லாஞ்
சிவன்செய லாகு நம்மாற் செய்வதொன் றில்லை யென்றார்.

வ ச ன ம்.

திருநாளைப்போவார் அனேகவிதம் சொல்லியும் புலையர் கேளாமலிருந்ததினால் சிவன்செயலென்று அவர் சும்மா விருந்தார். அந்தச் சேரியில் புலையர் கூட்டங்கூடி தம்முள் மூத்தோனால் நந்தனுருக்குப் புத்திசொல்வோம் என்று எண்ணி அங்கே வெகுநாளா யிருப்பவனும் வயதுமிகுந்து உடலும் தளர்ந்து பல்லுகளுதிர்ந்து தோலும் சுருங்கி நரம்பு கள் தெரிந்து முதுகும் சரிந்து முழுதும் வளைந்து அங்கம் சொரிபடர்ந்து தினவு மிகுந்து அதனைச் சொரிந்து அங்நீர் வடிந்து அவ்வுடல் நடுங்கி இருப்பவனுமான பெரிய கிழவன் ஒருவனை யனுப்ப அவன் கோலூன்றிக் கூனிக் குறுகிக் கோணலாய் நடந்து வந்து நந்தனுரைப் பார்த்துக் கட்டி யணைத்துத் தலையும் நிமிர்ந்து கண்ணீர் சொரிந்து மார்பில் வழிந்து மனமும் கனிந்து காதல் மிகுந்து ஒன்றுந்தெரியாத வரென்று நினைந்து பரிந்து நியாயமறிந்து சொல்லுவார்:

ராகம்-பியாக் ; தாளம்-தேசாதி.

ப ல் ல வி.

ஞாயந்தானோ நீர் சொல்லும்-ஓய்-நந்தனுரே
நம்ம சாதிக்கடுக்குமோ.

ச ர ண ங் க ள்.

சேரியிலில்லா வழக்கம்-நீர்
செய்துகொண்டுவந்த பழக்கம்-இந்த

ஊரிலெங்குமது முழக்கம்-வெகு
உறுதியாச்சுது ஒழுக்கம்-இது (ஞாய)

சிதம்பரமென்கிற பேச்சு-நாங்கள்
செய்திடுங்காரியம் போச்சு-அது
மதம்பிடித்ததுபோ லாச்சு-இந்த
மண்டலப்பறையருக் கேச்சு-இது (ஞாய)

பறையருக்கேதுதைப் பூசம்-அதைப்
பார்க்கவேயுனக்கு விச்வாசம்-சிறு
பயல்களுக்கேயுப தேசம்-நீர்
பண்ணிவைத்ததெல்லாம் மோசம்-இது (ஞாய)

வசனம்.

அவன் சேரியில் பெரிய கிழவனானபடியாலும் சாதி வழக்கங்களெல்லாம் அறிந்தவனுதலாலும் நந்தனருக்கு இன்னமும் சொல்லுகிறன்:

நொண்டிச்சிந்து.

ராகம்-புன்னுகவராளி ; தாளம்-மிச்ர ஏகம்.

பார்ப்பாரச்சாதியுண்டே-என்ன-பாடுபடுமுழுக்காடும்ங்கே
நமக்குந்திருநாளோ-அந்த-ஞாயமுண்டோ என்னமாயமிது
வென்றேதடைசெய்தான் சிவன்-வேடிக்கை தானென்று
அறியாதுபோலிருந்தார். [நாடிக்கொண்டே

பெரியகிழவன் சொல்லியது.

விருத்தம்.

கழனியைத் தெய்வமெனச் சுற்றிவந்து தலைவணங்கிக் கரங் குவித்து
உழுதுபரம் படித்துவிரை தெளித்துமுளை கொள்ளநீ ரோட விட்டுப்

பழுதறவே நட்டதனைக் களைபிடுங்கி மடைதிறந்து நீர்பாயவிட்டுச்
செழித்திடவே பொங்கலிட்டுக் காத்தவரா யனைவேண்டுஞ் செய்கை
[தானே.

ராகம்-நாதநாமக்கிரியை ; தாளம்-ஆதி.

பல்லவி.

* சுவாமி தரிசனம் நமக்குண்டோ புலைச்
சாதியன்றோவந்த நீதியறியாமல்.

அநுபல்லவி.

பூமிதெரிசனம் போதும் போதும் வெகு
புண்ணியமே சோறுபோடுமின்ன மொரு (சுவாமி)

சரணங்கள்.

நாத்து நரம்புகளைச்-சுமப்பதும் உழுவதும்
நஞ்சை வயலைச்சுற்றி-வருவதும் வளம்பெற
பாத்தி கட்டிவிரை-தெளிப்பதும் பறிப்பதும்
பாயுமடையைத் திறந்-திடுவதும் அன்றியில் (சுவாமி)

சேரியிடையில் குடி-யிருப்பதும் பதறுகள்
சிதறத் தூற்றிநெல்-லளப்பதும் பார்ப்பதும்
ஊரை வளைந்து தமுக்-கடிப்பதும் மதுக்குடம்
உண்டு களித்துநா-முறங்குவ தன்றியில் (சுவாமி)

ஆண்டை மார்களிடம்-பணிவிடை செய்வதும்
அருகில் நின்றுகும்-பிடுவதும் நடுவதுந்
தாண்டி நடந்துகோல்-பிடிப்பது மளப்பதும்
தனித்துச் சுடலைதினங்-காப்பது மன்றியில். (சுவாமி)

---

* இந்தக் கீர்த்தனையை நவீனர்கள் "ஆனந்தபைரவி" ராகத்திலும் பாடுகிறார்கள்.

## விருத்தம்.

சாதியின் முறைமை காட்டித் தடையிடப் போது மென்றார்
வேதமா முனிவ ராரும் வினவியுங் கண்டா ரில்லைப்
பேதையாம் புலைய ருக்குப் பேரின்ப நிஷ்டை யேதென்
றுதலா லென்செய் வோமென் றம்பலத் தஞ்சு வாரே.

## வசனம்.

பெரியகிழவனைப் பார்த்து நந்தனார் சொல்லுகின்றார் :

## தண்டகம்.

ராகம்-யமுனாகல்யாணி ; தாளம்-ஆதி.

சிதம்பரதெரிசனங் காணவிடி லிந்தச் சென்மம் சபல மாமோ
ஜெனனமரண சம்சாரம் பெருகவே செய்தவினைகள் போமோ
கண்ணுங்கருத்திருக்க சிவனைக்காணமல் காலங்கழிக்க லாமோ
காலபாசநம தருகில்வராமல் கண்டுபயந்து போமோ
இப்படியேயெப் போதுமிருப்போமென் றெண்ணியிருக்க லாமோ
இருதயமறிந்திட செய்திடுங் கன்மங்கள் இகழ்ந்துபிரிந்து போமோ
பின்னுமுன்னுமறி யாதமூடர்கள் புத்திகேட்க லாமோ
புலையரவரடியி லிருக்கினு மெய்திடும் புண்ணியங்கள் போமோ
பரமசிவனைக்கொண் டாடவேணுமென்று பரிந்துபாவி பார்த்தேன்
பாபஞ்செய்வார்க்குப் படியாது அதில் பாடுபட்டுப் பார்த்தேன்.

## வசனம்.

சேரியிலுள்ள புலையர் கூட்டங்கூடி அனுப்பிவைத்த பெரிய கிழவனைப்பார்த்து நந்தனார் சொல்லுகின்றார் :

## தண்டகம்.

ராகம்-நாதநாமக்கிரியை ; தாளம்-ஆதி.

மீசை நரைத்துப்போச்சே கிழவா ஆசை மறக்கலாச்சோ
பாசம் வருகலாச்சே கிழவா பாவம் விலகிப்போச்சசோ

கூனிக் குறுகிப்போச்சே கிழவா கோபம் விலகிப்போச்சோ
அங்கம் தளர்ந்துபோச்சே கிழவா அகங்காரமும் போச்சோ
சேரியை நினைந்தாயே கிழவா சிதம்பரம் மறந்தாயோ
மானிட ஜன்மமடா கிழவா மாண்டால் வருமோடா
அம்பலத் தரசனடா கிழவா ஆளுந் தெய்வமடா
திருவடி பணியாயோ கிழவா தேறித் தெளியாயோ.

வசனம்.

நந்தனார், இவ்விதஞ்சொல்லி சிவகாமவல்லிபாகனை நினைந்து நீரள்ளி பெரியகிழவன் முகத்திலே தடவி வாயிலே போட்டு கட்டி யணைத்து காதிலே சிவமந்திர முபதேசித்தார். உடனே பெரிய கிழவன் சித்தந்தெளிந்து சிவமாய் நிறைந்து உற்றதுணர்ந்து ஒருவனுயிருந்து அத்தனடியார் அருள் இது வென்று பக்தி மிகுந்து பரவசங்கொண்டு பேசத்தெரியாமற் பேசுவான்: "நான் இன்றைக்குத்தான் பெரிய கிழவனு னேன், நந்தா! எனது பந்தந் தீர்க்க வந்தாய், முக்தி தந்தாய்" என்று சுற்றி வலம்வந்து அடிபணிந்து விடை பெற்றுக் "கண்டேன், என் கலிதீர்ந்தேன், ஆனந்தம் கொண் டேன், குறை தீர்ந்தேன், அமிர்த முண்டேன், பசி தீர்ந்தேன், பிறவி வென்றேன், வீடு நின்றேன்," என்று தனக்குத்தானே பேசிக்கொண்டு பெரிய கிழவனுர் நந்தனுரா லுபதேசம் பெற்று வருகின்றார்.

ராகம்–சங்கராபரணம்; தாளம்–ரூபகம்.

பல்லவி.

பெரிய கிழவன் வருகிறான் பேரானந்தக் கடலாடி (பெரி)

சரணங்கள்.

பரவிய மாயையிலிருந்து பார்முதல் பூதங்களைந்து
பெரியவரென் றுணர்ந்து பேரின்ப லாபத்தை யடைந்து (பெரி)

படிபுகழ்நந்தனார் மகிழ்ந்து பரமசிவபக்தி புரிந்து
கொடியவன் பாவங்கள் தீர்ந்து கூனிக்குறுகிக் கோணிநடந்து (பெரி)

நந்தனார்சொன்ன தத்வமறிந்து நானென் னகம்பாவ மிழந்து
பந்தமயக்கம் முழுதும்தெளிந்து பரவெளியாகவே லீனந்து. (பெரி)

வசனம்.

புலையர்களெல்லாங் கூட்டங்கூடி நந்தனாருக்குச் சிதம்பரப் பித்தந்தெளிய புத்திசொல்லியனுப்பிய பெரிய கிழவன் நந்தனார் பித்துக்கொண்டு அவருடைய மகிமையெல்லாம் புலையர்களிடத்திற் சொல்லிக்கொண்டாடி வருவான்.

பெரிய கட்கா.

ராகம்-நாதநாமக்கிரியை; தாளம்-ஆதி.

திருநாளைப்போவானிந்தச் சேரிக்குமூருக்கும்
யாருக்கும்பெரியவன் (திருநாளைப்)

ஒருதரமாகிலுஞ் சிவசிதம்பரமென்று
உரைத்திடுவோன் றுண்மைகூறிய (திருநாளைப்)

அடாது செய்தால்- படாது படுவீர்
விடாது பாவம்- தொடாதே அவன்பே
ரிடாதே தூறு-படாதே கையிடி
படாதே வெம்பகை - யிடாதே அப்பா
த்ருடாங்கன் கோபம் - படாது பட்டால்
விடாது சலனப் - படாதவன் பயப்
படாதவன் இடம் - கொடாதவன் அடங்
கிடாதவன் நிலை - விடாதவன் மாறு
படாதவன் மனம் - கெடாதவன் குணம்
விடாதவன் மேல் - விடாது தொடரும்

விடய வலைப்படான் - மாயைக் ககப்படான்
மனதைச் செலவிடான் - சிவனை யிடைவிடான்
கழனிகளை நடான் - கலப்பைகளைத் தொடான்
நமது வழிபடான் - தனது முறைவிடான்
கொல்லப் படாது - தள்ளப்படாது
யாரையும் விடாது - துன்பம் தொடாது
வழியை விடாத - இருவினைப் படாது
ஜன்மம் கெடாது - தெய்வங் கொடாது
அவன் கைவிடாது - வேறு படாதது
ஆசைப் படாமல் - அருளைக் கொடாது
பங்கப் படாத - தங்கக் கடாரம்
பொங்கப் படுமிணை - யிலாத புண்ணிய
தடாகஞ் செய்தவன் - மடாதி பதிபிடி
படாத சிங்கம்அள - விடாத மகிமை
விடாத பெரியவ - னடா தரிசனம்
படாத சந்நிதி - விடாத நந்தி
அசைந்த தேனடா - அரனும் விலகடா
என்ற சொல்லடா - அவனைப் பணியடா
அறிந்து போற்றடா - தூளை யணியடா
கை யெடுத்தடா - மலரைத் தூற்றடா
மனதைத் தேற்றடா - பிறவி மாற்றடா
ஆனந்தக் கூத்தனடா - சொன்னேன். (திருநாளைப்)

வ ச ன ம்.

இப்படி பெரியகிழவன் சொல்லக்கேட்டு, புலையர் அவனைப் பார்த்து, "கிழவா நந்தனாராலே கெடுக்கப்பட்ட பதினொருபேர்களுக்குள்ளே நீயும் பனிரெண்டாம்பேரா யிருக்கத் தலைப்பட்டு சிவசிவாவென்று சொல்லிச் சேரி

யைக் கெடுக்கத் தலைப்பட்டீர்களே" யென்று கூறி மிகவுந் துன்பமடைந்து புலையர் ஒருவர்க்கொருவர் சொல்லித் துயரப்படுகின்றார்கள் :

ராகம்-புன்னாகவராளி; தாளம்-சாபு.

பல்லவி.

நாம் என்ன செய்வோம் புலையரே இந்தப்
பூமியிலில்லாத புதுமையைக் கண்டோம். (நாம்)

சரணங்கள்.

நந்தனொருவனாலே யிப்படி யாச்சு
நன்மையுந்தின்மையு மில்லாமற் போச்சு
சந்திக்குச்சந்தி கூத்தாட லாச்சு
சாமியுமில்லாமல் எங்கேயோ போச்சு (நாம்)

கன்னற்கற்கண்டவ் வார்த்தைகேட் டாரோ
காதிற்பட்டாலதைக் கருத்துட்கொள் வாரோ
மன்னார்சாமிக்குப் பூசைபோட் டீரோ
மாரியாத்தாளெங்கே மறந்திடு வாளோ (நாம்)

சேரிக்குள்பதினொரு பேர்களுங் கெட்டார்
செய்யுந்தொழில்முறை யாவையும் விட்டார்
ஊருக்குப்பெரிய கிழவனுட் பட்டார்
உண்மையறியாமற் சிதம்பரந் தொட்டார் (நாம்)

வசனம்.

சேரியில் துன்பமடைந்த புலையர்களைப் பார்த்து உங்கள் தெய்வத்துக்கு வழக்கம்போலே பூசை போட்டு பலி

யிட்டு வேண்டினால் சேரிக்கு நல்லகாலம் பிறக்குமென்று பெரிய கிழவன் சொல்ல, புலையர்கள் பூசைபோடுந் தெய்வங் களாவன.

கட்கா.

ராகம்-எதுகுலகாம்போதி ; தாளம்-ஆதி.

வீரன்-இருளன்-காட்டேரி-வெறியன்-நொண்டி-சாமுண்டி
தூறித்தூண்டி-நல்லண்ணன்-தொட்டியச்சின்னான்-பெத்தண்ணன்
மாரிமுனியன்-சங்கிலியும்-மாடன்-கறுப்பன்-பாவாடை
மூறிக்காத்தான்-குழியிரிசி-மோகினிசப்த-கன்னிகையும்
சேரிமன்னான்-மின்னடியான்-சிறுகாட்டுடையான்-பனைமரத்தான்
மாரியாண்டி-வழிமறித்தான்-மலையன்-சாத்தான்-பக்கிரியும்
ஏரியம்-சினும்பாயி-இடையன்-நல்லான்-பேயன்-ஊமையொடு
வீறுங்கல்லன்-பெத்தாச்சி-வீட்டுத்தெய்வம் முதலான.

வசனம்.

இவைகளைத் தெய்வமென்று வணங்கிக் கொண்டாட எனங்கோழி ஆடுகளுடனே மதுக்குடம்வைத்து பள்ளயம் போட்டு பம்பையடித்து வருந்தச் சன்னதம்வரும் சொன் னேன், சேரிக்கு நல்லகாலம் பிறக்கும் சிதம்பர பித்து நந்தனுருக்குத் தெளிந்துவிடுமென்றும் பேர்பெருக வாழ்வீ ரென்றும் பெரியகிழவன் சொன்னாரே அப்படியே கிழவன் சொல்லில் நம்பிக்கைகொண்டு புலையர்களெல்லாரும் பந்த லிட்டுப் பள்ளையம்போட்டு கொம்பு தம்பட்டமுழங்கி முப் பூசை யிட்டு வேண்டுவார்கள்.

இருசொல்லலங்காரம்.

புலையர்—எல்லைப்பிடாரியே எதிராகவந்தெமது
கொல்லையுன் ஆவலாய்க் கொள்ளடி யென்றார்

நந்தனார்—சொல்லினுமடங்காத சோதிபரமானந்தத்
தில்லைநாயகரைத் தேவரறியாரோ வென்றார்

புலையர்—முண்டாசு கட்டிவரும் நொண்டிவீரப்பனைக்
கொண்டாடிப்பூசைகளைக் கொள்ளுவீ ரென்றார்

நந்தனார்—அண்டங்கள் பதினாலுக் கப்பாலுமிப்பாலும்
நின்றார்க்குமுண்டாசு நிலையாது என்றார்

புலையர்—கச்சையரிவாள்வைத்த கறுப்பண்ணசாமியை
இச்சையுடன்வேண்டி என்தெய்வ மென்றார்

நந்தனார்—பச்சிலைபிடுங்கியே பாதத்தில்சாற்றினால்
இச்சையானதுமீயும் என்தெய்வ மென்றார்

புலையர்—நேயமறிகோழியு நிணமூன்றுசாவலும்
தீயகள்ளும்வைத்துத் தரிசித்து நின்றார்

நந்தனார்—வாயாலேசிவமென்று வருந்தினாலெப்போதும்
தாயாரைப்போலவே தழுவிவரு மென்றார்

புலையர்—பித்துப்பிடித்திருக்கும் பேயனாம்நந்தனுக்கு
சித்தந்தெளிந்திடவே செய்தருள்வீ ரென்றார்

நந்தனார்—பக்திவெள்ளம்பெருகிப் பாய்ந்தாலுஞ்சேரியில்
நத்தையுறுஞ்சுஞ்சாதி நாடாது என்றார்

வசனம்.

இவ்வகைப் பூசைபோட்டுத் தெய்வங்களைக் கொண்டாடும் புலையர்களைப் பார்த்து நந்தனார் சொல்லுகின்றார்.

ராகம்-தோடி ; தாளம்-ஆதி.

பல்லவி.

பக்திசெய்குவீரே-நடேசனைப் - பக்திசெய்குவீரே.

அனுபல்லவி.

அத்திமுகனைப்பெற்ற - உத்தமனைவிட
நித்தியதேவன்போல் - மற்றவரில்லையென்று. (பக்தி)

சரணங்கள்.

சாமமதர்வணம்ருக்யசர்வேதஞ்
சாற்றுமுபநிடதத்தும் தற்பரன் அரனென்று
ஏமாறுமற்சொல்லி யின்புறுதலேநின்று
எவர்களுமறியவே யிப்புவிதனில்நின்று. (பக்தி)

ஆகமமிருபத்தெட் டாதிபுராணமும்
அயன்கீதைமுதலான அனந்தஸ்மிருதிகளும்
பாகமாகியப்ரம னொருவனென்று
பண்புடனுரைத்திடும் பான்மையதாய்நின்று. (பக்தி)

கௌதமர்முதலான யிருடிகளனைவரும்
கேசவன்தொழுப்பதங் கதியென்றனுதினமும்
புவனத்தில்போற்றியே யேத்தினதாலிவர்
புகழும்புண்ணியபதம் பொருந்தினரென்பதாம். (பக்தி)

அரியயனிந்திரன் முதலானதேவரும்
அரனடிதன்னையே யன்பாய்ப்பூசித்ததால்
பரிவுடனவர்செல்வம் பழுதுவாராமலே
பாலித்தார்சிவனென்று பக்தர்சொல்வதினாலே. (பக்தி)

வியாசமுனிவரும் அவரடியார்களும்
விஷ்ணுபரமென்று விளம்பினதால்முன்னம்
கயாகாசிக்கங்கைக்கரையிற் கையிழந்து
கல்லாய்த்தானேயவர் சமைந்ததினாலேயும். (பக்தி)

தில்லையம்பலந்தனில் திருநடமாடிடும்
தேவாதிதேவனை தினம்பணிந்தேத்தியே
அல்லல்சம்சாரக் கடலிலழுந்தாமல்
ஆனந்தக்கூத்துக ளாடிக்கொண்டு நீங்கள் (பக்தி)

விருத்தம்.

இத்தனைநாட் பரமசிவன் றிருமகிமை யிரவுபக லெடுத்துச் சொன்னே
பக்திபுரி யுமவர்க்கே யருள்புரியு மையன் பாதம் பணிவீரென்றேன் [ன்
அத்தனையு மிழந்திடவே மனவெறுப்பா யெந்தனையு மவமா னித்தீர்
புத்திசொல்வே னென்றவர்கள் முழந்தாளில் தடிகொண்டு புடைத்
[திட்டாரே.

வசனம்.

நந்தனார் மகாபுலசாலியானபடியால், புலையர்களை சிட்சித்து சிவநாமத்தைச் சொல்லச்சொல்லுவார்:

தண்டகம்.

ராகம்-மோஹனம் ; தாளம்-மிச்ர ஏகம்.

தத்திப்புலிபோலே தாண்டிக் குதிப்பார்
முத்தமிடுவதுபோலே முகத்தைக் கடிப்பார்
வார்கொண்டுகட்டி வளைத்துப் பிடிப்பார்
தூர்க்கல்லெடுத்துத் துடைக்குள் நெரிப்பார்
பல்லாற்சுரண்டியே பரம்படித் திழுப்பார்
கல்லாலெறிந்தவர் காயப் படுத்துவார்
குப்புறத்தள்ளியே கோபித் துரைப்பார்
செப்புஞ்சிவனை நீர் சேவிப்பீ ரென்றார்.

வசனம்.

இப்படி சிட்சித்தபின்பு, புலையர்களெல்லோரும் நந்தனாரடிக்குப் பயந்து பக்திசெய்யத் தொடங்கினார்கள்.

கட்கா.

அரகரசிவசிவ அம்பல வாணு
தில்லையம்பல தேசிக நாதா
புரமூன்றெரித்த பொன்னம் பலனே
கரியுரிபோர்த்த கருணு கரனே
அனுதினமன்று ளாடிய பாதா
பிழைபொறுத்தாளும் புண்ணியம் தாதா

வசனம்.

மூடப்புலையர்களுக்குப் புத்திவருமாவென்று நந்தனரிப்படிச் சொல்ல யாவரும் தொழுதார்கள்.

ராகம்—எதுகுலகாம்போதி ; தாளம்-ஆதி.

பல்லவி.

பக்திகள்செய்தாரே-பரமசிவனையே-பக்திகள் செய்தாரே.

சரணங்கள்.

பக்திகள்செய்தார் நற்றவம்புரிநந்தன்
சித்தமகிழ்ந்திட வத்தனைபேர்களும் (பக்திகள்)
தொடுப்பான்சிவகதை படிப்பான்பக்தியாய்
எடுப்பான்தடியொன்று அடிப்பானென்றனுதினம் (பக்திகள்)
கல்லாதவனிங்கே செல்லாதவன்நன்றி
யில்லாதவன்வெகு பொல்லாதவனென்றே (பக்திகள்)

வசனம்.

அந்தச் சேரியிலே புலையர்கள் பக்திசெய்ததால், சேரி சிவலோகம்போல விளங்கியது. சிலநாளுக்குப் பின்பு புலை

யர்களெல்லாங்கூடி நந்தனாரைப் பணிந்து நல்லவார்த்தை சொல்லி, "நாங்களெல்லோரும் நாளொன்றுக்கு மூன்று விசை சிவனேயென்று சொல்லுகிறோம், மற்றவேளையில் எங்கள் பண்ணைத்தொழிலைச் செய்வோ"மென்று கேட்க, "நந்தனார் நல்லது அப்படியே தப்பாமல் செய்யுங்க"ளென்று சொல்லிவிட்டுச் சேரி பெரிய கிழவனுடன் திருப்புன்கூருக்குப் போய்வந்த புலையர்களைப்பார்த்து சொல்லுவார் :—

விருத்தம்.

கொள்ளையெனும் பிறவிவிரை முளைவீ சாமற்
குடிமாறிப் போவதற்கோர் வகையைக் கேட்க
கள்ளமனக் குரங்கதனால் விடைய மாச்சு
கட்டியிருந் தாலிருந்த ப்ரவ்ருத்தி போச்சு
உள்ளங்கைக் குள்ளிருக்குங் கனியைப் போல
உருவில்லா ஆன்மாவே றறுத்து வாழ்வீர்
எள்ளளவும் பிசகில்லை யென்ற ஞானம்
ஏற்றுவார் மும்மலத்தைத் தூற்று வாரே.

ராகம்-எதுகுலகாம்போதி ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

பார்த்துப்பிழையுங்கள்-நீங்கள்-பார்த்துப்பிழையுங்கள்.

சரணங்கள்.

பார்த்துப்பிழையிந்தச் சோற்றுத்துருத்தியை
எத்தித்தொழவேண்டாம் காத்துப்போகுமுன்னே (பார்த்து)

ஆத்திமதிசூடுங் கூத்தனிளமாயச்
சூத்திரத்தையிந்த க்ஷேத்திரத்துள்ளாடிப் (பார்த்து)

வீற்றிருப்பீர்காலங் காத்திருப்பான்சிவ
சாஸ்திரத்தைஞான நேத்திரத்தாலுற்றுப் (பார்த்து)
மூலக்கனல்தாண்டி மேலக்கரைவந்து
பாலைக்குடியிந்த நாலுக்குள்வாராமல் (பார்த்து)
பாலகிருஷ்ணன்தொழுங் கோலப்பதங்களை
மேலுக்குமேல்நாடி சாலக்கலியறப் (பார்த்து)

ராகம்-சாரங்கா ; தாளம்-சாபு.

பல்லவி.

தில்லைச்சிதம்பரம் மென்றே நீங்கள்
ஒருதரஞ்சொன்னால் பரகதி யுண்டுண்டு. (தில்லை)

அனுபல்லவி.

நல்லஸ்ருதிமுடி- கண்டு-சபா
நாதன்திருத்தாளை சிந்தையிற் கொண்டு (தில்லை)

சரணங்கள்.

வேரில்லாமலொரு வ்ருட்சமொன் றிருக்கு
விளையும்வினைகளெல்லாஞ் செய்யுந் திருக்கு
பேரில்லாமல்ஞானத் தீகொண்டு கருக்கு
பேரின்பவாணரைப் பிசகாமலே நெருக்கு (தில்)

தேசம்புகழுந்தில்லைக் கோவிலை வளைந்து
தித்திக்குஞ்சிவபஞ் சாட்சரம் புரிந்து
ஆசையுடனேயர்த்த சாமத்தி லிருந்து
அங்கம்புளகிதமா யடிக்கடியே பணிந்து (தில்)

மாயன்கோபால க்ருஷ்ணன்தினந் தேடி
வருந்துஞ்செந்தாமரை மலரடியே நாடித்

தாயைப்பிரிந்திளங் கன்றுபோல் கூடித்
தனித்திருந்துதாளம் போட்டுக்கொண் டாடி (தில்)

ராகம்-கௌளிபந்து ; தாளம்-ஆதி.

பல்லவி.

நமக்கினியபயமேது-தில்லை - நடராஜனிருக்கும்போது

அனுபல்லவி.

மார்க்கண்டருக்காக மறலியையுதைத்திட்ட
மான்மழுவேந்தும் மகாதேவனிருக்க (நமக்கினி)

சரணங்கள்.

இம்மைமறுமைமுதல் யாவுக்கும்பரமான
சின்மயானந்தரூபச் சிவபெருமானிருக்க (நமக்கினி)

அரியயனமரரும் ஆலங்கண்டஞ்சுமுன்
பரிவுடனேகாத்த பரமசிவனிருக்க (நமக்கினி)

திருவிக்ரமனய்வரும் திண்மாயன்மமதையை
விரிவுகங்காளனாகி விலக்கும்பரனிருக்க (நமக்கினி)

ஆதிசேடனுமாலும் அலரோன்இலக்குமியும்
காதலாய்த்தவஞ்செய்யக் களித்தபரனிருக்க (நமக்கினி)

இரண்யனல்வெறி கொண்டநரசிம்மனை
தரணியில்ரக்ஷித்த சங்கரனிருக்கவே. (நமக்கினி)

ராகம்-தோடி ; தாளம்-ஆதி.

பல்லவி.

சங்கரனைத் துதித்தாடு-இனி-சனனமில்லைஎன்று பாடு

### அனுபல்லவி.

பொங்கரவணிந்திடும் பொன்னம்பலவனை
புந்தியில்நினைவாய்ப் போற்றி சிவனை தினமும் (சங்கர)

### சரணங்கள்.

பாரினிற்பெண்கள்மேற் கருத்துபோய்ப்
பற்றவொட்டாமலே திருத்து
பேரின்பஞானத்தை வருத்து-சுகப்
பெருவெளிநெஞ்சினி லிருத்து (சங்கர)

நீர்மேற்குமிழியிக் காயம்-என்றும்
நிலையில்லாவாழ்விது மாயம்
பெரியமாலயன் நேயம்-பெறப்
பேசுவரீதேயு பாயம்-சிவ (சங்கர)

மனிதச்செனனத்தில் தேடு-நல்ல
மாதவத்தோர்களைக் கூடு
தனிவெளியாமொரு வீடு-தன்னைத்
தத்துவத்தால்கண்டு நாடு-சிவ (சங்கர)

### வசனம்.

இப்படிச்சொல்லிய நந்தனாரைநோக்கி மற்றப் புலையர்கள் சொல்லுவார்கள்:

### இருவர் வினவிடை அலங்காரம்.

ராகம்-ஜயஸாவேரி ; தாளம்-சாபு.

அவர்கள்—புண்ணாகியவிந்தப் பிறவிப்பிணிக்குமருந்
துண்ணாமலிருப்பது உண்மையோ நந்தா

நந்தனர்—கண்ணாலேபார்த்திடில் காட்டிமறைத்திடும்
மண்ணாதிபூதங்கள் மாயமே மைந்தா

அவர்கள்—இருப்பதுபொய்யென் றிராததுமெய்யென்று
இருத்திப்பேசியவகை யென்னவோ நந்தா

நந்தனர்—உருத்தெரியுதுநாம ரூபமல்லவோ
கருத்திலிருத்திக்கொண்டால் காணலாம் மைந்தா

அவர்கள்—விஸ்தாரமாமிந்த பிண்டமானதேத்தைப்
பற்றிக்கொண்டிருப்பதோ பகர்ந்திடும் நந்தா

நந்தனர்—வித்துக்குள்ளேவ்ருட்சம் விளங்கியவாறுபோல்
சத்துக்குள்ளண்ட சராசரம் மைந்தா

அவர்கள்—புத்திக்குமெட்டாத போதத்தைநாமுண்டு
முத்திபெறும்வழியை மொழியுமே நந்தா

நந்தனர்—அத்தனிருக்குமிடம் அன்னமயாதிகள்
பத்துதலில்லாப்பரவெளி மைந்தா

அவர்கள்—தத்துவங்கள்தொண் ணூற் றுறுங்கடந்திடும்
வஸ்துவைநாமெண் ணும்வகையேது நந்தா

நந்தனர்—நித்திரையொழிந்தபின் நினைவுடனேகூடி
உத்தரம்பேசிய துண்மையே மைந்தா

அவர்கள்—பித்தனைவேறொரு பேய்பிடித்தாற்போலுஞ்
சித்தவிகாரங்கள் தெளியுமோ நந்தா

நந்தனர்—பக்திவலைவீசிப் பார்த்திடும்வேளையில்
தத்திக்குதித்திடுந் தாண்டவன் மைந்தா

அவர்கள்—சீலமுள்ளநல்ல சேதிசொன்னயுன்தன்
காலைக்கும்பிட்டதால் கண்டோமே நந்தா

நந்தனர்—பாலுக்குச்சர்க்கரை பலித்ததுபோலுங்க
ளாலுமன்றேவீடு நாடுது மைந்தா

அவர்கள்—தூலசரீரத்தைச் சுமந்துபிள்ளைப்பூச்சி
போலேயானே முன் தன்புண்ணியம் நந்தா

நந்தனர்—பாலகிருஷ்ணன்தொழும் பரமசிவனரு
ளாலேபொங்கிவரு மானந்தம் மைந்தா

விருத்தம்.

ஓங்கார மென்றுசொல்லு முரலைப் போட்டு
உறுதியெனு மிருப்புலக்கைக் கையி லேந்தி
ஆங்கார மென்றதட்டு வடிவ மிட்டு
அடிக்கடியே கண்ணியதைப் புடைத் தெடுத்து
நீங்காத சிவயோக நிஷ்டை கொண்டு
நிர்மலம தாயவர்கள் சுற்றி வந்து
பாங்கான நந்தனிரு தாளைப் போற்றிப்
பணிந்திட்டார் திருநீற்றை யணிந்திட் டாரே.

வசனம்.

அவர்கள் நந்தனரைவிட்டு நீங்கித் தனித்திருக்க மனம்
வராமல் சொல்லுவார்கள்.

விருத்தம்.

தில்லையில் போக வேண்டாம் திரும்பிவர் தாலு மும்மைச்
செல்லாது பண்ணைப் பார்ப்பான் சினங்கொண்டு விடுவா னிந்த
எல்லையி லிருந்து தானே ஈசனார் திருநா மத்தைச்
சொல்லிய நாலாம் வீட்டிற் சேருவோம் வாரீ ரென்றார்.

வசனம்.

அனல்கண்ட மெழுகதுபோலுருகி பக்தி வெள்ளம் பெருகிச் சொல்லியபேர்களை நந்தனார் கரத்தால் ஆலிங்கனம் பண்ணிக் கண்ணீர் பெருகச் சொல்லுவார் :

ராகம்-யமுனாகல்யாணி ; தாளம்-ஆதி.

தில்லைவெளியிலே கலந்துகொண்டாலவர் திரும்பியும்வருவாரோ
எல்லைகண்டபேரினிபிறவாரென் றியம்புவதறியாரோ
பெண்டுபிள்ளைகள் வெறுங்கூட்டம் அதுபேய்ச்சுரைக்காய்த்தோட்டம்
கண்டுகொள்ளுவார்பெரியோரறிவில் கனகசபையினாட்டம்
திருவாதிரையில்தரிசனங்காணத் தேடித்திரியாரோ
அரிதாகியவிந்தமானிடங்கிடைத்தா லானந்தமடையாரோ
குஞ்சிதபாதத்தைக்கண்டாலொழிய குறையதுநீங்காதே
சஞ்சிதவினையாதிகளுமாடிய சடலமுந்தாங்காதே
சேரியிடையிலேகுடியிருந்தாலிந்தச்சென்மமுந்தொலையாதே
சிதம்பரம்போவேன்பதம்பெறுவேன் தடைசெய்வதுமறியாரே
இரவும்பகலுமொழியாக்கவலையிருப்பதுசுகமோடா
இன்பம்பெருகும்பரமானந்தவெள்ளமமிழ்ந்துநீபோடா.

வசனம்.

சிதம்பரம்போவேன் நீங்களிங்கே இருங்களென்று நந்தனார் சொல்லுவார்:

ராகம்-ஜஞ்ஜூடி ; தாளம்-ஆதி.

பல்லவி.

சிந்தனைசெய்துகொண் டிருந்தாலுங்களுக்
கெந்தவிதமுங்கரை யேறலாம்சிவ (சிந்தனை)

சரணங்கள்.

அந்தணமுனிவரு மிந்திரரமரரும்
வந்துபணியுமவர் விந்தைபொற்பாதத்தை (சிந்தனை)

காமனையெரித்தவன் காலனைஉதைத்தவன்
சோமனைதரித்தவன் தாமரைப்பாதத்தை (சிந்தனை)

தம்புருவணிந்திடுந் தும்புருநாரத
ரும்பணிந்திடும்பொன் னம்பலவாணனைச் (சிந்தனை)

வெம்பியதும்பிக் கருளியபாலகிருஷ்
ணன்பணியுந் திருவம்பலநாதனை. (சிந்தனை)

ராகம்-சாமா ; தாளம்-ஆதி.

பல்லவி.

தில்லைத்தலமென்று சொல்லத்தொடங்கினு
லில்லைப்பிறவிப் பிணியும்பாவமும்

அனுபல்லவி.

சொல்லத்தகு மிதுவே சிவலோகம்
எள்ளத்தனையறஞ் செய்யில் அமோகம் (தில்லை)

சரணங்கள்.

ஆகமவேதபுராணங்கள் சாஸ்த்ரம்
அருந்தவம்புரிவார்க்கருளிய பாத்ரம்
ஆலயமாயிரத்தெட்டினி நேத்ரம்
ஆனந்தத்தாண்டவமாடிய க்ஷேத்திரம் (தில்லை)

கணத்திலாடுமணிமாவாதிய சித்தியுங்
கனகத்திலமரும்விண்ணுடர்கள் வெற்றியும்

இணையில்லாதகுருசாஸ்த்ர பக்தியும்
இகத்தில்தானேவருஞ் சிவபத முக்தியும் (தில்லை)
பரமரகசியமொன்று பார்க்கலாம்
பாலகிருஷ்ணன்கவிபாடிக் கேட்கலாம்
கருமவினைகளடங்காமற் போக்கலாம்
கசடர்கட்குமுக்தியுமுண் டாக்கலாம். (தில்லை)

வசனம்.

நந்தனார் ஞான உபதேசஞ் சொல்லக்கேட்டு, முன்னே நந்தனாருடன் திருப்புன்கூரிற்போய் சிவதரிசனஞ் செய்து வந்தவர்களாகிய அறவன், தொந்தி, ஆனையேறி, முத்துமாரி, கழனிகாத்தான், பாச்சலூரான், ஆண்டி, சேவகன், சொறியன், வெறியன், காணியாளன், எல்லைச்சுற்றியென்கிற பெரியகிழவன், இந்த ஆறிருபேர்களு மானந்தமடைந்து அவரவர்கள் நிஷ்டையிலிருக்கத் தொடங்கி நின்றார்கள். மற்றப் புலையர்கள் கூட்டங்கூடி நந்தனார் நம்மை நாளொன்றுக்கு மூன்றுதரஞ் சிவநாமத்தைச் சொல்லச்சொன்ன குற்றத்தைப் பாராட்டி நந்தனை யடிமைகொண்ட அந்தணனிடத்தில் சொல்லுவார்கள்:

விருத்தம்.

இரவுபகல் பரமசிவ னிணையடியே
தொழுதிருக்கும் இன்பங் கூறிக்
கரைபுரளுங் கடலதுபோற் சிவத்தினிடைக்
கருத்துணரக் கண்டெல் லோரும்
பரவிவரும் புலையர்களும் பண்புறவே
நெறிகாட்டிப் பகரக் கேளீர்
அரியதொரு நந்தனிவ னடிமைபுரி
யந்தணர்பா லறிக்கை செய்வான்.

## நொண்டிச்சிந்து.

ராகம்-பைரவி ; தாளம்-ஆதி.

ஐயேயொரு சேதிகேளும்-உங்கள்
அடிமைக்காரப்பயல் நடத்தையெல்லாம்
வரவரக் கெட்டுப்போச்சு-சேரியில்
வழக்கமில்லாதபடி பழக்கமிட்டான்
குடியிருக்கவே மாட்டோம்-எப்போதும்
கூக்குரல்போடுகிறு னுக்கைமறந்தே
இருப்பா னொருவேளை-கொள்ளாத
ஏக்கமடைந்தவன்போல் நாக்கைவளைத்துச்
சிரிப்பா னொருவேளை-தில்லைச்
சிதம்பரமென்றுசொல்லி மதம்பிடித்தே
அழைப்பா னொருவேளை-எங்களையும்
அண்ணேன்வாவென்றுசொல்லி கிண்ணாரங்கொட்டி
குதிப்பா னொருவேளை-திக்குமுக்கல்
கொண்டவன்போ லெதையோ கண்டவன்போல
களிப்பா னொருவேளை-மரம்போல
கையசக்கல் காலசக்கல் மெய்யசக்கலும்
இருக்கா தொருவேளை-தாளம்போட்
டெக்கலிகொட்டியே குடிசைக்குட்புகுந்து
பேசா னொருவேளை-கண்டதெல்லாம்
புரட்டென்று சொல்லுவான் முரட்டுத்தனம்
மன்னுரு சாமிபோல-கிளம்பி
வாய்விட்டலறுங்குர லாரெட்டுமே
ஐயோ சிவனேயென்பான்-கீழேபுரண்
டழுவான் யாரையுந் தொழுவானே
தூண்டிமீனதுபோலே துள்ளித்துள்ளித்

துடிப்பான் பற்களைக் கடிப்பானே
சிவனென்று மூன்றுவாட்டி-நாங்களுஞ்
செப்பவேணு மில்லாவிடில் வப்பிலுதைப்பான்
கோவிலுக்குப் போவோமென்பான்-எங்களையும்
கும்பிடச்சொல்லியில்லாவம்பு பண்ணுவான்
சுற்றிவரச் சொல்லியடிப்பான்-சிவன்பேரைச்
சொல்லடா சந்நிதியில் நில்லடாவென்பான்
சொல்லியே தொலைக்கவேணும்-இல்லாவிடில்
சுக்குமாந் தடிகொண்டு நொக்கிவிடுவான்
கொம்பேறி மூக்கன்போல-முதுகினில்
குத்துவான் புலிபோலே தத்துவானே
இதுவென்ன காரணமோ எங்களுக்
கீனமாயிருக்குது மானமல்லவோ
கறுப்பண்ண சாமிதானோ-இருளன்
காட்டேரி வீரனிவன் வீட்டேரியோ
பாவாடை துரைதானோ-ரணபத்ர
காளியோ வுன்மத்த வீரனோ
பூசைகளும்போட்டுப்பார்த்தோம்-ஒன்றிலும்
போவதில்லை காரிய மாவதில்லையே
எங்கள்வள்ளு வரைக்கேட்டோம்-அவர்
எடுத்துச்சொன்னரிதை விடுத்துச்சொன்னர்
மயான ருத்திரனர்-பிடித்து
வாட்டுதேடா இப்படி யாட்டுதென்றார்
தெளியா தென்றுசொன்னர்-ஐயே
தெளியா தென்றுசொன்னர்.

ராகம்-பியாக்; தாளம்-ஆதி.

பல்லவி.

சேதிசொல்லவந்தோம்-நந்தனர்
சேதிசொல்லவந்தோம்.

அனுபல்லவி.

சாதிமுறைமைதெரியாதவனுமக்குத
வாதவனென்ருெருமாதமாய்த்தெரிந்த (சேதி)

சரணங்கள்.

ஏரைப்பிடித்துச்சற்றே உழுவான்-மன
தேங்கித்தள்ளாடியே விழுவான்-எங்கள்
சேரியைப்பார்த்தே யழுவான்-சிவ
சிதம்பரமென்றே தொழுவான் ஐயே (சேதி)

நாத்துமுடியைக்கையி லெடுப்பான்-அதை
நடத்தெரியாமலே விழிப்பான்-இதைப்
பார்த்திடும்பேர்களைப் பழிப்பான்-அடே
பாவியென்றெங்களை அடிப்பான் ஐயே. (சேதி)

உதட்டையசைத்துமுணு முணுப்பான்-அவன்
ளணுறக்கத்தையுந் துறப்பான்-நாங்கள்
அதட்டிப்பேசின லடிப்பான்-பொன்
னம்பலவாணனைப் படிப்பான்-ஐயே. (சேதி)

ராகம் - கமாசு; தாளம்-ஆதி.

பல்லவி.

அடக்கியாளுமையே - அவனை - அடக்கியாளுமையே.

### அநுபல்லவி.

அடக்கியாளுமந்தத் துடுக்குக்காரன்தனை
அடித்துப்பிடிந்துக் கண்டித்துப்படபடத்து. (அடக்)

### சரணங்கள்.

பொன்னம் பலவா வென்றவன் பேசி
பொழுதைப்போக்குவான் சாம்பலைப் பூசி
சன்னதங்கொண்டவன் போலவே யேசி
சண்டைபிடிக்கவரு வானவன் தோசி.(அடக்)

பலித்துறைதயேயொரு மந்திரம் போட்டான்
பழமையான எங்களை இனிக் கூட்டான்
குலத்தைக்கெடுக்கவந்த இவனொரு கோட்டான்
கோபக்காரனெங்கள் வழிபட மாட்டான்.(அடக்)

குளத்தைவெட்டச்சொல்லிக் கூலியைக் கொடுத்தான்
கூட்டிக்கொண்டுபோய்ப் பயல்களைக் கெடுத்தான்
களத்தைச்சீக்கவே யெங்களை விடுத்தான்
காடுமண்டிவருஞ் சுடலையிற் படுத்தான்.(அடக்)

---

### வசனம்.

சேதிசொல்லவந்த புலையர்களைப்பார்த்து வேதியர் சொல்லுவார்.

### விருத்தம்.

காலமே வந்தா னிங்கே கள்ளக்கும் பிடுகள் போட்டு
பாலனைப் போலே பேசிப் பசப்பினான் போடா வென்றேன்
வேலைகூ ழுலகி லந்த வீணனைப் போலே காணேன்
சீலமாஞ் சிதம்பரத்தைச் சேரவே விடைகொ டேனே.

வசனம்.

அந்தணர்சொன்னமொழியைப் புலையர்கள்கேட்டு மிகவுஞ் சந்தோஷங்கொண்டு சேரிவந்துசேர்ந்தபின் நந்தனரெப்போதும்போலே அந்தணரிடத்தில் வருகிறார்.

ராகம்-துக்கடா ; தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தனாரும்வந்தார் வெகு
சொந்தமானதங்க - ளையரைக்காண. (நந்த)

சரணங்கள்.

அங்கமுழுதிலும்நீறுபூசியே அரகராசிவசிவவென்றுபேசியே
சங்கையாருந்திருக்கைகள்வீசியே சாமிசாமிஎன்றுதன்னையேசியே
தில்லைச்சிதம்பரப்பள்ளுபாடியே தரிசனங்காணேனென்றுவாடியே
அல்லலறுஞ்சிவலோகந்தேடியே அடையவேணுமென்றிங்கோடி
[யே. (நந்தனாரும்வந்தார்)

விருத்தம்.

சாதிகுலம் பிறப்பென்னுஞ் சந்தேகந் தெரியாது தானாய் நிற்கும்
பேதகுணம் பற்றறுத்துப் பேரின்பம் வருஷித்துப் பேணிக் காக்கும்
ஆதிபரா பரமென்னுந் திருச்சிற்றம் பலத்தைக்கண் டானந்திக்க[ளூர்.
வேதமொழி விளங்கிவருந்திருவாயால் விடைகொடுத்து விடுவீரென்

கண்ணிகள்.

ராகம் - உசேனி ; தாளம் - ரூபகம்.

தில்லையம்பலத்தலமொன் றிருக்குதாம் - அதைக்கண்டபேர்க்கு
ஜனனமரணப் பிணியைக் கருக்குதாம்
உயர்ந்தசிகரக்கும்பந் தெரியுதாம் - அதை பார்த்தவர்க்கு
உள்ளங்குளிரக்கருணை புரியுதாம்

பண்ணவர் அயன்மாலுந் தேடுமாம்-அந்தத்தில்லைக்காட்டில்
பாம்புபுலிக்குகிர்த்த மாடுமாம்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம் -தனை அடைந்தவர்களை
ஆனந்தமுழுக்காட்டிக் கொள்ளுமாம்
போய்தரிசித்தோர் புண்ணிய சாலியாம் - அது தருமராஜன்
புறம்புகாமல் தடுத்த வேலியாம்
உருவில்லாதகுருவொன் றிருக்குதாம் - அது மூலக்கனலை
ஊதியெழுப்பிக்காண உருக்குதாம்
உருவமாகிவெளியே வருகுதாம்-அதுநான்மறைகட்கும்
உணர்வில்லாதகாட்சி தருகுதாம்- [தாள்
போய்வருகவுத்தாரந் தாருமே - தங்கள் பொன்னடித்
போற்றுவேன் திருக்கண்ணால் பாருமே. (தில்லை)

வசனம்.

சிதம்பரம் போவேனேயென்று அந்தணர்கேட்கும்படி நந்தனார்சொல்லுகின்றார்:

ராகம் - சுரடி ; தாளம் - ஏகம்.

தாதரிகிட-தகஜம்தரி-ஜணதஜணு-ததிமிதகிட-தகணம்தரி-தீனதத்திம் தகஜம்தரிகும்தரிணம்-தகணம்திதின்னத்தின்ன-ஜணம்தணம்தஜணுஜணுத தர்தின்னுகிடதகதோம்-தத்தின்னுகிடதகதோம்-தத்தின்னுகிடதகதோமென

பல்லவி.

ஆடியபாதத்தைக்காணுரே-பிறந்-தானந்தம்பூணுரே.

அனுபல்லவி.

நாடுந்தைப்பூரணபூசத்திலே தில்லை
நாயகனுர்குருவாரத்திலே மன்றுள் (ஆடிய)

சரணங்கள்.

பாசமறுத்துடல் வாசியொடுக்கி
பக்திபண்ணுங்காட்டில் பாம்புபுலிக்கி
ஆசையுடனேநல் லருளைப்பெருக்கி
அன்பர்களிக்கச் சிலம்புகுலுக்கி. (ஆடிய)

கொட்டமடிக்கும் புலன்தொழில்நீக்கி
கோடிகாலஞ்செய்த பாழ்வினைபோக்கி
வெட்டவெளியிலே நெட்டிடத்தூக்கி
வேதம்பணிந்திடத் தென்முகம்நோக்கி. (ஆடிய)

சேனுஞ்சடைப்புனல் பூமியில்சொட்ட
சேவித்துநாரதர் பாடியேகிட்ட
கோணங்கிழிந்தண்ட கோளமுமுட்ட
கோபாலகிருஷ்ணனு மத்தளங்கொட்ட. (ஆடிய)

வசனம்.

ஆனபடியால், நான்சிதம்பரம்போக உத்தரவு தரவேணுமென்று அந்தணரைத் திருநாளைப்போவார் கேட்கின்றார்:

ராகம் - தோடி; தாளம் - ஆதி.

பல்லவி.

உத்தாரந்தாரும்ஐயே-எனக்
கொருவருமில்லை-நான்பரகதியடைய (உத்தாரந்)

சரணங்கள்.

வித்தைகள்கற்றதுமில்லை-யானொரு
பக்தியிற்சென்று பரகதியடைய (உத்தாரந்)

குற்றங்களெத்தனைக் கொடியேன்செய்தேன்
அத்தனையும்பொறுத் தாதரவாக (உத்தாரந்)
பெண்டுபிள்ளையென்று பேயனைப்போலவே
கண்டுகளித்துக் காலங்கழித்தவனுக்கு (உத்தாரந்)
தில்லைச்சிதம்பரத்தை தரிசித்துவந்துங்க
ளெல்லையைக்காத்துக் கொண்டிருக்கிறேனையே. (உத்தாரந்)

வசனம்.

நந்தனர் சிதம்பரம்போக உத்தரவுகேட்டதனால், வேதியர் அடிமையைப் பார்த்துச்சொல்லுகின்றார்.

விருத்தம்.

படிபுகழ் தில்லை நாதன் பத்தியே யுருவாய் வந்து
கடிநக ராத னூரில் களித்திடும் நந்த னென்று
சிடுசிடு மூஞ்சி காட்டிச் சில்விடம் போலே நெஞ்சம்
துடிதுடித் திடவே ஞாயந் தோசியும் பேசு வாரே.

ராகம்-சங்கராபரணம்; தாளம் - மிச்ர ஏகம்.

சேரிமுற்றுஞ்சிவபக்திபண்ணும்படி
 விட்டையாமடியிட்டையா
சேதிசொல்லவேணுமென்றுமிங்கேநீ
 வந்தையோ அகமகிழ்ந்தையோ
காலைமாலையினில்வந்துதரிசனங்
 காட்டுறாய்நிலைநாட்டுறாய்
கதறினாலுமூர்க்குருவிகருடன்போ
 லாகுமோவதிவேகமோ
அடிமைவேலைசெய்யுமுன்தனுக்கிந்தக்கொண்
 டாட்டமோசெனக்கூட்டமோ

அடக்கியாளமாட்டேனேசிங்கக்குட்டி
யல்லவோ அதைச்சொல்லவோ
காளிபூசையவர் போடும்போதுநீயும்
கண்டித்தையாம் மிகதண்டித்தையாம்
கபடமெல்லாம்வெளிப் படுவதாகும்வழி
காட்டுறேனிதைநாட்டுறேன்.

---

வசனம்.

நந்தனர் சிதம்பரம் போகிறேனென்று சொல்லுவதால் அந்தணர் கண்டிக்கிறார்:

ராகம்-மோகனம்; தாளம்-ஆதி.

பல்லவி.

பறையாநீசிதம் பரமென்றுசொல்லப்
படுமோடாபோகப்படுமோடா-அடா (பறையா)

அறியாத்தனமினிசொன்னலினிமே
லடிப்பேன்கூலியைப்பிடிப்பேன்பாவிப் (பறையா)

சிதம்பரமென்பதை விடு-கொல்லைச்
சேரடியிலேவந்து படு-நாத்தைப்
பதத்திற்பிடுங்கினதை நடு-கறுப்
பண்ணனுக்கேபலி கொடுத்திடு-அடா. (பறையா)

எப்போதுமொருதடி பிடி-கையி
லெடுத்துக்கொண்டேதமுக் கடி-உள்ளங்
கற்பனையாய்ப்பள்ளு படி-உன்தன்
கால்ஜோகாமலேகாடியைக்குடி-யடா. (பறையா)

கள்ளந்தீருதற்குப் பாரு-உன்
காலபடும்பண்ணையில் சேரு-இதை
சொல்வதுதானுனக் காரு-எப்போதும்
சுகமுடன்வாழ்வது சீரு-அடடா. (பறையா)

### விருத்தம்.

ஓதியடி வீரா வென்றும் உக்கிர மாடா வென்றும்
பதிபெறுங் கறுப்பா வென்றும் பாவாடை ராயா வென்றுந்
துதிபெறு மிருளா வென்றுந் தொட்டியச் சின்ன னென்றும்
மதுக்குடம் பிசிதம் வைத்து வருந்தியே வணங்கு வாயே.

### வசனம்.

அந்தணர் நந்தனரைக் கண்டித்து மறுபடியும் நல்ல வார்த்தைகளால் சொல்லுகின்றார்:

ராகம்-மாயாமாளவகௌளை ; தாளம்-ஆதி.

### பல்லவி.

நந்தா-வொருசேதிசொல்வதைக்கே
ளிந்த-பங்குதோன்றியநாள்முதல்
சொந்த-முறியெழுதிக்கொடுத்துநீ
வந்த-பறையனலவோமறந்தாயா (நந்தா)

பாரு-இந்தவயல்வரப்பைவெட்டிப்
பேரு-அந்தக்கண்ணியை வெட்டிப்பண்ணை
சேரு-பொறுப்புள்ளவனுனையன்றி
யாரு-இதுவல்லவோகாரியம். (நந்தா)

வாடா-வுன்கூலி முழுதுந்தர
வோடா-பண்ணைப்பறைச்சிகளுடனே
நாடா-பழனங்கடோறும்நடப்
போடா-இதுவல்லவோபுண்ணியம். (நந்தா)

பாடு-உன்கறுப்புதெய்வத்தைக்கொண்
டாடு-கள்ளுசுள்ளுடன்பூசைகள்
போடு-நெல்விளையும்படிக்குவழி
தேடு-புத்திசொன்னேனிதுதான். (நந்தா)

வசனம்.

வேதியர் நந்தனாரைச் சிதம்பரம்போகாதேயென்று கண்டித்துச்சொல்லுகின்றார்:

ராகம்-நாதநாமக்கிரியை ; தாளம்-ஆதி.

பல்லவி.

சிதம்பரம்போகாதே-சொன்னேன்-சிதம்பரம்போகாதே.

அநுபல்லவி.

சிதம்பரம்போனால் ஹிதம்பெறலாமென்று
சேதிசொல்லுவதுன் சாதிக்கடுக்குமோ. (சிதம்)

சரணங்கள்.

கள்ளக்கும்பிடுதனைப் போடாதே-உன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடாமுழுமூடாகீழே
தள்ளிவிட்டுவுன்னைத்தகுந்தபடி செய்வேன். (சிதம்)

நாத்தைப்பிடுங்கிகண்ணி நடவேணும்-அந்த
நஞ்சைவயலைச்சற்றே யுழவேணும்
பார்த்துப்பரம்படித்துப் பழுதுவராமல்
பாயுஞ்சலம்விட்டுப் பார்த்திடுவாய் நீ. (சிதம்)

அடிக்கடிமறுத்துநான் சொல்லவோ-நீ
அடிமைக்காரப்பய லல்லவோ
எடுத்துக்காட்டுவே னிருக்குதுசாதனம்
தடுத்துப்பேசினல் தாடையிலடிப்பேன். (சிதம்)

வசனம்.

அந்தணர் கண்டித்துச்சொன்னதால் நந்தனர் துயரமடைந்து சேரியில்வந்து சிவனைநினைந்து பக்திபுரிந்து கொண்டாடுகிறார்.

ராகம்-ஹுஸேனி; தாளம்-ரூபகம்.

பல்லவி.

பக்திபண்ணிக்கொண்டிருந்தால்-முக்திபெறலாமே

அனுபல்லவி.

எத்திசையுமெவ்வுயிர்க்கு மெவ்வுயிராய்நிறைந்திருக்கும்
வஸ்துவென்றஅம்பலவன் மலரடியே தினந்தோறும் (பக்தி)

சரணங்கள்.

கட்டழகிச்சோரனிடங் காதலது போலே
கடுகிவருங்கன்றருகில் கபிலையது போலே
கட்டவரைத்துணிகிடையா கசடனொரு காலே
காவலனர்பதம்வருகில் களிப்பதனைப் போலே
கண்டுமுறைகீழகலக்கண்டறியார் மதுமயக்கங்
கற்பனையாமிப்பிரபஞ்சஞ்சொற்பனம்போலொப்பிமிகும் (பக்தி)

தாயடிக்கில்பால்குடிக்கத் தழுவுதல்திருஷ் டாந்தம்
சடலம்பொறுக்காமல்துயர்தருகினு மேகாந்தம்
ஆயிருந்துவழுத்திலிந்தமாயையுப சாந்தம்
ஆருமென்றுசாதனங்கள்வழங்குது வேதாந்தம்
காயஞ்சனிக்காதிருக்கக் கண்டுகொள்ளவேணுமென்றால்
காசுபணம்பாசமது மாசறவே நேசமுடன் (பக்தி)

பச்சைமரத்தாணிபோலேபதிந்துமனம் நாடி
பாலகிருஷ்ணன்பணியும்பொன்னம் பலனைக்கொண் டாடி
இச்சையொழிந்தைம்புலன்களைம்பொறிகள் வாடி
ஏகாந்தமானபரி பூரணத்தைத் தேடி
அச்சமறந்திருவிழியி லானந்தநீர்கரை புரள
அரனேதிரிபுரனேகங்கா தரனேபராபரனே யென்று (பக்தி)

---

வசனம்.

சேரியில் சிவபக்தி பண்ணிக் கொண்டிருக்கின்ற பன்னிருபேர்களுடன் நந்தனாருமிருந்து பக்திபண்ணும்நாளையில் ஒருநாள் நந்தனார் பன்னிருவருடைய பக்தி திடப்பட்டதோ இல்லையோவென்று அறியப் பரிட்சைபார்த்தார்.

இருசோல் லலங்காரம்.

நந்தனார் - சிவதலத்தில் சிதம்பரமேகாட்சி யென்றார்
அவர்கள் - அவித்தைகளைத் தூண்டிநிற்றல்ஆட்சி யென்றார்
நந்தனார் - சிற்சபையின்மகிமையென்னசெப்பு மென்றார்
அவர்கள் - அச்சுதனுங்காணுவானந்த மென்றார்
நந்தனார் - ஆகையினாலென்ன பலனாகு மென்றார்
அவர்கள் - நாக்கதினாற்சிவநாமம் நவிலுமோ மென்றார்

நந்தனர் - கற்றதனுலென்ன பலன்கண்டீ ரென்ருர்
அவர்கள் - கொத்தடிமைக்காரப்பலன்கொண்டோ மென்ருர்
நந்தனர் - அம்பலத்தை திரைபோடத் தொடங்கினுரே
அவர்கள் - அம்புவியில் மாயைக்கு ளடங்கினுரே
நந்தனர் - மனந்திருத்திக்கொண்டார்க்குவாராததில்லை யென்ருர்
அவர்கள் - மனவருத்தங்கொண்டார்க்கும்மாருததொல்லை யென்ருர்
நந்தனர் - ஜாதியிலேயெளியவ நானறிவேனே வென்ருர்
அவர்கள் - ஆதியிலேபேதமில்லை அறிவீரே யென்ருர்
நந்தனர் - ஞானமிலாதவர்க்கு முக்திநாடா தென்ருர்
அவர்கள் - ஈனமில்லர்ச்சிவபக்திக் கீடே தென்ருர்
நந்தனர் மதியில்லாதவர்க்கெல்லாம் விதியே யென்ருர்
அவர்கள் - துதியில்லாதவர்க்கெல்லாங் கதியே தென்ருர்
நந்தனர் - பவக்கடலைக்குளப்படிபோல் பகுப்பா ரென்ருர்
அவர்கள் - சுகக்கடலிலினைப்பாறி சுகிப்பா ரென்ருர்
நந்தனர் - பார்ப்பானுத்தரங்கொடுப்பானே வென்ருர்
அவர்கள் - காப்பாற்றுங்கடவுள் கைப்பார மென்ருர்
நந்தனர் - படித்தபடிகாட்டிவிட்டேன் பலமாச் சென்ருர்
அவர்கள் - அடித்துப்பால்பேர்ட்டுவிட்டதாலே யென்ருர்
நந்தனர் - அங்கேயேன்நீங்கள் வராததேதோ வென்ருர்
அவர்கள் - இங்கேயேனதுதான் இராததேதோ வென்ருர்
நந்தனர் - எங்கும்நிறைந்த பூரணங்க ளென்ருர்
அவர்கள் - இங்கேயிருந்து மியற்றுங்கா ணென்ருர்

வசனம்.

இப்படியிருக்குநாளில் ஒருநாள் நந்தனர் தனக்குத் தானே பரவசமாய் ஆனந்தக்கண்ணீர் பெருகிப் பாடுவார்:

ராகம்-ஜஞ்ஜூடி ; தாளம்-ஆதி.

பல்லவி.

பாடுவாய்மனமே-சிவனைக்கொண்-டாடுவாய்தினமே.

சரணங்கள்.

இந்திரன்முதலிய இமையவர்கதிகார
நந்தியின்மீதேறும் நம்பன்பதம்போற்றி (பாடுவாய்)

ஆலமுண்டேய மரரைக்காத்ததிரு
நீலகண்டன்கழல் நெறியுடன்போற்றி (பாடுவாய்)

சீலமாதவர் சித்தம்நின்றுடுஞ்
சூலபாணியெனுஞ் சுயம்புதாள்போற்றி (பாடுவாய்)

மோகமாம்துன்பம் மூழ்கிக்கெடாமல்
ஆகமமுறையாய் அந்திவண்ணனைப் (பாடுவாய்)

டஞ்சாக்ஷரந்தனைப் பக்தியாடுரேற்றி
மெய்ஞ்ஞானம் பெற்றுய்யமேலோனை நீபோற்றி (பாடுவாய்)

ராகம்-தோடி; தாளம்-ஆதி.

பல்லவி.

சிதம்பரமேநினை மனமே-முக்தி-பதம்பெறலாகும்மனமே

அனுபல்லவி.

சதம்சதம்மெனும்பொருள் பதம்பதம்வினை மருள்
சமநசநடம்புரி சாமிசிதம்பர விமலன்திருவுரு நீகொள்ளரகர (சிதம்)

சரணங்கள்.

ஒழியாக்கவலைகொண்டு விழலாய் ஆறுய்
உண்மையில்லாவீட்டை நிழலாய்

தழுவாதிருந்ததில்லை சலனமில்மேல் வீட்டை
சார்ந்தாலல்லோநல்லசாபல்யமாம் பாட்டை
சந்ததமும்பெற பந்தமுமேயற
எந்தவினைத்திற முந்தூரம்முற (சிதம்)

தேகமெடுத்தவருமை யறியாய்-மோசத்
தெரிவையர்வலைச்சிக்கி முறியாய்
சாகுமட்டுஞ்சம்சாரமே மேலிட்டு
சலியாமலேயுழைத்துச்சண்டாளமாந் துட்டு
சம்பாத்தியமது வம்பாகும்விதி
நம்பாதித்ததி தெம்பாயதிபதி (சிதம்)

உனக்குள்ளேயுணர்வாய்நீமோனம்-உண்மை
ஓம்வழிகாட்டுமே ஞானம்
தனக்குச்சிதம்பரஞ்சார்ந்தாலே தன்மயம்
சத்தியமாய்க்கூட்டும் சாம்பிராச்சிய சின்மயம்
சரிவரசிவகுரு பரமயமாய்வரு
முருவெளியெனுமொரு பொருளதுவாந்திரு (சிதம்)

நாமாவளி.

ஹர ஹர ஹர ஹர மகாதேவா
அம்பிகைமகிழ்பொன்னம்பலவா.

வசனம்.

நந்தனார் சிலநாளானபின்பு அடிமைகொண்ட அந்தணரிடத்தில் வந்து சிதம்பரம்போக மிகவும் வருந்தி உத்தரவுகேட்கின்றார்:

### விருத்தம்.

வேதியரே பெரியவரே நல்லவரே நான்கடையன் விண்ணோர் மெச்சும்
சாதியரே பலகலையுங் கற்றுணர்ந்து புரையில்லாத் தவமே செய்யும்
போதியரே புத்தியிலா யான்புலைய னேதறியேன் புண்ய மூர்த்தி
ஆதிகுரு சிதம்பரத்தைக் காணவென்றேயாசைகொண்டேனனுப்புவீரே

ராகம்-ஆரபி; தாளம்-ஆதி.

### பல்லவி.

தில்லைச்சிதம்பரத்தை யொருதரமாகிலுந்
தெரிசித்துவாவென்றுத் தாரந்தாருமையே

### அநுபல்லவி.

தில்லைச்சிதம்பரத்தைக் கண்டால்பிறவிப்பிணி
இல்லையென்றுபெரியோர் சொல்லக்கேட்டிருக்கிறேன் (தில்)
அல்லலறுக்குந்திரு வம்பலநாயகன்
அல்லும்பகலுமாடி யானந்தம்பெருகிய (தில்)
ஆதிமுதலாயென்னை யடிமைகொண்டதல்லவோ
வேதகுலமேயென்தன் மீதில்தயவுசெய்து. (தில்)

ராகம்- நாதநாமக்ரியை; தாளம்-மிச்ர ஏகம்.

### பல்லவி.

தெரிசிக்கவேணுஞ்-சிதம்பரத்தைத்-தெரிசிக்கவேணும்.

### அநுபல்லவி.

தெரிசித்தவுடனுடல் கரிசைப்பிணிகளறும்
பரிசுத்தமாகுமுன் மறுசுத்தமாறவே. (தெரிசிக்க)

### சரணங்கள்.

பத்தர்பணியுந்திருக் கூத்தன்சந்நிதிதொழு
தேத்திப்பிறவித்துய ராத்தியெப்போதும். (தெரிசிக்க)

வேதனையடியவர் போதனைமுனிவர்கள்
நாதனைகரங்குவித் தாதரவாகவே (தெரிசிக்க)

ஈசனைபுலியூரில் வாசனைகனகச
பேசனையென்றுநட ராஜனைப்போற்றி (தெரிசிக்க)

காமத்தையகல்பவர் வாமத்தினின்றுசிவ
நாமத்தைச்சொல்லியர்த்த சாமத்தில்வந்து (தெரிசிக்க)

ஞாலம்புகழுமவன் மாலையணியுங்கோ
பாலகிருஷ்ணன்தொழுஞ் சீலபொற்பாதத்தை. (தெரிசிக்க)

---

வசனம்.

நந்தனார் தெரிசனஞ்செய்ய உத்தாரங்கேட்க அந்தணர்சொல்லுகின்றார்:

விருத்தம்.

புத்திசொல்லிக் கேளாத மூடாவுன் தன்
புரட்டெல்லா நானறிவேன் போடா போடா
பத்தியென்றுஞ் சித்தியென்றும் பறையர்க் கேது
பார்ப்பார தெய்வமது பாலிக்காது
குற்றமுண்டுன் சாதியிலே வழக்கமில்லாக்
கொள்கையது சேரியிலே கூடாதப்பா
பித்தமது கொண்டவன்போ லிங்கேவந்து
பேசாதே போபோவென் றேசுவானே.

ராகம்-முகாரி; தாளம்-ஆதி.

பல்லவி.

சிதம்பரதெரிசனமா-நீயதைச்-சிந்திக்கலாயாபறையா.

சரணங்கள்.

சிதம்பரதெரிசனஞ்-சதுர்மறையோர்கள்
செய்வதுஞாயம்-நீசொல்வதுமாயம்
செல்லாதே-இங்கே-நில்லாதே
சேரிக்குப்போடா-நாளைக்குவாடா (சிதம்)

சனகமகாமுனி-யோகிகள்தேடிய
கனகசபேசனைக்-கண்டறிவாயோ
பேசாதே-கை-வீசாதே
வீரனைத்தொழடா-ஏரியைஉழடா (சிதம்)

தவமுடையோர்கள்-தரித்திடுமந்திரஞ்
சிவபதமென்று-சேவிக்கலாமா
ஆகாது-வினை-போகாது
விரைதலும்நன்றோ-அறுதலிமகனே. (சிதம்)

வசனம்

"உழுது, சேறுபண்ணி, பரம்படித்தும், விரைதெளித்து, நாத்துப்பறித்து, நடவுநட்டு, மடைதிறந்து, மடைகோலி, களைபிடுங்கி, காத்திருந்து, பதத்திலறுத்து, கட்டியடித்து, நிரம்பிய பட்டையைக் காப்பதுமில்லை, இராக்காலங்களில், பந்தம் பிடித்துத் தடி எடுத்து, கொம்பு தம்பட்டமுழங்கி, கோலாகலமாகி, நாலுபறையரோடுங்கூடி, வரப்பைவிட்டூரைச்சுற்றிவந்து காக்குப்படி கிராமத்தாரிட்டகாவல் காப்பதுமில்லை, உனக்குவேண்டிய ஊணுறக்கம் முதலாகிய தேகதருமம் மறந்து எப்போதும் தில்லையம்பலம், திருச்சிற்றம்பலம், சிதம்பரம் என்று, பித்துப்பிடித்துத் தாயை விட்ட குழந்தைபோல வாய்விட்டலறிப் பேய்பிடித்தவன் போல மதிமயங்கி உடல் கலங்கி எல்லோரும்பழிக்கக்

கேழேபுரண்டழுது தத்துபித்தென்றுத் தள்ளாடிய காரண மென்ன" வென்று அந்தணர் நந்தனரைக் கேட்கின்றார்.

ராகம்-ஸுரியகாந்தம் ; தாளம்-மிச்ர ஏகம்.

பல்லவி.

நந்தாவுனக்கிந்தப்ரமை வந்தகாரணம் நானறிந்திடச் சொல்லுவாய்.

அனுபல்லவி.

அந்தரங்கமுள்ள சொந்தப்பறையனு
யண்டியிருப்பதுபோய் சண்டைபிடிக்கவந்தாய் (நந்தா)

சரணங்கள்.

சாதிமுறைமைதுறந்தாய்-தில்லைச்
சபாபதியைநினைந்தாய்
சூதுக்காரப்புறையருடன்கூடிச்
சும்மாவிருப்பது-எம்மாத்திரம்நான் (நந்தா)

குலத்திலில்லாதவழக்கம்-நீயதைக்
கொண்டாடுகிற முழக்கம்
வெளுத்ததினலென்ன எருமைச்சாணியது
மேனியிலணிவாரோ-வையகந்தனில் (நந்தா)

திருட்டுப்புரட்டுமறியாய் பொல்லாத்
தீங்குவார்த்தையுரையாய்
முரட்டுத்தனத்தையென்முன்னேகாட்டி
விரட்டிப்பேசுருய்-வெறிமயக்கமோ அடா (நந்தா)

வசனம்.

வேதியர் நந்தனரைப்பார்த்துச் சிதம்பரப்பிரமைவந்த காரணமென்னவென்று கேட்டபின் நந்தனர் வேதியருக்குச் சொல்லுவார்:

விருத்தம்.

மனங்கண்டவிடமெல்லாம் போகாமலாணையிட்டு மறித்து வாங்கி அனல்கண்டமெழுகதுபோ லெனதுள்ளந் தனதாக வருளிக்காக்கும் புனல்கொண்டவேணியனைப்புண்ணியன் புராந்தகனைப் போற்றிசெய்யக் கனங்கொண்டதில்லை நகர் போய்வருவேன் கருணைவழி காட்டுவீரே.

வசனம்.

நந்தனார் வேதியரைப்பார்த்து உத்தாரங்கேட்க அந்தணர் சொல்லுகின்றார்:

ராகம்-ஸாவேரி ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

நட்டநடவுவிளையும்பொட்டவெளியைத்தொட்டபோதிலும் (நட்)

சரணங்கள்.

கெட்டமதியைவிட்டுவிட்டு ளேடாபண்ணையாளடா (நட்)
இட்டநெருங்கும்பண்ணையுன்சால் பட்டதினால்பசுமைகொண்டு (நட்)

விருத்தம்.

கதிரொருமுழமேநீளுங்கட்டு முக்கலமே காணுந்
துதிபெறுநந்தாவுன்கைதொட்டதேதங்கமாகும்
பதிதனிற்பெருமைசொல்லும்பறையனுயிருந்துந்தில்லைச்
சிதம்பரப்பித்தேன் கொண்டாய்செய்தொழிலோ வென்றார்.

வசனம்.

நந்தனருக்குச் சிதம்பரப்பித்து தெளியாமையால் வேதியர் என்னசெய்யப் போகிறேனென்று துயரமுற்று நந்தனரைப்பார்த்துப் புலம்புவார்:

ராகம்-தன்யாசி ; தாளம் - ஜம்பை.

பல்லவி.

பித்தனுய்ப்போனதென்ன-நந்தா (பித்த)

அனுபல்லவி.

எத்தனையோபுத்திக ளெடுத்துப்படித்தும் (பித்த)

சரணங்கள்.

சித்தமிப்படி செய்ததாரோ
பத்துதலில்லாமலே பண்ணியவராரோ
பக்தியென்றும்பெய ரிட்டதாரோ
நித்தமும் இப்படியே நிலையிட்டதாரோ (பித்த)

எத்திசைகளும்புகழ் பெற்றிருந்தும்-பல
வித்தைகளனேகம் விளம்பத்தெரிந்தும்
பக்தியோடுசகல மும்அறிந்தும்உனது
கர்த்தனெனும் பேரோடு நானேயிருந்தும்.(பித்த)

வசனம்.

மனதிற்றுயரமுற்ற வேதியரை நந்தனர் மிகவும் வணங்கிச் சொல்லுகின்றார்:

விருத்தம்.

பித்தமதுதெளிந்துவிடமருந்துண்டு தில்லைவனம்டேணிச்சென்று
சத்திசிவகாமிப்பெண்சந்நிதியி னேராகித்தலைவணங்கி
நித்தியென்றுநடநமிடுந்திருக்கோலங் கண்குளிரத்தெரிசித்தால்
பித்தமதுதெளிந்துவிடும்வே தாந்தமறைசொரியும்பெரியகோவே.

ராகம் - எதுகுலகாம்போதி ; தாளம் - மிச்ர ஏகம்.

பல்லவி.

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது - பேரின்பமன்றுள்ளே.

அநுபல்லவி.

மற்றமருந்துகள் தின்றாலுமுள்ளுக்கு வல்லே வல்லே-ஐயே
அடிமை (பித்தந்தெளிய)

சரணங்கள்.

பாம்பும்புலியுமெய்ப்பாடுபட்டுத்தேடி பார்த்துப்பயிரிட்டது
பாரளந்ததிருமாயனுமவேதனும் பார்த்துக்களித்ததுண்டு
பார்வதியென்றொருசீமாட்டியதில் பாதியைத்தின்றதுண்டு-இன்னம்
பாதியிருக்குபறையாநீயும்போய்ப்-பாரென்றுத்தாரந்தாருந்
[தீரும் (பித்தந்தெளிய)

பத்துத்திசையும்பரவிப்படர்ந்தாலும் பார்த்துப்பிடியாரே
தத்திக்குதிக்குந்தாளங்கள்போடுந் தண்டைச்சிலம்புகொஞ்சுந்
தித்திக்குந்தேனேசெங்கரும்போநல்ல சித்தமுடையார்க்கே-என்
சித்தத்தைக் கட்டியிழுக்குது அங்கேசென்றால் போதுங்கண்டால்
[தீரும் (பித்தந்தெளிய)

ஊரைச்சொன்னாலுமிப்பாவந்தொலையு மூழ்வினையூடறுக்கும்
பேரைக்கொண்டாடிப்புலம்புகிறாய்வெகு பேர்களுக்குப்பிழைப்பு
சாருநரைதிரைதீருமருந்துச் சாதியைப்பாராது-இன்னந்
தீராதநோய்கள் படைத்தவெனக்குத் தீருந்திருமையே அடிமை
[(பித்தந்தெளிய)

ராகம்-ஜெஞ்ஜூடி ; தாளம்-ஆதி.

பல்லவி

சிதம்பரம்போகாம விருப்பேனோ
சென்மத்தைவீணாக்கிக் கெடுப்பேனோ(சிதம்பரம்)

சரணங்கள்.

பத்தியுமனமும் பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சடலமுமிங்கே(சிதம்பரம்)
ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசலும்பாசமும் பிதற்றலுமிங்கே(சிதம்பரம்)

வசனம்.

இப்படி நந்தனார் சொல்ல வேதியர் மூர்ச்சையடைந்து விழுந்து தெளிந்து சொல்லுவார் ;

விருத்தம்.

நாற்பது வேலிபூமி நடவுநட் டாக வில்லை
பார்ப்பது மில்லைசைவப் பழமது தின்றாய் பண்ணை
கார்ப்பது மில்லையுன்னைக் கைவிட மனதும் வல்லை
சேர்ப்பதா லாவதில்லைச் சேரியிற் றொலைந்து போடா.

வசனம்.

என்று வேதியர் இட்ட கட்டளைப்படி சேரியில் நந்தனார் வந்து பக்திபுரியும் பன்னிரண்டுபேர்களைப் பார்த்துச்சொல்லுவார்.

ராகம்-மாஞ்சி ; தாளம்-மிச்ர ஏகம்.

கண்ணிகள்

ஆசை நேச ராகுந் தோழரேகேளுங்கள்
பேசுந்தெய்வங்களுண்டோ யீசனல்லால்நமக்கு (ஆசை)

ஆயன் மாயன் அன்றடிமுடிகாணாத
நேயனழலுருவாய் நின்றநின்மலனல்லால் (ஆசை)

மண்ணாய் விண்ணாய் மற்றுளப்பொருள்களாய்
எள்ளுளெண்ணெய்போ லிருக்குமீசனல்லால் (ஆசை)

அருவா யுருவா யண்ட பகிரண்டமெங்கும்
பரமாய்நின்றதந்தப் பராபரத்தையல்லால். (ஆசை)

வ ச ன ம்.

என்று நந்தனார் சொல்லிப் பின்னும் ஆநந்தக் கூத்தாடுவார்.

ராகம்-தன்யாசி ; தாளம்-திரிபுடை.

ப ல் ல வி.

ஆநந்தக்கூத்தாடினார்-ஆநந்தநந்தர்
ஆநந்தக்கூத்தாடினார்.

அ நு ப ல் ல வி.

வானுந்துதிதேவர் முநிவர் ஜயஜயவென்று
வாழ்த்தும்பிரானடிகள் வாய்ப்பதெப்போதோவென்ற (ஆநந்)

ச ர ண ங் க ள்.

மாயவலைக்குட் பட்டு- அதிலெப்போதும்
மாளாத்துயரப் பட்டு
மாயுமுன்னாகவந்து வலியவாண்டருண்மூர்த்தி
நாயேன்களிக்கவென்முன்னாடுவரென்றேபோற்றி (ஆநந்)

கவலைப்படாதே நெஞ்சமே-காலன்கைப்பாசம்
கண்முன்வராதே அஞ்சுமே
தவநிலையையுணர்ந்த சன்மார்க்கர்தமக்கன்று
தற்பதத்தைக்காட்டினோன் தனைக்காணுவேனென்று(ஆநந்)

காயமிதுவுஞ் சதமா-அன்றியுற்பவங்
காண்பதொவ்வொரு விதமா
ஆயுமெழுபிறப்பா யவதரித்தலுண்டென்றும்
தூயபதத்தாலந்தத் துகளற்றிருப்பேனென்றும்(ஆநந்)

வசனம்.

இவ்விதமாகப் பன்னிரண்டு பேர்களையும் வேலைசெய்ய வொட்டாமல், தன் சமீபத்தில் நிற்கவைத்துக்கொண்டு போதித்திருப்பதை வேதியன் கேள்வியுற்று நந்தனாரைச் சீறிக் கடுங்கோபஞ்செய்ய நந்தனார் வேதியருக்குச் சொல்லு கின்றார்.

ஸ்ரீராகம் ; தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதுக்கென்மீது இத்தனைபேதகம்
எண்ணுவனோ தோதகம் (ஏது)

அனுபல்லவி.

காதகராம்மனக் கசடர்சொன்ன சொல்லை
சாதனைசெய்து சாதித்தீர்பிழையொன் றில்லை (ஏது)

சரணங்கள்.

நான் உங்களுக்குப் பண்டு-சாசனஞ்செய்து
நலமாய்த்தந்த துண்டு
தோன்றலேநீசொல்லுஞ் சொற்படிச் செய்கிறேன்
பான்மையாகநித்தம் பக்தியாய் உய்கிறேன்(ஏது)

காசளவு நன்மை-செய்தோரை யொரு
காலும்மறவாத் தன்மை

தாசனுக்கெப்போது முண்டுதாமே கண்டு
யோசிக்கப்போகிறீர் இனிமேல் நான்செய்தொண்டு(ஏது)

ஏழைநான் தானே-சூதும்வாதும்
ஏதொன்றறி யேனே
மேழியுடனேயொரு மேதிகாளைக ளெங்கே
ஊழியனுக்கும் உழு கயிறுங்கொடுப்பீ ரிங்கே(ஏது)

## நந்தனர் ஏருழுதல்.

விருத்தம்.

வணக்கமாய்ச் சொல்லும் வார்த்தையை யுணர்ந்து
வஞ்சனை யிலாத வேதியனும்
கணக்கிலாத் தனது பண்ணையாள் வசத்திற்
கைப்பிடி யாக வொப்பித்து
பிணக்கிலா னிவன்சொற் படியெலாஞ் செய்வான்
பின்னிடான் அழைத்துப்போ வென்ன
இணக்கமாய்க் கொண்டு போயினர் நந்தன்
ஏர்த்தொழில் மிகப்புரிந் தன்னே.

ராகம்-சஹானா ; தாளம்-மிச்ர ஏகம்.

பல்லவி.

பக்தியாயாண்டை சொற் படிசெய்தா னந்தன் பலருடன்கூடி மிக

அனுபல்லவி.

கர்த்தனைசித்தங்களித்துக் கதித்தவன்
கமலபாதத்தை நாடி-மெத்தக்
காதலாகவேகொண் டாடி
மனம் நீடி (பக்தி)

சரணங்கள்.

நீருள்ள ஆதனூர் நஞ்சை புஞ்சைகளை
நித்தமுமேர்கொண்டு பழுது-அறச்
சுத்தமதாகவே யுழுது
காலைப் பொழுது (பக்தி)

கறுப்பு வெளுப்பு சிவப்பு நிறமுள்ளக்
காளைகளைக்கட்டிப் பூட்டிபொற்
காறுவொன்றதிலே மாட்டி
ஏ ரோட்டி (பக்தி)

கந்தன் கறுப்பன் கடம்ப னிடும்பன்
கரியனவன் தம்பி பெரியன்-சின்னக்
காத்தானவன் மகன் சொரியன்
குள்ள நரியன் (பக்தி)

சிரகச்சம்பா சிறுகருடன் சம்பா
சிறந்தமணக்கத்தை நட்டு-கம்பு
சோளத்துவரையு மிட்டு
பயி ரிட்டு (பக்தி)

வசனம்.

இவ்விதமாய் ஏர்த்தொழில் புரிந்துகொண்டிருந்த நந்தனார், "இனிமேல் சிதம்பரம்போவேன் போகாவிடில் பிராணனை விடுவேன். அன்றியும், சேரியில் வரமாட்டேன்" னென்று சொல்லிக்கொண்டு வேதியர்பால் சென்று தலைவணங்கிக் கரங்குவித்து மனந்துடித்துக் கண்டித்துச் சிதம்பரம்போக உத்தாரங் கேட்கின்றார்:

## விருத்தம்.

பொய்ச்சடலம் புழுக்கூடொன் பதுவாசற்ரூற் பையைப் போற்றிசெய்யும்
துச்சனிவ னென்றெண்ணித் தள்ளாமனன் னெறியைச் சொல்லவேணும்
பச்சைமிகுந் தொடியழகி சிவகாமி மாதுபங்கன் பாதங்காண,
இச்சைமிகுந் திருக்குதையே அம்பலத்தைக் கண்டுகளித்திறைஞ்சுவேனே.

ராகம்-சாவேரி ; த்ாளம்-ரூபகம்.

### பல்லவி.

பொன்னம்பலவாண னடிதொழுவா-ரொருவரன்றிப்
பிறவிக்கடலிடையில் கிடந்தழுவார்.

### அனுபல்லவி.

இன்னும்பலதெய்வங்களுமிருக்கு-தெனக்கிவர் போலவே
இல்லைதயவில்லைஏழை யிடத்திலிருந் தருள்செய்திடும் (பொ)

### சரணங்கள்.

வேதமொருநான்குமறியாத பரம்பொருளாகினும்
வேண்டும்பதஞ்சலிக்காக வேதில்லைப்பதிவந்து
பாதச்சிலம்பசையமணி குலுங்கப்பிறையிலங்க
பணிபடமாடவேசடையாடவேபரமானந்தக்கூத்தாடிய (பொ)

உலகந்தனில்ககனமதுபோ லெங்கினும்பரிபூரண
முருவற்றது குறையற்றிடுஞ்செல்வங்
கலியற்றவர்மதமற்றவர் விடையத்தினிலுருவற்றிட
கலைகற்றவர் வலயத்தவ ரிதயத்தினடனமாடிய (பொ)

இரவுபகல்கருமங்களி லிழுக்கும்பொரிகணங்களதை
இழுத்துவசப்படுத்தும் வகையெனக்குத் தெரியாது
பரவிவரும்ராகாதிற்சர ணடங்கிமனதொடுங்கிவழி
பார்க்குமிடமார்க்குமரிதாக்கும் பாலகிருஷ்ணன்தொழும் (பொ)

வசனம்.

இவ்வகையாய்ச் சொல்லும் நந்தனாரைப்பார்த்து வேதியர்சொல்லுகின்றார்:

விருத்தம்.

மெள்ளப்பேசிமெழுகிறாயனுதின மூடாவுனக்கித்தனை
கள்ளக்கும்பிடிலாவதென்னபலனே காட்டுப்பசாசல்லவோ
துள்ளித்துள்ளித்துடிக்கிறாய்சிவ பதஞ்செல்லாதுஉன்ஜாதியில்
எள்ளுக்கொல்லையில்மாடுவந்துதொடாரா தேகும்படிசெல்லடா.

வசனம்.

இப்படிச்சொல்லிய வேதியருடனே நந்தனார் தனக்குத் தெரிந்தவித்தைகளை அத்தருணத்தில் சொல்லிக்காட்டுவார்:

முன்நந்தனார், பின் வேதியருமாகச் சொல்லிக்கொள்ளும்
ஏட்டிக்குப்போட்டியான
இருசொல் அலங்காரம்.

நந்தனார் - தில்லையைப்பார்க்கவில்லையே யென்றார்
வேதியர் - கொல்லையில்மிளகாயில்லையோ வென்றார்
நந்தனார் - கள்ளம்போனாலுள்ளதுகாணு மென்றார்
வேதியா - வெள்ளம்போனாலுள்ளதுவிளையு மென்றார்
நந்தனார் - திருச்சிற்றம்பலங்கண்டால்தேகங்களிக்குமென்றார்
வேதியர் - பொரிச்சகுழம்புகொண்டால் தேகம்பெருக்கு மென்றார்
நந்தனார் - அரகராவென்றால்பாவம்போ மென்றார்
வேதியர் - பறையனைக்கண்டால் பாவமா மென்றார்
நந்தனார் - வெட்டவெளியிலேமனமுட்டிப்பாரு மென்றார்
வேதியர் - பொட்டவெளியிலேகுழிவெட்டிப்பாரு மென்றார்
நந்தனார் - எனக்குஊறியஞானமாரியேமதி யென்றார்
வேதியர் - உனக்குநாறியபறைச்சேரியேகதி யென்றார்

நந்தனார் - கர்த்தாவேயென்னுள்ளம்பெற்றா ரென்றார்
வேதியர் - கத்தாழையக்கினியில்பற்றா தென்றார்
நந்தனார் - மறையோருக்கெப்போதும்வாயிலேதர்க்கமென்றார்
வேதியர்- பறையருக்கெப்போதுஞ்சேரியேசொர்க்கமென்றார்
நந்தனார் - கொள்ளித்தேள்போலென்னைக்கொட்டாதே யென்றார்
வேதியர் - அள்ளித்தந்தேனென்னைத்திட்டாதே யென்றார்
நந்தனார் - கடுமைகொண்டேகவலைப்படுத்துவதே னென்றார்
வேதியர் - அடிமைபூண்டும்அவலப்படுத்துவதே னென்றார்
நந்தனார் - தில்லையோடென்னைச்சேர்ப்பீரோ வென்றார்
வேதியர் - எல்லையோடுமுன்னைப்பார்ப்பேனோ வென்றார்
நந்தனார் - திருவாதிரைவருகுதுபோவேனே யென்றார்
வேதியர் - மறவாதிருபறையாபோகாதே யென்றார்
நந்தனார் - தெரியாதுமெள்ளப்போவேனே யென்றார்
வேதியர் - மரியாதையல்லப்போகாதே யென்றார்
நந்தனார் - ஆணையைவிட்டுவழிகாட்டும்பெரியோரே யென்றார்
வேதியர் - பிராணியைவெட்டும்பழிகாட்டும்புலையரே யென்றார்
நந்தனார் - ஆடிப்பாடிப்படிப்பே னென்றார்
வேதியர் - தேடித்தேடிப்பிடிப்பே னென்றார்
நந்தனார் - தில்லையிலேகலங்காமல்நாடுவே னென்றார்
வேதியர் - கொல்லையிலேவிலங்காகப்போடுவே னென்றார்
நந்தனார் - சிந்தைநொந்துதவிப்பேனே யென்றார்
வேதியர் - வந்துவந்துஅலப்பாதே யென்றார்
நந்தனார் - கெஞ்சினால்நெஞ்சமுருகாதோ வென்றார்
வேதியர் - அஞ்சினால்பஞ்சம்வருகாதோ வென்றார்
நந்தனார் - சிதம்பரம்போகவுத்தாரந்தாரு மென்றார்
வேதியர் - இதம்பெறலாம்கத்தாதேபோது மென்றார்
நந்தனார் - சீக்கிரமாய்ப்போவே னென்றார்
வேதியர் - போக்கிரியாய்ப்போவா யென்றார்

நந்தனார் - அன்னீதஞ்செய்யே னென்றார்
வேதியர் - சொன்னதுதவறாதே யென்றார்
நந்தனார் - எங்கள்சாதிக்குஎன்னவழி யென்றார்
வேதியர் - உங்கள்சாதிக்குஇந்தவழி யென்றார்
நந்தனார் - உற்றதுஒன்று மென்றார்
வேதியர் - பெற்றதுபோது மென்றார்
நந்தனார் - பறையனாய்ப்பிறந்தேன்தலையெழுத்திது வென்றார்
வேதியர் - மறையராய்ப்பிறந்தென்னவாழ்ந்திருப்பது வென்றார்
நந்தனார் - வாய்க்காதவெனக்குவழிசொல்லுவீரே யென்றார்
வேதியர் - காய்க்காதமரத்தில்கல்லெறியாரே யென்றார்
நந்தனார் - எப்போதுமிப்படிச்செய்வதே னென்றார்
வேதியர் - அப்போதுமிப்படிச்செய்ததே னென்றார்
நந்தனார் - உலகமனைத்துங்கடவுளாய்நிறைந்ததே னென்றார்
வேதியர் - பலகலைகற்றும்பறையனாய்ப்பிறந்ததே னென்றார்
நந்தனார் - பழுதானசென்மம்படைத்தேனே யென்றார்
வேதியர் - அழுதாலுங்கர்ம மடுக்காதோ வென்றார்
நந்தனார் - காப்பதுன்பாரம்கட்டுவிடு மென்றார்
வேதியர் - நாற்பதுவேலியைநட்டுவிடு வென்றார்
நந்தனார் - அப்பன்கருணையிப்படியோ வென்றார்
வேதியர் - தப்பினேனதுவுமொப்பிலே னென்றார்

வசனம்.

நந்தனார் மெத்தவும் ஐயரை வணங்கி உத்தாரங்கேட்கின்றார்:

விருத்தம்.

அல்லெனுங் குழலாள்மோக மண்டாது வொருகாற் றொண்டர்
பல்லூழி காலஞ்செய்த பழவினைத் தொடக் கறுத்துச்
சொல்லினு மடங்கொணாத சுகக்கட லாட்டி வைக்குந்
தில்லைநா யகனைக்கண்டு தெரிசனஞ் செய்வே னென்றார்.

## கண்ணி.

ராகம்-பேஹாக் ; தாளம்-ஆதி.

மார்கழிமாதத் திருவாதிரைநாள் வரப்போகிறதையே
மனதைப்புண்ணுகப் பண்ணுமலொருதரம் போய்வாவென்றுசொல்
[லையே
கட்டையிருக்கையில் சிதம்பரம்போய்நான் காணவேணுமையே
கசடனுகிலு மாசைவிளையுதுன் காலுக்குக்கும்பிடையே
காலில்நகமுளைத்த நாள்முதலாயுமக் கடுமைக்காரனேயே
காலபாசத்தில் காட்டிக்கொடாமல் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில் வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனேயே
உண்டதுமுறங்கின தன்றியில்வேறே யொன்றுங்காணிலேஜயே
எட்டுமிரண்டு மறியாதபேதைநா னெளியேனுனேயே
இன்னந்தாய்வயிற்றி னுள்ளணுகாம லிடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திடுந் தண்ணீர்குடித்திடும் வெறியேனுனேயே
மேதினியில்நான் நாயினுங்கடையேன் வழிவிடவேணுமையே
தானந்தவங்க ளொன்றுங்காணு தடியேனுனேயே
தளரவிடவும் வேண்டாமொருகோடி தருமமுண்டுஜயே
அல்லும்பகலுங்க ளாதரவாலே ஆளாகினேனேயே
அன்புடனேநல்ல கதிபெறுவாயென் றனுப்பவேணுமையே.

---

## விருத்தம்.

சிலையணிந்திடும் வேளெரிந்திடச் செய்திடுந்திரு மேனியைக்
கலந்தணைந்திடவேண்டுங்காதலைக் கண்டிடுமகிலமனைத்தையுந்
தலைசுமந்திடுசேடனுர்குணத் தன்மையெய்திடும்நந்தனை
விலைக்குவாங்கியபெருமையாலிவன் வேணதெல்லாம்பேசுவான்.

வ ச ன ம்.

இப்படிச் சிதம்பரம்போக உத்தாரங்கேட்ட நந்தனாருடைய சிவபத்தி பரிதாபத்தை ஆதிசேடனாலுஞ் சொல்லவொண்ணாத மகிமையைக்கொண்ட மகானுபாவனை, அடிமைக்காரனென்று வேணபடி பேசுவார்.

ராகம்-முகாரி ; தாளம்-ஆதி.

க ண் ணி க ள்.

மாடுதின்னும்புலையாவுனக்கு மார்கழித்திருநாளோ
தேடிக்கும்பிடும்யாரிடத்தேபோய்த் தீண்டாதேபோடா
ஆடுதின்னும்புலையாவுனக்கு ஆனித்தெரிசனமோ
நாடுசிரிக்கும்வார்த்தைகளன்றோ நாடாதேபோடா
நண்டுக்குக்கலியாணம்மூளை நரிக்குச்சங்கராந்தி
பண்டிகைபூசைதிருநாளுண்டோ பறையாநீபோடா
பூசைகள்செய்வாயோஆண்டவன் பொன்னடிதொழுவாயோ
கூசல்போடாதேபோடாயிங்கே கூழைக்கும்பி டிடாதே
கங்கையிலாடுவையோ அங்கே காணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவேனடிக்கடிவந்து யிரையாதேபோடா
அஞ்செழுத்தோதுவையோவுனக்கு மானந்தத்திருக்கூத்தோ
வஞ்சகவார்த்தைநாளைத்தெரியும் வாராதேபோடா.

---

வ ச ன ம்.

அடா! நந்தா! சபாஷ் நன்றாயிருக்கின்றது. நீ சிதம்பரம் போகவேண்டுமென்று கேட்பதை ஆலோசித்தால் மிகுந்த ஆச்சரியமாயிருக்கின்றதென்று வேதியர் பின்னுஞ் சொல்லுகின்றார் ;

ராகம்-மோகனம் ; தாளம்-சாபு.

பல்லவி.

அடடாநந்தனே தில்லைக்-கனுப்புமென்றெனைக்கேட்ப
தாச்சரியம்மிக வாச்சர்யம்.

அனுபல்லவி.

அடடாகட்டுக்கதைக ளனைத்துமிங் குதவாது
நடடாவயலைத்தேடி நடவுநட விப்போது.(அட)

சரணங்கள்.

ஈனசாதியிற்பிறந்தோ னுனக்கவ்விடத்தி
லென்னஅலுவ லுண்டு-அல்லவென்று
போனபோதிலும்மூவா யிரவரிருக்கும்வீதி
புகுந்துநீகடந்து கொண்டு
மானுமழுவுஞ்சிர மாலையணிந்த வரு
மாற்றலர்திரிபுர மதனையெரித்த பெரு
மானுக்கிய லுந்திரு மஞ்சனோற்சவந் திரு
வாதிரைப்பலன்பெற மாட்டாய்சொற்படி யிரு. (அடடா)

வேள்விகளொருபுறம்வேதியர்க ளியற்றும்
மேன்மைகள்மிகத் தங்கும்-அந்தத்
தாழ்வையிலாத்திவ்யத்தலம்போய் வருவதற்குந்
தடையில்லையெனப் பொங்கும்
தன்மையிதெல்லாங் கனவாகமுடிய வரும்
சாதியிழிவையோ சித்தாலேதெரிய வரும்
பன்னிப்பன்னிப்படித்தேன் பாவ மற்றுயெ வரும்
பட்டால்தெரியும்பறைய னுக்கென்பது போல்வரும்.(அட்டா)

அல்லும்பகலுஞ்சோ றளித்துக்காத்திடுந்தெய்வ
மானவம்பல வாணன்-இங்கிருக்க
தொல்லைப்படவோவேண்டா மென்றுரைத்திடுவேன்
சொல்லமறந்தநீ வீணன்
தில்லுமுல்லுமுள்ள பேச்சேதுக்கடா பிடித்
திருக்குமெனதுபிடிதிரும்பாதடா பகடி
பல்லையொடித்து விடுகிறேன் பாரடா தகடி
பஞ்சைப்பயலேசமர்த்துப் பார்ப்பேனெடடா தடி. (அடடா)

வசனம்.

வேதியர் சொல்லிய சொற்களைக்கேட்ட நந்தனார் நீங்க ளென்னைத் தடியாலடித்தாலும் பிராணனை மடித்தாலும் கழுத்தை யொடித்தாலும் சிதம்பரத்தில் நடித்தானைக் காணு மலிருக்கேனென்று எடுத்துச் சொல்லும்போது, வேதியர் துடித்துச் சொல்லுவார்.

ராகம்-ஸாவேரி ; தாளம்-ஆதி.

பல்லவி.

இனியுன்குற்றத்தைப் பொறுப்பேனோ-அணுவள
வேனுஞ்சம்மதிப்பேனோ.

அனுபல்லவி.

தனியாம்வேதசாஸ்திரந் தனையுணர்ந்தாலுஞ் சாதி
தன்புத்திபோகாதென்ற சரித்ரம்பொய்யல்ல நீதி(இனி)

சரணங்கள்.

பலகாலமும்பழமும் பாலூட்டினாலும் பாம்பு
பழகாததற்குவொப்பாய்ப் பகரலாகுமே தீம்பு

தலைவிட்டப்புறம்போகத் தான்செய்யாதேடாவிம்பு
தரையிற்கறந்தபாலுந் தாவுமோமுலைக் காம்பு(இனி)

இடையிலிருக்குமிந்த இடும்பன்கடம்பன் சரி
இவர்களல்லாமலிதோ இருப்போர்கள்சிறு நரி
கடையிலிருப்பேன்மஹா நல்லவனுனக் கரி
நானுனைச்சேர்ப்பேனென்று நம்பாதே பரி கரி.(இனி)

வசனம்.

என்று சொல்லிய வேதியருக்கு, நந்தனர் மிகுந்த தாழ்மையோடும் எழ்மையோடுஞ் சொல்ல, வேதியருக்குக் கோபம்வந்து 'திருட்டுவேடங்கொண்ட முரட்டுப்பயலே' என்று மறுபடியுஞ் சொல்லுகின்றார்.

ராகம்-அஸாவேரி; தாளம்-ஆதி.

பல்லவி.

திருட்டுத்தனம் மாத்ரம்வேண்டா மடாவுனக்கு
திருட்டுத்தனம் மாத்ரம்வேண்டாம்.

அனுபல்லவி.

முரட்டுத்தனமாய்ப்பேசாதேயிர் மூடா
முன்னும்பின்னுமறியாக்குடி கேடா
வரட்டுத்தவளைபோல்வா யாடாதே யேடா
வயலைமுழுதுஞ்சீர்ப்படுத்திடப் போடா

சரணங்கள்.

புத்தியுள்ளவனுகப் பாரு-ஏர்கொண்டுழுது
புன்செய்நிலமுழுதுஞ் சீரு-செய்துவிதைத்து

வைத்திடினம்போற்குடி யாரு-இருப்பார்களுன்
ளைத்துதிப்பார்சகல பேரும்
சத்தியமாகக்குண்டைகளைநீ கூட்டி
சார்ந்ததற்குவாயாரநீர் ஊட்டி
சத்தியுள்ளமட்டுக்குமே ரோட்டி
தக்கவுன்றன்றிறமதுமிகக் காட்டி
மற்றுமற்றனைத்தனைத்து முடிவுற
மெத்தமெத்தசித்த மொத்துச்செய்குவாய். (திருட்டு)

பட்டாங்குனக்கேதடா பாவி-என்சொந்தமான
பழனங்களுமீடேறத் தேவி-பூசைபுரிந்து
பொட்டெனப்பதம்பணிந்து சேவி-இதைமறந்தால்
போக்குவேனேயுன்னிட ஆவி
சுட்டமாகவுன்சமர்த்தைக் காட்டாதே
சரணமென்றுநண்ணீரை ஒட்டாதே
தட்டுவனேகைமிஞ்சி நீட்டாதே
சலசலப்புக்கஞ்சிநரியோட மாட்டாதே
விட்டுவிட்டுவிட்டுவிட்டு விடுவிடு
கெட்டுகெட்டுகெட்டுகெட்டுப் போகாதே. (திருட்டு)

பாயுஞ்சலமுழுதுங் கட்டி-பதனமாகப்
பழையவெருவெடுத்துக் கொட்டி-சேறுபோலாட்டி
தோய்ம்நடமுதலுக் கட்டி-வாராமற்செய்து
சொன்னலனுப்பிவிடேனே மட்டி
காயமுள்ளபோதே நீ தான் அட
கர்த்தன்றன்னைக் காணப்போய்வரலாம் நட
ஏய்த்துவிட்டுப் போகவிடமாட்டேன் அட
யேத்துமாதிரைக்கனுப்பேனே நட

ராயன்ராயன்ராயன்ராயன் சாட்சியாய்
தீயன்தீயன்தீயன்தீயன் உனைவிடேன் (திருட்டு)

வசனம்.

இதுவும், வேதியர் சொல்லுகின்றார்.

விருத்தம்.

வானிருந்த விடந்தேடிக் காணாமல் மாதவத்தோர் மதிமயங்கத்
தேனிருந்த செந்தாளைச் சிந்திப்பார் புந்தியுறத் தெளிந்தாரில்லை
ஊனருந்தும் புலையாநீ சிதம்பரத்தே சென்றாலு முண்டோமுத்தி
தானிருந்த விடம்விட்டுப் போகாமல் சஞ்சலத்தைத் தள்ளுவாயே.

வசனம்.

அடா, வாடா, மூடா, கேளடா, என்னைப்போலொத்த பெரியவர்களாலே கூடத் தேடி அறியப்படாத செகதீசனுடைய திவ்விய நாமத்தை நத்தையுறிஞ்சும்பறைபா நீ கத்திக்குலைக்கலாமா, இப்படிதத்திக்குதிக்கலாமா, வித்தையொன்றுமறியாதவனிங்கே பக்தி பண்ணலாமா, நத்தி முக்தி தேடலாமா, சுத்தமான பெரியோர்களிடத்தே சத்தம் போடலாமா, இங்கே நித்தம் நாடலாமா, வியர்த்தமான இந்த செனமமெடுத்தும் ஸித்தி தேடலாமா, அங்கே புத்தி செல்லலாமா, அடடா இதையெல்லாம் விட்டுவிடடா, நாற்றைப் பிடுங்கி நடடா, பண்ணைத் தொழிலைத் தொடடா, தோல்கட்டிய தடியையெடடா, யாருந்திருடாமல் பார்த்திரடா, களத்தில் படடா, காவல் கொடடா, புல்லறடா, முாடா, வழிதெரியாக் குருடா, நான் சொல்வது நேரடா, இதடா உன்செய்கையென்று கல்லாலெறிந்து, தடியாலடித்து, வாயால் திட்டி,

தேள்போலே கொட்டி, இவரொரு ஆள்போலே நின்றார்.
நந்தனர் நாள்போகுதே யென்றார்.

வசனம்.

நந்தனர் வேதியரைப்பார்த்து நீங்களென்னை அடிக்கலாம் நானும் அடிபடலாம், தங்களுக்குக் கைநோகுமே யென்று வணங்கிச் சொல்லுகின்றார்.

ராகம்-பேஹாக் ; தாளம். ஆதி.

பல்லவி.

அடித்ததுபோதுமையே-என்னை-அடித்ததுபோதுமையே.

சரணங்கள்.

அடித்தாலும்உங்கள் கைவலி யாதோ
அடிமைவேலைசெய்யும் என்னுடன் வாதோ
படித்ததெல்லாம் என்மனத்திற் படாதோ
பாவியெனக்கும் இனிமேல்தெரி யாதோ(அடித்)

நல்லவரேயுங்கள் மனத்தின்பிர காரம்
நடக்காமலிருந்ததுமே அப சாரம்
சொல்லத்தெரியுமோ வெனக்குப சாரம்
சுகிர்தசாலியுங்க ளாலேயிந் நேரம்(அடித்)

வசனம்.

நந்தனர் ஐயருக்குத் தலைவணங்கிச் சொல்லுவார்.

### கண்ணிகள்.

ராகம்-மோஹனம் ; தாளம் த்ரிச்ர ஏகம்.

இலவுகாத்தகிள்ளை யாச்சே - நான்
எடுத்துச்சொன்னதெல்லாம் போச்சே
பறையன்சொல்லுபழு தாச்சே - நீங்கள்
பார்ப்பாரென்பதுமே லாச்சே
ஏழைச்சொல்லம்பல மாச்சே - தெய்வ
மில்லாமலெங்கையோ போச்சே
சேரியேசொர்க்கமென் றாச்சே - தில்லைச்
சிதம்பரமென்பது போச்சே
விழலுக்கிறைத்தாற்போ லாச்சே - எந்தன்
வேண்டுதல்வீணாகிப் போச்சே
கண்டதைக்கண்டிட லாச்சே - நல்ல
காலம்பிறக்காமற் போச்சே.

---

### வசனம்.

நந்தனார் பெரியோர்கள் கோபத்தை இனி எளியேன் தாங்கேனென்று சொல்லுவார்.

### லாவணி.

ராகம்-ஜஞ்ஜூடி ; தாளம்-ஆதி.

பெரியோர்சினமடையா ரடைந்தாற் பெருங்கடல்தீயாதோ
பேயன்தாங்குவேனோ இம்மாத்திரம் பிழைபொறுத்தாளுமையே
அல்லும்பகலும் நானறிந்ததுமேதோ வறியாமல்போனேன்
ஆசைகொண்டேன்திரு வம்பலத்தெய்வம் மோசஞ்செய்யுதையே

பாவியெனைத்தொடர்ந் தடித்தாலுமெந்தன் பாழ்வினை தீராதோ
பார்தனில்பேர்சொல் லாதவனென்றே படைத்ததுபோதாதோ
சிங்கம்பொசித்திடு மிறைச்சியைவேறொரு செந்நாய்தொடலாமோ
சிதம்பரம்நான்தொட லாமோசாதியில் சின்னவனானன்றோ
இன்னமும்சிதம்பரம் போவேனென்று யிங்ஙனேவருவேனோ
இம்மட்டும்போது மையேதய விருந்தா லதுபோதும்

## விருத்தம்.

சேரி வந்தவர் செவ்விய வேதியன் சினத்தால்
காரிரு ளடர்ந்திடுஞ் சோலையி னின்றவன் கருத்தில்
ஏரு லாவிய பரமனற் றூண்மல ரிறுத்தித்
தீர னாகிய நந்தனு மிப்படித் திகைப்பான்.

## வசனம்.

நந்தனார் தம் ஐயருக்குத் தலைவணங்கிப் பெரிய கும்பிடு போட்டுப் பிறகு ஒரு சோலையிலிருந்து சமாதி செய்து கலந்தபின், தமது சரீரத்தைத் தில்லைவெளியிலே கலந்துகொள்வேனென்று வீர வைராக்கியத்துடனே சேரியில் வராமல் தம் துயரங்களையெல்லாம் அம்பலவாணருக்கே ஒப்புவித்துச் சலுகைகொண்டாடிச் சொல்லுவார்.

## விருத்தம்.

வேதியரிப் படிசொல்ல வெந்துமனம் வேறாகி வினையோவென்று
சாதியிலே பாவமிது நீயன்றோ பிறப்பித்தாய் சுவாமியென்னைச்
சோதனையோ செய்கின்றா யெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்த்தோய்ந்திருக்
ஆதிகுரு வலவோநீ பார்ப்பானுக் குள்ளிருந்து மனுப்புவாயே. [கும்

கண்ணிகள்,

ராகம்-சௌராஷ்ட்ரம்; தாளம் ஆதி.

பல்லவி.

ஐயாவுன்னடைக்கலம் பொய்யாகும்தேகமிதை
மெய்யாக்கிவிடமனம் நையாதிருப்பதேன். (ஐயா)

அத்தானுன்வருவேனோ அம்பலத்தைப்பெறுவேனோ
சற்றாகிலுங்காண்பேனோ சந்நிதியில்தொழுவேனோ (ஐ)

விருத்தம்.

தாறி லாதவிப் பிறவியைத் தானெடுத் தஞ்சி
நூறு பட்டனற் கீழ்க்குல மாகியித் துன்பம்
நீறு பட்டிடு மல்லவோ தில்லையி னின்றால்
பேறு பெற்றிடு வேனதற் கும்மொரு பிசகோ.

கண்ணிகள்.

ராகம்-எதுகுலகாம்போதி; தாளம்-சாபு.

பல்லவி.

ஐயோதெய்வமே யிந்த வையர்க்கடிமையானேன்
செய்யாவினை செய்தல்லவோ
உள்ளங்கரைந்துருகி யுய்யும்படிகேட்கில்
கல்லுங்கரையு மல்லவோ
ஆலைக்கரும்பதுபோ லாச்சுதங்கமுழு தும்
வேலைக்கிடமு மில்லையே
பாவியெனக்கோவந்த பார்ப்பான்மன திரங்கான்
ஆவிதவிக்குதல்லவோ

கோவில்கும்பத்தைக்கண்டால் கோடிவினைகள் தீரும்
பாவிக்குக்கிடையாதுகாண்
தில்லையம்பலவாண தெய்வம்புலையர்க்காக்
கல்லாச்சமையலாச்சுதே
பொன்னம்பலவாவுன்னைப் போற்றும்வகையில்லாமல்
இன்னம்பிறவியேறுமோ
அன்னைதந்தையும்நீயென் னாவிபொருளும்நீயுன்
சந்நிதிவரச்செய்வாயே.

விருத்தம்.

அடிமுடி யொன்று மில்லா வம்பலத் தரசே யுன்பால்
கொடியனான் வந்தா லென்ன குறையுமோ வதனால் நீதி
கடலைசெய் பார்ப்பான் கையில் நடுங்கவோ விடுத்தா யென்றும்
படிமிசை வீழ்ந்தா னாடிப் பதறுவான் கதறுவானே.

லாவணி.

ராகம்-நவரோஜ்; தாளம்-ஆதி.

பல்லவி.

செய்யுமுபாயமறியே னறியேன்

அனுபல்லவி.

அரகரசிவனே தில்லைச்சிவனே.

சரணங்கள்.

பத்துவருட காலமாகவந்து பார்ப்பானைக்கேட்டேன்
சித்தமிரங்கிப் போய்வாவென்றொருநல்ல சேதிசொல்லக்காணேன்
[ஐயோ (செய்யு)

பாவிபுலைபனுய்ப்பிறப்பேனே யிந்தப்பாரினிலிருப்பேனே
ஆவிதவிக்குதேஅம்பலவாவுன் னடிக்கமலங்காணேன்ஐயோ (செய்)

பல்லுமுளைத்தநாள்முதலாகவிந்தப் பாடுகள்படுவேனே
தில்லைநாயகா கனகாவென்றுனைத் தெரிசிக்கவகைகாணேன்ஐயோ (செய்)

நாற்பதுவேலிநிலமிருக்கிறதை நடுகவேணுமென்றார்
காப்பதார்களைபிடுங்குவதாரென்று கடிந்தபேச்சுக்கடியேன்ஐயோ (செய்யு)

ஆற்றிலேகுளத்திலேவிழுவேனென் றவதைப்பிடித்திழுத்திடுவேன்
பார்த்தினிக்ருபைசெய்யாவிடிற்பறையன் பழிவீண்போகாதுசொன்
[னேன் (செய்யு)

தில்லைச்சிதம்பரத்தைக்காணுவிடிலென் தேகந்தரியாது
சொல்லிவிட்டேன்பொன்னம்பலவாவுன் சொர்னசபைக்குவருவேன்
[நானே—(செய்யு)

## விருத்தம்.

கடுவ ருந்தியும் பணிகல னாகவுங் கற்றைச்
சடில மேவிய பிறைபுனற் றரிக்கவுந் தகுமோ
விடுவ தில்லையுன் னருகினிற் றூனொரு வேங்கைக்
கொடியன் வந்ததி னலென்ன தில்லையிற் குறையோ.

மாவ ளர்தில்லை மாநகர் வீதியு மதிலும்
கோவி லுந்திருக் கூட்டமுங் கண்டுகண் குளிரப்
பாவி யாகினேன் காயத்தை யேதுக்குப் படைத்தாய்
ஆவி தானிருந் தும்பர கதிபெற வறியேன்.

ஆதி நாண்முதற் றவம்பெறு மாமுனிக் காக
நாத மோங்கவே நாடகம் புரிந்திடு நாதன்
பாதம் போற்றியெந் நேரமும் பணிந்திடு நந்தன்
வதந் தீரவே கனவினி லீசனும் வந்தார்.

### வசனம்.

நந்தனர், தில்லைத்தலத்தைக் காணாத சென்ம மிருந்தா லென்ன போனாலென்ன வென்று நிச்சயம்பண்ணி மனதுருகி வாடும்வேளையில், கொஞ்சம் நித்திரைபோற்கண்டு அந்நித்தி ரையில் அம்பலத்தேவன் வந்துசொல்லுவார்.

ராகம்-காம்போதி ; தாளம்-ஆதி.

### பல்லவி.

கனவினில் கண்டாரே-நந்தனர்-கனவினில் கண்டாரே.

### அநுபல்லவி.

மனதிலெப்போதும் வருந்தியடிபணியுங்
கனகசபேசனைக் கண்ணினாற்காணாமல் (கனவி)

### சரணங்கள்.

நீநடுங்கழனிகள் நானடச்சொன்னேன்
ஊனமில்லாமலுன் னுடையவன்களிக்க
மானிடப்பிறவியி லுனக்கிணையார்பத்தி
மானில்லையெனத்தில்லை நாதன்வந்துரைக்கவே (கனவி)

கங்குல்பகலாய்மனம் களித்துஉள்ளன்பதனால்
சங்கரனேயென்று சாரும்நிலையதனால்
அங்கம்புளகிதமாய் ஆனந்தித்தேனதனால்
இங்கேவந்தேனென்று யீசனும்புகல. (கனவி)

### விருத்தம்.

அறிவுமிகுந் தாற்றலுடன் சிவபெருமான் பெயர்சொல்லி யாற்று நாவிற்
கறைமருவு மிடற்றழகன் றனதடிமை வெறியகலக் கனவில் வந்து [ல்
குறையறவே கழனிகளை நடச்சொன்னே முனக்குவிடை கொடுக்கோ
[னென்ற
மறையோது மவர்க்குரைத்து நீவிரைந்து வாவென்று மன்றுட்சென்
[ருர்.

## நந்தனர் கனவில் நடேசமூர்த்தி சொன்ன

### வசனம்.

நம்முடைய நந்தனரே! உம்முடைய கழனிகளை நமது பூதகணங்களாலே நடச்சொன்னோம். வேதியருக்குக் காட்டினல் உத்தாரங் கொடுப்பாரென்று சொல்லித் தான் அம்பலத்தே சென்ருர்.

நந்தனர் - நித்திரைநீங்கி வயல்களைக்கண்டு சந்தோஷமடைதல்.

### கண்ணிகள்.

ராகம்-ஆனந்தபைரவி ; தாளம்-ரூபகம்.

களையெடாமல்சலம்விடாமல் கதிரொருமுழங்காணுமாம்
களிக்குதுபயிரிருக்குது அதைக் கட்டுகட்டவேதோணுமாம்
பழுதிலாமலேரிகுளங்கள் பள்ளமேடுதண்ணியாம்
பரமசிவனைப்பணியும்நந்தன்பயிரிடுந்திருப்பண்ணையாம்
கனவில்வந்துஉருவுமாகி கருணைமாரிகண்டவன்
கடுகிநடந்துவேதியரிடங் காணவென்றுசென்றனன்

### வசனம்.

நந்தனர் வேதியரைத் தங்கள் நன்செய்நிலத்தைப் பார்க்க வரவேணுமென்று கேட்டுக்கொள்ள, வேதியர் இவ்விதம் நினைத்துச் சொல்லுவார்.

## விருத்தம்.

அய்யரே வாருமென்று அழைத்திடும் நந்தனாரைத்
துய்யவே தியருங்கண்டு தொல்புவித் தெய்வமெல்லாம்
பொய்யது வென்றுதள்ளிப் புலையனும் வந்தானென்று
செய்யவேண் டியதுசெய்யச் செப்புவா னெப்புவானே.

## வேதியர் சொல்லுதல்.

ராகமாலிகை-வராளி ; தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தாவுனக் கிந்தமதி வந்த தென்ன தந்த தாரடா

அநுபல்லவி.

அந்தரங்கஞ் சொந்தமா யிருந்தது மறந்து போய்
விந்தையாய்வினை நந்தன்றோ அந்தவேளை புத்தியில்லை-(நந்தா)

சரணங்கள்.

தோடி.

கொல்லைக்காட்டு நரிபோலே பல்லைக்காட்டிப் பேசுவாய்
கல்லைக்காட்டிக் கோபங்கொண்டு சொல்லைக்காட்டி யேசுவேன்
தில்லையென்று சொன்னதெல்லா மில்லையென்று போச்சுதா
கல்லேயென்று ஐயர்சொன்ன சொல்லேவிச மாச்சுதா
சித்தமுந் தெளிந்துதா உற்றது வுணர்ந்துதா
பத்தியுந் தொலைந்துதா கத்தலும் பறந்ததா
சட்டம்-சட்டம்-நல்லது-நல்லது மெத்த-மெத்த-சந்தோஷம்-(நந்தா)

மத்யமாவதி.

இப்படிஅப்படி சொல்லாதே தப்பெடுத் தடிப்பையா
சொற்படி யொப்புதலாக மெய்ப்படிநடப்பையா

கள்ளக்கும்பிடு தள்ளடா காரியங்கைக்கொள்ளடா
எள்ளுக்கொல்லை காரடா யெங்குஞ்சுற்றிப்பாரடா
தெய்வமென்பது குற்றம் தெளிந்துபாரு சுற்றம்
கையைக்கொட்டு சத்தம் கண்டுகொள்ளு நித்தம்
ஊணுறக்கமே யின்பம் ஊனிழந்தாலே துன்பம்
சாண்வயிற்றுக்கு அன்பு சாதிமுறைமை வம்பு
ஓகோ-பலே-பலே சபாசு-கண்டுகொண்டாய்-(நந்தா)

## கேதாரகௌளம்.

சூதாடித் தோற்றவன்போல் வாதாடி நிற்பதற்கு
வேதாந்த சாஸ்திரங்கள் காதாலே கேட்டிருந்தும்
என்னகாரியம் அதிலென்ன வீரியம்-தள்ளு-தள்ளு-(நந்தா)

## புன்னாகவராளி.

தில்லையென்பது காட்டிலுண்டு கேட்டதில்லையா
தேகப்பட்டால் புண்ணாகும் பார்த்ததில்லையா
அம்பலமாவது ஆகாச முற்றுப்பாரு
அருளில்லை பொருளில்லை கண்டுசேரு
பத்தியென்றுஞ் சித்தியென்றும் வெற்றியென்றும் முத்தி
[யென்றும்
இத்தனைநாள் கற்றகலை அத்தனையும் பித்தமாச்சு
மாறுபாட்டுக்காரன் வார்த்தை கூறுபடுமோ
தாறுமாறு பேசினதால் சோறுபோடுமோ-(நந்தா)

## நாதநாமக்கிரியை.

எல்லாம்முழுப் புரட்டு வல்லான் வகுத்தவழி
செல்லாதே சும்மா நில்லாதே
காரியத்தைப் பாரடா உனக்கிணை யாரடா
காசுபணஞ் சேரடா இதுநல்ல வூரடா-(நந்தா)

## மாஞ்சி.

கஞ்சிகூழ குடித்தாலும் பஞ்சமில்லையே
கொஞ்சமிருந்தாலும் போதும் சஞ்சலமென்ன-(நந்தா)

## மத்யமாவதி.

சம்பாநெல்லிருக்குனக்குத் தாரேன் ஒற்றைச்
சல்லாகிழித்துனக்குத் தாரேன் ஒற்றைக்
கண்டாங்கிச் சேலையொன்று துண்டாய்க்கிடக்குதுந்தன்
பெண்டாட்டிக்குக் கொடுத்து நன்ருக வாழ்ந்திரு-(நந்தா)

## புன்னுகவராளி.

துண்டுவெட்டும் பாகத்தினிற் கண்டைவெட்டிப் பேர்த்தையா
கண்டனடிக் கட்டளையில் முண்டிருக்கு பார்த்தையா.(நந்தா)

## மோஹனம்.

காணியில்லாதவனொரு மாணியில்லாதவன்போலே
தோணினுலுந்தோணுது கோணிநடந்தாலுமென்ன
பெண்டாட்டியில்லாச் சுகமெவ்வளவுமனங்
கொண்டாட்டங்கொள்ளா ததைச்சொல்லவோ.(நந்தா)

## ஆ ர பி.

எருவிட் டுழுதவயல் மறுவிட்டுத் தேவையில்லை
எதுவெட்டி னுலுந்தாங்குந் திருவிட்டுப்பார்க்கவேணுந்துரையே
நிலம்பாராத பேர்கட்குப் புரைியே யிதுவல்லாமல்
வேறேயுண்டா யிறையே இந்தவூருக்குளிது நல்லவிரையே-(நந்தா)

## அ ஸா வே ரி.

மூலைக்கால் விளைந்ததானல் சேலைக்குக் காணும்உனது
கூலிக்குக் காணும்குழந்தை பாலுக்குக் காணுமல்லவோ
ஊருக்குளிந்தநிலஞ் சப்பையயேநீ வாரிவிடவேணுமிந்தக்குப்பையயே()

அஸாவேரி.

வாரிகாலைச் சுற்றிப்பாரு கோரையைப் பிடுங்கிமே
தேரியை யுழுகச்சொல்லு வீரியை நடுகச்சொல்லு
செட்டியார் குளத்தருகே முட்டிருக்கப் பேர்த்தையா
வெட்டியா னகத்தருகே திட்டிருக்கப் பார்த்தையா-(நந்தா)

புன்னாகவராளி.

எல்லா முனதுபொறுப் பெல்லா முனதுசுக
மல்லாமல் வேறே கதியில்லை இல்லை
கட்டியடிக் கட்டளையில் விட்டதுமுளைத்ததா
பொட்டைத்திடல் குட்டையிலே நட்டது பலித்ததா
காடுவெட்டி நஞ்சைபண்ணு மாடுகட்டி வைக்கோல்போடு
பாடுபட் டுழைத்தாலன்றோ வீடுகட்டி வாழலாம்-(நந்தா)

---

வசனம்.

இப்படிச் சொல்லும் வேதியரைப் பார்த்துப் பிறகும் பண்ணையைப்பார்க்க வாருமென்று நந்தனார் கூப்பிடுவார்.

விருத்தம்.

பண்ணை யாவையும் பாருமென் றழைத்திடப் பரிந்து
கண்ணு லாவிய வேதியன் களிப்புற நந்தன்
பண்ணு லாவும் பொன் னம்பலக் கூத்தனைப் பரவி
யெண்ணி லாவருங் காதல்கொண் டிருந்தனர் தாமே.

வசனம்.

கேவலமாகிய நீசன் சிவகணங்களாலே ஒரு இராத்திரியில் நடவுநட்டு அறுப்பறுக்கும் வயலை வேதியர் கண்டு ஒன்றுந் தோன்றாதவராகி யுலகவாசனையற்று நின்றார்.

### வசனம்.

நந்தனர் அம்பலவாணனைக் கொண்டாடிக் கூத்தாடுவார்.

### கட்கா.

ராகம்-நாதநாமக்கிரியை; தாளம்-ஆதி.

### சரணங்கள்.

நந்தனனந்தபரிதமானர் நந்தனரும் ஆனந்தமாகினர்
சொந்தமானவயல்வந்து பார்க்கையில்
விந்தையாச்சுபவபந்தமபோச்சுது
சிந்தைதீரவேயந்தரங்கத்தில் (நந்தன)

நீசசாதியென்றுயேசிப்பேசுமிந்தத்
தோஷிவேதியனுமாசையாகவே
தேசமேற்றுந்தில்லைவாசமாகுநட
ராஜமூர்த்திக்குத்தாசனென்றுவரும் (நந்தன)

வாரும்வாருமிதைப்பாரும்பாருஞ்சிவ
ரேவந்துசெயுங்காரியங்களிது
பாரின்மீதுளிணையாருமில்லையென்று
ஊரினுள்ளபெரியோருஞ்சொல்லச்சொல்ல (நந்தன)

சித்தமீதிலொரு குற்றமேதுமில்லை
சுத்தமானவிதயத்திலுள்ளசிவ
பத்திபண்ணிவெகுசித்தியாகிவர
முத்திதேடிவருபத்தனென்றுசொலும். (நந்தன)

---

### வசனம்.

வேதியர் நந்தனரைப்பார்த்துச் சிவபக்தரை அபசாரம் பண்ணினேனென்று மிகவும் குழைந்து சொல்லுவார்.

ராகம் - பேகடா; தாளம் - சாபு.

### பல்லவி.

நந்தனரேயுன்றன் பெருமை யின்றுகண்டேன்
நானென்வினையை விண்டேன்.

### அநுபல்லவி.

விந்தையைக்குறியாமல் விழலனறியாமல்
வீம்புக்குக்கச்சுக்கட்டி வீசினேனென்னையாளும் (நந்த)

### சரணங்கள்.

அறியாமனத்தினாலே யேதேதோபேசியுன்றன்
அருமையைத் தெளியாமற்போனேனே மெத்த
சிறியோர்செய்தபிழை பெரியோர் பொறுப்ப ரென்று
செப்பும்வார்த்தையுமக்கே கனவானே இந்த
முறையுணர்ந்தோர்க்கென்ன தான்சொல்லத் தோணும்
மூடன்மேற்கிருபைவைத்து முழுதுங்காத்திட வேணும்
நிறைவுற்றவருட்பெற்றோர்க் கேதுசிகராங் காணும்
நிலைக்குமுன்னடிவணங் காதோன்வந்துய்ய வேணும் (நந்த)

நேற்றுப்பொழுதளவுஞ் சும்மாவிருந்ததிந்த
நிலங்கள்முற்றும்பயிர் கள்முளைத்துக் கதிக்கச்
சாற்றுங்கதிர்கள்முற்றிச் சாய்ந்து அறுவடைக்கும்
தக்கதாயிருக்குதே மிகக்கிளைத்து உமது
ஆற்றல்தனக்குநிக ராவாரோ யாவரும்
அய்யாவுனதுநல்ல வருளால்நலமே பெரும்

நாற்றிசையோர்களும் நாடிப்பணிய வரும்
நாயேன் களிக்கமனம் நயந்துகிருபை தரும் (நந்த)

குண்டைகளுங்கலப்பைக் கோலுங்காரும்விதையும்
கொட்டத்திலிருக்கநீர் செய்தீரோ அந்த
அண்டர்பணியுந்தில்லை யாண்டவனே யுமக்கு
அடிமையாளாகிவந்து செய் தாரோ
துண்டத்தனத்தாலென் றுண்டுக்கும்மைக் கொண்டேன்
தொல்லுலகத்துள்ளோர் யாருமேசக் கண்டேன்
தொண்டனுனேனுமக்குத் தோதகங்களை விண்டேன்
சொல்லும்பணிகள்செய்து சுகப்படத்துணி வுண்டேன். (நந்த)

---

வசனம்.

என்று வேதியர் நந்தனுரைப்பார்த்துச் சொல்லிப் பின்னுஞ் சொல்லுவார்.

விருத்தம்.

கறைபடுங் கண்டன்றனைக் கருத்தது பெறவே நோக்கி
குறையறும் நந்தனுரைக் குலமது கீழென் றெண்ணி
மறைபுகல் பெருமையாலே வருத்தினேன் கொடியனென்று
இறைபடு மனம்போலஞ்சி யேங்கியே யாற்றுவானே.

கண்ணிகள்.

ராகம்-புன்னுகவராளி; தாளம்-ஆதி.

குத்தமெத்தனைசெய்த போதிலுமுந்தன் சித்தத்தில்நினையாதே-சிவ
பத்தனென்றறியாமல் பதறிவார்த்தைகள்சொன்ன பாவந்துலையாதே
புலையர்கள்பரகதி தேடும்படியவர் புண்ணியஞ்செய்வாரோ-உன்னைக்
கலிதீரக்கண்ணாரக் கண்டபேர்களெல்லாங் காட்சிபெறுவாரோ

உருவமனதறிய வொருவனுலாகாதென் றுலகம்மொழியாதோ-அது
திறமாச்சுதினியுந்தன் ஜன்மசபலமாச்சு தெய்வமுமிரங்காதோ
ஜாதியிலிழிகுலஞ் சாஸ்திரங்கிடையாது சந்தேகப்படலானேன்-இப்போ
ஆதிசிதம்பர ரகசியம்பாரென்று யனுப்பிவிடலானேன்.

வசனம்.

இப்படி வேதியர் மிகவும் பரவசமடைந்து நடந்த வரலாற்றைக் கேட்க, நாளைப்போவார் கனவிலே ஈசன் வந்து கருணை செய்தாரென்றார். அதற்கு வேதியர் சொல்லுகின்றார்.

ராகம்-யமுனாகல்யாணி ; தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தா வுன்கனவினி லெப்படிவந்தார்
வரந்தந்தாரெந்தாய். (நந்தா)

சரணங்கள்.

சந்ததமும்சன காதிமுனிவர்தொழுஞ்
சச்சிதானந்த மூர்த்தியல்லவோ (நந்தா)
ஆதிமுடிவுகிடை யாதபராபரஞ்
சோதியலவோநீச சாதியென்றறிந்தும் (நந்தா)
அண்டரண்டநிறை கின்றசபாபதிக்
கொன்றும்பேதமில்லை யென்றுதெளிந்தே. (நந்தா)

வசனம்.

வேதியர் தான் செய்த பிழையெல்லாம் பொறுத்துக் கொள்ளுவீரென்று சொல்வதும், நந்தனார் மறு உத்தரங் கூறுவதும்.

## தண்டகம்.

ராகம்-எதுகுலகாம்போதி; தாளம்-ஆதி.

வேதியர் - ஏழைப்பார்ப்பான் செய்திடும்பிழையை
யேற்றுக்கொள்ளாதே — நான்
இனமறியாதவன் பின்புத்திக்கார
னென்பதுவும் பொய்யோ.

நந்தனார் - பொய்யாகியவிந்த வுலகத்தைப்பார்க்கும்
புண்ணியவானே — நான்
புலையனுங்க ளடிமையல்லவோ
புத்தி சொல்லுமையே.

வேதியர் - புத்தியுண்டு வித்தையுண்டு
பக்தி கிடையாது — வாயால்
புலம்பினாலென்ன மனமடங்காது
போதங் கிடையாது.

நந்தனார் - கிடைக்குஞ்சிதம்பர தரிசனமென்று
கிருபை செய்யு — மையே
கீழ்க்குலமல்லவோ நாயினுங்கடையேன்
கீர்த்தி செய்விப்பீரே.

## வசனம்.

பரமபக்தனுகிய நீ எனக்கு அடிமைவேலை செய்பவன் போல் வந்தபடியினுலே என் பிறவிப்பிணி யொழிந்த தென்று வேதியர் சொல்லுகின்றார்.

### அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

அவப்பொழுது போனதன்றி மறைமுடிவை
　　யுளங்கனிய வறிவி லுன்னித்
தவப்பொழுதுங் கணப்பொழுதுங் கண்டறியாப்
　　பாவியெனைச் சார்ந்தா ரன்றோ
சிவக்கொழுந்தி னடிமையென்று பெயரிட்டு
　　வேலைகளைச் செய்த தாகப்
பவக்கடலைக் குளப்படிபோல் தாண்டிவரச்
　　செய்ததுன்றன் பக்தி தானே.

### ஆனந்தக்களிப்பு.

ராகம் - நாதநாமக்ரியை; தாளம் - மிச்ர ஏகம்.

நந்தா நீசிவ　　　　பத்தன்-உன்னை
　நம்பாமலேமோச மானேனுன் பித்தன்　　(நந்தா)

பூமிக்குள் நீயொரு　　　சித்தன்-இந்தப்
　பூமிக்குநானொரு சாஸ்திரப்ர　　சித்தன்
காமிக்குள்ளே வெகு　　　மத்தன்-உன்னைக்
　கண்டுதரிசித்தோ ரனைவரு　　முத்தன்　　(நந்தா)

படித்துமென்ன வெங்கள்　　வேதம்-அதில்
　பார்த்ததில்லையிந்தபகவனற்　　கீதம்
எடுத்துச்சொன்னாய் சிவ　　போதம்-அது
　எற்காமற்போச்சுது யென்பிடி　　வாதம்　　(நந்தா)

தெவிட்டாத சோகமப்　　பாநீ-உன்றன்
　தேகமுழுதிலுஞ் சிவன்றிரு மேனி
பகையாகிய வொரு　　　கூனி-போலே
　பழுத்தேனானலுநீயே யாத்ம　　ஞானி　　(நந்தா)

பவசாகரந்தாண்டிச் சென்ருய் உள்ளே
பார்த்துணர்ந்துபர மானந்தங்-கொண்டாய்
தவமாமுனி போலே நின்ருய்-தில்லைத்
தாண்டவராயனைக் கண்ணுல்நீ கண்டாய். (நந்தா)

---

வசனம்.

இப்படி வேதியர் சொல்லும்போது, நந்தனர் மனம் நொந்து கைகால் நடுங்கி ஐயரைச் சுற்றிவந்து தலைவணங்கி எனக்கு அன்னங் கொடுத்து ஆடையளித்து இத்தனைநாளுங் காப்பாற்றின பெரியவரே உங்களுக்கடிமைவேலை செய்யுமென்னை இப்படிப் பெருமையாய்ச் சொல்லவேண்டாமென்று சொல்லுகின்ருர்.

ராகம் - கல்யாணி ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஐயா சொல்லு வேனே-உம
தடிமைப்பறையன் தானே.

அநுபல்லவி.

மெய்யாகவேயிந்த மேதினிவாழ் வோர்கள்
வேலைசெய்யூழியர் தம்மையோதாழ் வார்கள். (ஐயா)

சரணங்கள்.

வேம்புக்குயர்ந்த மதுரங்கள் பூட்டினும்
வீறுமதன்குணம் மாருதெந் நாட்டினும்
ஆம்புத்திக்காரனென் ருலேயாவ துண்டோ
அய்யனருளையல் லாமலும்வே றுண்டோ(ஐயா)

மேவுங்கீரைத்தண்டு மேருவைத் தாங்குமா
வீசுங்கதிர்முன்மின் னும்பூச்சி யோங்குமா
ஆவதழிவதெல்லா மையன் றன்னாலே
ஆச்சுதென்றாலென்ன வாச்சுது யென்னாலே(ஐயா)

முன்னமேசெய்தவினை யின்வ சத்தாலே
மூடப்புலையனாய் மேவி யதனாலே
இன்னல்படுவதுட னின்னமும் வேண்டாம்
ஏந்திக்கொள்ளுமென் றெனைக்கெடுக்கவேண்டாம். (ஐயா)

---

வ ச ன ம்.

நந்தனார், தனது ஆண்டையாகிய வேதியரைப்பார்த்து தங்களுடைய திருவாக்கினால் என்னையு மிப்படிப் புகழலாமோ வென்று மிகவும் வணக்கமாய்ச் சொல்லுகின்றார்.

ராகம்-ஹமீர்கல்யாணி ; தாளம்-ரூபகம்.

ப ல் ல வி.

சின்னசாதியல்லவோ சிதமபரம்போய் வருகிறேனான் (சி)
அன்னைதந்தையொருவரில்லை யடைக்கலமென்னையாளவேணும் (சி)
ஈரமில்லாதநெஞ்சமாகி யிறைச்சிதின்றுவுடல்பெருத்த (சி)
அல்லும்பகலுமதுவையுண்டு யறிவுமயங்கியாட்டங்கொள்ளும் (சி)

வ ச ன ம்.

இப்படிச்சொல்லிய நந்தனாரைப்பார்த்து வேதியர் சொல்லுகின்றார்.

ராகம்-தேவமனோஹரி ; தாளம்-ஆதி.

ப ல் ல வி.

ஆருக்குத்தான்தெரியும் அவர்மகிமை
அம்பலநாடக மாடியபெருமை.

அனுபல்லவி.

பாருக்குள்மாந்தர்கள் காண்பதுதொல்லை
பதஞ்சலிபண்ணிய புண்ணியஎல்லை.(ஆருக்கு)

சரணங்கள்.

தேவர்கள்பூமழை கொண்டு சொரிந்தார்
சித்தவித்தியாதரர் கண்டு மகிழ்ந்தார்
பாவலர்நாவலர் உள்ளங் குளிர்ந்தார்
பார்வதியம்மனுங் கூட விருந்தாள்(ஆருக்கு)

காதில்குழையது விழுந்தது காட்டார்
கண்டும்அன்பரை விண்டிட மாட்டார்
பாதாளம்நடுங்கவே தாண்டவம் போட்டார்
பக்தியில்லாதவர் தங்களைக் கூட்டார்.(ஆருக்கு)

பாலகிருஷ்ணன்பணிந் தேத்தும் ப்ரதாபம்
பகர்ந்திடும்பேர்க்கில்லை புண்ணிய ப்பாபம்
சீலகுணமருவும் ஞானப்பிர தீபம்
தேவமனோகர மாகிய ரூபம்.(ஆருக்கு)

ராகம்-பைரவி ; தாளம்-சாபு.

பல்லவி.

ஆருக்குப்பொன்னம்பலங் கிருபை யிருக்குதோ
அவனே பெரியவனாம்.

அனுபல்லவி.

பாருக்குள் வீடுகள் மாடுக ளாடுகள்
பணமிருந்தாலவன் பெரியவனுவனோ. (ஆரு)

சரணங்கள்.

வேதபுராணங்க ளோதினதாலென்ன
　　வேலைசூழ்பணிமாத ராலென்ன காரியம்
சாதனையாகவ ராதொருநாளும்
　　மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை பொல்லாது.(ஆரு)

பாணன்மதங்கள டங்கவேசெய்தகோ
　　பாலகிருஷ்ணன்தினந் தொழும்பொன்னம்பல
வாணனென்றுதர வாய்விரும்பாதவன்
　　வானவராகிலுந் தானவன்சின்னவன். (ஆரு)

வசனம்.

சிவபக்தியுள்ளவன் பெரியசாதி, சிவபக்தியில்லாதவன் வேதியனாயிருந்தாலுஞ் சின்னசாதி, ஆனபடியினாலே, திருப்புன்கூரி லுனக்காகப் பரமசிவன் நந்தியை விலக்கித் தரிசனங் கொடுத்ததும், நீ குளம் வெட்டினதும், ஒரு ராத்திரிகாலத்திலே நாற்பதுவேலி நிலமும் நடராஜமூர்த்தியே வந்து நடவுநட்டதும், பார்க்கும்போது நீயே மகா புண்ணிய புருஷனென்று சொல்லவேண்டுமே யல்லாது வேறில்லை. நீ இதுவரையி லெனது வார்த்தையைத் தட்டினதுமில்லை, ஆகையால், எனக்கு நீ குருவாகின்று உபதேசம் பண்ணென்று வேதியர் சொல்லுகின்றார்.

தண்டகம்.

ராகம்-தோடி ; தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தாநீ-குருவுபதேசம்-நவிலிடவேணும்-நான் கடைத்தேற.

அனுபல்லவி.

நொந்தானுன் கதிபெறமாட்டேன்
நோயினும்பிறவிக் கடலிடைவீழ்வேன். (நந்தா)

சரணங்கள்.

மந்தாரப்பூவெடுத்தரனர் மலரடிசாத்தி வாழவென்னறிவு
சிந்தாமல்வரந்தரவேணும் சிதம்பரரகசியந் தெரிசித்திடவே. (நந்)

வைத்தாய்கருணைக்கடலுன் மனதிற்சென்றுநீ நர்த்தனம்புரிந்து
ஒத்தாசைபூதகணங்க ளுரிமையுடன்வந் தூழியஞ்செய்ய. (நந்)

பெற்றாநீபெரி யவனுந்தன் பெருமையைநானறி வேனோமூடன்
நத்தாமல்மோசமதானே னம்பிக்கைசொன்னே னற்கதிபெறவே. (நந்)

கலிவிருத்தம்.

வேத மோடறஞ் செய்திடு நூற்களை மதித்தும்
பூத னாதரி னடியவர், கடுஞ்சின மடையப்
பாத கம்புரிந் தேனென்று நந்தனைப் பரவி
ஏதந் தீரவே வேதிய ருபசரித் திருந்தார்.

வசனம்.

இப்படிச்சொல்லிய வேதியர் வார்த்தையைத் தள்ளப் படாமையால், சுற்றிவந்து தலைவணங்கி ஒரு மூலையை நோக்கி நந்தனர் சொல்லுவதுபோல் சொல்லுவார்.

ராகம்-புன்னாகவராளி; தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயே மெத்தகடினம்-உமக்கடிமை-ஐயே மெத்தகடினம்.

### அநுபல்லவி.

பொய்யாதபொன்னம்பலத் தையாயிருக்குமிடம்
நையாதமனிதர்க்கு வுய்யாதுகண்டுகொள்ளும். (ஐயே)

### சரணங்கள்.

பாலகிருஷ்ணன் பணிந்திடுஞ் சீலகுரு சிதம்பரம்
மேலேவைத்த வாசையாலே காலனற்றுப் போவதென்று
சாத்திரம்-நல்லக்ஷேத்திரம்-சற்பாத்திரம்-ஞானநேத்திரங்-கொண்டு.
வாசியாலே மூலக்கனல் வீசியே சுழன்றுவரப்
பூசைபண்ணிப் பணிந்திடு மாசறக் குண்டலியைவிட்
டாட்டுமே மனமூட்டுமே-மேலோட்டுமே-வழிகாட்டுமே-இந்த
மானுபி மானம்விட்டுத்-தானுகி நின்றவர்க்குச்
சேனுதி பதிபோலே-ஞானுதி பதியுண்டு
பாருமே-கட்டிக்காருமே-உள்ளேசேருமே-அதுபூருமே-அங்கே
சங்கை யறவேநின்று பொங்கிவரும் பாலுண்டு
அங்கமிளைப் பாறிக்கொண்டு தங்கப்பொம்மை போலவே
நில்லுமே-எதுஞ்சொல்லுமே-ஞானஞ்சொல்லுமே-யாதும்வெல்லு
[மே-இந்த
அட்டாங்கம் பண்ணினலும் நெட்டாங்கு பண்ணியது
கிட்டாது கிட்டிவர வொட்டாது முட்டியது
பாயுமே-முனைதேயுமே-அதுவோயுமோ-உள்ளேதோயுமே-வேத
மந்திரத்தி லேபோட்டு யெந்திரத்தி லேபார்க்குந்
தந்திரத்தி லேயுமில்லை அந்தரத்தி லேஅவ
தானமே-அது தானமே-பலஹீனமே-பேசாமோனமே-அந்த
முப்பாழுந் தாண்டிவந்து அப்பாலே நின்றவர்க்கு
இப்பார்வை கிடையாது அப்பால் திருநடனம்
ஆடுவார்-தாளம்போடுவார்-அன்பர்கூடுவார்-இசைபாடுவார்-இதைக்
கண்டாருங் கிடையாது விண்டாருஞ் சொன்னதில்லை

அண்டரண்ட கோடியெல்லா மொன்றாய்ச் சமைந்திருக்கு
மல்லவோ-பறையன்சொல்லவோ-அங்கேசெல்லவோ-நேரமாகுதல்ல
வோ. (ஐயே)

கலிவிருத்தம்.

வான மேவிய வும்பர்கள் வாழ்த்திய மறையைக்
கான மேசெயும் வேதிய ரேயுமக் கடிமை
யீன மாமிழி குலத்தினி லெய்திய நந்தன்
ஞான வாரிகொண் டேயவ ரருளுற நினைந்தார்.

---

வசனம்.

இப்படி நந்தனார் சொல்ல, வேதியர் கேட்டுத் திவ்விய ஞானமடைந்து நந்தனாரைப்பார்த்துச் சொல்லுகின்றார்.

ராகம்-சாம; தாளம்-ஆதி.

பல்லவி.

சிதம்பரம்போய்நீர் வாருமையா நான்
செய்ததெல்லாமப சாரமையா (சிதம்பரம்)

அநுபல்லவி.

சிதம்பரம்போவீர் பதம்பெறுவீர் வேறே
சிந்தனைவேண்டாம் நந்தனேயினிமேல் (சிதம்பரம்)

சரணங்கள்.

எத்திசையிலுமுமக் கிணைசொல்லப் போமோ
பத்தியேமுதலென்று பழகியபெரியவர்
சித்தமுந்தெளிந்தது தெய்வமேநீரென்று
புத்தியும்வந்தது சத்தியமல்லவோ. (சிதம்பரம்)

வசனம்.

இப்படிச் சொல்லிய வேதியரைச் சுற்றிவந்து நந்தனர் தலைவணங்கித் தூர விலகிநின்று அவரை ஆசீர்வதிக்கச் சொல்லுவார்.

ஓரடியிலிரண்டுவார்த்தை.

| நந்தனர். | வேதியர் |
|---|---|
| சிதம்பரதெரிசனங்கிடைக்குமோ | கிடைக்கும் |
| சென்மசாபல்லியமாமோ | ஆகும் |
| பதம்பெறுந்தவநெறியறிகிலேன் | அறிவீர் |
| பரமசிவனருள்செய்வரோ | செய்வார் |
| சாதியில்தாழ்ந்தவனல்லவோ | அல்ல |
| சாத்திரமுறைமைக்குஞாயமோ | ஞாயம் |
| ஆதியம்பலத்தெய்வம்நாடுமோ | நாடும் |
| ஆனந்தமடைவேனையரே | அடைவீர். |

வசனம்.

வேதியர் நந்தனருக்கு ஆசீர்வாதம்பண்ணி யனுப்பிய பின்பு நந்தனருடைய குணாதிசயங்களைக் கொண்டாடுவார்.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அடியவர்கள் மனமிடியப் பேசினதுண் டபராத மனந்த கோடி
படுநரகில் வீழ்வாரென் றெனவுரைக்கும் பாவமது பலித்ததென்று
துடிதுடித்துத் தொடைநடுங்கி நீர்வடித்துச் சிதம்பரத்தே துதிகள் [செய்து
படிபுகழுந் திருத்தொண்டர் குணமெல்லா முலகறியப் பகருவாரே.

இதுவுமது.

சாத்திரக் குப்பையெல்லாந் தள்ளினேன் பதறுபோலே
காத்திரஞ் சுத்தமாச்சு கனிந்திடு முள்ளம்பக்தி
மாத்திர மிருந்தாற்போது மற்றொன்று மில்லைசைவ
க்ஷேத்திர முழுதுஞ்சுற்றிச் சேருவேன் றில்லையென்றார்.

ராகம்-சௌராஷ்ட்ரம்; தாளம்-ஆதி.

பல்லவி.

எந்தநேரமும் நந்தனை சிந்தித்தா
னந்தமாகி யிருந்தன ரந்தணர். (எந்தநே)

சரணம்.

பந்தந்தீரவே யிந்தவுருவாகி
வந்துதோ வரந்தந்துதோசிவனென்று. (எந்தநே)

வசனம்.

விட்டுதோ இந்தவீட்டுக் கவலைகள் பட்டதோ பவசாகரச்சேறழித்திட்டதோ முத்திவெள்ளம் கரைபுரண்டதோ வென்று ஏங்கித் தொழுது எந்நேரமும் வேதியர் இப்படியே சிவபக்தி பண்ணிக்கொண்டு ஆனந்தமடைந்திருந்தார். இப்படியிருக்க, நந்தனர் ஆதனூரைவிட்டுச் சிதம்பரத்தை நோக்கி வருகின்றார்.

ராகம்-லாவணி; தாளம்-ஆதி.

பல்லவி.

நந்தன் சிதம்பரம் வருகின்றார்.

### சரணங்கள்.

ஆதனூரைவிட்டுக் கொள்ளிடந்தாண்டி
யப்பால் வருகையிலே
தொண்டரங்கம் பரவசமாய்-எங்கும் பொங்கிச் சிவமயமாய். (நந்த)

அந்தக்கரண வ்ருத்தியழிந்து
அனேகசென்மவாசனையை
அனலகொண்டுதகித்தாரே-சஞ்சித-விதையென்றுவெறுத்தாரே. (நந்த)

குண்டலி சத்தியைக்கொண்டு
கிளம்பி மண்டலம்புகுந்து
சஞ்சரித்துக்கொண்டார்-குறையா-வமிர்தமுண்டார்கிளையார். (நந்த)

அநாதிமாயா கற்பிதமிந்த
நாமரூபாதி ப்ரபஞ்சமெல்லா
மழிந்துபோமென்பார்-குறைகட-லெழுந்தநுரையென்பார் (நந்த)

சைவத்தலங்களிற் றெய்வமிதுவே
சத்தியம்பண்ணுவேன் நான் பறையன்
சதுர்மறைகேட்டிலேயோ-மிக்க-ஷண்மதங்கேட்டிலேயோ. (நந்த)

எப்போதுநட ராஜமூர்த்தியின்
இணையடிதொழுதார்க் கீடுரையேன்
இந்திரபதம்விகரோ-திரும்பியும்-வந்தவர்காண்கிலரோ. (நந்த)

ஈசன்கருணை லேசமிலாதவ
னெத்தனைவேதங் கற்றாலும்
வெட்டாப்பெருங்கொம்பு-நெருங்கித்-தொட்டால்செங்கரும்பு. (நந்த)

ஆதனூரிலொரு புலையனுக்காக
அம்பலநாடக மாடுவரோ
அருந்தவம்புரிந்தேனே-கனவினில்-வருந்தியுமிருந்தேனே. (நந்த)

அரகரசாம்ப சதாசிவனேபொன்
னம்பலத்தாடிய தேசிகனே
ஐயேயுன்னடிமை-மனது-நையேனுன்னுடைமை. (நந்த)

செழித்துவியனுல கெட்டிச்சிகரங்க
ளாந்துந்தெரியுது காணையே
தில்லைத்தலமென்பார்-அன்புடன்-சொல்லப்பலமென்பார். (நந்த)

குதிப்பாரொருதரங் களிப்பார்கண்ணீ
ருதிர்ப்பாரானந்த லாகிரியால்
கொண்டானடிப்பாரே-குரவை-நன்றாய்ப்படிப்பாரே (நந்த)

பாரளந்தகோ பாலகிருஷ்ணன் துதி
பாடுந்திருவடி பணிவேனே
பரகதியடைவேனே-பூமியில்-மறுபடிவருவேனே. (நந்த)

---

வசனம்.

நந்தனார் ஆதனூரைவிட்டுக் கொள்ளிடத்தருகில் வரும்போது சொல்லுகின்றார்.

கோலாட்டமெட்டு.

ராகம் - முகாரி ; தாளம் - ஆதி.

பல்லவி.

கொள்ளிடக்கரைபோனான் - நந்தன்
கோபுரங்களைக்கண்டான்.

அனுபல்லவி.

பள்ளச்சாதியிலும் பறைச்சாதிநானென்று
உள்ளமுருகியவன் வெள்ளங்கரைபுரள, (கொள்)

சரணங்கள்.

ஓடத்தின்மேலேறி-நந்தன் ஓங்குமகிழ்ச்சிமீறி
காடவெவரும்நல்ல நடனக்கூத்தாடியே
நண்புடன்கதிபெற லாமென்றுறுதிகொண்டு. (கொள்)

அக்கரைபோனனே-நந்தன்-ஆனந்தங்கொண்டானே
சிக்கெனவேசிவசிதம்பரேசனைக்காணச்
சிந்தைமகிழ்ந்துசிவத் தியானஞ்செய்துகொண்டு (கொள்)

திருவாதிரைத்திருநாள்-செய்யுந்-தினமல்லவோயிந்நாள்
திருநடராஜமூர்த்தி திருமுகந்தனைக்கண்டு
சித்தங்களிப்பேனு னென்றுறுதிகொண்டு (கொள்)

வசனம்.

நந்தனர் இந்தப்பிரகாரம் தோத்திரஞ்செய்துகொண்டு கொள்ளிடக்கரையைத் தாண்டி வரும்போது தில்லைக்கோபுரத்தைக் கண்டு தரிசனம்பண்ணுவார்.

தண்டகம்.

ராகம் - தன்யாஸி ; தாளம் - ஆதி.

பல்லவி.

கோபுரதரிசனமே-எந்தன்-பாபவிமோசனமே.

சரணங்கள்.

தாபங்கள்மூன்றுந் தணிந்துவிடும்நல்ல
சோபனமுண்டாஞ் சோதிவிளங்கிய. (கோபுர)

விண்ணணைந்துமே லோங்கியேகண்டுநற்
கண்ணுளார்க்கெல்லாங் காட்சியளித்திடும். (கோபுர)

அல்லும்பகலும் அமரர் துதித்திடும்
தில்லைக்கிறையோன் றினமுமகிழ்ந்திடும். (கோபுர)

வசனம்.

நந்தனார், தில்லைத்தலம் இப்படியிருக்கிறதென்று சொல்லுகின்றார்.

ராகம் - நவரோஸ் ; தாளம் - ஆதி.

பல்லவி.

மாங்குயில்கூவியசோலைகளும் வாவிகூபதடாகங்களுந்
தூங்கதிர்மண்டலமெழுத்தையுஞ்சொர்னசபேசன்த்வஜமரமும்
நாலுபுறத்திலுங்கோபுரமும் நவமணிச்சித்திரமண்டபமும்
சீலமுறுந்திருவீதிகளுந் தில்லைவேதியர்மாளிகையும்
கண்டேன்கலிதீர்ந்தேன் என் கவலையெல்லாமொழிந்தேன்
மண்டலம்புகழுஞ்சபேசன்சந்நிதி வாழ்த்திப்பணிந்துநின்றேன்
தஞ்சமென்றடைந்தே னிந்தச்சடலத்தால்நொந்தேனினியென்னை
அஞ்சவேண்டாமென் றொருதரஞ்சொல்லி யழைத்தாலாகாதோ
அப்பாவுன்சரணந் தில்லைக்கரசேயுன்சரணம்
ஒப்பாரில்லாநாடகம்பயிலு மொளியேநின்சரணம்.

கோபுரதெரிசனமென்கிற கீர்த்தனமுதற்கொண்டு

சிதம்பரவிலாசமெனப்படும்.

சிந்து.

சிவன் - வேடிக்கைதானென்று நாடிக்கொண்டே, அறியாது போலிருந்த - செம்பொன் - னம்பலத்தாடியைக் கும்பிடவே, ஆதனூர் தனிலிருந்து - விடும்-அம்புபோ லப்புறங்

னைதயமின்றித், தில்லையருகில் வந்தார்-மனந்-தேறிக்கொண்டார் குறையாறிக்கொண்டார், கெண்டாமணியோசை.

## திருநாளைப்போவார் புராணம்.

### விருத்தம்.

நாளைப்போ வேனென்று நாங்கள்செலத் தரியாது
பூளைப்பூ வாம்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்ப்
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியி னின்றும்போய்
வாளைப்போத்தெழும்பழனஞ் சூழ்தில்லை மருங்கணைந்தார்.

### வசனம்.

இது-பொழிப்புரை.

நாளைப்போவேனென்றுசொல்லி அனேகநாள் கழியச் சபாநாதரைத் தரிசனம்பண்ணவேண்டுமென்னும் பேராசையை அடக்கக்கூடாதவராய்ப் பூளைப்பூவையொத்த நிலையாமையையுடைய பிறப்புக்களால் உண்டாகிய சம்பந்தம் நீங்கும்பொருட்டுப் போகின்றவராய்ப் பாளையையுடைய பொலிவாகிய கமுகமரங்கள் சூழ்ந்திருக்கும் பழைமையுற்ற தம்முடைய ஊரினின்றும் புறப்பட்டு, ஆண்வாளைமீனனது எழும்பி விளையாடும் வயல்களையுடைய சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார்.

ராகம் - கரகரப்ரியை ; தாளம் - சாபு.

### பல்லவி.

கெண்டா மணியாடுது-கண்டு பிணிவாடுது.

சரணங்கள்.

முக்தி மணிதேடுது நாடுது கூடுது(கெண்டா)
பரவச மாகுது பாவங்கள் போகுது(கெண்டா)
சனன மரணுதிகள் மோகமுந் தீர்ந்தது(கெண்டா)

நொண்டிச்சிந்து.

கெண்டாமணியோசை-காதில்-கேட்குதென்று ரதைப் பார்க்கவென்றே, கொண்டாட்டமாகிவந்தார்-கையைக்-கும் பிட்டேன் நமக் கம்பிட்டதோ, என்றே மனமகிழ்ந்தார்- திரு-வீதியிலேவந்து காதலுடன், கண்டார் களையாறி-இரு- கண்களிலானந்தம் பொங்கிடவே, நின்றார் மதிற்புறத்தே வெகு-நேர்த்தியென்றுரிதைப் பார்த்ததில்லை, பணிந்தார் பர வசமாய்-நல்ல-பாக்கியசாலிக ளாக்குமென்றார், இதுதானே தில்லைப்பதி.

வசனம்.

நந்தனர் தில்லையைக்கண்ட ஆனந்தானுபூதியைச் சொல்லுகின்றார்.

தண்டகம்.

ராகம் - மத்யமாவதி ; தாளம் - ஆதி.

தில்லைத்தலத்தைக் கண்டார் - அது சித்விலாசமென்றார்-அந்த
எல்லையிலே நின்றார் - மன தேகமாக்கிக்கொண்டார்
இருகண்கள் நீர் வடித்தார் - கொடுங் காமவலையையறுத்தார்
இருகையைத்தூக்கிக் குவித்தார் - தன் காலைக்கோணிக்குதித்தார்-
[இந்த

ஐம்புலன்களை மறந்தார் - பர மானந்தக்கடலுறைந்தார்
தன்தேவபாவ மறந்தார் - தில்லைச் சிவனேயென்றிருந்தார்

ராகம் - ப்யாக் ; தாளம் - ஆதி.

பல்லவி.

இதுதானோ தில்லைத்தலம்-இத்தனைநாளுமறியேன்
இதுதானோ தில்லைத்தலம்.

சரணங்கள்.

அதுவோ யிதுவோவென் றலைந்திடும் பேயனைக்
கதிதரு வேனென்று கைகாட்டி யழைத்திடும் (இது)

காசினி யிலிதைக் கயிலையென் றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றிப் பேணிப்பார்த் தறிந்திலேன். (இது)

ராகம் - அசாவேரி ; தாளம் - ஆதி.

பல்லவி.

ஆடியபாதத்தைத் தாரும் - உம்மைத்
தேடிவந்தேன் இதோ-பாரும் பாரும் (ஆடிய)

அநுபல்லவி.

நாடிப்புகழ்ந்துதொழும் சிவ காமிமனோகரரே தில்லை
நடராஜரே யுமது பதம்நான் விடமாட்டேன். (ஆடிய)

சரணங்கள்.

பாத்திரமல்லவோ பாலகிருஷ்ணன்பணி-பரனேசிதம்பர
க்ஷேத்திரதரிசனம் வீடுசேர்க்குமென் றறியேனோ-அணு
மாத்திரப்பொழுதும்மை மறக்கவென் மனதுவராதென்று-மருவி
தோத்திரம்பண்ணமாட்டேன் சுவாமி அதிலென்னசுகம் அம்பலந்
[தனில்- (ஆடிய)

வசனம்.

நந்தனார், தில்லையைக்கண்டு ஆனந்தங்கொண்டாடுவார்.

ராகம்-இந்துஸ்தான் காபி ; தாளம் - ஆதி.

பல்லவி.

தில்லைதில்லை யென்றால்பிறவி
இல்லையில்லை யென்று மறைமொழியும்.

அநுபல்லவி.

தொல்லைதொல்லை யென்றகொடுவினை
வல்லைவல்லை யென்றகலும் திருத் (தில்லைத்)

சரணங்கள்.

கற்றோங்கற்றோம் களங்கமறிந்திடப்
பெற்றோம்பெற்றோம் பேசாப்பெருமையில்
உற்றோமுற்றோம் பொன்னம் பலந்தனில்
தத்தோந்தத்தோம் என்றுநடனமிடும். (தில்லைத்)

வாடிவாடி மாலய னிருவரும்
கூடிக்கூடிக்கொண் டல்லும்பகலுந்தான்
தேடித்தேடித் திருவடிமுடிகளைப்
பாடிப்பாடிக்கோ பாலகிருஷ்ணன்தொழும். (தில்லைத்)

---

துக்கடா.

ராகம் - தேசிகதோடி ; தாளம் - ஆதி.

பல்லவி.

இதுவோ தில்லைச் சிதம்பரக்ஷேத்ரம் ஈசனிருப்பிடமோ.

சரணம்.

மதுரம்பொழிந்திடும் மறையோரிருப்பிடம்
மாமுனிவர்தவம் வாழும்பெருமிடம்
பதவிபெறுந்தொண்டர் பணிந்துவருமிடம்
பலதெய்வமுந்தொழும் பரகதிதருமிடம் (இது)

ராகம் - ப்யாக் ; தாளம் - மிச்ரஏகம்.

பல்லவி.

ஆடுஞ்சிதம்பரமோ-வையன் கூத்-தாடுஞ்சிதம்பரமோ.

சரணங்கள்.

ஆடுஞ்சிதம்பர மன்பர்களிக்கவே
நாடுஞ்சிதம்பரம் நமச்சிவாயப்பொருள். (ஆடுஞ்)

ஆருமறியாமல் அம்பலவாணனர்
சீரடியார்பார்க்கச் சேவடி தூக்கியே. (ஆடுஞ்)

பாலகிருஷ்ணன்போற்றும் பணிமதிச்சடையினர்
தாளமத்தளம்போட தத்தித்தத்தெய்யென்று. (ஆடுஞ்)

ராகம் - தன்யாஸி ; தாளம் - த்ரிபுடை.

பல்லவி.

திருவாதிரைதெரிசனத்திற்குவந்தேன் - உந்தன்
திருவாதிரைதெரிசனத்திற்குவந்தேன்.

அநுபல்லவி.

திருவாய்திறந் துறவாயினி பிறவாவரந் தருவாயென்று. (திரு)

சரணங்கள்.

கங்குகரையேது பவக் கரைதாண்டவேயுனது சிவ
கங்கைதனில்மூழ்கி பவக் கடலுங்குளப்படியாகவே. (திரு)

அல்லும்பகலுனது சபை அருகில்நின்றுகூத்தாடினல்
கல்லாமனமுருகும் பர கதியுங்கைவசமாகுமே. (திரு)

ஆலந்தனேக்கண்டோடி வமரர்துயர்கெடக்காத்தவன்
பாலகிருஷ்ணன்பணியுந் திருப் பாதங்கனகசபாபதியே. (திரு)

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

தில்லேயைக் கண்ட போதே தெளிந்ததென் னுள்ள மெல்லாம்
பல்லூழி காலஞ் செய்த பாழ்வினே தொலேந்து போச்சு
நல்லருள் நடனங் காட்டும் நாயனுர் சிற்ச பைக்குள்
செல்லுவார் மகிமை செப்பச் சேடனு லாகா தன்றே.

வசனம்.

இப்படித் தில்லேயைக் கொண்டாடி இதைப் பாராதவரே பாவி யென்பார்.

ராகம் - கவரோஸ் ; தாளம் - சாபு.

பல்லவி.

மார்கழிமாதத்தி லாதிரைநாளேயில் வந்துசிதம்பர தேசிகனே
பாராதபாவிகட் கேதுமில்லேயிந்தப் பாரில்வந்து பிறவாதவரே
வாளிற்றெருடுந்திரு மாளிகைமண்டப மாமதிலுந்தில்லே மாந [கரம்
காணக்கிடைக்கா தப்பா யிந்தபாக்கியங்
காதில்கேட்டவண்ணங் கண்டதுவே

ஆதிபராபர மாகியதில்லைப்பொன் னம்பலவன்வளர் சந்நிதியில்
நாதமுங்கீதமுங் கேட்குதுவானந்த நாடகவேளையை நானறி
[யேன்.

---

வசனம்.

நந்தனர் சிதம்பரம் காணுததாற் சிவலோகங் காணேனென்பார்.

கண்ணிகள்.

ராகம் - ஸாவேரி ; தாளம் - ரூபகம்.

சிதம்பரம்வந்து தரிசியாத ஜன்மம் வீணென்றுபேசி
மனதிலெண்ணினுர் பாத கமலத்யானம் பண்ணினுர்
பறையனுக்குமிந்தத்தலத்தைப் பார்த்தபின்புமோட்சபதவி
பலித்ததல்லவோ பாவிஜெனனம் அலுத்ததல்லவோ
தொண்டுகொண்ட தங்களையர் பெருமையெல்லாஞ்சொல்லிச்
[சொல்லித்
துள்ளித்தாவினுர் ஞானவிரையை அள்ளித்தூவினுர்
பூதலத்தினிலிதுவே தெய்வமென் ருநந்தக்கடலில்
பொங்கிப்பாடினுர் புண்யத்தல மென்று தேடினுர்.

தண்டகம்.

ராகம் - நவரோஸ் ; தாளம் - மிச்ரஏகம்.

அரகரசங்கர வண்ணவேயம்பலத்தரனே
நானுந்த னடைக்கலமென்று
உருகித் துதியாரோ - ஆனந்தம்
பெருகிப் பதியாரோ
முக்தியளிக்குந்திரு மூலத்தானரைக்கண்டு
பக்திபண்ணுதவன் பாமரனல்லவோ

பாருக்குச் சுமையாச்சு - அவனிருந்தும்
ஆருக்குச் சுகமாச்சு
மங்கையர்மோகமாய் மயங்கித்தினந்தோறும்
அங்கம்புளகிதமா யவரிடுமேவல்கொண்டு
தோளைக் குழைத்தாரே - அநியாயமாய்
நாளையுங் கழித்தாரே
வீசிநடைநடந்த மெய்யும்பொய்யாகவே
ஓசையடங்கும்போ தொருவருமங்கில்லை
தூசியும் போகாதே - காதறுந்த
ஊசியும் வாராதே
சிவசிதம்பரமென்று தில்லைவெளியினின்று
பவசாகரம்வென்று பரமபதமடையுந்
தவநெறி பொருந்தாரே - பொருந்தின
அவரையும் வருந்தாரே
சாத்திரங்கற்றாலுஞ் சதுர்மறையுணர்ந்தாலுஞ்
சூத்திரம்பெற்றாலுஞ் சொன்னேனகங்காரம்
மாத்திரம் போகாதே - கருணைக்குப்
பாத்திரம் ஆகாதே
சரணாகதமென்று சார்ந்தடிபணியாமல்
வருணாச்சிரமவிதி வழுவாதிருக்கினுஞ்
சனனாதிகள் விடுமோ - சிரவண
மனனாதிகள் படுமோ
அட்டசித்திகள்பெற்று ஆண்டாயிரங்கால
மட்டிருந்தாலுமென் மரணபயமெய்திடும்
நட்ட சன்மமாச்சே - மனிதசென்மம்
எட்டிவீணாய்ப் போச்சே

முப்பாழுந்தாண்டி மூலத்தீமூட்டிக்கொண்
டப்பாலேநின்று லானந்தங்காணலாம்
ஒப்பா ரில்லையடா - ஊடுருவி
நிற்பா ரில்லையடா
ஆலமிடறடக்கி யம்பலக் கூத்தர்கோ
பாலகிருஷ்ணன்தொழும் பரமசிவனேயென்று
பாடிப் படியாரோ - பருவத்தில்
தேடிப் பிடியாரோ.

---

வசனம்.

நந்தனார் சிவபக்திபண்ணுதவனை நிந்தனைசெய்து இன்னமுஞ் சொல்லுகின்றார்.

கண்ணிகள்.

ராகம் - ஸுரடி ; தாளம் - சாபு.

வானோர்புகழ்தில்லை வனநாதர்வாழும்
ஞானசபையைப்போற்றி நமச்சிவாய-வென்று
சொல்லாதவன் கல்வி கல்லாதவன் வெகு-பொல்லாதவன்.
காசினிபுகழ்சிவ காமவல்லியைக்கண்டு
பாசமகலும்நெறி பாராதவன்-சுத்தப்
பதராச்சு ஆட்டினதராச்சு க்ருமிக்கெதிராச்சு
ஆட்டுக்காலைச்சற்றே கேட்டுவாங்கியுள்ளே
நாட்டிக்கொள்ளாதவன் மாட்டுக்குவமை-யென்று
நாடாரே கண்டுகூடாரே என்றுந்-தேடாரே.
அம்பலவாணனு ரருகில்வந்துகையால்
கும்பிட்டிறைஞ்சாத குருடர்களுக்குத்-திற
மதியேது பரகதியேது பண்ணும்-விதியேது.

நாக்கிருந்துஞ்சிவ நாமத்தைநவிலாமல்
சாக்குப்போக்குப்பேசுஞ் சண்டியவனைக்-கால
னடியானோ கட்டிப்பிடியானோ கையா-லிடியானோ.

வேதாந்தநூற்களை விவரித்துணர்ந்தாலும்
ஏகாந்தபத்தியொன் றில்லாதவன்-உள்ளம்
உருகாது கள்ளங்கருகாது வெள்ளம்-பெருகாது

ஆத்திமதியஞ்சடை யழகனுடியகூத்தைப்
பார்த்துக்களிக்காத பாவிமனிதர்க் கொன்றும்
பலியாது வினை சலியாது சீலம் பொலியாது (வானோர்)

பாலகிருஷ்ணன்தேடும் பாதரசத்தைக்கண்டு
சீலமுடனேயுண்டு ஜபிக்காதவன் துன்பம்
தொலையாது இன்பம் நிலையாது கன்மம் கலையாது (வா)

வசனம்.

நந்தனார், சிதம்பரம் பாராத கண்படைத்தாரை முகத்தைக் கெடுக்கவந்த புண்படைத்தவரென்று சொல்லுவார்.

ராகம் - நாதநாமக்ரியை ; தாளம் - சாபு.

காணாதகண்ணென்ன கண்ணே
வீணானகண்மயில் கண்ணதுபுண்ணே (காணாத)

சொல்லும்பொருளிறந்த துரியவடிவமாகி
யல்லும்பகலுமற்ற வானந்தப்பேரொளி (காணாத)

அரியாமருந்தளிக்கும் பரமரகசியத்தி
லசையாமலேயாடு மம்பலநாதனைக் (காணாத)

ஊராருமறியாம லொளிகண்டுபிசகாமல்
ஈரார்றுகாற்கொண்டு எழும்பியமண்டபம் (காணாத)

அண்டத்துளடங்காத வாசைவலையைப்பூட்டிப்
பிண்டத்துளடங்கிய பேரின்பத்தெப்பத்தைக் (காணாத)

நாசிநடுவிருந்து நாதனேதானென்று
பேசாமற்பேசிய பெருமையையொருநாளும் (காணாத)

என்னையானறியேனென் றிகழ்ந்திடும்பேயனைத்
தன்னந்தனியனுக்கித் தருவனென்றழைத்தாரைக் (காணாத)

சோற்றுத்துருத்தியிதைச் சுமந்ததினுலென்ன
ஆத்திமதியஞ்சடை யழகனமருங்கோவில் (காணாத)

சீலக்கமலமுகச் சிவகாமிமனமகிழ்
கோலக்கனகன்தில்லைக் குழகனுடியகூத்தைக் (காணாத)

பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைப்பணிந்தொரு
நாளிலும்பிறவாத நலமிக்க வழிதேடிக் (காணாத)

வசனம்.

நந்தனுர், பக்திபண்ணுதவன் முக்திபெறுனென்று சொல்லுகின்றுர்.

தண்டகம்.

ராகம் - தன்யாஸி ; தாளம் - ஆதி.

வேதம்படித்ததும் சாத்திரங்கற்றதும் மெய்யினில்நீறு பூசுவதும்
ஆதிசிதம்பர தேசிகன்றிருவடிக் காளானுலன்றி யூணந்தம்
உடனேதொலையும் பவபந்தம்
சொன்னேன் சொன்னேன் சொன்னேன்.

ஊனுறக்கமுத லாகியநான்கு முண்டேயுலகில் யாவருக்கும்
ஆணவமலத்தை நீத்தார்களறிவா ரகத்தைச்சுருக்கிக் கொள்ளுவரே
சகத்தைப்பொய்யாத் தள்ளுவரே
சொன்னேன் சொன்னேன் சொன்னேன்.
அருந்தவமாமுனி யாகிலும்நல்லா ராசைபொல்லாதா ரறிவாரோ
வருத்தப்படுத்தி மனத்தைமயக்கி வைத்திடுமென்ன மயக்கோசம்
உற்றுப்பார்த்தாவது நேசம்
சொன்னேன் சொன்னேன் சொன்னேன்.
அரவணைகோ பாலகிருஷ்ண னல்லும்பகலும் பணிந்தேத்தும்
திருவடிசரண கதமென்றெண்ணித் தெளிந்தார்க்கன்றோ பரபக்தி
ஒழிந்தார்க்கன்றோ வரமுக்தி
சொன்னேன் சொன்னேன் சொன்னேன்.

---

## திருநாளைப்போவார் புராணம்.

### விருத்தம்.

இப்பரிசா யிருக்கவெனக் கெய்தலரி தென்றஞ்சி
அப்பதியின் மதிற்புறத்தி னுருத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க வுள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார்.

---

### வசனம்.

நந்தனர், இந்தத் தில்லைவா ழந்தணர்களுடையவீடுகள் இத்தன்மையாயிருக்க, எனக்கு அவ்விடத்திற்குப் போகுத லடாதெனப்பயந்து அந்தத் தலத்தின் மதிற்புறத்திலிருந்து அளவற்ற பேரன்புடன் மனமுருகிக் கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லையை வலஞ்செய்கின்றார்.

### விருத்தம்.

அம்மை யாந்தில்லை மாநகர் மருங்கிடை யணைந்து
சும்மை விட்டிரு விழிகளில் நீரறச் சொரிந்து
விம்மி யேசிவ னார்சரி தங்களை விரித்துக்
கொம்மை கொட்டியும் பாடியு மாலந்தங் கொண்டார்.

---

### வசனம்.

நந்தனர், தனக்கிந்தப் பாக்கியங்கிடைத்ததென்று கொண்டாடனடிக்கின்றார்.

ராகம் - ஹூஸேனி ; தாளம் - ரூபகம்.

### பல்லவி.

கொண்டாடனடிக்கிறார்-தில்லைக்-கோயிலைக்கண்டு தாவித்தாவிக்(கொ)

### அநுபல்லவி.

அண்ட ரண்டந்தொழு மம்பல நாதனைக்
கண்டாரைக்கண்டுகொண்டோமென் றுநன்றாய்க்(கொ)

### சரணங்கள்.

அஞ்சலிகொண்டு களித்து அரகரவென்று ஜபித்து
குஞ்சிதபதத்தைத் துதித்துக் குரவைகள்பாடிக் குதித்துக்(கொ)
அங்கம்பரவச மடைந்து ஆனந்தக்கடலில் விழுந்து
பொங்கிச்சிவமென் றறிந்து புவியதிர்ந்து பணிமிகுந்து (கொ)
இருகண்களில் நீர்பெருக இறைஞ்சிமன தூடுருக
அருமைச்சிவகதி தருக அம்பலவாணன் வருக (கொ)

---

## இதுவுமது.

ராகம் - சௌராஷ்ட்ரம் ; தாளம் - ஆதி.

### பல்லவி.

கொண்டானடித்தாரே-நந்தனார் கோவிலைக்கண்டு தாவித்தாவிக்(கொ)

### அநுபல்லவி.

அண்டாமகிழ்ச்சியாலே-அரனேயென்றுமென்மேலே (கொண்)

### சரணங்கள்.

பண்டுநான்செய்ததே யோகம் - அதனாலுருக்
கொண்டுவந்தேன்மானிட தேகம் - ஆகவேயிந்தப்
புண்டரீகப்பதவை போகம் - கண்டேனென்போல
மண்ணிலெவர்க்குண்டு யோகம் - என்றுதுதித்துக்
கொண்டாடுமிவர்புகழைக்
கூறுவதுவேயுஞ் சாகம் (கொண்)

வஞ்சகமனத்தையொரு மித்து - நினைத்தொழாத
பஞ்சமாபாதகப்பேரெ டுத்து - உலுத்தர்களைக்
கெஞ்சியேயவர்களைய டுத்து - உழலாமலே
கஞ்சமலர்ப்பதங்கொ டுத்து - ஆண்டருளென்று
வஞ்சிசிவகாமிதொழும்
மணவாளனைத் துதித்துக் (கொண்)

ஒருநாற்புறமதில் சொலிக்க - ஊரெல்லைசுற்றி
வருவார்திரும்புவார் களிக்க - சிரசின்மேலே
இருகைகுவித்துவாழ் வளிக்க - வேண்டுவாரிந்தத்
திருநாளைப்போவார்தான்மிகுக்க - ஆகையாலிந்தப்
பெருவாழ்வடைவாரிவர்
பேதமில்லை யுரைக்கக் (கொண்)

வசனம்.

இப்படி நந்தனுர் வீதியைச்சுற்றிச் சந்நிதிமுன் வந்து தண்டாகாரமாய் விழுந்து பணிந்து புழுதிபடப் புரண்டு ஆனந்தமடைந்து நிருத்தசபை தெரிந்து தரிசனம்பண்ணு வார்.

ராகம் - ஸ்ரீராகம் ; தாளம் - ஆதி.

பல்லவி.

சபா தரிசனங்கண்டான்-நந்தனுஞ்-சுபாவமுடனேநின்முன்.

அநுபல்லவி.

சபாதெரிசனங்கண்டான்-அகணித
ப்ரபாவமாகிய சபாபதியிருக்கும் (சபா)

சரணங்கள்.

சதாகாலமும்வே தங்கள்மொழிந்திடுஞ்
சிதாகாரமாய்ச் செழித்துவளர்ந்திடும் (சபா)

தில்லைமூவாயிர முனிவர்கள்கூடும்
அல்லும்பகலு மவரவர்நாடும் (சபா)

வசனம்.

நந்தனுர், தெற்குக் கோபுரவாயிலினின்று சபாபதியை நோக்கித் துதிபண்ணுவார்.

ராகம் - ஜிங்ல ; தாளம் - ஆதி.

பல்லவி.

ஜயஜகதீசா-அதி சுந்தரகுஞ்சிபாதா-ஓ-ஜயஜகதீசா.

சரணங்கள்.

தில்லையைக்கண்டேன் தேறித்தெளிந்தேன்
எல்லையில்நின்றேன் இனிப்பிறவேன்காண்
எனக்கினியாரீடு கரும்புபோல்-இனிக்குதுபார்வீடு (ஜய)

ஆசாபாசத்தைவேரற வெட்டி
ஆனந்தத்தின்முழுக் காட்டி- வைக்குமிது
யாருக்குங் கிடையாது-இந்தசுகம்
பாருக்குள் இணையேது (ஜய)

சரணாகதமென்றிங்கு வந்தேன்
சாமிபராக்குஉமை யடைந்தேன்
ஜனனாதிகளான்மிக நொந்தேன்
வேறொருதெய்வங்களை வருந்தேன்-ஓ (ஜய)

தென்றிசைச்சோன்வந் தழைத்திடும்வேளையில்
பெண்டுபிள்ளைகள்பே யாட்டம்
ஓடத்திலேறியபெருங் கூட்டம்
நானும்நமனுந்திண் டாட்டம் ஒரு
நம்பிக்கை தாரும்
நானுனக்கருள்புரிந்தாளுவேனென்று
கனவிலாகிலும் வாரும்-தட்டி யெழுப்பிக்
கவலைகளைத் தீரும்-அடிமையென்று
மனமகிழ்ந்து பாரும்-தில்லைவெளியில்
வாடாவென்று சேரும்-ஓ (ஜய)

அரகரசங்கரனேபொன் னம்பலத்தாண்டவனே
பரமதயாபரமூர்த்தியென்றடி பணிந்தேன்
மனங் கனிந்தேன்
சாதியில்சின்னவ னானல்

வீதியில்வந்தே ஞகாதோ
பாதகஞ்செய்யினுஞ் சிதம்பரமென்று
பகர்ந்தால்பழைவினை போகாதோ
தீதில்லாதபெருந்தவத்தோர் வந்தால்
தெரிசனஞ்செய்வேன் போகாதோ
ஆதிபராபர மாகியவுனைக்கொண் டாடுவேன்
பாடுவேன் தேடுவேன் நாடுவேன் (ஜய)

அபாரமாகியசம்சாரம் சதாவிஷயகரமதிகோரம்
உபாயமறிந்துகரைப்யேறப் படாதுஜெகதீசுவரமாயா
விலாசகற்பிதமிந்தஜகம் அனேகசஞ்சிதவாசனைகள்
சிவோகமென்கிறபாவனையால் நிவாரணம்பண்ணும்பெரி
பண்ணியதொழிலின் பயனறிவார் [யோர்கள்
பாலகிருஷ்ணன்தொழுங் கழலணிவார்
எண்ணியபடியே தவம்புரிவார்
எனதுனதென்று முறையிடுவார்
சமாதிபண்ணிக்ரமாதி க்ருத்தியம்
படாதபேதைகைவிடா தேயும் நீர்
சபாபதிவெகு கிருபாநிதிவுன்
பிரதாபமறியேன் சுபாவம்பறையன். (ஜய)

விருத்தம்.

வாட்டு வாருடல் வேர்படத் தழலிடை வருத்தி
மூட்டு வார்மூலக் கனல்மதி மண்டல முகட்டில்
மாட்டி றைச்சியை யருந்திய புலையன்றன் மனத்துள்
ஆட்டுக் கால்சற்றே தந்திடு மம்பலத் தரசே.

ராகம் – இந்துஸ்தான்காபி ; தாளம் – ஆதி

பல்லவி.

தாதாதாகியாடியபாதம் தத்தித்தெய்தந்தித்தெய்யென் றாடியபாதம்.

## சரணங்கள்.

ஆதரவாகப் பதஞ்சலிமாமுனிக் கானந்தநாடக மாடுந்திருவடி (தா)
ஆகமவேதபு ராணங்களோதிய யோகிகளாலே தேடுந்திருவடி (தா)
சிந்தைமகிழ்ந்து குவிந்திடவேயதி சுந்தரரஞ்சித குஞ்சிதபாதம் (தா)
பாரளந்திடுங்கோ பாலகிருஷ்ணன் துதி பாடிப்பரவிப் பணியும்பா
[தம் (தா)

ராகம் - ரீதிகௌளை ; தாளம் - ஜம்பை.

## பல்லவி.

தாண்டவதரிசனந்தாரும்-தாமதம்பண்ண
வேண்டாம்-இதுசமயம். (தாண்)

## அநுபல்லவி.

ஆண்டவனேயுன்பெருமையை யாரறிந்துரைசெய்வார்
நம்பியிருக்கிறேன்பேதை யெந்தனுக்கொருதரம் (தாண்)

## சரணங்கள்.

ஆசைவலைக்குள்தங்கிப்பொங்கி மயங்கித்தடுமாறிமும்மதங்கள் மீறி
யானெனதென்றுரைக்கும் பாசமகலநெறிவிறுத்திட
மாயவன்கோபாலகிருஷ்ணன் பணிந்திடும்உன்திருவடி
தாரிதகுகுஜெம் தரிதகணந்தரி திரிகுதிரிகுதீம்தீம் தக்கிடத்தக
[தோமென்றாடிய (தாண்ட)

---

## வசனம்.

நந்தனார், பிறவிப்பிணிக்கஞ்சித் துதிபண்ணுவார்.

### லாவணி.

ராகம் - குரஞ்சி ; தாளம் - ஆதி.

அம்பலவாணுவுன்னைச் சரணமடைந்தேனேனேழை
ஆதரித்தாளுவதுன்பாரமல்லவோ சொல்லவோ
எடுத்திடுஞ்சனனங் கணக்கெழுதத்தொலையாதென்பாடு
இன்னமும்பிறந்திடுவேனோநடேசனே யீசனே
ஆசையெனும்பெருங்காட்டிலே யரற்றும்முழுமூடன்
அகலவிடாதேயும்நம்பினேனுன்னை யையனே மெய்யனே
பாரளந்தகோபாலகிருஷ்ணன் தினம்பணியுமலர்ப்பாதம்
பாவியென்னுள்ளுறவேகருணை பாருமே வாருமே.

### வசனம்.

அம்பலத்திலாடும் நடனத்தை வர்ணித்துச் சொல்லுவார்.

ராகம் - சங்கராபரணம் ; தாளம் - சாப்பு.

### பல்லவி.

ஆடியபாதா-இருவர்கள்-நாடும்விநோதா. (ஆடிய)

### அனுபல்லவி.

ஆடியபாதா வயனுமாலுந்தினம்
தேடியுங்காணுமற் றிரைமறைவாகத்
தித்தித் தித்தித் தித்தித்தியென் (ஆடிய)

### சரணங்கள்.

வீரவெண்டையஞ்சிலம்பசைந்திட மேவுஞ்சடையம் புலியசைந்திடச்
சாருந்தொண்டர்கள் மனங்குவிந்திடச் சாலோகாதி பதவியுந்
தந்தோந் தந்தோந் தந்தோந் தந்தோமென நடனம் (ஆடிய)

வேதமுனிவர்கள் பாடவுஞ் சன காதியோகிகள் கூடவும் வெகு
காதமெங்கினு மூடவுந் திரு நந்திமத்தளம் போடவுந்
தகுந் தகுந் தகுந் தகுமென்று நடனம் (ஆடிய)

பாலகிருஷ்ணன் துதிகள்செய்திடப் பண்ணவர் பூமாரிபெய்திடச்
சீலமுளசிவகாமி மகிழ்ந்திடத் திருச்சிற்றம்பலத் தரசனுந்
தாந் தாந் தாந் தாந் தாநீ தாவென்று நடனம் (ஆடிய)

வசனம்.

நந்தனர் அடிமைத்திறங்காட்டிச் சொல்லுகின்ருர்.

தண்டகம்.

ராகம் - நவரோஜ் ; தாளம் - ஆதி.

அறிந்தறியாமலேசெய்த தபராதமையா-என்னை
ஆண்டவனே தில்லைத்தாண்டவராயா அடியையுன்சரணம்
பருகியவண்டபகிரண்டங்கள் கடந்திடு மத்தாவுன்சரணம்
பதஞ்சலிக்காகநடம்புரியுந்திரு வம்பலக்கூத்தாவுன் சரணம்
நடுவுமாதியுமந்தமுமொன்று மிராதநிராமயனேசரணம்
பொங்குமாநந்தக்கடலேவொளியே பொறியின்னறிவேயுன்சரணம்
என்றும்நித்தநிரஞ்சனநிஷ்கள நிர்க்குணரூபாவுன்சரணம்
கருதிநின்மகிமைகண்டோரறியாத கடையேனுன்சரணம்
எள்ளுக்குளெண்ணெய்போலெங்குநிறைந்த வீசாவுன்சரணம்
எட்டிரண்டுமறியாதவன்கனக சபேசாவுன்சரணம்.

வசனம்.

நந்தனர், இப்படி யனேகவிதமாய்க் கொண்டாடி உட்புகுந்து தாண்டவம்பாராத மனக்குறைவுகொண்டு சுவாமியை நானுள்ளே வரலாமோவென்று கேட்கின்ருர்.

ராகம் - மாஞ்சி ; தாளம் - சாபு.

பல்லவி.

வருகலாமோவையா உந்தன்
அருகில்நின்று கொண்டாடவும் பாடவும்நான் (வருக)

அனுபல்லவி.

பரமகிருபாநிதி யல்லவோ இந்தப்
பறைபனுபசாரஞ் சொல்லவோ உந்தன்
பரமா நந்தத் தாண்டவம் பார்க்கவேநா னங்கே(வருக)

சரணங்கள்.

பூமியில்புலையனாய்ப்பிறந் தேனே-நான்
புண்ணியஞ்செய்யாமலிருந் தேனே-என்
சாமியுன்சந்நிதி வந் தேனே-பவ
சாகரதுக்கமிழந் தேனே-கரை
கடந்தேனே சரண மடைந் தேனே-தில்லை
வரதா பிரதாபமும் பாபமுந் தீரவே-நான் (வருகலாமோ)

வசனம்.

இப்படி நந்தனார் தில்லையில் வந்து கொண்டாடிப் பின்பு பக்தி மார்க்கத்தை யெடுத்துப் பேசுகின்றார்.

சிந்து.

இதுதானோதில்லைப்பதி-என்று-எக்கலித்தாராடிக் கொக்கலித்தார்
ஐயாவுன்சந்நிதியைக்-காண-வாசைகொண்டுவந்தே னேசமுடன்
தெருவில்பொடித்தூளை-அள்ளித்-தேகமுழுதிலுந் தாகமுடன்
தரித்தார்திருநீறாய்-நாலு-சாஸ்திரவேதங்கள் பார்த்துணரும்
பெரியோரிருக்குமிடம்.

### வ ச ன ம்.

நந்தனர், தில்லைத்தலம் இப்படியிருக்கிறதென்று சொல்லுகின்றார்.

### த ண் ட க ம்.

ராகம் - செந்தக்கடுக்கா ; தாளம் - ஆதி.

### ப ல் ல வி.

ஆகாதாகாதையே-இங்கிருக்க லாகாதாகாதையே.
ஆகமங்களுறை வேதியர்கள்சிவ னடியார்கள் கூட்டம் - மன
தேகமாகியெப் போதும்விளைகின்ற யோகிமுனிக ளுட்டம் - பூ
லோகமிதுகை லாசமென்றுமிதைப் போற்றுவார்க ளாட்டம் - அதி
வேகமாகவெங்கேயாகினும்வெளியே போகவேணுமையேஇருப்ப
தாகா தாகாதையே-இங்கிருக்க-லாகாதாகா தையே
பாவிப்பறையனிங்கே வரலாமோ சுவாமிதரிசனந் தரலாமோ
பாதகமலங்களைத்தொடப் போமோ
பாவமெனைப்பிரிந்துதொலை போமோ-இருப்ப
தாகாதாகாதையே-இங்கிருக்க-லாகாதாகா தையே
வேள்விசெய்யும்புகை மேலுல கெழும்பிப் போகுது
புண்ணியர் புரியுந்தவமுடன்
அரகரசிவனென்று ஆடிப்பாடிக்கொண்டு
பரிவுடனுனை ப்ரதட்சணம்வருமிடம்-ஆகாதாகா தையே
மணியாடுது வெகுசனங்கூடுது வீதி வலமாகுதுதிருப் பதம்பாடுது
உள்ளே நடமாடுது பணி விடைபோகுது பர வசமாகுது
மெத்தப் பயமாகுது இங்கே-ஆகாதாகாதையே
நீண்டாதே இங்கே வேண்டாதே சும்மா
யிறையாதே இங்கே தரியாதே என்னைப்
பாராதே படியேறாதே உள்ளே போகாதே வரலாகாதே
யென்பார்-ஆகாதாகாதையே.

சிந்து.

பெரியோரிருக்குமிடம்-இந்தப்-பேயனிருப்பது ஞாயமல்ல
நானோபறைச்சாதி-தில்லை-நாதன்தரிசன மாதரவாய்ப்
பண்ணும்படுபாவி-இந்தப்-பாரிலிருப்பது சீரலவே
என்றேகுளத்தோரம்-புக்கி-ஏங்கிகின்றார்துயர் நீங்கிகின்றார்.
ஓயாப்பெருங்கவலை-கொண்டு-உள்ளங்குழைந்திட வெள்ளமெனக்
கண்ணீர்கரைபுரள-இரு-கைதொழுதாரவர் மெய்தொழுதார்
கீழேபுரண்டழுதார்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி யெழும்புகையு
மல்குபெருங் கிடையோது மடங்களொருங் கினவுங்கண்
டல்குந்தங் குலநினைந்தே யஞ்சியணைந் திலர்நின்றார்.

வசனம்.

திருநாளைப்போவார் சிதம்பரத்துக்குப் போனபொழுது அதனெல்லையைக் கண்டு நமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச் சிவந்த அக்கினியை வளர்த்து ஆகுதி செய்கின்ற யாகத்தால் உண்டாகிய புகையையும் மிகுந்த பிராமணர்களின் கூட்டம், வேதம் ஓதுகின்ற திருமடங்களையுங் கண்டு குறைவாகிய தம்முடைய குலத்தை நினைந்து உள்ளேபோவதற்குப் பயந்து நின்றுவிட்டார்.

# திருநாளைப்போவார் புராணம்.

## விருத்தம்.

நின்றவரங் கெய்தரிய பெருமையினை நினைப்பார்முன்
சென்றிவையுங் கடந்தூர்சூ ழெயிற்றிருவாயிலைப்புக்கார்
குன்றனைய மாளிகைக டொறுங்குலவும் வேதிகைகள்
ஒன்றியமூ வாயிரமங் குளவென்பா ராகுதிகள்.

---

## வசனம்.

சிதம்பரத்தெல்லையில் நின்றுகொண்டிருந்த திருநாளைப் போவார் தாம் உள்ளேயடையக்கூடாத அக்கோயிலின் பெருமையை நினைப்பாராகி, முதலில் அந்த எல்லையைக் கடந்து ஊரைச் சுற்றியிருக்கும் மதிலின் திருவாயிலை யடைந்தார். அங்கே திண்ணைகள் பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம் வீடுகள்தோறும் ஹோமங்கள் செய்யப்படுகின்றன வென்று சொல்லிக்கொள்ளுவார். சுவாமியைப் பூசிக்கின்ற தில்லைமூவாயிரவருடைய மாளிகைகள் மூவாயிரமென்றார். வேதவிதிப்படி ஆகுதிசெய்யும் பிராமணர்களுடைய வீதியில் தாம் போகக்கூடாதபடியால், அதை நினைந்து தன் குலத்தை யிகழ்ந்து இங்கிருக்கலாகாதென்று அவ்விடம்விட்டு ஒரு குளத்தருகில் வந்து 'சுவாமி உன்னைப் பாராத ஜன்மத்தை யேன் படைத்தா'யென்று தரையில் விழுந்து புரண்டழுவார்.

ராகம் - ஸரஸாங்கி ; தாளம் - ரூபகம்.

## பல்லவி.

இந்தச்சடலம் வந்தவா றேதென்றறிகிலேன்-நான்
ஏதென்றறிகிலேன்.

அனுபல்லவி.

சந்ததமுந்தில்லை யம்பலத்தானைச்
சிந்தித்துமாயச் சிக்கறுக்காமல் (இந்தச்)

சரணங்கள்.

அங்கமலங்களைப் போக்கிடுஞ்சிவ
கங்கையிலாடிக் களங்கமறாமல் (இந்தச்)

ஆடும்நடனங்கண் டானந்தமாகிப்
பாடிப்படித்துப் பணிந்துகொள்ளாமல் (இந்தச்)

அஞ்சக்கரத்தை யெடுத்துருவேற்றி
வஞ்சப்பிறவியின் மயக்கறுக்காமல் (இந்தச்)

பாலகிருஷ்ணன்றொழும் பாதத்தைக்கும்பிட்டுச்
சீலமுள்ளமுத்தி சித்திபெறாமல் (இந்தச்)

ராகம் - கமாஸ்; தாளம் - திச்ரஏகம்.

பல்லவி.

கனகசபேசன்சேவடி நான்கண்டதில்லை - தில்லைக்
கனகசபேசன்சேவடி.

அனுபல்லவி.

கனகசபாபதியைக் கண்டபேரைக் கண்டால்போதும்
சனனமரண மோகந்தீர்ந்து-சிவனைச்சேரவே. (கனக)

சரணங்கள்.

மானிடசாதியில்பிறந்து மங்கயர்மோகத்தில்விழுந்து
தானுந்தவமுறையிழந்து தன்னரசுநாடாய்த்திரிந்து (கனக)

தகணகஜெம்தரி நம்தரி தோங்தோம் தரிகிடதாதா
ததிமிதகிடஜெணு கிடதக ததிகண தோமென்றாடிய-தில்லைக் (கனக)

அல்லும்பகலுமிந்த விஷயானந்தத்தில்மூழ்கி
அறிவுகெட்டமாடதுபோல் ஆனதுபொய்யோ
பல்லுயிரிலும்நிறைந்த பரமசிவஞானிகளே
பார்த்ததில்லைகேட்டுந்தில்லைக்கோபாலகிருஷ்ணன்கவிபாடிக் (கனக)

---

ராகம் - தந்யாசி ; தாளம் - ஆதி.

பல்லவி.

கனகசபாபதி-தரிசனம் ஒருநாள்-கண்டால் கலிதீரும்.

அநுபல்லவி.

ஜனகமகாமுனி கைதொழுதேத்திய
தினகரகோடி தேஜோன்மயமாகிய (கனக)

சரணங்கள்.

மனதிலொடுங்கியகல்மிஷம் போக்கும்
மாயப்பிணியதனைமறுவடி வாக்கும்
ஜனனமரணசமுசாரத்தை நீக்கும்
திருவடிநிழலிலேகூடிய யார்க்கும் (கனக)

சுருதிமுடிகளிலுஞ்சொல்லிக்கொண் டாடும்
தூயவெளியையொளியாகவே கூடும்
தருமநெறியுந்தவறுதுள நாடும்
ததிங்கணதோமென்றுதாண்டவ மாடும் (கனக)

பற்பலயோசனைசெய்வதுந் தொல்லை
பரகதியடையவுபாயமு மில்லை

அற்புதமாகவேதானொரு சொல்லை
அணியுங்கோபாலகிருஷ்ணன்பணியுந் தில்லைக் (கனக)

ராகம் - கரஹரப்ரியை ; தாளம் ; சாப்பு.

பல்லவி.

கட்டைகடைத்தேறவேணுமே. (கட்டை)

அனுபல்லவி.

கனகசபாபதி நடனங் கண்டு களிக்க வந்த நந்தன் (கட்டை)

சரணங்கள்

கட்டைகடைத் தேறட்டுமோ ஜன்மம்
கெட்டதல்லவோ யிட்டமறியேன் (கட்டை)

முத்தியளிக்கும் பத்தியிலேயென்
சிற்றம்பலவன் சித்தமறியேனே (கட்டை)

---

வசனம்.

தேகம்படைத்தால் சிவபக்தி பண்ணவேண்டுமென்று நந்தனர் சொல்லுகின்றார்.

தண்டகம்.

ராகம் - கரஹரப்ரியை ; தாளம் - ரூபகம்.

தேகம்வந்த-வாறு சொல்லவோ-சிதம்ப-ரேசனடியைத்
தினமுந்தொழு-திருப்பதல்லவோ.
இந்தவிஷயசுகத்தை நாடுமோ - பாவி
மனக்குரங்கு - யிருப்பிடங்காணும லோடுமோ
தில்லைத்தலத்தைக்கண்டு மாச்சுதே - உள்ளே

சென்றுநடன - தரிசனம்பண்ணமற் போச்சுதே
பறையனென்றஜன்மம் போகுமோ - பாழ்
வினையாலின்னம் - பாரில்வந்துபிறக்க லாகுமோ
அடிமையென்றுவந்தே னுய்யுமோ - ஒன்றையும்
கானறியே - னம்பலத் தெய்வமென்ன செய்யுமோ
பார்த்ததெல்லாமழிந்து தோணுமோ - கோ
பாலகிருஷ்ணன்-பணியும் பரமன் கருணை வேணுமோ.

---

## வசனம்.

சிதம்பரதரிசனம் கண்டபேர்க்கு ஜன்மமில்லை யென்பார்.

ராகம் - மோகனம்; தாளம் - ரூபகம்.

## பல்லவி.

தரிசனங்கண்டார்க்கு மறுஜன்ம மில்லை
வரிசையுடனம்பலவன் வாழ்கின்ற தில்லைத் (தரி)

## சரணங்கள்.

இரவுபகலிடைவிடாதேசரண பத்தி
இன்பமுறுமானந்தம் பொங்கிவரும் சத்திப்
பரவிவருமவனருகி லணிமாதி சித்தி
பணிந்துவந்துசிற்றம் பலத்தைவலஞ் சுற்றித் (தரி)

சொர்ப்பனமென்றிவ்வுலகம் தோன்றிவரும் வேதம்
சொன்னததுநீயென்ற படியாகும் போதம்
அற்புதமிருதங்கமொடு தாளவகை கீதம்
அனவரதந்திருநடன மாடிவரும் பாதம்(தரி)

அல்லும்பகலோயாது அடியார்கள் கோஷ்டி
அரகராவென்றமிர்த பானமதைப் போட்டித்
தில்லைவாழந்தணர்கள் கைபிடித்துக் கூட்டிச்
சிக்கெனவேதிரைதிறந்து பரவெளியைக் காட்டித் (தரி)

நஞ்சுண்டகண்டனுக்குக் கொன்றைமலர் சாற்றி
நல்லதிருச்சாந்தணியு மம்பிகையைப் போற்றி
குஞ்சிதபதந்தனது மனத்திலுரு வேத்திக்
கோபாலகிருஷ்ணன்றொழும் நடராஜ மூர்த்தி (தரி)

---

வசனம்.

நந்தனர், தனக்குத் தரிசனங்கொடுக்க அம்பலவாணர் எப்போது வருவாரோவென்று விசாரப்படுவார்.

இராகம் - ஜஞ்ஜூடி ; தாளம் - ஆதி.

பல்லவி.

எப்போவருவாரோ எந்தன்கலிதீர எப்போவருவாரோ.

அநுபல்லவி.

செப்பியதில்லைச் சிதம்பரதேவன் (எப்போ)

சரணங்கள்.

நற்பருவம்வந்து நாதனைத்தேடும்
கற்பனைகள்முற்றக் காட்சிதந்தாள (எப்போ)

அற்பசுகவாழ்வி லானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைக்காணேன் பொன்னம்பலவாணன் (எப்போ)

பாலகிருஷ்ணன்போற்றிப் பணிந்திடுமீசன்
மேலேகாதல்கொண்டேன் வெளிப்படக்காணேன் (எப்போ)

---

## துக்கடா.

ராகம் - ஜஞ்ஜூடி ; தாளம் - ஆதி.

வருவாரோ அருள் புரிவாரோ-எந்தன்
மனதுசலிக்குது நானென்னசெய்வேன்
அரகரசங்கர வம்பலவாணன்
ஆதரிக்காதிருப்பாரோ ஒருகால் (வருவாரோ)

## வசனம்.

நந்தனார், தான் சின்னசாதியானதால் வருவாரோ வாராரோ வென்று சஞ்சலப்படுவார்.

ராகம்-ஸுரடி ; தாளம்-ஆதி,

பல்லவி.

வாராமலிருப்பாரோ-ஒருகால்-வருவாரோவடியேன்.

சரணங்கள்.

பாராமலிருப்பேனோ பதஞ்சலிமுனிக்குப்பொற்
பாதங்கொடுத்தபர மேசுவரனுமென்று (வாராம)

கனவினில்வந்து கழனிமுழுதும்நட்டு
மனதுமகிழ்ந்தென்னை வாவென்றுசொன்னவர் (வாராம)

கலக்கமறவேயவர் காலுக்குக்கும்பிட்டுக்
குளத்தங்கரையில்நின்று கூப்பிடும்வேளையில் (வாராம)

அல்லலறுத்துப்பர மானந்தமேதருந்
தில்லைத்தலத்தைக்கண்டு தெரிசனம்பண்ணியும் (வாராம)

வசனம்.

நந்தனார், இதுவரையில் வாராதபடியால் இனிமேல் தில்லைத்தலத்தை விடாமற் சுற்றிவந்து தேகத்தைத் தள்ளுவோமென்று நிச்சயம்பண்ணுவார்.

ராகம்-ஜஞ்ஜுடி; தாளம்-ஆதி.

பல்லவி.

இன்னம்வரக்காணேன்-என்னசெய்குவேனவர் (இன்ன)

சரணங்கள்.

இன்னம்வரக் காணேன் தில்லைப் பொன்னம்பல வாணன்பண்ணைகட்
டென்னையங்கேவாவென்று சொன்னவர் மறந்தாரே (இன்)

சொல்லும்பொருளுமிந்தச் சோதியேமகிழ்ந்துவாழுந்
தில்லையைவிடாமற்சுற்றித் தேகத்தைமாற்றிக்கொள்வது நன்று (இ)

பாலகிருஷ்ணன்போற்றும்-பாதச்சிலம்புகுலுங்கக்
கோலமுடனடனங்கண்டேன்-குறைகள்தீர்ந்ததென்று சொல்லவுந்
[தான் (இ)

வசனம்.

நந்தனார், இப்படிச் சொல்லிக்கொண்டு கண்ணீர்சொரிந்து புரண்டழுவார்.

சிந்து.

கீழேபுரண்டழுவார்-ஒன்றும்-கேள்விமுறையில்லையோநாதா
வென்றேதலைகுனிவார்-எந்தன்-வேதனையைக்கண்டாதரிக்குந்
தெய்வங்கிடையாதோ-பாவி-சித்தந்தெளிய விரத்திதந்து
வாவென்றழையாரோ-விண்ணில்-வானவர்கள் போற்று மூனமிலாக்
கனகசபைநடனங்-கண்டு-காயங்களித்திட நானடியேன்
வருந்தித்துதியேனோ-எந்தன்-வாணுளுருகுது வீணாக
அடடாவி தென்ன ஜன்மம்.

### விருத்தம்.

சாதி பேதமுங் குணங்குறி யாவையுந் தள்ளி
ஆதியாகநான் கூவினேன் திசைதனி லணைந்தும்
மாத வம்புரி தொண்டர்கள் பணிதிரண் மறைக்கக்
கோதிலா வொரு தொண்டுமிப் பாவிக்குக் குறையோ.

### வசனம்.

நந்தனார், சுவாமி உன்னைச் சரணாகதனென்று நம்பி வந்து துன்பப்படலாமோ, சிவனே சிவனேயென்று பெருங் குரலிட்டுத் தனக்குஜன்மம் போதும் போதுமென்று சொல்லுகின்றார்.

ராகம்-மாதநாமக்ரியை ; தாளம்-ஆதி.

### பல்லவி.

போதும்போதுமைய்யா-எடுத்தஜன்மம்-போதும் போதுமையா.

### சரணங்கள்.

மாதவமுனிவர்கள் வந்திக்குந்தில்லை
வனத்திலனுதினமும் வளருமம்பலவா (போது)

கோத்துநெளியும்புழு வூத்தைநரம்புகளும்
நாத்தமலங்களூறு மூத்திரக்கும்பியும் (போது)

சந்ததமடியேன் யந்திரம்போலே
வந்தெழுவகையிலும் நொந்துமிகுந்தேன் (போது)

கொழுத்த ஆணிகள்போலே யுறுத்தும் கொடியவன்னை
வயிற்றிலிருந்துபடும் வருத்தமென்னசொல்வேன்(போது)

மாதர்கள்மீதினில் மையல்கொண்டேங்கியுள்
வேதனைகொண்ட வெறும்பயலானேன் (போது)

அண்ணல்கோபால கிருஷ்ணன்பணியுந்திரு
வம்பலமேவும்பொன் னம்பலவாணு (போது)

வசனம்.

ஜன்மமே கஷ்டம், அதிலும் புலேயனுய்ப் பிறப்பது மிகவும் நஷ்டம் என்று நந்தனர் சொல்லுகின்ருர்.

ராகம் - கரஹரப்பிரியா ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தஜன்மம்வேண்டாம்-இனி எந்தஜன்மம் வந்தாலும்வரட்டும்

அநுபல்லவி.

நந்திநடுவினில் மந்திரங்கள்சொல்லி
வந்தனைகள்செய்து சிந்தைமகிழாத (இந்த)

சரணங்கள்.

வேதமறிந்தவர் பாதம் பணிந்தவர்
போதமடைந்திடாத் தீதடைந்தேன்பாவி (இந்த)
பாவிப்பறையாநீ தூரவிலகென்று
ஆவிதவித்திடப் பாரிலுரைத்திடும் (இந்த)

ராகம் - கௌரிமனோஹரி ; தாளம் - சாபு.

பல்லவி.

எப்போதொலேயுமிந்தத் துன்பம் - ஜகதீசன்
கருணையிருந்தாலல்லோ இன்பம். (எப்போ)

அனுபல்லவி.

கர்ப்பவாசதுக்கம் ஆனாலும் கேடு
கௌரிமனோகரனைத் தினம் நாடு (எப்போ)

சரணம்.

ஆசையுடனலையாதவிடங்களுண்டோ
அனவரதமும் சுகலேசமிதில் தெரியாமல்போனதன்றோ
கோபாலகிருஷ்ண-தாசன்தொழும்நடராஜமூர்த்தியைப்
பூசைகள்செய்யாமற் போனது பாசமறவழியில்லை
பஞ்சகோசங்களை நானென்றுநம்பினது (எப்போ)

---

ராகம் -ஆஹிரி ; தாளம்-ரூபகம்.

பல்லவி

தில்லைவலஞ்சுற்றினார் - சிதம்பரத் - தெல்லைவலஞ்சுற்றினார்.

அனுபல்லவி.

தில்லைவலஞ்சுற்றினார் மூதேவருமறியாத
எல்லைவாசல்கடந் துள்ளிருளறவேண்டித் (தில்லை)

சரணங்கள்.

சாதிகுறையைத்தானே சந்ததமுநினைந்து
வேதனைகொண்டுள்ளம் வெதும்பியேவாடிப்
பாதிப்பிறையணியும் பரமசிவனைக்கண்டு
போதமடைந்துபரி பூரணமாகத் (தில்லை)

மோகவலைக்குட்சிக்கி முழுமூடனாகவே
போகமேநிலையென்று புத்திகெடாமலுமைப்
பாகனைவேண்டிநற் பரவசமாகியே
ஏகரசத்திற்றன்னை யிருத்திச்சுகிக்கவே (தில்லை)

ஓராறுதாண்டியே யுண்மணிக்கோட்டைகள்
சீராறுங்காணுத சிதம்பரரகசியம்
ஈராறுகால்கொண்டு இருத்திப்புலனைந்தும்
பேராறுபெருகியே பெருவெளிகாணத் (தில்லை)

---

வசனம்.

இப்படித் தில்லைத்தலத்தை விடாமல் சுற்றிவந்தால் தன்னிடம் சுவாமி வருவாரென்று மனத்தைப்பார்த்துச் சொல்கின்றார்.

ராகம்-யமுனகல்யாணி; தாளம்- ஆதி.

பல்லவி.

வருவார்வருவார்மனமே நீ மயங்காதிரு சொன்னேன் சொன்னேன்.

சரணம்.

வேணதுதருவார் கருணைபுரிவார் தில்லைத் திருவம்பலவர்
பரகதியுந் தருவார் சாதி பறையனென்று பாரார் நீயதை
உறுதிகொள்ளவேணும் அன்புடனே
அரகரவென்றொரு தரஞ்சொன்னால்போதும் (வருவார்)

---

வசனம்.

நந்தனர், தன்னை இரட்சிக்கும் சமயம் இதுதான் என்று சொல்லுகின்றார்.

ராகம்- தன்யாசி ; தாளம்- ஆதி.

பல்லவி.

இதுநல்ல சமயமையா-இரட்சிக்க-இதுநல்ல சமயமையா.

சரணங்கள்.

இதுநல்லசமயமையா என்னை ரட்சித்தாலும்
ஈச மகேச நடேச சபேச (இதுநல்ல)
பாலகிருஷ்ணன்போற்றும் பாதங்களைக்காட்டிச்
சீலமுள்ளமுத்தி சேருவதற்காக (இதுநல்ல)

---

வசனம்.

நந்தனர், இவ்வளவுசொல்லியும் சுவாமி இரங்காமல் போக வேண்டியதென்னவென்று சொல்லுகின்றார்.

ராகம்-பேஹாக் ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

இரக்கம்வாராமற் போன தென்ன காரணம்சுவாமி.

அனுபல்லவி.

கருணைக்கடலென்றுன்னைக் காதில்கேட்டுநம்பிவந்தேன். (இ)

சரணங்கள்.

பழியெத்தனைநான்செய்யினும் பாவித்திடுஞ்சிதம்பரமென்று
மொழிகற்றவர்வழிபெற்றவர் கனகசபாபதி யேயின்னும் (இ)
ஆலமருந்தியண்டருயிரை யாதரித்தவுன்கீர்த்தி
பாலகிருஷ்ணன்பாடித்தினமும் பணிந்திடும்நடராஜமூர்த்தி (இ)

---

கலித்துறை.

அன்று மூவகை யங்கியில் வேள்விகள் தொடர்ந்தும்
குன்ற லாத்தவப் புண்ணிய மாமலை குவித்தும்
ஒன்று மேற்பவர்க் குதவியும் வருபவர்க் கன்றி
மன்று ளாடியின் பாதத்தில் மனங்கொள வருமோ.

---

வசனம்.

நந்தனர், மகாபுண்ணியசாலிகளுக்கு முக்திவருமேயன்றித் தனக்கு வாராதென்று சொல்லுகின்றார்.

கண்ணிகள்.

ராகம்- தன்யாசி; தாளம்- ஆதி.

சாதியில்தாழ்ந்திடும் புலையனுக்கும்பர கதியோ-வேத
சாஸ்திரநான்கினு மோதறியாதது விதியோ
நண்டுநத்தைகளை வதைசெய்தருந்திய தேகம்-மன்றுள்
நடனதரிசனங் காணவென்றாலதி மோகம்
எந்தவழியைக்கண் டடேறுவது ஞாயம்- ஜக
தீசனுக்கன்றோ தெரியுமந்தவு பாயம்
சிதம்பரம்போவே னென்றுரையாத பாவி- இந்த
ஜன்மமெடுத்து வீணாகத்தவிக்குதென் னாவி.

வசனம்.

நந்தனர், இப்படி நான் ஈனசாதியாயிருந்தாலும், உம்முடைய சரணாரவிந்த பத்தியை மறந்தவனல்லவென்று சொல்லுகின்றார்.

ராகம்- மணிரங்கு; தாளம்-ரூபகம்.

பல்லவி.

எப்படிக் கெட்டாலுமுந்தன் பொற்பதம்மறவேனையா.

சரணம்.

அற்புதமாகியதில்லை யம்பலவாணரேயென்
சொற்பனத்தி லும்மையன்றி

மெய்ப்பொருளவையும்வேண்டேன்
தப்பிதமெத்தனைசெய்யினும்
கைப்பிடித்து ஆண்டுகொள்ளும் (எப்படி)

வசனம்.

நந்தனார் தன்னைஜாதியில் தாழ்ந்தவனென்று அம்பலவாணர் தள்ளிவிடாமல் ஆட்கொள்ளும் நிச்சயத்தை நம்பிக்கையோடு தன் மனத்தைப்பார்த்துச் சந்தேகத்தால் சஞ்சலப்படாமலிருக்கத் தேற்றிவைப்பார்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

இவ்வண்ண மிரவுபகல் வலஞ்செய்தங் கெய்தரிய
வவ்வண்ணம் நினைந்தழிந்த வடித்தொண்ட ரயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றார் மன்றுள்நடங் கும்பிடுவ
தெவ்வண்ண மெனநினைந்தே யேசறவி னொடுந்துயில்வார்.

வசனம்.

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வலம்வந்து கொண்டு உள்ளே போகக்கூடாத தன்மையை நினைந்து வருத்தப்பட்டயர்வுபொருந்திய நந்தனார், கனகசபையில் ஆடுகின்ற நடனத்தை எப்படி தரிசிக்கலாமென்று விசனத்தோடும் நித்திரைசெய்து மறுபடியும் எழுந்து சொல்லுகின்றார்.

ராகம்- கீரவாணி ; தாளம் - மிச்ரஏகம்.

பல்லவி.

இன்னமும் ஸந்தேஹப்படலாமோ

அனுபல்லவி.

பொன்னம்பலந்தனில் தாண்டவமாடிய
பொற்கழலிணையில் வைக்கத்தெரிந்த நீதான் (இன்)

சரணம்.

அன்னமயமெனும்கோசம்தானே-அந்தணர் முதல்புலையர்வரைக்கும்
பின்னமறவேதோணுதே-இந்தப் பேதமது காணேன்
தன்னையறிகிறதவமேபெரிதென்று - தரணியில்கோபாலகிருஷ்ணன்
சொன்னதெல்லாம்மறந்து-இந்தமாயச் சுழலிலேவீழ்ந்தலைந்தாய்சிவ
[சிவ நீ (இன்)

ராகம்- கன்னடபியாக்; தாளம்- ஆதி.

பல்லவி.

விருதாஜன்மமாச்சே வந்தும் விருதா ஜன்மமாச்சே

அனுபல்லவி.

சதாகாலமும்சந் நிதானத்திலிருந்து நிதானம்பெறாமல் (விருதா)

சரணங்கள்.

முத்தியளித்திடும் மூர்த்தியைக்கண்டு
பத்தியைப்பண்ணிப் பதமடையாமல் (விருதா)

பொற்கழலசையப் பொதுவிலிருந்து
தக்கவராடுந் தன்மையைப்பாராமல் (விருதா)

தில்லைக்கதிபதி தெரிசனங்கொடுத்து
எல்லையில்லாவென் றிரங்கியழைத்தும் (விருதா)

ராகம் - தேவகாந்தாரி ; தாளம் - ஆதி.

பல்லவி.

எந்நேரமுமுந்தன்-சந்நிதியிலேநா-னிருக்கவேணுமையா

அநுபல்லவி.

தென்னஞ்சோலைதழைக்கும் தென்புலியூர்
பொன்னம்பலத்தரசே யென்னரசே (எந்நே)

சரணங்கள்.

திசையெங்கினும்புக ழுஞ்சிவகங்கையும்
தேவசபையுஞ்சிவ காமி தரிசனமும்
பசியெடாதுபார்த்த பேர்க்குக்கலக்கங்கள்
பறந்திட மகிழ்ந்துன்னைப் பாடிக்கொண்டு (எந்நே)

பஞ்சாக்ஷரப்படி யுங்கொடிக்கம்பமும்
கோவிலழகும்அரி தானரகசியமும்
அஞ்சல்கூறும்வீர மணிகளோசையும்
அந்தக்கரணமயக்கந்தீர்ந்துபாடிக்கொண்டு (எந்நே)

சீலமருவும்தெரு வுந்திருக்கூட்டமும்
தேவருலகில்கிடை யாதவதிசயமும்
பாலகிருஷ்ணன்பணியும்பாதம் பவமெனும்
பயங்கள்தீர்ந்துமலர்கள் தூவித்தொழுதுகொண்டு (எந்நே)

வசனம்.

நந்தனார், தனது பதவிக்கு யோக்கியமல்லவென்று தள்ளுவாரோ? கொள்ளுவாரோ? அப்படித் தள்ளினாலும் தில்லையிலேதானே என் தேகத்தை விடுவதேயன்றித் திரும்பிப் போகமாட்டேனென்று சொல்லிப் புலம்புவார்.

ராகம்-புன்னாகவராளி ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

தள்ளுவாரோ-எந்தனைக்கைக்-கொள்ளுவாரோ

சரணங்கள்.

தள்ளிவிட்டால் நான்போகேன் தனித்திருக்குஞ் சமயமல்ல
அள்ளிவிட்டே னன்பையெ னம்பல வாணனொருகால் (தள்)

ஈனதினதென்றபிமான மிச்சையறும் நிஷ்டைபண்ணி
மனமிறந்த தூவெளியில் மருவாத பாவியென்று (தள்)

நாறுமிந்தப் பொய்யுடலை நாளையெண்ணி நான்சுமந்து
தூறுபட்ட துன்பமெல்லாந் தொலைந்ததென்று இங்கேவந்தும் (தள்)

பாலகிருஷ்ணன் தேடிவரும் பாதமலர் நான்காணேன்
வேல்விழியார் மோகங்கொண்ட விவேகமற்ற மூடனென்று (தள்)

சிந்து.

அடடா இதென்னஜன்மம்-என்று அத்தனூறுமெல்லை சுற்றிவந்தார்
இரவும் பகலோயார்-இதை-ஈசன்கண்டுவிசுவாசமுடன்
பாலகிருஷ்ணன்பணியும்-திருப்-பாதமுள்ளதில்லை நாதனவன்
கனவிலுருவாகி.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

இன்னறரு மிழிபிறவி யிதுதடையென் றேதுயில்வார்
அந்நிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெலாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார்.

வசனம்.

இப்படி நந்தனார், இரவுபகலோயாமல் தில்லைத்தலத்தைச் சுற்றிவருவதால் தேகம் வருத்தமடைந்து வருத்தத்தினால் மயங்கிச் சாய்ந்து நித்திரையடைந்தார். அந்த நித்திரையிலே நடராஜமூர்த்தி வந்து காட்சிதந்து சொல்லுவார். எமதன்பிற்சிறந்த நந்தனாரே! உம்மிடத்தில் நமது பத்தர்களாகிய வேதியர்களை வரச்சொல்லுவோம். அவர்கள் முன்பாக நீர் அக்கினிப்பிரவேசமாகியெழுந்து வேதியர்களுடனே சபாப்பிரவேசம் பண்ணுமென்றுரைபகர்ந்து ஐயன் அந்தர்த்தானமானார். நந்தனார் கனவில் காட்சியானதைக் கண்டு களித்து விழித்தெழுந்து அளவில்லாத சந்தோஷங்கொண்டு நன்றியறிந்து சுவாமியைத் தோத்திரம்புரிந்து சொல்லுகின்றார்.

---

ராகம் - ஹரிகாம்போதி ; தாளம்-திசாம்பு.

பல்லவி.

பார்க்கப்பார்க்கத் திகட்டுமோ-உன்பாததரிசனம்
பார்க்கப்பார்க்கத் திகட்டுமோ

அனுபல்லவி.

ஆர்க்குமானந்தம் பொழியுந்தில்லைத் தாண்டவராயா (பார்)

சரணங்கள்.

தில்லைமூவாயிரமுனிவர்கள் தினமும்பூசித்திடும்பாதம்
சிற்சபையில்திந்திமிதிமி தோமென்றாடியபாதம்
எல்லையில்லாதவின்பம் எந்தனுக்கருள்செய்திடும்பாதம்
இரவும்பகலுமாயன்கோபாலகிருஷ்ணனேத்தும்பாதம் (பார்)

ராகம் - ஜஞ்ஜூடி ; தாளம் - ஆதி.

பல்லவி.

சந்நிதிவரலாமோ-சுவாமி-தரிசனந்தரலாமோ (சந்நிதி)

சரணங்கள்.

இல்லறவாழ்வாம் பனிமூடி
இருந்தேனன்றோ மிகவாடி
அல்லும்பகலும் கொண்டாடி
அறியேன்கனக சபைநாடிச் (சந்நிதி)

வீதியிலேசற்றே வந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துக்கொண் டிருந்தேன்
சாதியிற்றாழ்ந்தவனென் றறிந்தேன்
தனித்திருப்போமென்றிங்கே வந்தேன் (சந்நிதி)

காலால்வீசிக்கனல் மூட்டிக்
கலைமதிமண்டலமே லோட்டிப்
பாலாறுபெருகவேயெனைக் கூட்டிப்
பார்த்ததுமில்லைநான் தோட்டி (சந்நிதி)

வசனம்.

நந்தனார், தான்கண்ட சொப்பனத்தைக் கொண்டாடுவார்.

ராகம் - நாதநாமக்ரியை ; தாளம் - ஆதி.

பல்லவி.

சொப்பனங்கண்டுகொண்டேன்-அதிசய
சொப்பனங்கண்டுகொண்டேன்

### அனுபல்லவி.

சொப்பனங்கண்டுகொண்டேன் எல்லாங்கற்பனையென்றறிந்தேன்-வேத
தற்பதவாக்கியமேயுருவாகிய வற்புதநடனம்புரிய இன்று (சொ)

### சரணங்கள்.

அம்பிகைமணவாளன் மான்மழு வணிந்திடுஞ் செந்தோளன்-செம்பொ
னம்பலந்தனிலாட மத்தளம்போட மறைபாடக் கொண்டாட (சொ)

மண்டலத்தோராசைதீர்ந்து மண்டபமணியோசைநேர்ந்து
மனதுகனிந் துருக மறலி கருக வரந் தருக வருக (சொ)

மங்கையர்மோகமில்லா தாரையும் வருந்தியழைக்கும் பொல்லாதாகிய
மாயப்பிணியைவெல்ல மருந்து சொல்ல வழியிற்செல்ல நல்ல (சொ)

பண்ணவர்முரசடிக்கப் பதஞ்சலி வியாக்கிரர்பதந்துதிக்க-மாயன்கோ
பாலகிருஷ்ணன்களிக்க வுடுக்கையெடுக்கவுலகந் துறக்கச் சிறக்கச் ()

### வசனம்.

நந்தனர், தான் கண்ட கனவு நிஜமோ பொய்யோ வென்று சந்தேகப்படுவார்.

ராகம் - சூர்யகாந்தம் ; தாளம் - சாபு.

### பல்லவி.

கனவோநினைவோ கண்டதுவின்னே

### அனுபல்லவி.

மனதிலுறுதிகொள்ள வழியொன்றுங்காணேன் (கனவோ)

### சரணங்கள்.

சித்திரைதனிலொரு சித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்று நத்திப்பேசினதுண்டு (கனவோ)

ஆருமிகழ்ந்துதள்ளும் நாறும்புலையனென்னை
வாரும்பரமபதஞ் சேருமென்றழைத்தது (கனவோ)
கிட்டநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டிக்கட்டளையிட்டது (கனவோ)

வசனம்.

நந்தனர், தான் கனவில் கண்டதுபோல சுவாமி வருவாரோ வாராரோ வென்று சஞ்சலப்படுவார்.

ராகம்-சாம ; தாளம்-ஆதி.

பல்லவி.

வருவாரோ வரந் தருவாரோ-எந்தன்
மனதுசஞ்சலிக்குதையோ யெப்போது (வருவா)

அனுபல்லவி.

திருவாருந்தென்புலியூர் திருச்சிற்றம்பலவாணர்
குருநாதனாகவந்து குறைதீர்க்கக்கனவுகண்டேன்
இருவினைப்பிணிகளைக் கருவறுத்திடுகிறேன்
பயப்படாதேயென்று சொல்ல (வருவா)

சரணங்கள்.

மறையாலும்வழுத்தறியா மகிமைபெறுநடராஜன்
நறையூறுஞ்சேவடியை நம்பினவனல்லவோ
அனுதினஞ்சிவ சிதம்பரமென்ற
வடிமையென்றருள் புரிந்திடவிங்கே (வருவா)
பணிமார்புஞ்செஞ்சடையும் பார்க்கமனமுவந்து
பணியுங்கோபாலகிருஷ்ணன் துதிபரமதயாநிதி
பவக்கடலடிக்கடி பெருகுதுநிலைக்குமோ
மலைக்குது கரையேற்ற (வருவா)

வசனம்.

நந்தனார், இப்படி அநேகவிதமாய் வருவாரோ வாராரோ வென்று பலவிதமாய்க் கொண்டாடுகின்றார்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

இப்பிறவி போய்நீங்க வெரியினிடை நீமூழ்கி
முப்புரிநூன் மார்பருடன் முன்னணைவா யெனமொழிந்த
வப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா னாரருளி யம்பலத்தே மேவினார்.

வசனம்.

நந்தனார், கனவிலேவந்து சொல்லிய நடராஜமூர்த்தி தில்லை மூவாயிரம்பேர்கள் கனவிலே சொல்லுவார். பத்தர்களே! எனக்கு மிகவும் பிரியமுள்ள ஒருவர் திருநாளைப் போவாரென்னும் நாமத்தைக்கொண்டு என்னைக் காண வேண்டுமென்று தன்னைக் காணிக்கைகொண்டு சாதியிற் றாழ்ந்தவனென்று பயந்துகொண்டு என்னைத்தவிர மற்ற தெல்லாம் அநித்தியமென்று பக்தி பண்ணிக்கொண்டு முக்தி யடையவேண்டுமென்று தில்லையைச்சுற்றிக்கொண்டு தெற்குக் குளத்தங்கரையில் நின்றுகொண்டு இருக்கிறார். அவரை என்னைப்போல் நினைத்து நீங்களெல்லோரும் போய் அக்கினியில் மூழ்கச்செய்து அழைத்துவாருங்களென்று சொல்லிச் சுவாமி மறைந்தார். இப்படிக் கண்ட கனவை மூவாயிரம்பேர்களும் பேரம்பலவாசலில் வந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுகின்றார்கள்.

## கண்ணிகள்.

ராகம்-சங்கராபரணம் ; தாளம்-அட.

அதிசயமொன்றுகேளப்பா தீட்சதரே
அர்த்தராத்திரிப்போதி லென்னே-என்றன்
மதிபரவசமாகத் துதிமருவுமம்பல
வாணன்கனவில் வந்தா ருன்னே
வாஸ்தவமெனக்குமிந்த வண்ணமாகக்கனவில்
வந்துரைத்தாரறிந்தேன் நாடி-உத
யாஸ்தமயமாகு முன்னமருட்படிக்கு
அமைப்பதுத்தமமென்றோ ரோடி
அப்போதங்குவந்த வப்பண்ணதீட்சதர்
ஆமாமிதுவும்நிச் சயந்தான்-என்கோன்
செப்பியசொற்படிச்செந்தீவளர்த்திடச்
செய்யவேண்டியவ சியந்தான்
அவசியமென்கிறீர் காரியந்தெரியாமல்
ஆருக்கடுக்குமோர் புலையன்-சிறந்த
தவச்சிரேஷ்டர்சூழுந் தலத்தின்வருவதற்குத்
தலைபத்தோவவன்வந்தா லலைவன்
பத்தியுள்ளவனே பரமனுக்குயிர்த்தோழன்
பதஞ்சலிபுலிப்பாதர் சாட்சி-சிவன்
சித்தத்தின்படிசெய்து ஜனனக்கரைகடப்போம்
தெளிவீர்நீங்களிந்த சூட்சி
என்றாரங்குசிவ சங்கரதீட்சதர்
இன்னமுந்தாமச மேதோ-நீசன்
ஒன்றுந்திருச்சந் நிதிக்குவருவதற்கு
ஒருகாலுங்கட்குத் தகாதோ

சொல்லுமென்றாரவ ராமென்றாருங்கட்குச்
சித்தத்திலுள்ளசந் தேகம்-தெளிய
அல்லும்பகலுமோ யாமலேசாஸ்திர
மாராய்வதற்குமனோற் சாகம்
தரும்படிபேசிச் சந்தேகந்தெளிவது
தக்கதென்றுரைத்த மொழியே-நம்பிப்
பெருங்கூட்டமாகவே கூடிச்சென்றாரவர்
பேதமறத்தக்க வழியே.

---

## வசனம்.

தில்லை மூவாயிரவர்கள் சாஸ்திரிமார்களிடத்திற் சந்தேகந் தெளிதல்.

## விருத்தம்.

மறைக்கிழவரிவ்விதஞ் சென்றார்களாங்கே
மனுவிக்கியானிக ளாசீர்வாதஞ்செய்து
வந்தகாரியமேதோ வுரைப்பீரென்ன
மன்றுளாடுவார்தங்கள் கனவிற்றோன்றிக்
குறைந்தமதிப்புலைச்சாதி வந்துதித்தோன்
கோதிலானந்தனென்போ னவனல்லன்பன்
கூறுமிவ்வூரெல்லைவலம் வருவான் நாளை
கோணர்ந்தவனைத்தீமூழ்கச் செய்தேயப்பால்
முறைமையொடுசந்நிதியில் நம்முன்னுக
விடுங்களென்றருளிச்செய் தவர்மறைந்தார்
மூதுணர்ந்தோர்க்கிதுதெரியச் சொல்லவந்தோம்
மொழியுமுத்தரம்யா தென்றார்நீதி

அறிந்தவன்றே ராமந்தப்படிக்கேசெய்வ
தழகாகுமென்றனர்பின் மகிழ்ச்சியாலே
அந்ததில்லைமாநகரத் தெல்லைசுற்றி
யாடுவார்நந்தனுரைத் தேடுவாரே.

## திருநாளைப்போவார் புராணம்.

### விருத்தம்.

தம்பெருமான் பணிகேட்ட தவமறையோ ரெல்லாரும்
அம்பலவர் திருவாயின் முன்பச்ச முடனீண்டி
யெம்பெருமா னருள்செய்த பணிசெய்வோ மென்றேத்தித்
தம்பரிவு பெருகவருந் திருத்தொண்டர் பாற்சார்ந்தார்.

### வசனம்.

தமது பிராணுகிய சபாநாதரிட்ட கட்டளையைக் கேட்ட தவம்பொருந்திய பிராமணர்களெல்லாரும் அம்பலவாணரது கோயிற்றிருவாயிலின் முன்பு கூடிப் பயத்தோடு நம்முடைய ஆண்டவ ரருள்செய்த வூழியத்தைச் செய்வோமென்றுவணங்கித் திருநாளைப்போவாரைத் தில்லை மூவாயிரவர்கள் தேட வருகின்றூர்கள்.

ராகம் - நாதநாமக்ரியை ; தாளம் - ஆதி.

### பல்லவி.

தொண்டரைக் காண்கிலேமே - தில்லையில்வந்த
தொண்டரைக் காண்கிலேமே

### அனுபல்லவி.

அண்டசராசர மெங்கும்படியளந்து
மன்றுளாடிய மன்னவர்க்கடிமைத் (தொண்)

சரணங்கள்.

சொல்லும்பொருளுமற்றுச் சோதிமயங்கொண்
டல்லும்பகலுமற்ற வம்பலவாணன் (தொண்)
அஷ்டதிசையும்பரி பூரணமாகவே
மட்டிலாதுவளர்ந் தோங்கியநாதன் (தொண்)
வாசியடங்கிநடு வணைவழிகண்டால்
தேசிகவடிவுடன் தெரிசனந்தந்திடும் (தொண்)
பாலகிருஷ்ணன்பணிந் தேத்தியபாதன்
கோலச்சிலம்பணியுங் குண்டலநாதன் (தொண்)

ராகம் - ஹிந்துஸ்தான் காபி ; தாளம் - ஆதி.

பல்லவி.

திருநாளைப்போவார் தெரிசனங்காணத்
தில்லைமூவாயிர முனிவர்கள்வருகிறார் (திருநாளை)

சரணங்கள்.

பத்திவெள்ளமது கரைபுரண்டோடும்
பரமானந்தக் கடல்முழுக்காடும் (திருநாளை)
அரகரசங்கர சிவனென்றுசொல்லும்
அநித்தியசடதுக்க மாயத்தைவெல்லும் (திருநாளை)
அடியவரேமெத்தப் பெரியவரென்று
அம்பலவாண ரருள்விடைகொண்டு (திருநாளை)

இதுவுமது ; சிந்து.

ராகம் - சௌராஷ்ட்ரம் ; தாளம் - ஆதி.

பல்லவி.

தேடித்தேடித்திரிந்தார் பாரும்-நந்தனர்தம்மைத்
தில்லைமூவாயிரவர் யாரும்.

## அனுபல்லவி.

நாடுஞ்சதுர்வேதப்பிர காசனை
நங்கைசிவகாமிப்பிரா ணேசனை
ஆடும்பதநடனச பேசனை
ஆவலாகத்தொழுவோர்க்கருள் நேசனைத் (தேடி)

## சரணம்.

தண்டாமரைமலர்த் தடமும் - மாதர்களாடிக்
கொண்டானடித்திடு மிடமும் - அன்னமளிக்க
உண்டானநங்கூறு மடமும் - சோரர்பரவுஞ்
சண்டாளர்வாழுங்கா டிடமும் - அன்றிச்ருத்திர
சாதிமுதலானபல வாடை - பல்லாண்டு
ஓதியுலாவிவரு மேடை - மனுவிக்கியான
நீதியுணர்ந்தோர்தெரு மாடை - இன்னமும்பல
மாதிரிகளாகுந்திண்ணை மேடை - உன்னதமாகக்
கொங்குமிகுத்தரு கெங்குமணத்திடுஞ் சோலை - கருப்பஞ்சோலை
தங்குமுயர்ந்து கதித்திடும்வாழையின் சோலை - தாழையின்சோலை
தெங்குமிருப்பையுமொன்று பொருந்தியசோலை - மாவினச்சோலை
துங்கமதான பலாக்கமுகோங்கிய சோலை - மற்றுளசோலை
எங்குஞ்சுற்றிப்பார்த்து மறையோர்கள்
தங்கள் தங்க ளங்க மேங்க நதிதவழும்
பொங்கரவணிந்தசிவ
சங்கரன்கிருபையிதென்றே யோங்கக் கூக்குரலிட்டுச்
சங்கையறச்சென்னியிற்க
ரங்களைக்குவித்தெங்களைத் தாங்க மனமுவந்து
அங்கேயெங்கள்பங்கினிலி
ருந்து மேழைகள்வருத்தம் நீங்கக் கிருபைசெய்வதற்கு

உன்னதேகடனென்றுவந்துகொண் டாடி
உரியவேதமந்தி ராதிகள் பாடி
முன்னஞ்சொன்னநந்த னார்வரவை நாடி
மூளுங்கோடைக்காற் றெனவிரைந் தோடித் (தேடி)

வசனம்.

இந்தப்பிரகாரம் தில்லை மூவாயிரவர்களுந் தேடி அலு த்து ஓரிடத்தில் யாவருங்கூடிச் சுவாமியைத் துதிசெய்வதாக நிச்சயஞ்செய்து தோத்திரஞ் செய்கின்றார்கள்.

ராகம் - கல்யாணி ; தாளம் - சாபு.

பல்லவி.

உனதுமகிமையை ஒருவருமறியார்
உலகிலுள்ளோ ரையனே.

அனுபல்லவி.

பன்னகசயனனும் பதுமாசனவேதனும்
பார்க்கவவர்க்கு மெட்டாத யோகனே
பகரரியமலை மகளோர் பாகனே (உனது)

சரணங்கள்.

கனவினிலேவந்தெங் களுக்குச்சொன்ன அந்த
காரணமறிந்ததி காலையிலே யெழுந்த
இனத்தார்நாங்கள்யாரு மிசைந்தொருமித் திந்த
எல்லைமுழுதுந்தேடி யிளைத்தோமெங்களுக் கந்த
இணையில்லாதநந்த னாரு மகப்பட
வில்லையென்ன செய்வோம் ஸ்திரப்பட(உனது)

அடையலர்திரிபுர மனலாகவே முடித்த
வன்பாகமான்மழு வங்கையிலே பிடித்த
விடைப்பாகனேகாளி வெட்கும்படி நடித்த
மெய்யாதுயர்தவிர்த்தா ளையாவென்றே படித்த
வாறுநீயறிந்தருள் செய் யையனே
வனஜநிகர்பத சரணத் துய்யனே(உனது)
அன்னைசிவகாமி யனுதினம்வளர் தில்லை
யம்பொன்னகர்வருவோர்க் காங்கொருதுய ரில்லை
உன்னையன்றியுலகத் துக்குப்பொரு ளில்லை
யுத்தமனேயெங்கட் குரியதுணையு மில்லை
ஓதுநந்தனர் தம்மைவரச் செய்யும்
ஊழின்வினைதவிர்த் தவர்க்கு அருள்செய்யும்(உனது)

---

வசனம்.

இவ்விதமாகச் சுவாமியைத் துதித்துத் தில்லை மூவாயிர வர்களனைவரும் நந்தனரைத் தேடி யலுத்துவருமார்க்கத் தில், ஒருபுறமாக நின்றுகொண்டிருந்த நந்தனர் வேதியர் களைக் கண்டு தூர விலகி நின்று தலைவணங்கிச் சொல்லு கின்ருர்.

விருத்தம்.

திட்டமுட னடிபணிந்து மனமொடுங்கித் தவம்புரியுந் தில்லைமன்று
ணட்டமிடு நடராஜன் கனவின்கண் சொன்னமொழி நம்பிக்கொண்டு
இட்டமுடன் திருநாளைப் போவார்பால் வேதியர்க ளேகும்போது
கிட்டநெருங் காதேயு மெனவிலகி யோர்வார்த்தை கேளீரென்ருர்.

ராகம் - பூரிகல்யாணி ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

கிட்டநெருங்கி வரவேண்டாஞ்சுவாமிகாள்-காதில்
கேட்டபேர்க்கும் பாவம் வருமெனது ஜன்மம். (கிட்ட)

### அநுபல்லவி.

சிட்டர்புகழுந் தில்லைதன்னில் செழித்துவாழும் வேதியர்கள்
இஷ்டமிது வல்லவேயென்று சொல்லவேணு மோபுலையன் (சிட்ட)

### சரணங்கள்.

உலகினில்கடைச்சாதி யெந்தனுக் குவமை யாருமில்லையே
பலவிததுஷ் கருமஞ்செய்து பாரில்வந்த புலையனையே(சிட்ட)

வேலைசெய்து வுடம்புவளர்க்க வேணுமிந்த நாயடியேன்
தோலுமெலும்பு முதுகினில் சுமந்து அலையும் புலையனையே(சிட்ட)

செத்தமாடிழுப்ப தெனது சேவகம்பரம் படித்துமெல்லை
சுற்றிவந்து தமுக்கடித்துச் சுடலைகாக்கும் புலையனையே (சிட்ட)

---

### வசனம்.

இப்படி வணங்கிச்சொல்லிய திருநாளைப்போவாராகிய நந்தனரைப்பார்த்து வேதியர்கள் சொல்லுகின்றார்கள்.

ராகம்-சுரடி ; தாளம்-ரூபகம்.

### பல்லவி.

சாதியிலுயர்ந்தாலென்ன-இந்தப்-பேறும்பெருமையுமில்லையே.

### சரணம்.

சாதிபெருமைகொண்டதாலே சங்கரனு ரருகில்வந்து
ஆதரவுடன்வரங்களீந்து அழைப்பாரோ சேர்ப்பாரோ
அளிபெருகவேயீசன் கழலை யறிவிலுன்னி யடிபணிந்து
தெளிந்திடாத பேரைமுத்தி தேடுமோ நாடுமோ கூடுமோ (சாதியி)

வசனம்.

இப்படிச் சொல்லிய வேதியர்கள் தாங்கள் வந்த காரியம் பேசுவார்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

ஐயரே யம்பலவ ரருளாலிப் பொழுதணைந்தோம்
வெய்யவழ லமைத்துமக்குத் தரவேண்டி யெனவிளம்ப
வையுமனத் திருத்தொண்டர் நானுய்ந்தே னெனத்தொழுதார்
தெய்வமறை முனிவர்களுந் தீயமைத்த படிமொழிந்தார்.

வசனம்.

ஐயரே, நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்விதாகிய அக்கினியை மூட்டி உம்மை அதில் மூழ்கும்படிக்குச் சொல்ல வந்தோமென்று சொல்ல, இளகிய மனத்தையுடைய திருநாளைப்போவார் அடியேன் கடைத்தேறினேனென்றும் அவர்களைத் தொழுது நானின்றைக்குத்தான் முக்தனானேனென்றும் வேதியர்களைப் பார்த்துச் சொல்லுகின்றார்.

ராகம்-பேஹாக் ; தாளம்-ஆதி.

பல்லவி.

கண்டேன் கலிதீர்ந்தேன்-பவக்-கடற்கரை யேறிவந்தேன்.

சரணங்கள்.

சோதிமறைமுடியுஞ் சொல்லிறந்திடுமீசன்
பாதம்பணிவிடைசெய் பாக்கியம்பெறுமும்மைக் (கண்)

எல்லையைக்காணுமுன்னே யிருள்விலகுமுங்கள்
சொல்லைக்கேட்குமுன்னே துன்பங்கள்தீர்ந்திடும் (கண்)
கள்ளங்கருகச்செய்யுங் கண்ணுதலேயுங்கள்
உள்ளங்குடியாய்க்கொண் டாருங்கள்தரிசனம். (கண்)

வசனம்.

நந்தனார், தான் சின்னஜாதியாயிருந்தபோதிலும் தெய்வ மிரங்கிற்றேவென்று சந்தோஷங்கொண்டு சொல்லுகின்றார்.

ராகம்-தன்யாசி ; தாளம்-ஆதி.

பல்லவி.

எனக்குமிரங்கிற்றே-நான்மெத்த-ஏழைச்சாதியல்லவோ.

அனுபல்லவி.

தனக்குள்தானயிருந் தகிலப்பிரபஞ்சமுந்
தன்னுள்ளடக்கிய பொன்னம்பலவன்கிருபை (எனக்கு)

சரணங்கள்.

அல்லும்பகலு மருந்தவஞ்செய்கினு
மறியாரொருவரு மம்பலத்தெய்வம் (எனக்கு)
நான்மறைமுடிவும் நானறியேனென்று
வோதியவுண்மையை யுலகமறிந்திட (எனக்கு)

வசனம்.

நந்தனார், என்னதவம் செய்தேனே இவ்வுலகின்கண் யாருக்கும் கிடைக்காத பாக்கியம் தனக்குக் கிடைத்ததென்று சொல்லுவார்.

## கண்ணிகள்.

ராகம்-ஆஹிரி ; தாளம்-மிச்ரஏகம்.

அம்பலவாணனைத் தென்புலியூரானை
நம்பிப்பணிந் தேனே - அர்ச்சனை செய்து
கும்பிட்டிருந் தேனே
தில்லைப்பதியில்வந்து எல்லைகடந்தேனென்று
அல்லலறுத் தேனே - சஞ்சிதவிதை
யெல்லாம்வறுத் தேனே
தாண்டவமாடின ஆண்டவன்சேவடி
வேண்டித்துதித் தேனே - முக்குணங்களைத்
தாண்டிக்கதித் தேனே
எந்தனெனதென் றெந்தவேளையுமாயுஞ்
சிந்தைநழு விற்றே - சேர்ந்தவனென்று
தந்தைதழு விற்றே
தெள்ளுதமிழ்ப்பாடி யுள்ளமுருகியுள்ளில்
கள்ளங்கரு கிற்றே - கருத்திலெட்டா
வெள்ளம்பெரு கிற்றே
ஆசைவலையைப்போட்டு மோசப்படுத்துஞ்சீவ
பாசங்குலைத் தாரோ - அளவிடாத
கிலேசந்தொலைத் தாரோ
பெண்ணரிடமாலுக் கொண்ணுதெனச்சடைத்
தண்ணால்தணித் தாரோ - கருணைபொங்குங்
கண்ணாலணைத் தாரோ
அடுத்துவந்தவனென்று பிடித்தபேய்களையோட்டி
தடுத்தாளக்கொண் டாரோ - பரமபதங்
கொடுத்தாளக்கொண் டாரோ.

---

# திருநாளைப்போவார் புராணம்.

## விருத்தம்.

மறையவர்கண் மொழிந்ததற்பின் றென்றிசையின் மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந் திருவாயின் முன்னுகப் பின்னுகர்தம்
நிறையருளான் மறையவர்க ணெருப்பமைத்த குழியெய்தி
இறையவர்தாண் மனங்கொண்டே யெரிசூழ வலங்கொண்டார்.

## வசனம்.

நந்தனர், இப்படிப் பிராமணர்கள் சொல்லியபின்பு தென்திசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனைது தவழ்ந்துபோகும்படி உயர்ந்திருக்குந் திருக்கோபுரவாயி லுக்கு முன்னே சுவாமியின் நிறைந்த கிருபையோடுகூடிய கட்டளையால் வளர்ந்திருக்கின்ற நெருப்பின் குழியை அடைந்து நடேசருடைய திருப்பாதத்தை மனத்தில் தியானித்து அக்கினியைச் சுற்றி வலமாக வந்தார்.

## இதுவுமது - விருத்தம்.

கைதொழுது நடமாடுங் கழலுன்னி யழல்புக்கார்
எய்தியவப் பொழுதின்க ணெரியின்க ணிம்மாயப்
பொய்தகையு முருவொழித்துப் புண்ணியமா முனிவடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடிக் கொண்டெழுந்தார்.

## வசனம்.

நந்தனர் கையினுற் கும்பிட்டு நடனஞ்செய்கின்ற நடேசரது திருப்பாதங்களை மனத்தில் உறுதியாக நினைத்து அக்கினியிற் புகுந்து அந்த நெருப்பிலிருந்து இந்த வுலக சம்பந்தமாகிய நிலையில்லாத சடலத்தை யொழித்துப் புண்ணியஞ்செய்கின்ற பெருமைபொருந்திய பிராமண முனிவடிவ

மாய்த் தேகத்தில் பூணூல்விளங்கச் சடைமுடியோடும் வெளியில் வந்தார்.

ராகம்-மோஹனம் ; தாளம்-ரூபகம்.

பல்லவி.

யாகோற்பவமானார்-நந்தனார்-அரனருளால்
யாகோற்பவமானார்.

அனுபல்லவி.

யோகமாதவரும் போகவாழ்வினரும்
வேகமாய்ச்சுக மாகவந்துதொழ (யாகோ)

சரணங்கள்.

சிவனுருரைத்த வாக்கியம் சித்தத்திலெண்ணிச்
சிறந்ததேமிக சிலாக்கியம்
தவமுவனேக பாக்கியம் -பொருந்தவேடந்
தன்னைக்கொண்டதே யோக்கியம்
தபனனோடுஉயர் ககனமேவிவரு
மெவரும்காந்தருவ ரெவருங்கண்டுதொழ (யாகோ)

கையைச்சிரமேற் பதித்துச் - சிவனேயென்று
கனகசபையைத் துதித்துச்
செய்யகுண்டத்தை வெடித்துக் - கதிரவன்போற்
செனித்தாரதிலே நடித்துச்
சித்தியாகியபத முற்றும்பாம்புலிப்
பத்தியாய்த்தொழும்ப தத்தைக்கண்டுதொழ(யாகோ)

காதிற்குண்டலம் துலங்க - முப்புரிநூலுங்
கதித்துமார்பிட மிலங்க

ஓதுஞ்சடைகள் விளங்க - அவரைவிட்டு
ஓடியேவினை கலங்க
ஏதமற்றசதுர் வேதமோதிவரும்
நீதவேதியர்கள் பேதமின்றித்தொழ (யாகோ)

## திருநாளைப்போவார் புராணம்.

### விருத்தம்.

செந்தீமேலெழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போற் றோன்றினா ரந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த திருவிசும்பில் வானவர்கண் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்பொழிந்தார்.

### வசனம்.

சிவந்தநெருப்பில்நின்று எழுந்தபொழுதுசெந்தாமரைப் புஷ்பத்தின்மேல் உதயமாயெழுந்தருளும் பிரமாவைப் போல் பிரகாசித்தார். பெருமைபொருந்தியஆகாசத்தில் அந்தர துந்துபியின் கோஷமானது உண்டாயிற்று. தேவர்கள் சந்தோஷமாய் ஆரவாரித்து அழகாயிருக்கின்ற கற்பக விருட்சத்தின் குளிர்ச்சிபொருந்திய மலர்களை வருஷமாகச் சொரிந்தார்கள்.

### விருத்தம்.

திருவுடைய தில்லைவா ழந்தணர்கள் கைதொழுதார்
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனங் களிபயின்றார்
அருமறைசூழ் திருமன்றி லாடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாரா மறைமுனிவர்.

## வசனம்.

ஞானசம்பத்தையுடைய தில்லையில்வாழும் பிராமணர்கள் கைகூப்பினார்கள். பரவுதற்கரிய மற்றைச் சிவபத்தர்களுந் தொழுது மனத்தில் களிப்படைந்தார்கள். வேதங்கள் முழங்குகின்ற கனகசபையில் ஆடுகின்ற பாதத்தை வணங்கும் பொருட்டுத் திருநாளைப் போவாராகிய வேதமுனிவர் தாம் கண்ட ஆனந்தத் தாண்டவத்தை வருணித்துச் சொல்லுகின்றார்.

---

ராகம் - தேசிகதோடி ; தாளம் - ஆதி.

### பல்லவி.

தாதெய்யென்றாடுவார் - அவர் - தத்தித்தெய்யென்றாடுவார்.

### அனுபல்லவி.

ஆதிபராபர மாகியசித்து
ஆனந்தங்கொண்டொரு காலையெடுத்துத் (தாதெய்)

### சரணம்.

அண்டசராசர மெங்குநடுங்க
ஆதிசேடனார் முடிகணெருங்க (தாதெய்)

சீலம்பெருகிய முனிவர்கொண்டாடத்
திங்களைச்சூடிய செஞ்சடையாடத் (தாதெய்)

பார்புகழுந்தில்லைச் சிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந் தேத்தியபாதன் (தாதெய்)

---

ராகம் - பந்துவராளி; தாளம் - ரூபகம்.

பல்லவி.

குஞ்சிதபாதத்தைத் தாரும்-மன-சஞ்சலபாவத்தைத் தீரும்.

அனுபல்லவி.

செஞ்சிலம்பசையக் கனகசபைதனில்
ஜெணுதத்தக ஜெணு தத்திமி திமிதத்-தோமென்றாடிய (குஞ்சித)

சரணங்கள்.

நெஞ்சிற்கவலையை யாற்றும் - இந்த
வஞ்சப்பிறவியை மாற்றும் - நாளும்
வஞ்சிசிவகாமிவல்லி மகிழ்ந்திடும்
தஜ்ஜெம்தக-ஜெம்தரிகட தக்கிட தோமென்றாடிய (குஞ்சித)

சரணமென்றிங்கேநான் வந்தேன் - ஜனன
மரணத்தினால்மிக நொந்தேன் - அந்தக்
கரணக்கல்மிஷங்கள் போக்கியே காத்திடும்
இந்திரர்வானவர் மாமுனி - வந்து நிதந் துதிசெய்திடும் (குஞ்சித)

பாலகிருஷ்ணன்றொழும் பாதா - முத்தி
நால்வர்க்குதவிய நாதா - எந்தன்
மேலேகிருபைசெய்து வெற்றி யளித்திடும்
அத்தனே கர்த்தனே சுத்தனே யித்தனே-கீர்த்தனஞ் செய்திடும். (கு)

---

ராகம் - மாயாமாளவகௌள; தாளம் - ரூபகம்.

பல்லவி.

நடனமாடினார் - ஐயர் - நடனமாடினார்.

அனுபல்லவி.

நடனமாடினார்தில்லை நாயகர்பொன் னம்பலந்தனில்
தாகுஜணுத - தகஜம்தரி-தகஜணு - தகதிமி-தித்தோம் - தத்தளாங்கு
தகதளாங்கு - தகதிக - ததிங்கிணதோமென்று (நட)

சரணங்கள்.

முத்திமடைந்தை சித்திக்கச் சித்திக்க
மோகவல்லிகள் பத்திக்கப் பத்திக்க
பத்தர்கள்மனது தித்திக்கத் தித்திக்கப்
பாதச்சிலம்பு சத்திக்கச் சத்திக்கப்
பனிமதி சடையாடப் பதஞ்சலிமாமுனி மறைபாடப்
பண்ணவர்கள் கொண்டாடப் பாலகிருஷ்ணன் மத்தளம்போட (நட)

---

ராகம் - வஸந்த ; தாளம் - அட.

பல்லவி.

நடனமாடினார்-வெகுநாகரீகமாகவே
கனகசபையில் ஆனந்த (நடன)

அனுபல்லவி.

வடகைலையில்முன்னாள் மாமுனிக்கருள்செய்தபடி
தவறாமல்தில்லைப்பதியில்வந்து
தைமாசத்தில் குருபூசத்தில் பகல்நேரத்தில் (நடன)

சரணம்.

அஷ்டதிசையும் கிடுகிடென்று-சேடன்தலைநடுங்க
அண்டமதிரக் கங்கைத்துளிசிதர பொன்னுடவர்கொண்டாட
இஷ்டமுடனேகோபாலகிருஷ்ணன் பாட சடையாட
அரவ படமாட-அதிலேநடமாட-தொந்தோமென்று-பதவிகள்
தந்தோமென்று (நடன)

தோம்-தகிட தகஜெம்-தகணப்-தரிகும்-தரிதீம்-திமிததகஜம்
தகிணம்-தரிணம்தக-தஜ்ஜணுஜ்ஜணு-தித்தாம் தித்தாம்
தித்தாஹத் தஜ்ஜணு-தணந்த-டங்குடங்கு-தையதையதக
ததிமிகிடதக-தகதிமிதகஜணு-தாகிடதகதாம்
தக்கிட-தகதையென (நடன)

---

ராகம் - யமுனகல்யாணி ; தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார்-அம்பலந்தனிலே-பொன்னம்பலந்தனிலே

அனுபல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார்-அயனும் மாலும் பாடினார்
அந்தரங்கமாக சிந்தித்தபேர்க்கருள்
தந்தோந் தந்தோமென்று-தொந்தோந் தொந்தோமென்று (ஆன)

சரணங்கள்.

பதஞ்சலிமா முனியை நோக்கிப்
பார்த்தபேர்கள் குறையைப் போக்கி
இதமகிதமென் றறிவை நீக்கி
ஏகமாகக்காலைத் தூக்கி (ஆன)

மத்தளதாள மதிர முழங்க
வளரும்ப்ரமத கணங்க ளிலங்கத்
தத்திமிதக்கிட தோமென் றிலங்கச்
சபையுந்துலங்கச் சதங்கை குலுங்க (ஆன)

பாலகிருஷ்ணன் பணியும் பாதன்
பார்த்தபேர்கள் வரப்பிர சாதன்

ஞாலம்புகழுஞ் சீல போதன்
சுந்தரர்தூதன் அம்பிகை நாதன் (ஆன)

வசனம்.

இப்படி ஆடிய தாண்டவ தரிசனங்கொடுக்க இன்றைக் குத்தான் சித்தமிறங்கிற்றோ வென்று சொல்லுவார்.

---

ராகம்-யமுனாகல்யாணி; தாளம்-ஆதி.

பல்லவி.

சித்தமிரங்கிற்றோ யான்முன்செய் தவமுத்திற்றோ.

அனுபல்லவி.

அத்தா பரி சுத்தாவுன் னுடல்காண வந்தேன் (சித்த)

சரணங்கள்.

சாதிமுறைமைபோக்கும் என்னைச் சதுர்மறையவராக்கும்
போதா தில்லை நாதாவுன் னுடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவே சமயமுன்னுடல்காணவந்தேன் (சித்)
பாலகிருஷ்ணன் போற்றும்பாதா பதஞ்சலியாரேத்துஞ்
சீலா திரி சூலாவுன் னுடல் காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவே சமையமுன் னுடல்காணவந்தேன் (சித்)

சிந்து.

கனவிலுருவாகி-வந்து-காட்சிகொடுத்துக் கடாக்ஷித்தபின்
எரியினிடைமூழ்கி-வெகு-இன்பம்பெருகிய வன்பருடன்
வேதமுனிவடிவாய்த்-தில்லை-வேதியர்கைதொழு தாதரவாய்
அங்கம்புளகிதமாய்ச்-செம்பொன்.

## வசனம்.

திருநாளைப்போவாராகிய முனிவர் அக்கினியில் குளித்தெழுந்து கனகசபையில் வந்து மனமுருகி ஆனந்தம்பெருகி நமது ஆண்டவராகிய நடேசமூர்த்தியையும் கோவிந்தராஜரையும் சேர்த்துத் தோத்திரம் செய்கின்றார்.

---

ராகம்-சுரடி; தாளம்-சாபு.

## பல்லவி.

தில்லையம்பலத்தானைக் கோவிந்தராஜனைத்
தெரிசித்துக்கொண்டேனே

## அநுபல்லவி.

தொல்லுலகமும் படியளந்து மனதுக்கேற்கும்
தொண்டர்கலிகள்தீரக் கருணைப்பொழியுமெங்கள் (தி)

## சரணங்கள்.

தும்பைப்பூமாலைகள் தொடுத்துக்கொடுப்பதிங்கே
துளஸிக்கொழுந்தெடுத்து தொட்டுக்கொடுப்ப தங்கே
அம்பலரஹஸியம் அறிந்துகொள்ளுவதிங்கே
அஷ்டாக்ஷரமென்று அன்புசெய்வதுமங்கே
பிட்டுவடையுடனே நைவேத்யமுமிங்கே
புளியோதனம் தயிரன்னம் படைப்பதங்கே
கொட்டுமுழக்குடனே கூத்தாடுவதிங்கே
குரட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருப்பதுமங்கே (தி)

தேவாரமும்திரு வாசகப்படிப்பிங்கே
திருவாய்மொழியோதி ஸேவித்திருப்பதங்கே

நாவில்பஞ்சாக்ஷரம் நாடிக்கொள்ளுவதிங்கே
நாராயணுவென்று நம்பிக்கொள்வதுமங்கே (தி)

சொல்லறியாத்திருக் கூட்டம்கூடுவதிங்கே
தோத்திரத்துக்கேற்கக் கருடஸேவையுமங்கே
அல்லும்பகலும் அன்ன தானசிறப்பிங்கே
அய்யங்கார்கள்கூடு மாரவாரமங்கே (தி)

தேனும்புழுகும்பாலும் தேடிக்கொள்ளுவதிங்கே
சிறக்கபணிகள் பூட்டும் சிங்காரமுமங்கே
மானும்மழுவுடனே மகிழ்ச்சிகொள்ளுவதிங்கே
வலம்புரிசங்கு சக்கரமும்தரிப்பதங்கே (தி)

பரமசிவனேயென்று பாடிக்கொள்ளுவதிங்கே
பாலகிருஷ்ணுவென்று பணிந்துகொள்ளுவதங்கே
அருமறை பொருளுக்கெட் டாதவடிவமிங்கே
ஆனந்தமூர்த்தியென்று ஆதரிப்பதுமங்கே (தி)

---

ராகம்-சரசாங்கி; தாளம்- ஆதி.

பல்லவி.

உனதுதிருவடி நம்பிவந்தேன்-எனக்
கொருவருமில்லைநா னேழை (உனது)

அனுபல்லவி.

அனுதினமும் பொன்னம்பலந்தனிலே
ஆடியபாதரே யென்சுவாமி. (உனது)

சரணங்கள்.

இரவும்பகலும் விஷயாதிகளென்னை யிழுக்கும்நானதை
மரித்துமிப்படிபர தவித்திடலானேன்

பார்க்கலாமோபால கிருஷ்ணன்போற்றும்பரனே
பரமதயாநிதியே நின்பக்தியைத்தந்து
சித்தமகிழ்ந்திடக் கரையேற்றிடுவதுன்பாரஞ்
சொன்னேன் கைவிடவேண்டாம் சரணம் சரணம் (உனது)

---

ராகம்-சக்கரவாகம், மிஸ்ரஜாதி ; தாளம்-ஜம்பை.

பல்லவி.

அறிவுடையோர்பணிந்தேத்தும் தில்லைக்
கனகசபாபதியே எனையாளும் (அறி)

அனுபல்லவி.

மறைமுடியுந்தேடி யறியாதவுன்றன்
திருவடியைமாணிக்கவா சகரறிந்ததெப்படி (அறி)

சரணங்கள்.

கனவிலும் நினைவிலும் விஷயாதிசம் சாரக்கடலி
லழுந்திக்கரையேறவும் வழிகாணேன்
மனமிரங்கிக்ருபை செய்திடவேணும்-மாயன்கோபால
கிருஷ்ணன் தொழுதேத்தும்-அம்பலவாணா
உனைமறந்திடப்போமோ-உன்னடியார்களைப்
பணிவீரென்றுரைத்திடுமுண்மையையின்னமுமறியேன்
மனைவிமக்கள் தன தானியமென்றிந்த
மாயவலைக்குள் சிக்கி மயங்கினேன் தயங்கினேன். (அறி)

---

ராகம் - நவரோஸ் ; தாளம் - ஆதி.

பல்லவி.

தில்லைநடராஜரைப்போலே வேறேதெய்வம்கிடைக்குமோ.

அனுபல்லவி.

பதஞ்சலிவியாக்கிர பாதருக்கன்று பாதமெடுத்தாடவே
பாதமெடுத்தாடவே-அவர்கள்-பரமபதத்தைச்சேரவே
(தில்)

சரணங்கள்.

காளியுடன்வாதாடியே கனகசபையில்நின்றநீ
கனகசபைதனில்நின்று-ஒற்றைக்-காலைத்தூக்கிக்கொண்டாடிய (தில்)
பொங்கவேபரமானந்தரூபம் பூரணகும்பத்தில்வருகவே
பூரணகும்பத்தில்வருகவே ஐயன்-பொன்னம்பலத்தைச்சேரவே(தில்)
குடத்தில்கங்காதீர்த்த மெடுத்துக் கும்பாபிஷேகம் பண்ணவே
கும்பாபிஷேகம்பண்ணவே-அப்பன்-குளிர்ந்தமனதுஆகவே (தில்)
அத்தர்புனுகு வாசனையுட னாகுதிஹோமம் பண்ணவே
ஆகுதிஹோமம்பண்ணவே-ஜகதீசன்-சிற்சபைதனைச்சேரவே (தில்)

---

ராகம் - ஸுரடி ; தாளம் - ஜம்பை.

பல்லவி.

கனகசபைத் திருநடனம் கண்டுகளித் தானந்தமடைந்தேன்.

அனுபல்லவி.

சனகசனந்தன முனிவர்கள்பாடச்
சதுர்முகதேவனும் தாளங்கள்போடத்
தினமுமூவாயிரம் பேர்களுங்கூடத்
திக்கிட்டதைய்யதித்தோம் தத்தோமென்று (க)

சரணம்.

நந்திபிருங்கிசிவ கணங்களும்கூட
நாரதர்தும்புரு சங்கீதங்கள்பாடப்

பந்திபந்தியா யமரர்கொண்டாடக்
கோபாலகிருஷ்ணன் மத்தளம்போட(கனக)

---

ராகம்-பூர்ணசந்த்ரிக ; தாளம்-ஆதி.

பல்லவி.

பாதமேதுணை ஐயனே-நின்
பாதமேதுணை ஐயனே.

அநுபல்லவி.

பாதமேதுணை யல்லால் வேறொரு
கேதிகளு நானறிந் திலேன்(பாத)

சரணம்.

பாலனுக்கருள் செய்த பராபரன்
பாலகிருஷ்ணன் கவிக்குத்தயாகரன்
சீலமுள்ள சிவ காமி மனோகரன்
கோல நடம்புரி ரஞ்சித குஞ்சித(பாத)

---

ராகம்-ஸரஸ்வதிமனோஹரி ; தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தாலும் வரட்டும்-ஜனனம்
தந்தாலும் தரட்டும்-சாமி.

அநுபல்லவி.

செந்தாமரைப்பதமே கதிநம்பினேன்
சிதம்பரநாதன் சிவசாயுச்சியம். (வந்தா)

சரணம்.

சிவன்செயலன்றி வேறொருசெயலும்
சிந்தையிலறியேன் பாலகிருஷ்ணன்தொழும்
அவனுருவன்றி வேறுருவுண்டோ
ஆகமமறியாதோ,
தவமேவுந்தென் புலியூர்வாழும்
தாண்டவனேயென் ணண்டவனே-இந்தப்
பவக்கடல்தாண்ட விடுவாயதுவொரு
பாரமல்லவெகு தூரமல்லமுக்தி(வந்தா)

ராகம் - ஆரபி ; தாளம் - ஆதி.

பல்லவி.

பிறவாத வரந்தாரும் - என்னையா
பிறவாத வரந்தாரும்.

அநுபல்லவி.

அறிவுடையோர்தொழு தேத்தியதில்லைப்பொன்
னம்பலவாயின் னம் பலயோனியில் (பிற)

சரணம்.

எண்பத்துநாலு லட்சம் ராசிகளில்
எடுத்தெடுத்துப்பிறந் திறந்ததோ
புண்பட்டதுபோதும்போதும்-இனிமேல்
புத்திதெரிந்ததையே
நண்பற்றிடுமனைவி மக்கள்வாழ்வினில்
நாள்கடோறும்மனவி லாசம்கழிந்ததும்
இன்பத்துடனேகோ பாலகிருஷ்ணன்தொழு
தேத்திய ஜக தீசனே நடராஜனே. (பிற)

## தேவாரம்.

பாளையுடைக்கமுகோங்கிப்பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறிவாழ்வயற்றில்லைதன்னு
ளாளையுடைக்கழற்சிற்றம்பலத்தானாடல்கண்டாற்
பீளையுடைக்கண்களாற் பின்னைப்பேய்த்தொண்டர்காண்பதென்னே.

பொருவிடையொன்றுடைப்புண்ணியமூர்த்திபுலியதள
னுருவுடையம்மலைமங்கைமணாள னுலகுக்கெல்லாந்
திருவுடையந்தணர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே

தொடுத்தமலரொடுதூபமுஞ்சாந்துங்கொண்டெப்பொழுது
மடுத்துவணங்குமயனொடுமாலுக்குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்துபொன்னாகியதில்லைச்சிற்றம்பலவ
னுடைத்துகில்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (௫)

வைச்சபொருணமக்காகுமென்றெண்ணிநமச்சிவாய
அச்சமொழிந்தேனணிதில்லையம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின்மேலசைத்த
கச்சினழகுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (௬)

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள் கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்தநீலமணிமிடற்றான்
கைஞ்ஞின்றவாடல்கண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே.

ஊனத்தைநீக்கியுலகறியவென்னையாட்கொண்டவன்
றேனைத்தெனக்கினியான்றில்லைச்சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சையுண்டகண்டத்திலங்கு
மேனத்தெயிறுகண்டாற்பின்னைக்கண்கொண்டுகாண்பதென்னே. (௮)

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ்செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமானிணையடிகள்
தரித்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்ட கண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (எ)

சுற்றுமமரர் சுரர்பதிநின்றிருப்பாதமல்லாற்
பற்றொன்றிலோமென்றழைப்பப்பரவையுணஞ்சையுண்டான்
செற்றங்கநங்கனைத்தீவிழித்தான்றில்லையம்பலவன்
நெற்றியிற்கண் கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (அ)

சித்தத்தெழுந்தசெழுங்கமலத்தன்னசேவடிகள்
வைத்தமனத்தவர்வாழ்கின்றதில்லைச்சிற்றம்பலவன்
முத்தும்வயிரமுமாணிக்கந்தன்னுள்விளங்கியதூ
மத்தமலர்கண்டகண்கொண்டுமற்றினிக்காண்பதென்னே. (கூ)

தருக்குமிகுத்துத்தன்றோள்வலியுன்னித்தடவரையை
வரைக்கைகளாலெடுத்தார்ப்பமலைமகள் கோன்சிரித்து
அரக்கன்மணிமுடிபத்துமணிதில்லையம்பலவ
னெருக்கிமிதித்தவிரல்கண்டகண்கொண்டுகாண்பதென்னே. (கo)

வேற்றாகிவிண்ணாகி நின்றாய்போற்றி
மீளாமேயாளென்னைக் கொண்டாய்போற்றி
யூற்றாகியுள்ளே யொளித்தாய்போற்றி
யோவாதசத்தத் தொலியேபோற்றி
ஆற்றாகியங்கே யமர்ந்தாய்போற்றி
ஆறங்கநால்வேத மானாய்போற்றி
காற்றாகியெங்குங் கலந்தாய்போற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (க)

பிச்சாடல்பேயோ டுகந்தாய்போற்றி
பிறவியறுக்கும் பிரானேபோற்றி

வைச்சாடனன்று மகிழ்ந்தாய்போற்றி
மருவியென்சிந்தை புகுந்தாய்போற்றி
பொய்ச்சார்புரமூன்று மெய்தாய்போற்றி
போகாதென்சிந்தை புகுந்தாய்போற்றி
கச்சாகநாக மசைத்தாய்போற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (உ)

மருவார்புரமூன்று மெய்தாய்போற்றி
மருவியென்சிந்தை புகுந்தாய்போற்றி
உருவாகியென்னைப் படைத்தாய்போற்றி
யுள்ளாவிவாங்கி யொளித்தாய்போற்றி
திருவாகிநின்ற திறமேபோற்றி
தேசம்பரவப் படுவாய்போற்றி
கருவாகியோடு முகிலேபோற்றி
கயிலைமலையானேபோற்றிபோற்றி. (ங)

வானத்தார்போற்று மருந்தேபோற்றி
வந்தென்றன்சிந்தை புகுந்தாய்போற்றி
ஊனத்தைநீக்கு முடலேபோற்றி
யோங்கியழலாய் நிமிர்ந்தாய்போற்றி
தேனத்தைவார்த்ததெளிவேபோற்றி
தேவர்க்குந்தேவனாய் நின்றாய்போற்றி
கானத்தீயாட லுகந்தாய்போற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (ச)

ஊராகிநின்ற வுலகேபோற்றி
யோங்கியழலாய் நிமிர்ந்தாய்போற்றி
பேராகியெங்கும் பரந்தாய்போற்றி
பெயராதென்சிந்தை புகுந்தாய்போற்றி

நீரவியான நிழலேபோற்றி
நேர்வாரொருவரையுமில்லாய்போற்றி
காராகிநின்ற முகிலேபோற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (௫)

சில்லுருவாய்ச்சென்று திரண்டாய்போற்றி
தேவரறியாத தேவேபோற்றி
புல்லுயிர்க்கும்பூட்சி புணர்த்தாய்போற்றி
போகாதென்சிந்தை புகுந்தாய்போற்றி
பல்லுயிராய்ப்பார்தோறு நின்றாய்போற்றி
பற்றியுலகை விடாதாய்போற்றி
கல்லுயிராய்நின்ற கனலேபோற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (௬)

பண்ணினிசையாகி நின்றாய்போற்றி
பாவிப்பார்பாவ மறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ் சொல்லானாய்போற்றி
யென்சிந்தைநீங்கா விறைவாபோற்றி
விண்ணுநிலனுந் தீயானாய்போற்றி
மேலவர்க்குமேலாகி நின்றாய்போற்றி
கண்ணின்மணியாகி நின்றாய்போற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (௭)

இமையாதுயிரா திருந்தாய்போற்றி
யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
உமைபாகமாகத் தணைத்தாய்போற்றி
யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்ச மார்ந்தாய்போற்றி
யாதிபுராணனாய் நின்றாய்போற்றி

கமையாகிநின்ற கனலேபோற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (அ)

மூவாய்பிறவா யிறவாய்போற்றி
முன்னமேதோன்றி முளைத்தாய்போற்றி
தேவாதிதேவர்தொழுந் தேவேபோற்றி
சென்றேறியெங்கும் பரந்தாய்போற்றி
யாவாவடியேனுக் கெல்லாம்போற்றி
யல்லல்நலிய வலந்தேன்போற்றி
காவாய்கனகத் திரளேபோற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (கூ)

நெடியவிசும்பொடு கண்ணேபோற்றி
நீளவகல முடையாய்போற்றி
யடியுமுடியு மிகலிப்போற்றி
யங்கொன்றறியாமை நின்றாய்போற்றி
கொடியவன்கூற்ற முதைத்தாய்போற்றி
கோயிலாவென்சிந்தை கொண்டாய்போற்றி
கடியவுருமொடு மின்னேபோற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (கo)

உண்ணாதுறங்கா திருந்தாய்போற்றி
யோதாதேவேத முணர்ந்தாய்போற்றி
எண்ணிலங்கைக் கோனைப்போற்றி
யிறைவிரலா லவைத்துகந்த வீசாபோற்றி
பண்ணாரிசையின்சொற் கேட்டாய்போற்றி
பண்டேயென்சிந்தை புகுந்தாய்போற்றி
கண்ணாயுலகுக்கு நின்றாய்போற்றி
கயிலைமலையானே போற்றிபோற்றி. (கக)

சிந்து.

அம்பலமேவிய சம்பிரமத்தைக்-கண்டாரறிந்திலரால்.

## திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
ஒல்லைபோ யுட்புக்கா ருலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்.

வசனம்.

திருநாளைப்போவார் நாயனாரென்றும், இடையில் நந்தமா முனியென்றும் வழங்குகின்ற நாளைப்போவார் தில்லை மூவாயிரமுனிவர்களோடு பொன்னம்பலத்துக்கு வந்தார். அதற்கப்பா லவரைக் கண்டபேர்களில்லையென்று பெரியபுராணம்பாடியருளிய சேக்கிழார்சுவாமிகள் சொல்லியிருக்கிறார். அந்தத் திருநாளைப்போவாரென்னுமுனியானவர், புரட்டாசிமாதம் உரோகணிநட்சத்திரத்தில் கனகசபையில் வந்து கற்பூரசோதியைப்போற் றோன்றிய சிவசாரூப்பியத்தை யடைந்தாரென்று உபமன்னிய மகரிஷி பண்ணிய பக்தவிலாசத்திலேயும் சொல்லப்பட் டிருக்கின்றது.

இதுவுமதுவு-விருத்தம்.

அந்தணர்க ளதிசயித்தா ரருமுனிவர் துதிசெய்தார்
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிக டொழுதிருக்க
அந்தமிலா வானந்தப் பெருங்கூத்த ரருள்புரிந்தார்.

வசனம்.

மறையோர்கள் ஆச்சிரியப்பட்டார்கள். அரிய முனிவர்கள் தோத்திரம்செய்தார்கள். முடிவில்லாத ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாதர் தமது கட்டளையால் வந்தடைந்த திருநாளைப்போவாருக்குத் தீவினையாகிய களங்கத்தை நீக்கி அழகாகிய செந்தாமரை மலரையொத்த இரண்டு பாதங்களையுந் தொழுதிருக்கும்படியாகத் திருவருள் புரிந்தார்.

இதுவுமது-விருத்தம்.

மாசுடம்பு விடத்தீயின் மஞ்சனஞ்செய் தருளியெழுந்
தாசின்மறை முனியாகி யம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்தித் திருநாளைப்போவாரும்
மாசகல முயன்றுதிரு நடங்கண்டு மகிழ்வுற்றார்.

வசனம்.

தமக்குமுன்னிருந்த உடலமாகிய மாசுதீரும்பொருட்டு அக்கினியாகிய திருமஞ்சனமாடியெழுந்து குற்றமற்ற பிராமண முனிவடிவமாகி ஸ்ரீநடேசப்பெருமானுடைய திருவடியை அடைந்தவராகிய திருநாளைப்போவாருடைய பாதத்தைப் புகழ்ந்து தீவினையாகிய கயிறு அறும்படி தில்லை மூவாயிர முனிவர்கள் போற்றிசெய்துகொண்டிருந்தார்கள்.

வாழ்த்து-விருத்தம்.

பங்கய மாதவர் வாழி பார்மக ளுமையாள் வாழி
செங்கண்மா லயனும் வாழி தேவர்கந் தருவர் வாழி
தங்குநான் மறைகள் வாழி தாரணி யரசர்வாழி
பொங்குநூல் வல்லார் வாழி புண்ணிய ரென்றும்வாழி.

## மங்களம்.

ராகம் - அசாவேரி ; தாளம்-ஆதி.

### பல்லவி.

திருநாளைப்போவாருக்கு ஜயமங்களம்-எங்கள்
தில்லைமூவாயிரவர்க்குச் சுபமங்களம்

### அனுபல்லவி.

இருடிகளிதுவரி தரிததிசயமென
விருகரமுடிமிசை மருவத்துதிசெய்கன
பரவும்பர்சம்பிரமங்கள் துதித்திடும்
பரமனுடமம்பலத்தில் கதித்திடும் (திருநா)

### சரணங்கள்.

திருவாசகமுந்திருக் கோவைபாடினவர்க்கும்
சீர்காழியிலுதித்த சிறந்தசம்பந்தருக்கும்
ஒருமாதிடத்திற்றூதுக் குவந்துவிடுத்தவர்க்கும்
ஒருவரொப்பில்லாத் திருநாவுக்கரசருக்கும்
உரியமறைக்கு-முயர்கலைகட்கும்
உரகர்பதிக்கு-முவணபதிக்கும்
ஓதுசந்திரசூரியர் முனிவர்களுக்கும்
நீதிஸாதபாவலர் முதலானவர்க்கும். (திருநா)

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார் சரித்திரக் கீர்த்தனை

முற்றிற்று.

உ

சிவமயம்.

# சிதம்பரக் கும்மி.

## விநாயகர் துதி.

சீர்மேவுந்தில்லை யம்பலத்தில் அன்பு
சேரக்கும்மித் தமிழ்பாடக்
கார்மேவுமேலைக் கோபுரவாசல்
கற்பகப்பிள்ளையார் காப்பாமே. (௧)

## முக்குறுணி விநாயகர் துதி.

சர்க்கரைமோதகந் தேங்காயுங்கொண்டு
சந்நிதிமுன்பாகத் தான்படைத்து
முக்குறுணிப்பிள்ளையாரைவேண்டி
முழங்கிக்கும்மி யடியுங்கடி. (௨)

## சுப்பிரமணியர் துதி.

கோலமயிலின் முதுகேறிவந்து
கும்பமுனிக்கு வருட்செய்யும்
பாலசுப்பிரமணியன் பீஜாக்ஷரத்தைப்
பாடிக்கும்மி யடியுங்கடி. (௩)

கங்காதேவிக்குக் கைகூப்பியாருங்
கையிலெடுத்துள்ளே பானம்பண்ணி
தங்காமற்சிவ காமிசந்நிதி
சார்ந்துகும்மி யடியுங்கடி. (௪)

கருதுஞ்சுருதிக் கெட்டாதசிவ
காமசுந்தரி வாசலிலே
விருதுபேசியே சிறுகுழந்தைகள்
வேதம்படிக்குது பாருங்கடி. (ரு)

நாலுபுறத்திலுங் கோபுரமாமதி
னடுவிலெங்கினு மாளிகையாம்
காலோராயிரங் கொண்டொருமண்டபம்
கட்டியிருக்குது பாருங்கடி. (சு)

தூயமறைமுத லாராய்ந்துஇங்கே
துலங்கியமூவா யிரமுனிவர்
ஞாயம்பொருந்திய தேவசபைவந்து
நாடிக்கும்மி யடியுங்கடி. (எ)

சாந்துப்பொட்டு தளதளென்னநல்ல
சந்தனவாடை குமுகுமென
கூந்தலழகிக்காரி யெல்லாங்காலைக்
குவித்துக்கும்மி யடியுங்கடி. (அ)

அஸ்தகடகம் பளபளெனசொல்லும்
அரைநூன்மாலை தளதளென
விஸ்தாரமாக நின்றுகொண்டுகையை
வீசிக்கும்மி யடியுங்கடி. (கூ)

கைதனில்விபூதிப் பையுங்கொண்டுஅவர்
கண்டத்தில்ருத்திராட்ச மாலைபூண்டு
வைதீகபூசைகள் செய்கின்றதீக்ஷதர்
வாழக்கும்மி யடியுங்கடி. (கo)

கோவிலுக்குநாலு பேர்களுண்டாம்அவர்
குறித்தமுறைபாய்ப் பூசைசெய்ய

பாவித்தபின்பவர் வேறொருவர்வசப்
படுத்துவாரென்றே கும்மியடி. (கக)

ஆண்டுக்குள்ளாறபி ஷேகமுண்டாம்பின்னும்
அதிலேரண்டு திருநாளாம்
வேண்டிவந்தவர் கலிதீருமென்று
விரைந்துகும்மி யடியுங்கடி. (கஉ)

பூமிபுகழ்ந்திடுந் தில்லைப்பதி அது
பூலோகக்கயி லாசமென்று
தாமரைப்பூவினில் வாழ்கின்றலட்சுமி
தாயார்சந்நிதி பாருங்கடி. (கங)

மூலத்தானத்தைக் கண்டாயேநல்ல
முத்தியிதுவென்று கொண்டாயே
காலெடுத்தாடிய நிர்த்தசபேசனைக்
கண்டுதரிசிப்போம் வாருங்கடி. (கச)

தில்லைமாகாளியோ டாடிவர அவள்
சித்தங்கலங்கித் தலைகுனிந்தாள்
வெல்லுவதெப்படி யென்றொருகாலை
விண்ணிலெடுத்தார் பாருங்கடி. (கரு)

நெற்றியில்வேர்வை முத்துதிர்ந்துமெத்த
நேத்தியதாய்ப்பரந் தோடிவர
பத்தியுடன்பொன் னம்பலவாணனைப்
பணிந்துகும்மி யடியுங்கடி. (கசு)

தித்தியென்றீச னடனம்புரியமெய்த்
தேவர்கள்பூமழை தான்சொரிய

மத்தளங்கொட்டியே கோபாலகிருஷ்ணனை
வாழ்த்திக்கும்மி யடியுங்கடி. (கஎ)

சிதம்பரமென்று சொல்லாமலேயிதைச்
சித்திரக்கூட மென்றுசொல்லி
நிதங்கொண்டாடுமையங்கார்கள்வந்து
நின்றிருக்கிறார் பாருங்கடி. (கஅ)

காணிக்கைகொண்டு வாருங்கடியிந்தக்
கனகசபையைப் பாருங்கடி
மாணிக்கவாசகர் புகுந்தவாசலை
மதித்துக்கும்மி யடியுங்கடி. (ககூ)

அன்னமுடன்பால் தேங்கனியும்செய்யும்
அபிஷேகமுண் டென்னுளும்
பொன்னம்பலந்தனில் சந்திரமௌலியைப்
போற்றிக்கும்மி யடியுங்கடி. (உ0)

முத்தியளித்திடுஞ் சந்நிதிக்குச்சொல்லும்
மேளமுந்தாளமு மேதுக்கடி
சத்தம்பெருகிய கண்டாமணியோசை
சந்நிதிக்கோர்வையாம் பாருங்கடி. (உக)

புட்டுவடையுந் தேன்குழலும்மணப்
புத்துருக்குநெய்ச் சம்பாவும்
சட்டப்படிதவ றுமலேயன்
சந்நிதிக்கோர்வையாம் பாருங்கடி. (உஉ)

சுற்றிவந்துச்சியைப் பாருங்கடிசெகச்
சோதிமயக்கம்ப மொன்பதடி
தத்துவங்கள்தொண் ணூற் றாறுங்கூடிச்
சமைந்தசபையைப் பாருங்கடி. (உங)

பாவிகள்கண்ணுக்குச் செப்போடுவுற்றுப்
பார்த்தாற்பத்தரை மாற்றுத்தங்கம்
கோவைபாடிய மாணிக்கவாசகர்
கோவிலழகையும் பாருங்கடி. (உச)

அஞ்செழுத்தாலே மதிலுண்டாம்பர
மானந்தக்கும்பமு மங்குண்டாம்
அஞ்செழுத்துப்படிக் கப்பாலேபிரம
மானந்தத்தாண்டவம் பாருங்கடி. (உரு)

கோடியுகந்தவஞ் செய்தாலுமிந்தக்
கோவிலைப்பார்க்க முடியாது
ஆடியபாதத்தைக் கண்டாருக்கிணை
யாரென்றுசொல்லுவோம் பாருங்கடி. (உசு)

நெற்றியிலேதிரு நீறணிந்து என்றும்
நிஷ்களமாகிய சிற்சபையில்
தித்திக்கவேசிவ நாமத்தைப்பூசிக்குந்
தீட்சதர்கூட்டத்தைப் பாருங்கடி. (உஎ)

வெட்டவெளியிற் றிரைதிறந்துயார்க்கும்
வேதியர்தீபமுங் காட்டிவர
சட்டமுள்ளசிவ சிதம்பரமென்று
சாய்ந்துகும்மி யடியுங்கடி. (உஅ)

தில்லைவெளிதனைக் கண்டேண்டியென்றன்
தேகம்பரவசங் கொண்டேண்டி
அல்லலறவாசல் நின்றேண்டிமிக்க
ஆநந்தத்தாண்டவம் பாருங்கடி. (உகூ)

ஆகாயலிங்கத்தைக் கண்டேண்டியிங்கே
யாருமறியாமல் நின்றேண்டி
ஏகாந்தமாக விருந்தேண்டிமன
தேக்கந்தொலைந்தது பாருங்கடி. (௩0)

சித்தஞ்சிதம்பர மாச்சுதடிமுன்னே
செய்தவினையெல்லாம் போச்சுதடி
சுத்தப்பிர்ம்மமய மாச்சுதடியதைச்
சொல்லத்தெரியுமோ பாருங்கடி. (௩௧)

சாதிபேதங்க ளற்றேண்டியிந்த
சாஸ்திரமனைத்தையும் விட்டேண்டி
போதமயக்கந் தொலைத்தேண்டியன்பு
பொருந்தக்கும்மி யடியுங்கடி. (௩௨)

நாடுந்தைப்பூரண பூசத்திலேதில்லை
நாயகனற்குரு வாரத்திலே
ஆடியநாடகம் பாம்புப்புலிதனக்
காமென்றுகும்மி யடியுங்கடி. (௩௩)

சஞ்சிதக்கர்மத்தை விட்டேண்டிபவ
சாகரத்தையொழித் திட்டேண்டி
குஞ்சிதபாதத்தைத் தொட்டேன்டிமனங்
கூர்ந்துகும்மி யடியுங்கடி. (௩௪)

சொல்லும்பொருளையு மற்றுயோமுன்னே
துன்பமனைத்து மொழித்தாயோ
அல்லும்பகலையு மற்றுயோதில்லை
யானந்தத்தாண்டவம் பாருங்கடி. (௩௫)

விதியினெழுத்தைக் கிழித்தாச்சுமுன்னே
    விட்டகுறைவந்து தொட்டாச்சு
மதியமிர்தமு முண்டாச்சுதென்று
    வாழ்த்திக்கும்மி யடியுங்கடி. (௩௬)

கோவிலுக்குள்ளே யனேகமுண்டுஅந்தக்
    குறிப்பறிந்ததைச் சொல்லுவீரே
தேவரகசியம் பள்ளியறைவந்து
    தெளிந்துக்கும்மி யடியுங்கடி. (௩எ)

சண்டேஸ்வரர்தமைப் பாருங்கடியந்தச்
    சந்நிதிக்கேகையைக் கொட்டுங்கடி
மண்டலம்புகழு மழகர்வாசலில்
    வாழிபாடுவோம் வாருங்கடி. (௩அ)

வீட்டுக்கவலைகள் விட்டொழியார்மெத்த
    வீம்புகள்பேசியே வீணலைவார்
பாட்டைப்படித்தாலுஞ் சிதம்பரம்வந்து
    பலனதல்லவோ பாருங்கடி. (௩௯)

புத்திரபாக்கிய மெத்தவுண்டாம்பசும்
    பொன்னுமணிப்பூஷ ணமுமுண்டாம்
பத்தியுடன்கோ பாலகிருஷ்ணன்தினம்
    பணியக்கும்மி யடியுங்கடி. (௪0)

சிதம்பரக்கும்மி முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நடராஜப்பத்து.

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம்நீ மறைநான்கின் அடிமுடியும்நீ
மதியும்நீ ரவியும்நீ புனலும்நீ அனலும்நீ மண்டல மிரண்டேழும்நீ
பெண்ணும்நீ ஆணும்நீ பல்லுயிர்க் குயிரும்நீ பிறவும்நீ யொருவநீயே
பேதாதி பேதம்நீ பாதாதி கேசம்நீ பெற்றதாய் தந்தைநீயே
பொன்னும்நீ பொருளும்நீ யிருளும்நீ ஒளியும்நீ போதிக்க வந்தகுருநீ
புகழொணா கிரகங்க ளொன்பதும் நீயிந்த புவனங்கள் பெற்றவனும்நீ
எண்ணரிய ஜீவகோ டிகளீன்ற வப்பனே என்குறைக ளார்க்குரைப் [பேன்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (க)

மானாட மழுவாட மதியாடப் புனலாட மங்கைசிவ காமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட மறைதந்த பிரம்மனாட
கோனாட வானுலகு கூட்டமெல் லாமாட குஞ்சர முகத்தனாட
குண்டல மிரண்டாட தண்டைபுலி யுடையாட குழந்தை முருகேசனாட [சனாட
ஞானசம் பந்தரொடு யிந்திரர் பதினெட்டு மினியட்ட பாலகருமாட
நரைதும்பை யறுகாட நந்திவா கனமாட நாட்டியப் பெண்களாட
வினையோட உனைப்பாட யெனைநாடி யிதுவேளை விருதோடி ஆடிவரு [வாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ்நடராஜனே. (உ)

கடலென்ற புவிமீதில் அலையென்ற வுருக்கொண்டு கனவென்றவாழ் [வைநம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே கட்டுண்டு நித்தநித்தம்

உடலென்ற கும்பிக்கே உணவென்ற யிரைதேடி ஓயாம லிரவுபகலும்
உண்டுண்டுறங்குவதைக்கண்டதே யல்லாது ஒருபயனடைந்திலேனே
தடமென்ற மிடிகரையில் பந்துபா சங்களெனும் தாபரம் பின்னவிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று தமியேனை யிவ்வண்
[ணமாய்
இடையென்று கடைநின்று ஏனென்றுகேளாதிருப்பதுன்னழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற தில்லைவாழ் நடராஜனே. (௩)

பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணந் தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேச மதுவல்ல சாலமல்ல
அம்புக் குண்டுகள்விலகப் பொழியுமந் திரமல்ல
ஆகாய குளிகையல்ல
அன்போடு செய்கின்ற வாதமோ டிகளல்ல
அரியமோ கனமுமல்ல
கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிர்ம்மரிஷி
கொங்கணர் புலிப்பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாங்
கூறிடும் வயித்தியமல்ல
எம்மனதுன் னடிவிட்டு நீங்காது நிலைநிற்க
ஏதுளவு புகலவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (௪)

நொந்துவந் தேனென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்தமுண்டோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தையுண்டோ
சந்ததமுந் தஞ்சமென் றடியைப் பிடித்தபின்
தளராத நெஞ்சமுண்டோ
தந்திமுக னறுமுகன் இருபிள்ளை யில்லையோ
தந்தைநீ மலடுதானே

விந்தையும் ஜாலமும் உன்னிட மிருக்குதே
    வினையொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
    வேடிக்கை யிதுவல்லவோ
யிந்தவுல கீரேழு மேனளித்தாய் சொல்லு
    இனியுன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
    தில்லைவாழ் நடராஜனே. (ரு)

வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
    வாஞ்சையில் லாதபோதிலும்
வாலாய மாய்க்கோயில் சுற்ருத போதிலும்
    வஞ்சமே செய்தபோதிலும்
மொழியெகனை மொகனையில் லாமலே பாடினும்
    மூர்க்கனே முரடாகிலும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
    முழுகாமி யேயாகினும்
பழியெனக் கல்லவே தாய்தந்தைக் கல்லவோ
    பார்த்தவர்கள் சொல்லார்களோ
பாரறிய மனைவிக்கி பாதியுட லீந்தநீ
    பாலனைக் காக்கொணுதோ
யெழில் பெரிய அண்டங்க ளடுக்கா யமைத்தநீ
    என்குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
    தில்லைவாழ் நடராஜனே. (சு)

அன்னை தந் தைகளென்னை யீன்றதற் கழுவனே
    அறிவிலாததற் கழுவனே
அல்லாமல் நான்முகன் தன்னையேநோவனே
    ஆசைமூன் றுக் கழுவனே
முன்பிறப் பென்ன வினைவந்து மூளுமென்
    றழுவனே முத்திவருமென் றுணர்வ

தன்னைநொந்தழுவனே உன்னைநொந்தழுவனே
தவமென்ன வென்றழுவனே
தையலர்க் கழுவனே மெய்வளர்க்க அழுவனே
தரித்திர திசைக்கழுவனே
இன்னமென் னம்பிறவி வருமோவென் றழுவனே
வெல்லா முரைக்கவருவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (எ)

காயாமுன் மரமீது பூபிஞ் சறுத்தனே
கன்னியர்கள் பழிகொண்டனே
கட்டினென்றுபொருள்பறித் தேவயிறெரிந்தனே
கிளைவழியில்முள்ளிட்டனே
தாயாரு டன்பிறவிக் கென்னவினை செய்தனே
தந்தபொரு ளில்லையென்றனே
தானென்று கர்வித்து கொலைகளவு செய்தனே
தவசிகளை யேசினேனே
வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனே
வாணரைப் பழித்திட்டனே
வடவுபோ லேபிறரை சேர்க்கா தடித்தனே
வந்தபின் என்செய்தனே
ஈயாத லோபியென் றேபெய ரெடுத்தனே
எல்லாம் பொறுத்தருளுவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (அ)

தாயாரிருந்தென்ன தந்தையு மிருந்தென்ன
தம்பிறவி யுறவுகோடி
தனமலை குவித்தென்ன கனபெயரெடுத்தென்ன
தாரணியை யாண்டுமென்ன

சேயர்க ளிருந்தென்ன குருவாய் இருந்தென்ன
சீஷர்க ளிருந்துமென்ன
சித்துபல கற்றென்ன வித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிகளெல்லாம்
ஓயாது மூழ்கினும் என்னபலன் எமனொரு
ஒன்றைக்கண்டுதடுக்க
உதவுமோ இதுவெலாம் சந்தைஉற வென்றுதான்
உன்னிரு பதம்பிடித்தேன்
யார்மீது வுன்மன மிருந்தாலு முன்கடைக்
கண்பார்வை யதுபோதுமே
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (கூ)

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும்பாறையோ
இருசெவியு மந்தமோ கேளாது அந்தமோ
இதுவுனக் கழகுதானே
என்னன்னை மோகமோ இதுவென்ன சோபமோ
இதுவோவுன் செய்கைதானே
உன்னைவிட் டெங்குசென் றாலும்விழ லாவனுன்
உனையடுத் துங்கெடுவனே
ஓகோவி துன்குற்ற மென்குற்ற மொன்றுமிலை
யுற்றுப்பார் பெற்றவையா
என்குற்ற மாயினும் உன்குற்ற மாயினும்
இனியருளளிக்கவினைவாய்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (ய)

சனிராகு கேதுபுதன் சுக்கிரன் செவ்வாய்குருச்
சந்திரன் சூர்யனிவரை
சற்றெனக் குள்ளாக்கி ராசிபனி ரண்டையும்
சமமாய் விறுத்தியுடனே

பனியொத்த நக்ஷத்தி ரங்களிரு பத்தேழும்
பக்குவப் படுத்திப்பின்னால்
பகர்கின்ற கரணங்கள் பதினொன்றையும்
வெட்டிப்பாரையும் அதட்டியென்முன்
கனிபோல வேபேசி கெடுவினைவு வினைக்கின்ற
கசடர்களை யுங்கசக்கி
கர்த்தனின் தொண்டராம் தொண்டர்க்குத்
தொண்டரின்தொண்டர்கள்தொழும்பனாக்கி
இனியவள மருவுசிறு மணவைமுனி சாமியெனை
யாள்வதினி யுன்கடன்காண்
ஈசனே சிவகாமி நேசனே யெனையீன்ற
தில்லைவாழ் நடராஜனே. (௰௧)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பர நடராஜர்

# பஞ்சாட்சர மகிமை.

வசியசிவ சங்கரா வசியகங் காதரா வசியகை லாசவாசா
வசியபணி யணியுரா வசியமான் மழுகரா வசியசிவ காமிநேசா
வசியதிரு நேத்திரா வசியபுவ நேசுவரா வசியஓம் நடனபாதா
வசியகரி யுரியழக வசியபுலி யிடையழக வசியசிர மாலை யழகா
வசியமதி முடியழக வசியபசு பதியழக வசியவென் மனதில்பாசா
வசியமுந் நூலழக வசியவெண் ணீறழக வசியமறை பரவுமழகா
வசியவென யுனையனு தினம்போற்று மடியார்க்கு அருள்மடை திறந்த
[தில்லை
அதிபதீ ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (க)

சிவயநம வென்றுதின மூழ்கியுரு வேற்றுவார் செய்தொழி லெலாம்
[வசியமாம்
ஜெகவசிய மாம்சகல முகவசிய மாம்செய்ய சித்துகளெலாம் வசியமாம்
வயநமசி யென்றுவுரு மாட்டுவார் சத்ராதி வானுட விட்டபந்தாம்
மடங்காத பூதபே தம்பிசா சிவையெலாம் வளர்குலா லன்திகிரியாம்
யநமசிவ வயநமசி சிவயநம வெல்லாமுன் னடன மன்றோ
இவ்வுலகம் பொருளுதவி அவ்வுலக மருளுதவி யீயவிரு தெய்வமுனை
[வோ
அவுணதி புவணதி கௌணதி முத்தர்க்கு அருள்மடை திறந்ததில்லை
அதிபதீ ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (உ)

புல்லாய்ப் பிறந்தாலு மிருகாதி ஜனனங்கள் பசியாறி மகிழுமன்றோ
பூண்டாய்ப் பிறந்தாலும் புலத்தியர்கள்கொண்டுசில பிணிதீர்த்துப்
[புகழ்வரன்றோ

கல்லாய்ப் பிறந்தாலும் நல்லவர்கள் மிதிகொண்டு காட்சிக் குறைந்து
[மன்றே
கழுதையுரு வந்தாலும் ஆவெனக்கத்தினல் கைகண்டசகுனமென்பார்
எல்லாமிலாமலே யிப்பிறவி தந்தெனை யேங்கவிட் டகலனின்றாய்
எத்தனை அன்னையின மெத்தனை தந்தையின மெத்தனை பிறவிவருமோ
அல்லலெனு மாசறுத் தாட்கொளுந் தெய்வமே அப்பனே தில்லைநகர்
[வாழ்
அதிபதீ ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௫)

கல்லாத மூடரைக் கயவரைக் காமுகரைக் கன்னெஞ்ச வஞ்சரிவரை
கற்றுமறி வில்லாத மோழையைக் கோழையைக் காக்கவைத் துண்ட
[பேதை
பொல்லாத மூர்க்கரை மிருகங்கள் போன்றவரை பொய்க்கு அஞ்சாத
[பேரை
பூமியிற்பிறருக்குஇடுக்குமுயல்வோர்களைப்பிணமொத்தபேரைப்பலரை
நல்லா ரெனக்கவிகள் சொல்லியலை யாமல்நா னுளாவ தென்றுசிவமே
நானன்றி நீயேது நீயன்றி நானேது நானுயு ரைத்ததேது
அல்லிலும் பகலிலும் நீயிலா தசைவேது அருள்மடை திறந்ததில்லை
அதிபதீ ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௬)

ஜெகமெட்டு திசைகளுங் கிரிகள்பல தெய்வமும் செம்பொன்மணி
[மாடமேடை
சேயன்னை தந்தையும் நானென்ற ஆணவஞ் செல்வமும் வல்லசித்தும்
மகிடேறு மெமனுக்கு முன்வந்து உதவுமோ முத்திக்கு வித்துமுளதோ
மூவாசை விட்டுகனி சருகாதி தின்றாலும் முன்செய்த வினையகலுமோ
மிகமுனிய சுகபோகம் ஈசநீ காணாது
இருளேது வெளியேது வினைவேது கனவுமேது
அகவுறவு பற்றற்று துறவுறவு முற்றுமற ஆரியர்கள் பரவுதில்லை
அதிபதீ ஜனகாதி துதிபதி சிவகாமி அன்பிலுறை நடனபதியே. (௭)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஜோதிமயம்.

இந்திராதிமுதன்முனிவர் கொண்டாடு ஜோதி
    யெண்டிசை காணவோங்குஜோதி
யிமையபர் வதவல்லி கண்கண்டஜோதி
    யென் இருவினை யறச்கும்ஜோதி
சாலோக சாமீப சாரூப மனவிடா சாயுச்ய
    ஜோதியிதுவே
சிந்தையில் நினைப்போது ஐம்பூத சாட்சியாய்
    தெரிசனஞ் செய்தபேர்க்கு
செய்வினை யேவல்சொடு சூன்யமுசல்பிணியெலாம்
    சென்மாந்தி ரத்துமணுகா
நந்தியொடு புலியரவ மூவாயி ரம்பேரும்
    நான்முகனும் விண்டுநடுவே
நற்சிற்சோதி நவஜோதி சிவஜோதி
    யென்னம்மைசிவ காமியுறவெ. (க)

பரிதிமதி திருவலம் செய்து தொழுஞ்ஜோதி
    பங்கயன் வணங்குஜோதி
பாரளந் தோன்தேடி காணுத ஜோதியது
    பார்ப்பதி கண்டஜோதி
சரியை கிரியாயோக ஞானமோ னத்தவர்கள்
    சதாநிஷ்டை செய்யும்ஜோதி
ஜனகாதி முனிவர்மன மசலாத ஜோதியது
    சச்சிதா நந்தஜோதி

விரிவான வெண்பத்து நான்குலட் சஞ்ஜீவ
பேதத் தமர்ந்தஜோதி
வினைப்பய னறிந்தந்தக் கருவிடைப் போக்கியே
வேடிக்கை பார்க்கும்ஜோதி
பருவமதி யிரவியொடு டங்கய னு மிந்த்ராதி
பார்க்கவே கனகசபையில்
பண்டுநட னஜோதி விண்டுபர வுஞ்ஜோதி
தில்லைச் சுயஞ்ஜோதியே. (உ)

பிஞ்சுமதி நதியைமுடி மேற்பூண்ட ஜோதியாம்
பணிமேலணிந்தஜோதி
பேசரிய மறையடியு நடுமுடியு மாஞ்ஜோதி
பெண்கொடி மணந்தஜோதி
அஞ்செழுத் தாய்பஞ்ச பூதமா யென்னுடற்
காதார மானஜோதி
அகிலபுவ னங்களும் திக்குத் திகந்தமும்
அங்கிங்கெ னுதஜோதி
தஞ்சமெனு மடியரது நெஞ்சைத் திருத்தியே
தன்னருள் காட்டுஜோதி
தந்தைதாய் குருதெய்வம் தாரமாய் மகவுமாய்
தானுமா யோங்குஜோதி
கஞ்சனெடு விஞ்சையனு மஞ்சவே கொஞ்சலொடு
கனகசபை மீதுநாளும்
கதித்த பெருஞ்ஜோதி துதிக்கப் பெருஞ்ஜோதி
கனகசபை சிவஜோதியே. (௩)

ஜாதிமத பேதமாம் சழக்கற்ற மூதியோர்
சமுகத் திலங்குஜோதி
சதுர்மறையாம் வேதமொடு தொண் ணூற்றாறதத்
துவமெலாம் நின்றஜோதி
ஜோதிமலை மீதிற் சுயஞ்ஜோதி யாய்நின்று
சோதித் தழைக்கும்ஜோதி

சும்மா விருக்கும் சுகங்கண்ட மௌனியொடு
சும்மாவி ருக்குஞ்ஜோதி
நீதிபல பேசிமத வாதமிடு மடையரது
நெஞ்சைப் பிளக்குஞ்ஜோதி
நின்றநிலை நின்றட்ட திக்கெலா மிரவு பகல்
நிர்த்தமிடு நெடியஜோதி
மாதுமலை மங்கையொடு ஆதிசபை மீதில்வளர்
மணிமந்த்ர தீபஜோதி
மதிஜோதி ரவிஜோதி சிவஜோதி தவஜோதி
மங்கைசிவ காமியுறவே. (௪)

மாசிலா வாகம புராணமறை யாஞ்ஜோதி
மகவா யுதித்தஜோதி
மன்னனது கிரிகையைத் தள்ளவென்
றஜோதி மலைமகள் தழுவுஜோதி
தேசமிட மாம்பொருள் வற்றவற் றுஜோதி
தென்னவனை வீழ்த்தஜோதி
தேவரிந் திரன்முனிவர் அமரர்கின் னரருரகர்
தேடக்க ளித்தஜோதி
ஆசைவன் பாசமா மாயாசரக் கருணை
யமுதன்பர்க் குதவுஜோதி
அன்பாம் பணிபூண்டு சிவசிவ வெனத்தேம்பு
மவர்க்கே நடித்தஜோதி
மாசின்மலர் சோலைகுளிர் தீம்புனற் றில்லைமந்
திரச்சபையி லிலங்கும்
மதிஜோதி ரவிஜோதி சிவஜோதி தவஜோதி
மந்திரத்து சுயஞ்ஜோதியே (௫)

திருச்சிற்றம்பலம்.

நந்தனார் சரித்திரக் கீர்த்தனை

# முதற்குறிப் பகராதி

## கீர்த்தனைகள்.


| | பக்கம். |
|---|---|
| அடக்கியாளுமை ... | 68 |
| அடடா நந்தனே ... | 100 |
| அடித்தது போதும் ... | 105 |
| அறிவுடையோர் ... | 203 |
| ஆனந்தக் கூத்தாடி ... | 90 |
| ஆனந்தக் கூத்தாடி ... | 199 |
| ஆடியபாதா இருவர் ... | 154 |
| ஆடிய பாதத்தைத் ... | 138 |
| ஆடிய பாதத்தைக் ... | 71 |
| ஆடுஞ் சிதம்பரமோ ... | 140 |
| ஆண்டைக் கடுமை ... | 43 |
| ஆருக்குத்தான் தெ ... | 124 |
| ஆருக்குப் பொன்ன ... | 125 |
| இது நல்ல சமைய ... | 170 |
| இதுதானோ தில்லை ... | 138 |
| இந்தச் சடலம் ... | 159 |
| இந்த ஜன்மம் ... | 168 |
| இரக்கம் வாராம ... | 171 |
| இனியுன் குற்றத்தை ... | 101 |
| இன்னமும் சந்தேக ... | 174 |
| இன்னம் வரக்கா ... | 166 |
| உத்தாரந்தாரு ... | 72 |
| உனது திருவடி ... | 202 |
| உனது மகிமை ... | 187 |
| எந்தநேரமு நந்தனை ... | 131 |
| எப்படிக் கெட்டா ... | 172 |
| எப்போ வருவாரோ ... | 164 |
| எப்போதுலையு ... | 168 |
| எனக்கு மிரங்கிற் ... | 191 |
| என்னேரமு முந்த ... | 175 |
| ஏதுக்கென் மீது ... | 91 |
| ஐயா சொல்லுவே ... | 123 |
| ஐயே மெத்தக்கடி ... | 127 |
| கட்டை கடத்தேற ... | 162 |
| கணநாதா சரணம் ... | 3 |
| கண்டேன் கலிதீர் ... | 190 |
| கனகசபேசன் ... | 160 |
| கனவினில் கண்ட ... | 111 |
| கனவோ நினைவோ ... | 179 |
| கனகசபாபதி ... | 161 |
| கனகசபை திரு ... | 169 |
| கிட்ட நெருங்கி ... | 204 |

| | பக்கம். |
|---|---|
| குஞ்சித பாதத்தை | ... 197 |
| கெண்டாமணி | ... 136 |
| கொண்டானடி | ... 148 |
| கொண்டானடித்தா | ... 149 |
| கொள்ளிடக்கரை | ... 133 |
| சங்கரனைத் துதித் | ... 59 |
| சந்நிதி வரலாமோ | ... 178 |
| சபாதரிசனங்கண் | ... 150 |
| சம்போகங்காதரா | ... 27 |
| சற்றே விலகியிரும் | ... 24 |
| சாதியிலுயர்ந்தா | ... 189 |
| சிதம்பரமே வினை | ... 80 |
| சிதம்பரம் போய் | ... 129 |
| சிதம்பரம் போகா | ... 89 |
| சிதம்பர தரிசன | ... 83 |
| சிதம்பர தரிசனம் | ... 163 |
| சிதம்பர தரிசனங் | ... 130 |
| சிதம்பரம் போகாதே | ... 76 |
| சிதம்பரம் போவே | ... 30 |
| சித்தமிரங்கிற்றே | ... 200 |
| சிந்தனை செய்துகொ | ... 63 |
| சிவலோக நாதனை | ... 19 |
| சின்னச்சாதி யல்ல | ... 124 |
| சுவாமி தரிசனம் | ... 46 |
| ஜெயஜெக தீசா | ... 150 |
| சேதிசொல்லவு | ... 68 |
| சேரிமுற்றுஞ்சிவ | ... 73 |
| சொற்பனங்கண் | ... 178 |
| ஞாயந்தானோ | ... 44 |
| தடாக மொன்றுண் | ... 28 |

| | பக்கம். |
|---|---|
| தரிசனஞ் செ | ... 27 |
| தரிசனங்கண் | ... 163 |
| தரிசிக்க வேணும் | ... 82 |
| தள்ளுவாரோ | ... 176 |
| தாண்டவதரிசன | ... 153 |
| தாதாதா நீ ஆடிய | ... 152 |
| தாதெய்யெ | ... 196 |
| திருநாளைப்போ | ... 12 |
| திருநாளைப் போவார் | ... 185 |
| திருட்டுத்தன | ... 102 |
| திருவாதிரைதெ | ... 140 |
| தில்லைவலஞ் சுற்றி | ... 169 |
| தில்லைத் தில்லையெ | ... 139 |
| தில்லைச் சிதம்பர | ... 58 |
| தில்லைச் சிதம்பரத் | ... 82 |
| தில்லை வெளியிலே | ... 63 |
| தில்லைத் தலமென் | ... 64 |
| தில்லையம்பலத்தா | ... 201 |
| தில்லை நடராஜ | ... 203 |
| தொண்டரைக் | ... 184 |
| நடனமாடினார் ஐயர் | ... 197 |
| நடன மாடினார் வெகு | ... 198 |
| நட்ட நடவு விளையு | ... 86 |
| நந்தன் சரித்திர | ... 12 |
| நந்தன் சிதம்பரம் | ... 131 |
| நந்தனாரே யுன்ற | ... 118 |
| நந்தா வொரு சேதி | ... 75 |
| நந்தா வுனக்கிந்த | ... 85 |
| நந்தா வுனக்கிந்த மதி | ... 113 |
| நந்தாவுன் கனவினில் | ... 120 |

| | பக்கம். |
|---|---|
| நமக்கினி யமபய ... | 59 |
| நாம் என்ன செய் ... | 51 |
| நாளைப்போகாம ... | 32 |
| நீசனுய்ப்பிறந்தா ... | 10 |
| பத்தி செய்குவீரே ... | 53 |
| பத்திகள் செய்தாரே ... | 56 |
| பத்தி பண்ணிக்கொ ... | 77 |
| பத்தியா யாண்டை ... | 92 |
| பறையா நீ சிதம்பர ... | 74 |
| பாதமே துணை ... | 205 |
| பாடுவாய் மனமே ... | 80 |
| பார்க்கப் பார்க்க ... | 177 |
| பார்த்துப் பிழையுங் ... | 57 |
| பித்தந் தெளிய ... | 88 |
| பித்தனுய்ப்போன ... | 87 |
| பிறவாத வரங் ... | 206 |
| பெரிய கிழவன் ... | 48 |
| பொன்னம்பலவாண ... | 94 |
| போதும்போது ... | 167 |
| மற்ற தெல்லாம் ... | 25 |
| மாங்குயில் கூவிய ... | 135 |
| மார்கழி மாதத்தி ... | 141 |
| யாகோற்பவமா ... | 194 |
| வந்தாலும் வரட் ... | 205 |
| வருகலாமோ ... | 156 |
| வருவார் வருவார் ... | 170 |
| வருவாரோவரங் ... | 180 |
| வழிமறைத்திரு ... | 23 |
| வாராமலிரும்பா ... | 165 |
| வாருங்கள் ... | 38 |

| | பக்கம். |
|---|---|
| விருதாச்சென் ... | 174 |
| **கட்கா.** | |
| அரகரசிவ ... | 56 |
| குதித்தார் ... | 26 |
| நந்தனுனந்த ... | 117 |
| வீரன் ... | 52 |
| **பெரிய கட்கா.** | |
| திருநாளைப்போ ... | 49 |
| **தண்டகம்.** | |
| அரகர சங்கர ... | 142 |
| அரகரா வென் ... | 42 |
| அறிந்தறியாமலே ... | 155 |
| ஆகாதா காதையே ... | 157 |
| ஏழைப்பார்ப்பான் ... | 121 |
| கோபுரதரிசனமே ... | 134 |
| சிதம்பர தரிசன ... | 47 |
| தத்திப் புலிபோல ... | 55 |
| தில்லைத் தலத்தை ... | 137 |
| தேகம் வந்தவாறு ... | 162 |
| நந்தா நீ குரு ... | 126 |
| மீசை நரைத்துப் ... | 47 |
| வேதம் படித்ததும் ... | 146 |
| **நொண்டிச்சிந்து.** | |
| ஐயே யொருசேதி ... | 66 |
| பழன மருங்கணை ... | 7 |
| **சிந்து.** | |
| அடடா இதென்ன ... | 176 |
| அவர்க்காருமெதி ... | 15 |

| | பக்கம். |
|---|---|
| இதுதானோ தில்லை | ... 156 |
| கனவிலுருவாகி | ... 200 |
| கீழே புரண்டழு | ... 166 |
| கெண்டாமணி | ... 137 |
| சிவன்-வேடிக்கை | ... 135 |
| தேடித் தேடித்திரி | ... 185 |
| நாளைப் போவே | ... 42 |
| பாப்பாரச்சாதி | ... 45 |
| பெரியோரிருக்கு | ... 158 |
| பேணிச்சாருங் | ... 30 |
| **லாவணி.** | |
| அம்பலவாணா | ... 154 |
| செய்யுமுபாயம் | ... 109 |
| பெரியோர் | ... 106 |
| **கண்ணிகள்.** | |
| அதிசயமொன்று | ... 182 |
| அம்பலவாணனை | ... 192 |
| ஹரஹராத்ரிபுரம் | ... 22 |
| ஆசைநேசராகுங் | ... 89 |
| இலவுகாத்தகிள்ளை | ... 106 |
| ஐயாவுன்னடைக்கலம் | ... 108 |
| ஐயோதெய்வமே | ... 108 |
| களையெடாமல் | ... 112 |
| குத்தமெத்தனை | ... 119 |
| சாதியில்தாழ்ந்தி | ... 172 |
| சிதம்பரம்வந்து | ... 142 |
| செந்தாமரைமலர் | ... 16 |
| தில்லையம்பல | ... 70 |
| மாடுதின்னும் | ... 99 |
| மார்கழிமாத | ... 98 |

| | பக்கம். |
|---|---|
| வாரிருக்குது | ... 18 |
| வாருங்கள் | ... 34 |
| வானோர்புகழ் | ... 144 |
| **தோடயம்.** | |
| திருவளர்தருமாதனா | ... 4 |
| **மங்களம்.** | |
| ஆதிமத்தியாந்தனு | ... 5 |
| திருநாளைப்போ | ... 214 |
| **சிதம்பரக்கும்மி.** | |
| சீர்மேவுந்தில்லை | ... 215 |
| **ஆனந்தக்களிப்பு.** | |
| காணாதகண்ணென் | ... 145 |
| காணமலிருக்கலா | ... 32 |
| நந்தாநீசிவபக்த | ... 122 |
| **இருசொல்லலங்காரம்.** | |
| அவர்கள்-தவஞ்செய்யும் | ... 20 |
| அவர்கள்-புண்ணாகி | ... 60 |
| இவர் - சிங்காரமான | ... 21 |
| நந்தனார்-சிவனே | ... 37 |
| நந்தனார்-சிவதலத் | ... 78 |
| நந்தனார்-தில்லை | ... 35 |
| நந்தனார்-தில்லையை | ... 95 |
| நாளைப்போவார் | ... 28 |
| புலையர்-எல்லைப் | ... 52 |
| **அகவல்.** | |
| பாக்கியமீதென்று | ... 39 |
| **ஏசல்.** | |
| புலையர்-பார்ப்பார | ... 38 |
| புலையர்-ஆண்டி | ... 40 |

பக்கம்.

நாமாவளி.

ஹரஹர ... 81

கலித்துறை.

அன்று மூவகை ... 171

துக்கடா.

ஆதனூரிலொரு ... 19
இதுவோதில்லே ... 139
எல்லோரும் ... 33
ஒருநாளும் ... 25
சட்டமாக ... 26
நந்தனும் ... 70
நந்திதூர ... 25
வருவாரோ ... 165

சவாயி.

சிவலோக ... 23
தலம்வந்து ... 22

விருத்தங்கள்-அகராதி.

அடிமுடியொன்று ... 109
அடியவர்கள் ... 130
அந்தணர்கள் ... 212
அம்மையாந்தில்லே ... 148
அய்யரேவாரு ... 113
அல்லெனுங்குழ ... 97
அவப்பொழுது ... 122
அறிவுமிகுந் ... 112
ஆதிநாண்முதற் ... 93
இத்தன்மையீசர் ... 30
இத்தனைநாட் ... 55
இப்பரிசாயிருக்க ... 147

பக்கம்.

இப்பிறவிபோய் ... 181
இரவுபகல் ... 65
இவ்வண்ணமிரவு ... 173
இன்னல்தரு ... 176
ஊரில்விடும்படை ... 16
ஐயரே அம்பலவ ... 190
ஓதியடிவீரா ... 75
ஓங்கராமென்று ... 62
கடுவருந்தியும் ... 110
கதிரொழுமுழமே ... 86
கழனியைத்தெய்வ ... 45
கறைபடுங்கண்டன் ... 119
காலனுடல் ... 31
காலமேவந்தா ... 69
கைதொழுது ... 193
கொள்ளேயெனும் ... 57
சங்கரன்ற ... 5
சாதியின்முறைமை ... 47
சாதிகுலம் ... 70
சாதிபேதமும் ... 167
சாத்திரக்குப்பை ... 131
சிலேயணிந்திடும் ... 98
சீரேறுமிசை ... 25
செந்தீமே ... 195
செல்கின்றபோழ் ... 158
சேரிவந்தவர் ... 107
தம்பெருமான் ... 184
தவம்பெறு ... 43
தாறிலாத ... 108
திட்டமுடனடி ... 188

| | பக்கம். |
|---|---|
| திருமறையோர் | 6 |
| திருப்பூன்கூர்ச் | 20 |
| திருவுடையதில் | 195 |
| தில்லையில்போக | 62 |
| தில்லையைக்கண்ட | 141 |
| தில்லைவாழந்த | 212 |
| நாளைப்போவே | 136 |
| நாற்பதுவேலி | 89 |
| நின்றவரம் | 159 |
| பகர்ந்துலகு | 13 |
| பங்கயமாதவர் | 213 |
| படிபுகழ்தில்லை | 73 |
| பண்ணையாவையும் | 116 |
| பித்தமது | 87 |
| புத்திசொல்லிக் | 83 |
| பொய்ச்சடலம் | 94 |

| | பக்கம். |
|---|---|
| மறைக்கிழவ | 183 |
| மறையவர்கண் | 193 |
| மனங்கண்ட | 86 |
| மாசுடம்பு | 213 |
| மாவளர்தில்லை | 110 |
| மெள்ளப்பேசி | 95 |
| வக்கணைக்காரா | 39 |
| வணக்கமாய்க் | 92 |
| வளம்பெரும் | 4 |
| வாட்டுவாருடல் | 152 |
| வானமேவிய | 129 |
| வானிருந்த | 104 |
| வேதமோடறஞ் | 127 |
| வேதியரிப்படி | 107 |
| வேதியரே | 32 |

அகராதி முற்றிற்று.

# மாதர் மஞ்சரி.

## சித்திரப் படப் பதிப்பு.

புகழேந்திப் புலவர் சிறையிலிருக்க நேரிட்ட காலத்தில், அச்சிறைச்சாலையருகே, தண்ணீர்க்குச் செல்லும் பெண்கள் காதுகட்கு இனிமையாக எளிய தமிழ் நடையில், சில சிறு நூல்களை நங்கைப் பாட்டாகப் பாடினாராம். அந்த நூல்களில் அனேக இடங்களில் சொன்னயங்களும் பொருள் நயங்களும் அருமையாய் அமைந்திருக்கின்றன. ஆதலால் அவைகள் சுத்தப் பதிப்பாக "மாதர் மஞ்சரி". என்னும் தலைப்பின் கீழ், பல பிரதிகளைக்கொண்டு ஆராய்ச்சிசெய்து பதிக்கப்பெறுகின்றன. இவை சாதாரண பதிப்புக்களிலுள்ள குற்றங்களும், பாலரும் மாதரும் கண்ணுறத்தகாத ஆபாச மொழிகளும் நீங்கி, புகழேந்திப் புலவர் இயற்றிய காலத்திலிருந்த பல நலங்களும் துலங்கியிருக்கக் காணலாம். இந்நங்கைப்பாட்டு, வெண் செந்துறை என்னப்படும்; இதன் இலக்கணத்தை அல்லியரசாணி மாலை முதலிய நூல்களிற் குறித்திருக்கின்றது.

இத்தொகுதியில் வெளிவந்துள்ளவை.

1. ஏணியேற்றம்.
2. பவளக்கொடிமாலை.
3. அல்லியரசாணிமாலை.
4. பஞ்சபாண்டவர் வனவாசம்.
5. புலந்தரன் தூது.
6. கோவலன் கதை.
7. தேசிங்குராஜன்கதை.
8. சித்திரபுத்திர நாயனார், அமராவதி கதைகள்.

# புராதன நவீன கதாமஞ்சரி.

இத்தொகுதி வாயிலாக, பழையகாலத்து வழங்கியனவும், இப்பொழுது மிகவும் சீர்கேடுற்று வழங்குவனவுமாகிய, பல அரிய இனிய கதைகள், பிழையறப் பரிசோதிக்கப் பட்டுப் பதிக்கப் பெறுகின்றன. இவை நல்ல கடிதத்தில் முத்துப்போன்ற எழுத்துக்களிற் பதிக்கப்படுவனவாதலால், தமிழ் மக்கள் ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டுவன. கதைகள் ஒவ்வொன்றும் பாலரும் மாதரும் அச்சமின்றிப் படித்து அகமகிழத்தக்க இனிமை வாய்ந்தது.

இத்தொகுதியில் வெளிவந்துள்ளவை.

1. விக்கிரமாதித்தன் (4 பாகங்கள்)
2. பஞ்ச தந்திரம்.
3. கதாமஞ்சரி.
4. பரமார்த்த குரு கதை.
5. தூக்குத்தூக்கி கதை.
6. விக்கிரமோர்வசி.
7. மாளவிகாக்கினிமித்திரம்.
8. சாகுந்தலம்.
9. உத்தரராம சரித்திரம்.
10. ரத்நாவலி.
11. மந்திரவீணை.